JL
3m 211,N17 KP
N17.2
161435

ஸ்ரீராமஜயம்.

கல்ப தரு.

KALPA THARU.

அறிவு வளர்ச்சிக்கான ஓர் மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

புஸ்தகம் 2. Vol. II. | பிங்கள ஹூ பங்குனி மீ. MARCH, 1918. | ஸஞ்சிகை 1. No. 1.

PART I.

OURSELVES.

ஸ்வகீயம்.

எம்மதத்திலும் எக்குடும்பத்திலும் சுகஜீவனத்தைக்கண்டு மகிழ்வதும் சிரம ஜீவனத்தைக்கண்டு வருந்துவதும் ஸகஜம். ஆனால் நம் மூதாதைகள் அப்போதைக்கப்போது செய்துவந்திருக்கும் கோட்பாடுகளை யூன்றிப் பார்க்குமிடத்து 'இன்பத்தின் முடிவே துன்பம், துன்பத்தின் முடிவே இன்பம்' என்பது நன்றாக எவர்க்கும் புலப்படும். அதை யொட்டியே திருவள்ளுவ நாயனார் தாம் அருளிச்செய்த திருக்குறளின்கண் "ஊழிற் பெருவலியாவுள மற்றொன்று சூழினும் தான் முந்துறும்" என்று கூறியிருப்பதையும் காண்க. ஆனதுபற்றி ஒவ்வொரு செயலும், அது இன்பமாயினும் ஸரி, துன்பமாயினும் ஸரி, ஊழ்வினையால் வந்ததென நாம் மதித்தாலும் ஸரி, மற்றும் நமக்கென்றே பிறர்செய்த தூர்த்தமென்று கருதினாலும் ஸரி, எல்லாம் ஸர்வவல்லமையுள்ள பராபரவஸ்துவின் திருநடனமென்று நாம் நினைக்கவேண்டியதைத் தவிர வேறுவழியில்லை. இவ்வுண்மை சகல ஜீவராசிகளிடத்தும் காணப்படும் மனத்தூய்மையேயானாலும் தெய்வமில்லையெனச் சாதிக்கும் நாஸ்திகர்களும் சிற்சில சமயங்களில், அதாவது தமது ஜீவாத்மா பூதவுடலிலிருந்து பிரிந்துபோகுந்தறுவாயில், மானஸீகமாகத்

161435

தம்மைப் படைத்தோனைக் குறித்து ஸ்தோத்தரஞ் செய்யாமலிருப்பதில்லை. இது உலகானுபவம். தெய்வமுளதென்பார்க்குண்டு, இலையென்பார்க்கில்லை. பிந்திக் குறிக்கப்பட்ட நாஸ்திகனின் தன்மையை நாம் கைக்கொள்ளாது ஸர்வ வியாபியும் ஸர்வ ஜீவதயாபரரும், ஸர்வ ஜனரக்ஷகரும், ஸகல மதஸ்தருக்கும் அவரவரது கொள்கை யனுஷ்டானங்களை முன்னிட்டுப் பல்வேறு நாமங்களுடன் பூஜிக்கப்பட்டு வருபவருமான எம்பிரான் கஞ்சமலர்க் கண்ணனை மனனம்பண்ணி இம்மாதச் சஞ்சிகையைக் கையெடுப்போமாக.

இவ்வளவு தூரம் நாம் ஏன் சொல்லவேண்டுமென்று நமது வாசகர்களும் அபிமானிகளும் கேட்கக்கூடும். இப்பாரத வர்ஷம் என்னும் பரத கண்டத்திற் சகல வளங்களும் மிகுந்திருக்கும் கர்ம பூமியின்கண் மானிடராகப் பிறந்திருப்போர் ஆரம்பத்தில் தெய்வ பக்தி மிகுந்தவர்களா யிருக்க வேண்டுமென்பதை ஸித்தாந்தமாகப் பெரியோர்கள் கொண்டிருப்பதனாலே, இக்கல்பதரு பிறந்து ஓராண்டு பூர்த்தியாகி இரண்டாம் ஆண்டில் புகுவதையொட்டி இவ்விசேஷ சமயத்தில், எந்த சக்திப்பிரபாவம் இவ்வொருவருஷ காலத்தில் அக்கல்பதருவெனும் சிசுவுக்கு வந்த இடையூறுகளையும் இடுக்கண்களையும் பாலாரிஷ்டம் மாந்தம்போன்ற நோய் நொடிகளையும் சமீபத்தில் அண்டவொட்டாமல் காத்ததோ அதே சக்திப் பிரபாவமாகிற அருளின் கடாக்ஷத்தை நாடவே கல்பதருவின் இவ்விரண்டாம் வயதாரம்பத்தில் கடவுளைத் தியானிக்க முன்வந்தோம். ஆதிமூலமேயென்று கஜேந்திரன் முதலைவாய்ச் சிக்குண்டு கதறியகாலத்தில் 'அஞ்சேல்' என்றுகூறிக் கையமர்த்தி அரைநொடியில் ஓடோடியும் வந்த பரந்தாமனின் பொன்னடிகளைப் போற்றுகின்றனம். ஹஸ்தினாபுரத்தில் பங்காளிச் சண்டைகளுக்கு இடமீந்த சந்திரவம்சத்திலே பாண்டவர்களும் கௌரவர்களும் அண்ணன் தம்பிமார்களாகவிருந்து வாழ்கையில், மனஸ்தாப மேலீட்டால் பாண்டவர் 12வருஷ வனவாஸம் போகப் பின்னர் ஒரு வருஷம் அஞ்ஞாதவாஸமிருந்து திரும்பிய பின்னர் அவர்கட்குரிய ராஜ்யங்கொடுக்கக் கௌரவர்களான துரியோதனாதியர் மறுதளிக்கவும், அதனிமித்தம் பாரதப்போர் தொடங்கிற்று. பாண்டவர்களிடம் அத்தியந்த அன்பும் விசுவாஸமும் கொண்ட பீஷ்மர், துரோணர், விதுரர், கிருபர், அசுவத்தாமா முதலினோர் தம் மெய்யன்பினைக் காட்ட வகையில்லாது கேவலம் உதரபோஷணார்த்தம் துரியோதனனது அன்னம் புசித்ததனாலே நசுவரமான பூதவுடலைக் கௌரவர்க்கும், மெய்யன்பு முதிர்ச்சியினால் தம் ஸூக்ஷ்மமாயுள்ள ஜீவாத்துமாவைப் பாண்டவர்களது ஆசீர்வதிப்பிற்குமாக அர்ப்பணம் செய்வதென்று தீர்மானித்து அங்ஙனமே பாரதப்போராடினார்கள். மகா மேதாவிகளான பெரியோர்கள் இங்ஙனம் செய்திருக்கையில் கேவலம் அற்ப ஆயுள்படைத்த நாம் அக்கொள்கையின் அணுமாத்திரத்தையாவது பின்பற்றி நடப்பதே தர்மமாகுமென்று கருதி இக்'கல்பதரு'க் குழவியின் இரண்டாம் ஆண்டினாம்

பத்திலே ஸ்தூலாகாரமான இவ்வுடலினாலும் பொருளினாலும் மாயக் கருவியைப் போஷித்து மானஸீகமாக நமது ஆவி (ஜீவாத்மா)வினால் அதை வளர்க்கக் கங்கணங் கட்டிக்கொண்டிருக்கிறோம். இம்மகநீய முயற்சி நிறைவேறும்படி இவ்வோராண்டு பூர்த்தியாகும்பரியந்தம் அதற்குப் பால்போட்டி அன்னமூட்டி, அது அன்னத்திற்கோ மற்று மென்னத்திற்கோ அழுகையில் அதைத் தாலாட்டிச் சீராட்டி அருமையாய்ப் பாதுகாத்து வந்த நமது அபிமானிகளான ரக்ஷகர்களின் ஆசீர்வாத பலத்தைத் தாங்கி, இதை முன்னிடுகின்றோம். எல்லாம் எமையாளுமீசன் செயல்!

இப்போது நடைபெற்று வரும் மஹாகோரமான யுத்தமும் அவ்வீசனருளால் முடிவடைந்து நமது காருண்ய பிரிடிஷ் கவர்ன்மெண்டாரது மங்சங்கோல் சிறப்புடன் ஓங்குமாக! பிரிடிஷ் ராஜரீகச் சிறப்பில் தங்கு ஜீமானி எங்கும் பொங்குமாக! சுபம்.

INDIAN WAR LOAN.

இந்திய யுத்தக் கடன்.

கடந்த மூன்றரை வருஷ காலமாக தளர்வு சோர்வு இராமல் மும்முரமாக நடந்துகொண்டிருக்கும் ஐரோப்பிய யுத்தத்தினால் உயிர்ச் சேதங்களும் பொருட்சேதங்களும் ஆவது கொஞ்ச நஞ்சமல்ல. தினந்தவறாது வந்துகொண்டிருக்குந் தந்திச் செய்திகளைக் கவனித்துப் பாருங்கள். மேற்கரங்கம், தெற்கரங்கம், இடாலிய யுத்தகளம், பால்கன் யுத்தகளம் முதலான களங்களிலும் கப்பற் சண்டை நடைபெறும் சமுத்திர மண்டலத்திலும், லக்ஷக்கணக்காக மானிட உயிர்கள் அர்ப்பணமாகின்றன; மனுஷ்யரது புத்திக் கூர்மையினாலும் சரீர சிரமத்தினாலும் உருவாயமைக்கப்பட்ட போர்க் கருவிகளும், வெடி மருந்துகளும் அபரிமிதமாகச் செலவாகின்றன; ஆக்குரோஷத்தினால் யுத்தத்திற் றலைபிட்டிருக்கும், இரண்டு கட்சிக்காரர்களும் தங்கள் தங்களுடைய மனோ விருத்திக்கு உகந்தபடி குண்டுகளைப் பிரயோகம் செய்கையில், அதுகாரணமாகக் கட்டடங்களும் மற்றுமுள்ள நிலைகளும் பாழாவதையும் பார்க்கிறோம். இதெல்லாம் போகட்டும். தத்தம் கட்சி ஜெயிக்கவேண்டுமென்னும் தீர்மானத்தின் முதிர்ச்சியால் அவ்வக்கட்சியைச் சேர்ந்த துருப்பாளர் கோட்டைகளிலும் கொத்தளங்களிலும் பூமியுமுள்ள மறைகுழி யரண்களிலும் வருஷக் கணக்காகப் பருவ பேதங்களையும், அவைகளினாலுண்டாகக்கூடிய கஷ்டங்களையும் பாராட்டாமல் தம்மரசர்க்கும் தம் தேசத்திற்கும் செய்யவேண்டிய தமது கடமையையே பிரதானமாகப் பாராட்டி ராணுவஸேவை புரிவதைப் பார்க்கிறோம். சகல ஸௌக்கியங்

களையுந் துறந்து தம் வீடு, தம் வாசல், தம் பந்து, தம் மித்திரர் என்னும் பாந்தவ்யத்தைக்களைந்து, அகங்கார மேலீட்டால் 'தான்' என்னுமகந்தையை யகற்றி, சரீரமாகிற பூதவுடலின்மீது வெறுப்புற்று ஒரேவகைத் தீர்மானத்துடன் யுத்தரங்கத்தில் வேலை செய்யும் பல்லாயிரக்கணக்கான நம் துருப்பாளர் விஷயத்தில் நாம் சும்மாவிருக்க நமக்கெப்படி மனம் வரும்? ஸ்ரீராமபிரான் வனவாஸம் போனதைக் கேள்விப்பட்ட பரதர் தம் அன்னை கைகேயியிடம் சென்றபோது அம்மாது தம் மைந்தனுக்கு முடி சூட்டுவதற்காக ஏற்பாடு செய்து வைத்திருப்பதாகச் சொல்லியதும், பரதாழ்வாருக்குக் கோபம் பொங்கிக் கண்கள் சிவந்து உதடுகள் துடிக்க 'என்னருமை யண்ணனை ஸ்ரீராமர் துஷ்ட மிருகங்கள் சஞ்சரிக்கு வனவாசமிருந்து காய் கிழங்குகளைத் தின்று துன்பமனுபவிக்கவும், ந நசுவரமான இவ்வரச மாளிகையிலிருந்து சுகபோகாதிகளை யனுபவி இன்ப ஸல்லாபத்தோடிருக்கவும், என்மன மிடங்கொடா'தென்று கடிந்து அண்ணன் திரும்பி வரும் மார்க்கத்தைத் தேடுவதாகப் புறப்பட்டாரென்று வால்மீக ராமாயணத்திற் குறிக்கப்பட்டிருப்பதைப் பலர் பார்த்திருப்பார்கள். சகோதர வாஞ்சையினால் கட்டுண்ட பரதாழ்வாரது செயல் அப்படியிருக்கையில், நமது பிராதாக்களான நண்பர்கள் யுத்தரங்கத்தில் எவ்வளவோ கஷ்ட நிஷ்டூரங்களையும் அல்லல்களையும் யனுபவித்து வருவதை நாம் சும்மா பார்த்திருப்பது தர்மமல்ல; நமது அரசாங்கத்தார் களங்களில் தங்கியிருக்கும் நம் யுத்த வீரர்களுக்காக எவ்வகைச் சௌகர்யத்தையும் செய்து கொடுக்கவில்லையென்று நாம் சொல்ல வரவில்லை. பலவிதமான சௌகர்யங்களையும் செய்துதான் வருகிறார்கள்; இன்னும்செய்து வரவும் பிரயத்தனப்பட்டே வருகிறார்கள். இப்பிரயத்தனம் நிறைவேறும்படி செய்வது நமது கடமையாகும். எதற்கும் பணமில்லாது காரியமாகாது. பூவுலகில் ஆகவேண்டியவைகளுக்குப் (பண்டமாற்றலுக்கும் மற்றுமுள்ள அனுகூலங்களுக்கும்) பணமே பிரதானமாயிருப்பதால், தற்போது யுத்தரங்கத்தில் வேலை செய்யும் நமது துருப்பாளர்க்காகவும் லட்சலட்சமாகப் பணம் செலவிட நாம் கடமைப்பட்டிருக்கிறோம். நிர்வாகிகள் எவ்வளவோ திரவியத்தைச் செலவு செய்து இம்மஹா யுத்தத்தைத் திறமையாக நடத்த இன்னும் பணம் வேண்டியிருப்பதனாலே, இதற்கு முந்திச் செய்யப்பட்ட முயற்சிகளையொப்ப இப்போதும் யுத்தத்திற்காகப் பணம் சேகரிப்பது அவசியமாகிறது. ஆனதுபற்றி யுத்தச் செலவுகளுக்காகப் பணம் வேண்டுமென்று கேட்கப்படுகையில் நம்மவர் ஒவ்வொருவரும் தத்தம்மாலான வரையில் பணங்கொடுத்து உதவுவதன் அவசியத்தை நன்கு விளக்குவதற்காக அடுத்த ஏப்ரல் மாதம் 9-ந் தேதி செவ்வாய்க்கிழமை மாலை 5 மணிக்கு சென்னை ஐக்கோர்ட்டிற்கு எதிரிலுள்ள ஆண்டர்ஸன் ஹாலில் ஒரு பப்ளிக் மீடிங்கு கூட்டுவிக்க சென்னை ஷெரீப் ஏற்பாடு செய்திருப்பதா யறிகிறோம்

மிக்க நெருக்கடியும் கவலையுமுள்ள இச்சமயத்தில் தேச ஜனங்கள் தம் சக்திக்குத் தகுந்தபடி யுத்தக்கடனுக்குப் பணங்கொடுத்து உதவுவது அவரது கடமையென்று மதிப்பாராக. பலதுளி பெருவெள்ளம். காணி காணியாகத் தானே கோடி! இந்தியாவிலுள்ள முப்பத்து மூன்று கோடி ஜனங்களும் தலைக்கொரு காலணாவோ தம்பிடியோ பிரதி தினத்திலும் அல்லது பிரதிவாரத்திலும் அல்லது பிரதி மாஸத்திலும் எடுத்து வைத்தால் இதுவரையில் எவ்வளவோ சேர்த்திருக்கலாம், போனது போகட்டும், இனியாகிலும் நாஸ்தி யென்றிருப்பதினும் தாமதித்து முயற்சிப்பதில் பாதகமொன்றுமில்லை (Better late than never.) முயற்சி மெய்வருந்தக் கூலி தருவதுண்மையே.

ஆனதுபற்றி நமது 'கல்பதரு'வையோதும் பாலர்களும் பாலிகைகளும் சிறியோரும் பெரியோரும் மாணவர்களும் உத்தியோகஸ்தர்களும் தங்கள் தங்களுடைய வீடுகளிலாவது உத்தியோக ஸ்தலங்களிலாவது ஸ்கூல்களிலாவது தனி உண்டிப்பெட்டிகள் தயாரித்து அவ்வுண்டிகளில் தினமொரு தம்பிடியாகச் சேர்க்கமுயலுவராக. இன்று தம்பிடியாவது நாளையிரண்டாகும்; அடுத்ததினம் மூன்றாகும்; இவ்விதமாக நாள் ஏற ஏற சேர்க்கப்படும் தம்பிடிகளும் பெருகிப் பெருநிதியாகமாறிவிடும்; இந்நிதியைக் கொண்டு கற்கோட்டை கட்டுவதும் ஸாத்தியமாகுமென்றால், யுத்தகளத்தில் நின்று போர்புரியும் நம் சகோதரர்க்குவேண்டிய சௌகர்யாதிகளை நாம் எவ்வளவு திருப்திகரமாய்ச் செய்து கொடுக்கலாம் பாருங்கள்! இவ்விதம் நாம் செய்யும் பேருதவிக்கு நமக்குப் பிரதிபலன் என்னவென்று சிலர் ஆலோசிக்கக்கூடும். பிரதிபலனை யெதிர்பார்த்துச் செய்யும் உதவிக்கு உதவி யென்று சொல்லுதல் தகாது. எக்காலத்தில் உதவிவேண்டுமோ அக்காலமறிந்து உதவிசெய்வதே நமக்கழகு. அந்நன்றி சிறிதாயிருந்தபோதிலும், அது காலாகாலத்திற் செய்ததாதலால் அதை மிகப் பெரிதாகவே கொள்ள வேண்டும்.

காலத்தினால் செய்த நன்றி சிறிதெனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது.

PART II.

SANITATION.

ஆரோக்கிய விமர்சனம்.

PLAGUE AND ITS PREVENTION.

By Mr. K. P. SESHADRI AIYANGAR, *Teacher, Muthialpet High School Madras.*

ப்ளேக்கும் அதைத்தடுக்கும் முறைகளும்.

II

ப்ளேக் மனிதருக்குள் பரவிய விதம்.

சாஸ்திரக்ஞரெல்லோரும் ப்ளேக் எலி வியாதியென்றும் அது எலி களினால் மனிதருக்குத் தொத்தவிடப் படுகிறதென்றும் ஒருமனதாய் அபிப்ராயப்படுகின்றனர். இரத்தத்தில் வாழும் சிறிய கிருமிகளால் ப்ளேக் உண்டாகிறது. ஒரு எலிக்கு இவ்வியாதிகாணின் அதனது உதிரத்தில் ஒவ்வொரு துளியிலும் பல்லாயிரமாக இக்கிருமிகள் குடிகொண்டிருக்கும். எலிகளே ஈக்களுக்கு உறைவிடம். எப்போதும் எலிகள் மீது ஈக்கள் சஞ்சரிக்கும். அந்த ஈக்கள் எலிகளைக் கடித்தபடியும் உதிரத்தை உதரத்தில் நிரப்பினபடியுமிருக்கும். அவ்விதம் கடித்து ரத்தத்தை உறிஞ்சும்போது அவ்வுதிரத்துடன் ப்ளேக் கிருமிகளையும் ஈக்கள் உட்கொள்கின்றன. அந்த எலி இறந்ததும் அதனது உடல் குளிர்ந்துவிடுகின்றது. ஆகவே அவ்வெலியை விட்டு ஈக்கள் வேறு எலியைத் தேடி ரத்தத்தை உட்கொள்ள அலாவுறுகின்றன. வேறு எலி அகப்படாவிட்டால் அவை பட்டினி கிடக்கவேண்டியதுதான். ஒரு வீட்டில் எலிகளெல்லாம் மாண்டுவிடுமாகில் எலி ஈக்கள் எவ்விதத்திலாவது பிராணனைக் காப்பாற்றும் நிமித்தம் வீட்டிலுள்ள மனிதர்களின் தேகத்திலிருந்து ரத்தத்தை உட்கொள்ளவேண்டியிருக்கின்றன. அப்படி மனிதர்களது தேகத்தை யடைவதற்குமுன், ஈக்கள் படுக்கை, துணி, உடை முதலியவைகளில் சென்றடைகின்றன. பிறகு மனிதர்களின் தேகத்தையடைந்து கடித்து உதிரத்தை உறிஞ்சும்போது ப்ளேக் கிருமிகளை மனிதனது உதிரத்திற்குள் செலுத்துகின்றன. சில நிமிஷங்களுக்குள் கடிக்கப்பட்ட மனிதன் ப்ளேக் வியாதியால் பீடிக்கப்படுகிறான்.

எலி ஈக்கள் தங்களுக்கு வேறு எலிகள் கிடைக்காதபக்ஷத்தில்தான் மனிதரை யடைகின்றன. எலி, வளையில் தனித்து வாழாது இனத்தோடு கூடி வாழும். ப்ளேக் கண்ட எலி வளையில் கிடந்து இறப்பதில்லை வியாதி கண்டதும் வளையை விட்டு வெளியில் வந்து அறையின் தரையில் மாள்கின்றது. அதன்மீது அதுவரை ரத்தத்தை உறிஞ்சிய ஈக்கள் அது மாண்டதும் அதன்தேகம் குளிர்ச்சியடைந்ததால் அதைவிட்டுத் தரைமீது செல்கின்றன. அவ்வறையிலுறையும் மனிதர்கள் கால்மீதும் தேகத்தின்மீதும் இவ்வீக்கள் ஏறிக்கொள்கின்றன.

இயற்கையிலேயே ஒவ்வொரு ஜீவஸ்ருஷ்டிக்கும் புத்தியும் ஸாமர்த்தியமும் அளிக்கப்பட்டிருக்கின்றன. தங்களது இனத்தின் நன்மையை நாடுவதில் ஒவ்வொரு ஜந்துவும் அதிக நாட்டங்கொள்கின்றன. எறும்புகள் புற்றுகளைக் கட்டுவதில் எவ்வளவு ஒற்றுமையுடன் பொது நன்மைக்குப் பாடுபடும் நேர்மைதான் என்னே! என்னே! அதுமாதிரியேதான் எலிகளும். எலிகளுக்குத் தன்னினத்தில் ஒன்றுக்கு ப்ளேக் கண்டுவிட்டால் அந்த எலியை வளையினின்றும் வெளியே மற்ற எலிகளெல்லாம் ஒன்றுசேர்ந்து விரட்டிவிடும். ஏனெனில் அது அவ்விடத்திலேயே இறக்குமானால் அதனது உடம்பில் வாழும் ஈக்கள் அதைவிட்டு எங்குத் தங்களுடம்பில் தொத்துமோ எனப் பயந்து அதை வளையினின்று துரத்திவிடும். அந்தோ! மனிதனுக்கு மாத்திரம் அத்தகைய இயற்கை யறிவு உண்டாக்கப்பெற்றிருப்பின் எத்தனைய பெரிய வியாதிகளினின்றும் அவஸ்தைகளினின்றும் மற்றவர்கள் காப்பாற்றப்படுவர்!

மனிதனுக்கு இயற்கைஞானம் இல்லாவிடினும் மற்றைய பிராணிகளையெல்லாம்விட பகுத்தறியும் அறிவும், ஆற்றலும் ஒருங்கே பெற்றிருக்கின்றான். மனுஷ்யனுக்குப் புத்தியும் மனோவுறுதியும் உண்டு. அவனது அறிவைக்கொண்டு வியாதிகளின் மூலகாரணங்களைக் கண்டறிந்து கொள்ளின் அவைகளினின்றும் காப்பாற்றிக்கொள்ளும் வகையறிவான். மனிதன் மாத்திரம் நல்ல ஆசாரத்துடனும் பரிசுத்தத்துடனும் ஒழுக்கத்துடனுமிருப்பின் ப்ளேக் என்பதை காண்பதே அரிதாகும். ஒழுங்கீனமாய் அசுத்தமே குடிகொண்டுள்ள சிறு வீடுகளில் பிரஜைகள் கும்பல் கும்பலாய்க்கூடி வசிப்பதும், கெட்ட காற்றை சுவாசிப்பதும், அழுக்குத் தண்ணீரைப் பருகுவதும், அழுகிய பதார்த்தங்களையுண்பதும், அவர்கள் வசிக்கும் பிரதேசத்தை இன்னும் அதிகமாக அசுத்தப்படுத்தி வருவதுமே தணிந்த நிலைமையிலுள்ளவர்கள் அனுஷ்டிக்கப்படும் வழக்கமாகயிருந்து வருகிறது. அவ்விதம் அசுசியாய்நடப்பவர்கள் இயற்கை ஏற்பாட்டுக்கு விரோதமாக நடப்பதற்காக இயற்கையின் தண்டனையை அடையாது போவார்களோ? இவ்விதம் அசுத்தமாய்நடப்பதனால் என்னகஷ்டம் நேரிடுகிறதெனில் குற்றம் செய்தவர்களுடன் குற்றமற்றவர்களும் அவஸ்தைப் படவேண்டியிருப்பதே. பரிசுத்தமான வீட்டில் நல்ல ஆசாரத்தோடிருப்பவர்களும் வியாதிக்கு உட்படுகிறார்கள். தீய ஒழுக்கத்தை மேற்கொண்டவர்கள் கிளப்பிவிடும் வியாதியால் நல்லொழுக்க முடையவர்களும் பீடிக்கப்படுகின்றனர். ஆனால், ஒவ்வொரு வீடும் சுத்தமாகவும், ஒவ்வொரு அறையும் காற்றோட்ட முடையதாகவும் போதுமான வெளிச்சத்தை உடையதாகவுமிருந்து ஒவ்வொருவரும் நல்ல ஆசாரத்தை அனுசரித்தும் வருவார்களே யாயின், ப்ளேக் என்னும் வியாதி அடியோடு ஒழிந்துவிடும். மறுபடியும் தலைகாட்டவே காட்டாது. குடிக்கும் துரப்பியாசத்திற்கு வியாதியும் அழிவும் எவ்விதம்

தண்டனைகளோ அதுபோல தீய ஒழுக்கத்திற்கும் அசுத்தத்திற்கும் ப்ளேக் தண்டனையாகும். ஆரோக்ய திடசரீரிகள் தகுந்த பரிகாரங்களைத்தேடி வியாதியைப்பற்றிக் கொஞ்சமும் நினைக்கமாட்டார்கள். சுற்றுப்புறத்தில் இப்பெருவாரி வியாதி கண்டிருக்கும் பக்ஷத்தில் அதற்குச் சுற்றுப்புறத்தில் வசிக்கும் ஒவ்வொருவரும் நல்ல காற்றை சுவாசித்து, தேகாப்பியாசம் செய்து, இவ்வியாதி தொத்தாமலிருக்கத்தக்க பரிகாரங்களை நாடி, வியாதி அணுகாமலிருக்கவும் தடுக்கவும் என்னென்ன முன் ஜாக்ரதையாகச் செய்து கொள்ளவேண்டுமோ அவைகளையும் செய்து கொள்ளவேண்டும். இவைகளை யெல்லாம் சரிவர முடித்துக் கொண்டோமானால் கொஞ்சமும் ப்ளேக்கைப்பற்றி நினைக்கவேண்டியதில்லை.

ப்ளேக் ஓரூரிலிருந்து மற்றோரூருக்குப்பரவும் விதம்.

ப்ளேக் பரவியிருக்கும் ப்ரதேசத்திலிருந்து ப்ளேக்கேயில்லாத பிறிதொரு பிரதேசத்திற்கு ஒருமனிதன் பிரயாணம் செய்தால் அவனது உடைகளிலும் படுக்கையிலும், எலி ஈக்கள் இருக்கும். இவ்வீக்களிடம் ப்ளேக் கிருமிகள் குடிகொண்டிருக்கும். வேறோரூருக்கு அம்மனிதன் போய்ச் சேர்ந்ததும் தன் துணிமணிகளை ஒருவீட்டில் வைக்கிறான். படுக்கையைத் தரைமீது பிரித்துப் படுத்துக்கொள்கிறான். அவ்வீட்டிலுள்ள எலிகளை இவ்வீக்கள் கடிக்கும். அப்படிக் கடிப்பட்ட எலிக்கு ப்ளேக் காணும். அநேக முறைகளில் பிரயாணிக்கே ப்ளேக் வருவதுமுண்டு. ஏனெனில் அவனது படுக்கைக்கண்ணுள்ள ஈக்கள் அவனைக் கடிக்கும். ஒருவீட்டில் ஒருவனுக்கு ப்ளேக் காணின் அவ்வீட்டிலுள்ளவர்களுக்கெல்லாம் காணும். இவ்விதமே அவ்வூர் முழுவதும் பரவிவிடும். இம்மாதிரி ப்ளேக் பரவுவதைத்தடுக்கப் பிரயாணிகளுக்கு "பாஸ்போர்ட்" என்னும் மகாமாரிப் பிரயாணச் சீட்டொன்றை துரைத்தனத்தார் ஏற்படுத்தியிருக்கிறார்கள்.

உலகசரித்திரத்தில் ப்ளேக்கின் சம்பவங்கள் அநேகம் விவரிக்கப்பட்டிருக்கின்றன. ஏதென்ஸ் நகரிலும், ப்ளாரன்ஸ் பட்டணத்திலும், லண்டன் பிரதேசத்திலும் ப்ளேக் மும்முரமாகத் தன் தொழிலைச் செய்து வந்தது. திடீரென்று இந்தியாவில் முதன்முதலில் 1896-ம் வருஷத்தில் பம்பாய் பட்டணத்தில் ப்ளேக் தலைகாட்ட ஆரம்பித்தது. ஜனங்கள் ப்ளேக்கின் ஸ்வபாவத்தைக், காதினால் கேட்டிருந்தார்களேயொழிய கண்ணினால் அதுவரைப் பார்த்தவர்களல்ல. தங்கள் கண்ணெதிரே ப்ளேக் அவஸ்தையைக்கண்டு பயங்கொண்டனர். திரள்திரளாக ஜனங்கள் ரெயில் ஸ்டேஷனை நாடிச்சென்றனர். தெருவிலுள்ள வீடுகளெல்லாம் காலியாயின. பிரஜைகளில் சிலர் மரித்தும், வேறு சிலர் குற்றுயிரும் கொலையுயிருமாயும் வீதிகளில் கிடந்தனர். எங்கும் பயமும் துக்கமும் குடிகொண்டிருந்தன. துரைத்தனத்தார் குடிகளின் சௌக்கியத்தை நாடுவோர்களாகையால் சரீரகஷ்டத்தினாலும் பணத்தினாலும் ப்ளேக்கின் மூலத்தைக் கண்டறிந்து அதை வேரோடு களைய எவ்வளவோ பிரயத்தனப்பட்டனர். இது விஷயத்தில் ஊக்கம் சிறிதும் குறைந்ததில்லை. வைத்யர்களெல்லாரும் அல்லும் பகலும் ஊண் உறக்கமின்றி ப்ளேக் கிருமிகளைப்பற்றித் தெரிந்துகொள்ள உழைத்தனர். முதலில் எவ்வளவோ திரவியம் வியர்த்தமாக்கப்பட்டது. பின்னர், முன் செலவழிந்ததெல்லாம் வீண் எனத்தெரிந்தது.

ப்ளேக் பெருவாரியால் பிடிக்கப்பட்டவன் உயிர் துறவாது வாழ என்னென்ன முறைகளைக் கொள்ளவேண்டும் என்பதைப்பற்றியும், இக்கொடிய வியாதிவராமல் தடுக்க என்ன முறைகள் அநுஷ்டிக்கப் படவேண்டும் என்பதைப்பற்றியும் அடுத்த சஞ்சிகையில் விவரமாக எழுதுவாம்.

கீ. பி. சேஷாத்ரி ஐயங்கார்.

PART III.

KNOWLEDGE ON AGRICULTURE, etc.

BY Mr. G. RAJAGOPAL,
Late Editor, "South Indian Agriculture."

விவசாய ஞானம்.

கரும்பு.

(364-ம் பக்கத்தொடர்ச்சி).

சில கரும்பின் பேரில் சுண்ணாம்புபோன்ற வெண்மையான பஸ்மம் இருப்பது சகஜம். இந்தப் பஸ்மம் சில ஜாதிக் கரும்பில் அதிகமாகவும் மற்றும் சில ஜாதிகளில் குறைந்தும் இருந்தாலும் எல்லாவித கரும்பிலும் இது உண்டு. இம்மாவு இல்லாததுபோல் தோன்றும் கரும்பு ஒன்றை எடுத்து வளைத்துப் பார்க்க இது சக்கை சக்கையாய்ப் பெயர்வதால் அறியலாம். இம்மாவு மெழுகை யொத்திருக்கிறதென்றும் சாற்றில் இது கலந்து மற்ற அழுக்குகளை வெளியேறவிடாமல் பிடித்துக்கொள்ளுகிறதென்றும் சர்க்கரையும் இதனால் பாகாகிறதென்றும் சாஸ்திரிகள் தெரிவிக்கிறார்கள். எலும்புக்கரியில் வடிக்கட்டுவதே மேற்படி மாவைத் தொலைக்கும் வழி,

நமது தென் தேசத்தில் குடிகள் வெல்லத்தையே காய்ச்ச வெள்ளைக்காரரோவெனில் அவர்கள் தோட்டங்களில் சீனிச் சர்க்கரையையும் பாகையுமே எடுக்கிறார்கள். ஏனெனில் வெள்ளைச் சர்க்கரை செய்வதில் அநேக அனுகூலங்களுண்டு. அது நமிர்த்து நீற்றுப்போவதில்லை. தூர தேசத்திற்கனுப்பக் கப்பலிலும் ரெயிலிலும் அதிக இடம் அடைத்துக்

கொள்வதில்லை. ஆகையால் சார்ஜூ குறையும். வெளுத்ததெல்லாம் பால் என்பதுபோல இனித்ததெல்லாம் சர்க்கரை என்று நாம் மதித்திருக்க சாஸ்திரப்பயிர்ச்சியுள்ள வெள்ளைக்காரர் வெல்லத்திலிருந்து அநேகவித இனிப்புப் பதார்த்தங்களைப் பிரித்து ஒவ்வொன்றின் குணாகுணங்களையும் கண்டு கேன்சுகர் (Cane Sugar), லெவுலோஸ் (Levlose) டெக்ஸ்ட்ரோஸ் (Dextrose), என்று விதம் விதமான பெயரிட்டிருக்கிறார்கள். பின்னும் சீனிச்சர்க்கரை எடுப்பதில் மணி மணியாய் நின்று விடுவதே கேன்சுகர் என்றும் மற்ற இரண்டு பதார்த்தங்கள் பாகாய் வெளி வருகின்றனவென்றும் தெரிவிக்கிறார்கள். கேன் சுகர் என்னும் சர்க்கரையும் சில காரணங்களால் பாகு (Molasses) ஆகிறது.

பால் உருவு கெட்டுத் தயிரான பின்பு எவ்வாறு அது மறுபடியும் பாலாகிறதில்லையோ அப்படியே நம்முடைய அசாக்கிரதையினால் சர்க்கரை கெட்டு உண்டான பாகு மறுபடியும் சர்க்கரை மணி (Sugar crystals) ஆகமாட்டாது. பாகிலிருக்கும் பதார்த்தங்கள் இளங்கரும்பில் அதிகமிருக்கிறபடியால் கரும்பு அச்சமயத்தில் எவ்வளவு இனிப்பாயிருந்தாலும் முற்றவிட்டு அறுக்கவேண்டும். கொழுந்தாடை எல்லாத் தருணத்திலும் இளசாகவே இருக்குமாதலால் அதில் மேற்கண்ட பாகாகும் பதார்த்தங்கள் அதிகமுண்டு. ஆகையால் அதை ஆலையிலிடாமல் இருப்பதே உத்தமம். தான் கெட்டதுமல்லாமல் வனத்தையெல்லாம் கெடுத்தது குரங்கு என்பதுபோல் லெவுலோஸ் டெக்ஸ்ட்ரோஸ் என்னும் பதார்த்தங்கள் தாங்கள் பாகாக இருப்பதுடன் சாற்றில் மணியாக வேண்டிய சர்க்கரையில், தங்கள் எடையவ்வளவை அழித்துப் பாகாகச் செய்து தங்கள் இனத்தில் சேர்த்துக்கொள்ளும். ஆகையால் பாகு அதிகமுள்ள நாட்டுச் சர்க்கரையும் வெல்லமும் மழைகாலத்தில் இளகிப்போகிறது. இவ்வாறு கெடுதி செய்யும் இப்பார்த்தங்கள் சாற்றில் குறைந்திருக்கவேண்டுமென்று அமெரிக்கர் கரும்பு வெட்டுவதற்குச் சுமார் 15 நாளைக்கு முன்னமே தோகை சருகு முதலியவற்றை உரிப்பார்கள். இவ்வாறு செய்வதினால் ஒருவேளை கூலித்தொகை அதிகமாகிறதோ என்றால் இல்லை ; ஏனெனில் கரும்பு எப்படியாவது ஆலையிலிடுவதற்கு முன்னமே சருகு உறிக்கப்படவேண்டும், சருகு உறிப்பதற்கு இடைஞ்சலில்லாமல் இருக்கவேண்டுமென்று அமெரிக்கார் சாலுக்குச்சால் ஐந்தடிவிட்டு கரும்பை நடுகிறார்கள். அப்போது ஆட்கள் எப்போதும் கரும்பு தோட்டத்தில் நடமாடுவார்கள். அதனால் அனுகூலங்கள் அநேகம் இருக்கின்றன, ஆகையால் நாமும் அவ்வாறே பட்டை உறுதியுள்ள கரும்புகளுக்கு அனுசரிப்பது அவசியம். இவ்வாறு சருகு தோகை இவைகளை உரிப்பதனால் கரும்பு நன்றாய் வெயிலில் பட்டு பசுமை யொழிந்து சிலவகைக் கரும்புகள் பழவிறம் ஆகின்றன. பின்னும் காற்றின் கொடுமைக்கு உட்படும் கோயம்புத்தூர் வெள்ளைக்

கரும்புக்கு, சருகு உரிப்பது உத்தமம் என்று தெரிகிறது. சருகு உரிப்பதற்கும் பதம் உண்டு. அதிக சீக்கிரத்தில் உரித்துவிட்டாலும் கரும்பு கெடும். பசுமையான கரும்பில் செய்த நாட்டுச்சர்க்கரையை உற்றுபார்த்தால் அதிலும் பசுமை தெரியும்.

கரும்புப்பூ வெடுப்பது அவசகுனம் என்று சிலர் எண்ணுகிறார்கள். பூவெடுப்பது எல்லாச் செடிகளுக்கும் இயற்கையே. அதனால் செடியின் வளர்ச்சி முடிந்ததென்று தெரிகிறது. மண்ணின் சத்து குறைந்தால் கரும்பு முற்றுகிறதென்று சிலர் சொல்லுவதும் உண்மையே. எப்படியெனில் கரும்பு சாதாரணமாய்ப் பூவெடுக்கும் கோயம்புத்தூரில் ஒருவர் 1889-ம் வருஷத்தில் பாஸ்பேட் ஆப் லைம் என்னும் பிரகாசதச் சுண்ணும்பை அதிக எருப்போட்டு 15 மாதமாயும் கரும்பு பூர்க்காமல் வளர்ந்து கொண்டே யிருந்தது. பூவெடுத்த கரும்பில் சர்க்கரை குறைவது அநேகரின் அனுபவமாயிருந்தாலும் கோயம்புத்தூரில் சிலர் மாத்திரம் பூவெடுக்கும் சமயத்தில் கரும்பில் நீர் வற்றியிருப்பதால் வெல்லம் எடுப்பதற்கு விறகு கொஞ்சமாய்ப் பிடிக்கிறதென்று தெரிவிக்கிறார்கள். இது விஷயமாய் சாஸ்திரிகள் எந்தவகையும் நிச்சயமாய் சொல்ல முடியவில்லை. கரும்பு பொடை கட்டி யிருக்கும்போதே வெல்லம் அதிகம். பூவெடுத்த கரும்பு விதைக்கு உதவிவந்தால் அந்தக் குணம் விருத்தியாகும். ஆகையால் அது விதைக்கு உதவாது. வெட்டுப்பட்ட கரும்பு காற்றில் பட மணியாக வேண்டிய சர்க்கரை பாகாய்விடுகிறது. ஆகையால் கூடுமான வரையில் வெட்டின உடனே சாறு பிழிவது அவசியம். இவ்வாறு கரும்பு கெடுகிறதென்று சிலர் வெட்டின கரும்பைக் காற்றுபடாதபடி செங்குத்தாய் நடுகிறார்கள், சிலர் வெயில்படாமல் சருகால் மூடுகிறார்கள். வெயிலில் ஆலையாட்டினால் வெல்லம் கஷ்டமடைகிறதென்று மத்தியானத்தில் சிலர் ஆலையை நிறுத்திவிடுகிறார்கள். சிலர் இதற்காக இராத்திரியில் வேலை செய்து பகலில் சும்மாயிருக்கிறார்கள். ஆனால் அவ்வாறு பாடுபட்டாலும் கரும்பைப் பகலிலேயே வெட்டவேண்டியதாதலால் அன்று சாயங்காலம் வரையில் அது காற்றில் பட்டிருப்பது புளிப்பேறுவதற்கு மார்க்கமே. இந்த மர்மம் தெரியாத சிலர் கரும்பைத் தலையை மாத்திரம் விதைக்கு வெட்டி உபயோகப்படுத்திக்கொண்டு தங்களுக்கு வேலை ஒழியும் வரையில் நிலையில் வைத்திருக்கிறார்கள். தாராபுரத்தில் இம்மாதிரி ஒருமாதம் வரையில் கரும்பு இருந்தது. அதனால் கெடுதியில்லை யென்கிறார்கள். ஆனால் அது சரியன்று. அப்படிப்பட்ட கரும்பில் சரக்கு சரியாய் வராது. சாறு காய்ச்சும்போதும் இதேமாதிரி ஜாக்கிரதை இருக்கவேண்டும். அடிக்கரும்பின் இனிப்பு அதன் சாற்றில் கலந்திருந்தாலும் அதன் கணுக்களிலிருக்கும் அநேகவித உப்பும் மற்றையப் பதார்த்தங்களும் வேர்களும் சாற்றைக் கெடுப்பதற்கு முக்கியகாரணம். வேர், கணு, கண், அடிக்கரும்பு, கொழுந்

தாடை, வெயில், காற்று ஆகிய இவைகள் கருப்பஞ்சாற்றைக் கெடுக்கும் சாதனங்கள்.

COMMERCE AND INDUSTRY.
வர்த்தகமும் கைத்தொழிலும்.

TATA INDUSTRIAL BANK.
டாடாவின் கைத்தொழில் பாங்க்.

சாஸ்திரீய அபிவிருத்தியையும் தொழிலபிவிருத்தியையும் நாடி கோடி கோடியாகப் பணத்தைச் செலவழித்து தேசதேசமாகப் பிரயாணஞ்செய்து ஆங்காங்குள்ள மேதாவிகளை வரவழைத்தும், அதிகாரிகள் கூறுமிடங்களுக்கெல்லாம் சென்று, அவர்களுடன் கலந்து பேசித் தேசோபகாரத்தையே தம் ஜீவ வாழ்க்கையின் கருமமாகக் கருதியும் பாடுபட்ட கனவானுவார் மிஸ்டர் ஜேம்ஸேட்ஜி நஸ்ஸர்வான்ஜி டாடா. உப்பரிகைமீது உப்பரிகையாக அடுக்கிக் கட்டப்பட்ட மாளிகைகளில் வசித்துப் பொன்வெள்ளியினாலாய தட்டுகளில் உண்டும், தலையசையுமுன் தரணியசையவும், நா அசையுமுன் நாடசையவும், உதடசையுமுன் ஊரசையவுமாகக் கைகட்டி வாய்புதைத்துக் கைங்கர்யஞ்செய்ய வேலையாளர் காத்திருக்கவும் ஆன சமயங்கள் மிஸ்டர் டாடாவுக்கிருந்தும் தேசோபகாரமான காரியத்தையே அவர் தம் ஜீவிய கால முயற்சியாகச் செய்துவந்தார். 'புலியின் மரபிலுதித்தது பூனையாமோ' வென்பது பழமொழி. அதையொப்ப கருமமே கண்ணாயிருந்து உழைத்த ஜேம்ஸேட்ஜி நஸ்ஸர்வான்ஜீ டாடா வென்னும் பார்ஸீ கனவானின் மரபிலுதித்த ஸர் டோரப் டாடாவும் மற்றவர்களும் அத்தொழிலபிவிருத்தியில் கவனம செலுத்தாது போவார்களா? சமீபத்தில், பம்பாய் நகரின்கண் டாடாவைச் சேர்ந்தவர்களின் நன்முயற்சியினாலே பிரதம கைத்தொழில்களை விருத்திசெய்யும் நோக்கத்துடன், அப்போதைக்கப்போது பொருளுதவி கிட்டும்படியாக கைத்தொழில் பாங்கொன்று இந்தியா கவர்ன்மெண்டின் பைனான்ஸ் மெம்பரான ஸர் வில்லியம் மேயரால் திறந்து வைக்கப்படப் போவதாகச் சமாசார மெட்டுகின்றது. தொழிற்சாலைகளை ஸ்தாபனம் பண்ணவோ அல்லது தொழிற் கூடங்களை ஏற்படுத்தவோ, மற்றும் யந்திர விசைகளாலாக்கக்கூடிய நிலக்கரி, எஃகு, அபிரேகம் முதலான சுரங்க வேலைகளைக் கவனிக்கவோ பெருமுயற்சி யிருந்தாலன்றி முடியாது. பெருமுயற்சி யென்றால் என்ன? பணமும் வேலைசெய்ய ஆட்களுமாம். இவ்விரண்டும் சேர்ந்திருக்குமானால் தொழிற்போக்கை யுணர்ந்த விற்பன்னர்களது புத்திக் கூர்மையால் வேலைகள் திறமையாக நிறைவேறுவது திண்ணம். இப்பேர்ப்பட்ட முயற்சிகளில் குந்தகம் ஏற்படக்கூடாதென்று கருதியே பம்பாய் நகரில் மேற்சொன்ன 'டாடா இண்டஸ்ட்ரியல் பாங்க்'

என்னும் ஸ்தாபனம் ஏற்பாடாயிற்று. இப்புதிய பாங்கின் டைரெக்டர் போர்டுக்குச் சேர்மனுவர் ஸர் டோரப் டாடா. ஸர் வில்லியம் மேயர் அப்பாங்கினைக்குறித்துப் பேசிய மொழிகளைக்கொண்டு இத்தேசத்தின் கண்ணுள்ள பாங்கு நிர்மாணங்களில் இப்பாங்கு ஸ்தாபனதினம் ஒரு புதியசகாப்தவாரம்பமெனச் சொல்லுவதும் பொருத்த மாகுமென்றார். இந்தியாவில் இது பரியந்தம் இம்மாதிரியான பாங்கு ஏற்பட்டதாக நாமறியோம். கூட்டுறவை வியாபரிப்பதற்காகப் பரஸ்பரோபகாரக் கூட்டுறவுச் சங்கங்களும், அச்சங்க மெம்பர்களுக்கு உதவி செய்வதற்காக ஸெண்ட்ரல் அர்பன் பாங்க் போன்ற ஸ்தாபனங்களும் இருக்கின்றனவே யன்றி லட்சக் கணக்காய்ப் பணங் கொடுத்துத்தொழில் ஸ்தாபனங்களை யாரம்பிக்கவோ அல்லது ஆரம்பித்திருக்கும் தொழில் ஸ்தாபனங்களை தளர்ச்சியில்லாது நடத்தவோ பணமீந்து உதவக்கூடிய பாங்குகள் ஏற்பட்டிருப்பதாகத் தெரியவில்லை. பம்பாயிலுள்ள மெஸர்ஸ் டாடா அண்ட் ஸன்ஸ் என்கிற கம்பெனியாரது ஆதரவில் திறந்து வைக்கபட்ட இந்தப் பாங்கு பெருந்தொழில் முயற்சிகளுக்கு ஆஸ்தானமாயிருக்கும். எனவே இப்பாங்கின் மூலதனம் 12 கோடி ரூபாயாம். இப்பெருந்தொகையில் ஏழுகோடி ரூபாய்க்குக் கையொப்பங்கள் சேர்ந்துவிட்டன. மூலதனத்திற்காக வேண்டி இதுவரையில் வசூலிக்கப்பட்டிருப்பது எழுபது லட்சம் ரூபாய். பங்குக்காரர்களின் ரிஸர்வ் கடன்கள் ஆறுகோடி. இந்தப் பாங்கின் டைரெக்டர் போர்டில் அடியிற் குறித்தவர்கள் சேர்ந்திருக்கிறார்கள்.—ஸர் டோரப் ஜே. டாடா (சேர்மன்), ஸர் ஸஸூன் டேவிட், ஆர். என். முக்கர்ஜி, ஸர் பிரான்ஸிஸ் ஸ்டுவர்ட், ஸர் ஸ்டான்லி ரீட், ஆனரபிள் மிஸ்டர் புருஷோத்தம் தாஸ் தாகூர் தாஸ், மெஸர்ஸ் R. D. டாடா. F. E. தின்ஷா, F. C. ரிமிங்டன், நாரடம்மேர்ஜி, ஹா ஜி குலாம் மகம்மது ஆஸம், ஏ. ஜே. பில்லிமோரியா. இந்தப் பாங்கின் ஆக்டிங் ஜனரல் மானேஜராக மிஸ்டர் ஜாஸ்மக்பீல் நியமிக்கப்பட்டிருக்கிறார். இது திறக்கப்பட்ட தினத்தில் பம்பாயிலுள்ள பிரதம பாங்கு அதிகாரிகள் பலர் கூடியிருந்தார்கள்; மற்ற பாங்குகளுக்குப் போட்டியாக இந்நூதன பாங்கு ஸ்தாபனமானதாக நினைக்கப்படக்கூடாது. மூலதனம் அதிகமாயிருப்பதைச் சேர்த்துத் தொழிலபிவிருத்தி ஏற்படக்கூடிய புதிய துறைகளில் அதைச் செலவிட்டு எல்லோருக்கும் பொதுவாகப் பலனுண்டாகும்படி செய்வதே இப்பாங்கின் முக்கிய நோக்கம். தீர்ந்த அனுபவமும் போதிய திறமையும் வாய்ந்த விற்பன்னர்கள் இத்தியாதி கைங்கர்யங்களில் ஊக்கங்கொண்டுழைப்பதே தேசாபிவிருத்திக்கு ஓர் நற்சகுனமாகும்.

PART IV.

HINDU LAW.

ஹிந்துலா.

Maintenance—ஜீவனாம்சம்.

(369-ம் பக்கத் தொடர்ச்சி.)

கே.—ஒருவனுக்கு பிதுரார்ஜிதமான சொத்துக்கள் யாதொன்றுமில்லாமலிருந்து தன் சுயார்ஜித சொத்துக்கள் மட்டுமிருந்தால் தன் பெண்சாதி குழந்தைகள் தாய் முதலியவர்களை சம்ரக்ஷணை செய்யக் கடமைப்படுவானா?

ஜ.—ஒருவன் பிதுரார்ஜிதமான சொத்துக்களையின்றி சுயார்ஜிதமான சொத்துக்களை மட்டும் உடையவனாகயிருந்தாலும், அவன் தன் பெண்சாதியையும் வயது வராத மைனர் மக்களையும் வயதுசென்ற தாய் தந்தையர்களையும் சம்ரக்ஷணை செய்யக் கடமைப்பட்டவனாகயிருக்கிறான். மேற்சொன்னவர்களை ஸம்ரக்ஷணை செய்ய வேண்டுவது சொத்தைப் பொறுத்ததாயிராமல் ஒவ்வொருவருடையவும் சொந்தக் கடமையாகயிருக்கிறது. அவர்களை சம்ரக்ஷணை செய்யாமல் அனாதரவாய் விட்டுவிடுவது பெருத்த பாவமென்றும், அவர்களை ஸம்ரக்ஷிப்பதே முதற் கடமை யென்றும் தர்ம சாஸ்திரங்களில் சொல்லப்பட்டிருக்கிறது. ஆகையால் அவர்களை எவனாவது காப்பாற்றாமல் அனாதரவு செய்தால் அவன்பேரில் அவர்கள் தாவாச்செய்து தனியான ஜீவனாம்சம் பெறலாம். இ. லா. ரி. 2. பம் 557; இ. லா. ரி. 8. மது 361; இ. லா. ரி. 11. மது 99; இ. லா. ரி. 23. பம் 608.

கே.—மேலே ஒருவன் பிதுரார்ஜித சொத்தை அடையாமல் சுயார்ஜிதமாகவே சம்பாதித்த சொத்தை உடைத்தாயிருந்தாலுங்கூட தாயைக் காப்பாற்றக் கடமைப்பட்டவனென்று சொல்லப்பட்டது. அப்படியானால் ஒருவன் தகப்பனுக்குப் பெண்சாதியும் தன்னைப் பெற்றதாயின் சக்களத்தியான (தாயை) வளைக் காப்பாற்றக் கடமைப்பட்டிருக்கிறானா?

ஜ.—தாயாரென்று மேலே சொல்லப்பட்டது பெற்றதாயை மட்டும்தான் குறிக்கிறதேயன்றி, தகப்பனுடைய வேறு பெண்சாதியான தாயின் சக்களத்தியைக் குறிக்கிறதில்லை. பிதுரார்ஜிதமான சொத்தை யடைந்திருந்தால் மட்டுமே ஒருவன் தாயின் சக்களத்தியை (ஸபத்னீமாதாவை) ஸம்ரக்ஷணை செய்யக் கடமைப்பட்டவனாகிறான். (இ. லா. ரி. 9. பம். 279; இ. லா. ரி. 13. கல் 336.)

கே.—ஒருவன் தான் வைப்பாட்டிக்குப் பிறந்த குழந்தைகளைக் காப்பாற்றக் கடமைப்பட்டவனா?

ஜ.—ஒருவன் தன் பெண்சாதியிடமாகப் பிறந்த பிள்ளைகளைத்தவிர வைப்பாட்டியினிடமாய் பிறந்த மக்களையும் தக்க வயதுவரும்வரை ஸம்ரக்ஷிக்கக் கடமைப்பட்டவனாக இருக்கிறான்.

கே.—ஒருவன் ஒரு கிறிஸ்துமதம் அல்லது மகம்மதிய மதத்தைச்சேர்ந்த ஒரு பெண்பிள்ளையை வைப்பாக வைத்துக்கொள்ளுகிறான். அவளிடமாய்ப் பிறந்த பிள்ளைகளை இவன் இரட்சிக்கக் கடமைப்பட்டவனா?

ஜ.—ஹிந்து லாப்படி, வைப்பாட்டியினிடமாய் பிறந்த பிள்ளைகளையும் ஒருவன் காப்பாற்றுவதற்குக் கடமைப்பட்டிருப்பது வாஸ்தவம்தான். ஆனால், அப்படிப்பட்ட பிள்ளை ஹிந்துமதஸ்தனாயும் இருக்கவேண்டும். கிருஸ்துவ முதலான அன்னியமத ஸ்திரீகளுக்குப் பிறந்த பிள்ளை ஹிந்து லாப்படி ஜீவனாம்ச பாத்தியஸ்தன் ஆகமாட்டான். இ. லா. ரி. 27. மது 13.

கே.—மகம்மதீய கிரிஸ்துவ மதத்தைச் சேராமல் ஹிந்து மதத்தைச் சேர்ந்தவளான ஒரு பெண்பிள்ளையை ஒருவன் வைப்பாக வைத்துக் கொண்டு அவளுக்குப் பிறந்த குழந்தைகளுக்கு ஜீவனாம்சம் பாத்தியதை உண்டென்று சொல்லப்பட்டது. அப்படியானால் நெடுநாளாக ஒருவனால் வைப்பாக வைத்துக் கொண்டிருக்கப்பட்டவளுக்கு ஜீவனாம்சப் பாத்தியதை உண்டா?

ஜ.—ஒரு வைப்பாட்டியானவள் வெகு காலமாகவும் தொடர்ச்சியாகவும் ஒருவனால் வைக்கப்பட்டிருந்தவளாகயிருந்தாலும், வைத்துக்கொண்டிருந்த புருஷன் அவளை ஸம்ரக்ஷணை செய்யவேண்டுமென்ற கட்டாயமில்லை. 8 மது ஹை-கோ-ரி 144; இ. லா. ரி. 23 மது 282.

கே.—ஒருவன் ஒரு ஸ்திரீயை வைப்பாட்டியாக தொடர்ச்சியாயும் வெகு காலமாயும் வைத்துக்கொண்டிருந்த பிறகு இறந்துபோய் அவனுக்குச் சொத்திருந்தால், அவன் சொத்துகளை அடைகிறவர்கள் அந்த வைப்பாட்டியைக் காப்பாற்றக் கடமைப் பட்டவர்களாவார்களா?

ஜ.—ஒருவன் ஒரு ஸ்திரீயை வைப்பாட்டியாக தொடர்ச்சியாயும் வெகு காலமாயும் வைத்துக்கொண்டிருந்து பிறகு இறந்துபோய்விட்டால், அவனுடைய சொத்துக்களை அடைகிறவர்கள் அந்த வைப்பாட்டியை சம்ரக்ஷிக்கக் கடமைப்பட்டவர்களாகிறார்கள். இ. லா. ரி. 26 பம் 163; இ. லா. ரி. 12 பம் 26.

கே.—ஜீவனாம்சத்துக்காக பெண்சாதி பிள்ளை முதலியவர்கள் ஸிவில் கோர்ட்டுகளில் வியாச்சியம் செய்வதைத் தவிர ஜீவனாம்சம் பெற வேறு விதமான பரிகாரம் உண்டா?

ஜ.—ஒருவன் சரியான ஐவேசுள்ளவனாகயிருந்தும் பெண்சாதியையாவது, பெண்சாதி அல்லது வைப்பாட்டியிடமாய்ப் பிறந்த மைனர் மக்களையாவது சம்ரக்ஷிக்காமல் அனாதரவு செய்தால் அவன்பேரில் அவர்கள் ஒரு 1-வது வகுப்பு மேஜிஸ்ட்ரேட்டுக் கோர்ட்டில் ஜீவனாம்சத்துக்காக பிராது செய்து அவனுடைய சொத்துக்கும் குடும்ப அந்தஸ்தை அனுஸரித்து அவர்களுக்கு வேண்டிய செலவுக்கும் தக்கபடியாய் மாதம் ஒன்றுக்கு நபர் ஒன்றுக்கு ரூ. 50 வரையில் தீர்ப்புப் பெற்றுக்கொள்ளலாம். 1898-ம் ௵த்து 5-வது ஆக்ட்டாகிய கிரிமினல் புரொஸீஜர் கோடு 488-வது பிரிவைப் பார்க்க.

கே.—ஒருவனுக்கு பூர்வசொத்து யாதொன்றுமில்லை, சுயார்ஜிதச் சொத்துத்தானிருக்கிறது. அவன் அவனுக்குப் பிறந்து தக்க வயது வந்தவர்களாயுள்ள தன் பிள்ளைகளைக் காப்பாற்றக் கடமைப்பட்டவன் தானா?

ஜ.—தக்க வயதடைந்திருக்கிற பிள்ளைகளை தகப்பனானவன் தன் சுயார்ஜிதத்தைக்கொண்டு காப்பாற்ற சட்டப்படி கடமைப்பட்டவன் அல்ல.

கே.—ஒரு பெண்ணை விவாகம் செய்து கொடுத்துவிட்டபிறகு ஷை பெண்ணைக் காப்பாற்ற தகப்பன் கடமைப்பட்டவனா?

ஜ.—விவாகம் செய்து கொடுத்துவிட்ட பெண்ணை தகப்பன் சம்ரக்ஷிக்க வேண்டியது அவசியமில்லை. அவளுடைய ஸம்ரக்ஷணை அவளுடைய புருஷனையும் புருஷன் குடும்பத்தாரையுமே சேர்ந்ததாய் விடுகிறது.

கே.—பெண்ஜாதி பிள்ளைகள் உள்ள ஒருவன் தன் சொத்துமுழுமையையும் பிறருக்கு தானமாகவாவது உயில் மூலமாகவாவது கொடுத்துவிடுகிறான். அது செல்லுமா?

ஜ.—தன் பெண்ஜாதி பிள்ளைகளைக் காப்பாற்றக் கடமைப்பட்டவனாகயிருக்கிற ஒருவன், அவர்களுக்கு அன்னவஸ்திராதிகளுக்கு யாதொன்றும் வைக்காமல் சொத்து முழுவதையும் தானம் உயில் முதலியவற்றால் பிறருக்கு வினியோகம் செய்துவிடக்கூடாது. அப்படிச் செய்தால் உயில் அல்லது தானம் முற்றிலும் செல்லமாட்டாது. பெண்ஜாதி பிள்ளைகளின் ஜீவனாம்சத்துக்கு எவ்வளவு வேண்டியிருக்கிறதோ அந்தமட்டில் மாத்திரம் அந்த வினியோகம் செல்லுபடியாகாது இ. லா. ரி. 12. மது. 267.

தன் பெண்ஜாதி பிள்ளைகளுடைய காலக்ஷேபத்துக்கு யாதொன்றும் வைக்காமல் எல்லா சொத்துக்களையும் ஒருவன் நிரயம் தானம் உயில் முதலியன செய்யக்கூடாதென்றும், அப்படிச் செய்தாலும் சொத்தை வினியோகம்பெற்ற அன்னியனிடமிருந்து அப்பெண்ஜாதி பிள்ளைகள் ஜீவனாம்சம் பெறலாமென்றும் பற்பல ஹைக்கோர்ட்டு

களில் தீர்மானம் செய்யப்பட்டிருக்கின்றன. இலா. ரி. 2. அல. 315, 5 பம் 991 ; 18 பம் 452 ; இ. லா ரி. 10. கல். 238.

கே.—பிதுரார்ஜித சொத்து யாதொன்றையும் உடைத்தாயிராத மாமனார் (புருஷனுடைய தகப்பன்) பேரில் மருமகள் ஜீவனாம்சத்துக்காக வியாச்சியம் தொடர்ந்தால் செல்லுமா?

ஜ.—பிதுரார்ஜித சொத்தை உடைத்தாயிராத ஒருவன் வயசுவந்த தன் புத்திரர்களையாவது அப்புத்திரர்களின் பெண்டு பிள்ளைகளையாவது காப்பாற்ற சட்டப்படி கடமைப்பட்டவனல்லவாகையால், பிதுரார்ஜித சொத்தில்லாத மாமனார்பேரில் மருமகள் ஜீவனாம்சத்துக்காக வியாச்சியம் தொடரமுடியாது. இ. லா. ரி. 17. கல் 173 ; 1. அல 170.

கே.—பிதுரார்ஜித சொத்தில்லாத ஒரு மாமனாருடைய சொத்திலிருந்து மருமகள் சட்டப்படி ஜீவனாம்சத்தை பாத்தியதையின்பேரில் அடையக்கூடிய கேசுகள் உண்டா?

ஜ.—விதவையாகயிருந்தும் ஒரு மருமகள் சுயார்ஜித சொத்தை உடைத்தாயிருந்த தன் மாமனார் இறந்தபிறகு அச்சொத்தை வார்சுப் பாத்தியப்படி அடைந்திருக்கிற தன் கொழுந்தன் முதலிய தாயாதிகளிடமிருந்து ஜீவனாம்சத்தைப் பெறலாம். இ. லா. ரி. 11. அல 194; இ. லா. ரி. 22. மது 305 ; இ. லா. ரி. 22. கல் 410; இ. லா. ரி. 23. பம் 608.

கே.—முன்னோர்களால் அடமானம் முதலிய வில்லங்கங்களுக்கு உட்படுத்தப் பட்டிருந்த பிதுரார்ஜிதமான சொத்தை ஒருவன் தன் சுயார்ஜிதத்தைக்கொண்டு மீட்டுக்கொள்ளுகிறான். அப்படிப்பட்ட மாமனாரிடமிருந்து மருமகளுக்கு ஜீவனாம்சம் பெற்றுக்கொள்ளும் பாத்தியதை உண்டா?

ஜ.—முன்னோர்களால் செய்யப்பட்ட அடமானம் முதலான வில்லங்கங்களுக்கு உட்பட்டிருந்த பிதுரார்ஜிதமான சொத்தை ஒருவன் தன் சுயார்ஜிதத்தைக்கொண்டு மீட்டுக்கொண்டிருந்தால் அதுவும் சட்டப்படி பிதுரார்ஜித சொத்தாகவே பாவிக்கப்படுமாகையால் அப்படிப்பட்ட சொத்தையடைந்திருக்கும் ஒரு மாமனார் தன் மருமகளுக்கு இதிலிருந்தும் ஜீவனாம்சம் கொடுக்கவேண்டியவனாகிறானென்று மதராஸ் ஹைக்கோர்ட்டார் தீர்மானித்திருக்கிறார்கள்—இ. லா. ரி. 5. மது ஹைகோ. ரி. 150.

(இன்னும் வரும்.)

PART V.

CO-OPERATION.

கூட்டுறவு.

(371-ம் பக்கத் தொடர்ச்சி.)

மணி.—இப்பொழுது எல்லாம் சொல்லுவீர், நீங்கள் துரை வரபோது எல்லாம் செட்டியார் தான் என்று சொன்னால் முதல் முதல் அக்ஷதை போட்டுக்கொள்வீர்.

செட்டியார்.—(சிரித்துக்கொண்டு) அதுசரி, கௌரவமிருக்கு, சந்தேகமில்லை, தாசில்தார் எஜமான்கூட நம்மகிட்ட இப்ப மதிப்புக்கொஞ்சம் கூடத்தான். அதற்கு முன் அவ்வளவு இல்லை. பாங்கி விஷயமென்றால் திவான்பேஷ்கார் கூட உடனே பார்க்க வரச்சொல்லுகிறாரும்.

மணி.—பொது ஜனத்திற்கும் கொஞ்சம் பாடுபடவேண்டும். எல்லாம் சுயகாரியப்புலியாய் மட்டும் இருக்கக்கூடாது.

காரியதரிசி.—வாருங்கள் செட்டியார், ஏது இவ்வளவு நாழி?

செட்டியார்.—வரத்தான் புறப்பட்டேன், அதற்குள் அய்யரும் வந்தார்கள். கொஞ்சம் ஜோலியிலிருந்து விட்டேன்.

அய்யாவய்யர்.—மீட்டிங்கு வேலையைப் பார்ப்போம், சீக்கிரம் பேபர்களை எடுமைய்யா?

காரியதரிசி.—வெங்கிட்டராமய்யர் இரண்டு ஷேருக்கு மனுக்கொடுத்திருக்கிறார்.

இராமஸ்வாமிபிள்ளை.—சரிசேர்த்துக்கொள்ளலாம்—மேலே.

காரியதரிசி.—மீறாலெவை ராவுத்தர் தகை ரூ 100 கடன் வேண்டுமென்று கேட்கிறார். ஆதம்சா ராவுத்தர் ஜாமீன் போட்டிருக்கிறார்.

வேம்புவய்யர்.—எதற்காக கேட்கிறார்?

காரியதரிசி.—குடும்பசிலவு என்று சொன்னார். என்னசெலவு என்று கேட்டேன், சரியாய் சொல்லவில்லை. வரச்சொன்னேன், வந்திருக்கிறார்.

இராமஸ்வாமிபிள்ளை.—ராவுத்தரே, எதற்காக ரூ 100 உமக்கு?

ராவுத்தர்.—எல்லாம் குடும்பச் செலவுக்குத்தான். அய்யா, கொடுக்கிறதாக இருந்தால் கொடுங்கள், இல்லாவிட்டால் இல்லை என்று சொல்லுங்கள், எதற்காக இருந்தால் உங்களுக்கு என்ன? பொருக்குடியாக்கும், எடுத்துக்கொண்டு கொழும்புச்சீமைக்கு போய்விடுவேனென்று எண்ணுகிறீர்களோ, வீடு இருக்கு, நிலபலம் இருக்கு, என்ன கேள்வி—அப்பவே இது சர்க்கார்தொல்லை என்று சொன்னார்கள்,

வேம்புவய்யர்.—என்ன ராவுத்தர் கோபித்துக் கொள்ளுகிறார், ராவுத்தரே சற்றுப்பொறும், யார் எப்படிப்போனால் என்ன என்பதற்காகவா சங்கம் ஏற்பட்டிருக்கிறது. ஜனங்கள் அபிவிருத்தி அடையவேண்டும், வீணாய் போகக்கூடாது, அவசியமான காரியங்களுக்கு அவசியமான செலவு செய்யவேண்டும், வீண்செலவு செய்யக்கூடாது, இன்ன இன்ன காரியங்களுக்கு மட்டும் கடன் கொடுக்கவேண்டும், என்ற இந்த விஷயங்கள் எல்லாம் கூட்டுறவு சங்கங்களில் கவனிக்கவேண்டும். சங்கங்கள் சாவுக்காரரைப்போல் அல்ல. கடன் பெற்றவன் க்ஷேமத்தைகவனிக்கவே இவைகள் ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றன. நாங்கள் எல்லோரும் எதற்காக பாடுபடுகிறோம். எங்களுக்கு ஏதாவது இலாபமா? நல்லகாரியமென்று தானே?

ராவுத்தர்.—எஜமான் மன்னிக்கவேண்டும், படிக்காதவன்தானே சாமி, என்னமோ கேட்டதும் தொந்திரவாக தோன்றியது சாமி, ஏது வேண்டுமோ கேளுங்கள் சொல்லுகிறேன்.

அய்யாவய்யர்.—அப்பா ரூ 100 எதற்கு.

ராவுத்தர்.—பிள்ளையை *நாகூருக்கு எடுத்துப்போக வேண்டியிருக்கு, அதற்காகத்தான்.

அய்யாவய்யர்.—அதற்கு ரூ 100 பிடிக்குமா?

ராவுத்தர்.—ஆமா, இப்பொழுதுதான், ரயில்சார்ஜ் எல்லாம் அதிகமாமே? இச்சண்டை எப்பொழுது ஓயுமோ தெரியவில்லை.

வேம்புவய்யர்.—எப்படி திருப்பிக் கொடுக்கப்போகிறாய்?

ராவுத்தர்.—அதை யாருகண்டா, என்னமாவது ஆடுமாடை வித்தடிச்சு டயன்படி கட்டிவிடுகிறேன், சாமி.

அய்யாவய்யர்.—அப்படி ஆடுமாடு விற்றுக்கட்டுவானே, செலவு அவ்வளவு செய்யவேண்டாம். சக்தியில்லா விட்டால் சாமி கோபித்துக் கொள்ளமாட்டார். மிதமாய் செலவுசெய், ரூ 50 போதும். மாதம் ரூ 4, 5, கொடுத்துக்கொண்டுவா. சிறு வியாபாரத்திலிருந்து மீதம் வருவதை கடனுக்கு செலுத்து.

ராவுத்தர்.—சாமி அப்படியே செய்கிறேன் நல்ல, புத்தி சொல்லித்து இன்றைக்கு.

காரியதரிசி.—என்ன ரூ 50 சாங்க்ஷன் செய்வோமா?

(இன்னும் வரும்.)

PART VI.

EDUCATION.

BY Mr. K. P. SESHADRI AIYANGAR,
(*Teacher, Muthiyalpet High School, Madras.*)

கல்வி.

கிண்டர்கார்டனால் பெறப்படும் நன்மை.

சிறுவர்களின் மனமானது ஒரு கண்ணாடிக்குச்சமானம் எந்த உருவத்தையும் பிரதிபலிக்குந்தன்மை கண்ணாடிக்கு உண்டு. அதுபோல, குழந்தைகள் நல்லதையும் கெட்டதையும் பகுத்தறியச் சக்தியற்றவர்களாயிருப்பதனால், எதையும் மனதிற் பதித்துக்கொள்கின்றனர்; அதன் பிரகாரம் அப்யாசமும் செய்கின்றனர். 'தொட்டிற்பழக்கம் சுடுகாடு மட்டும்' என்னும் பழமொழிக்கொப்ப, தீய ஒழுக்கத்தைச் சிறுவயதில் பழக்கத்தின்கீழ்க் கொண்டுவருவார்களானால், அவர்களது ஆவி உடலை விட்டு நீங்கிப்போகும் வரை அந்தத் துரப்பியாசமும் போகாது. ஆகையினால், குழந்தைகளுக்குச் சிறு வயதிலேயே நற்குணங்களைப் போதித்து, நன்மார்க்கத்தை அனுஸரிக்கும்படி பழக்கவேண்டும். அப்படி பழக்குவதற்கு இந்த கிண்டர்கார்டன் முறைதான் சிறந்தது. கிண்டர்கார்டன் வகுப்பிலுள்ள சிறுவர்களைப் பாகுபாடாகப்பிரித்து, ஒவ்வொரு பாகுபாட்டிற்கும் ஒவ்வொரு தலைவனை அவர்களிலேயே ஏற்படுத்தி, அவன் சொல்வதற்கு மீறி மற்றவர்கள் ஒன்றும் செய்யக்கூடாது என்று திட்டம் செய்து பழக்கினால், கீழ்ப்படியுந் தன்மை, ஒற்றுமை முதலிய நற்குணங்கள், குழந்தைகள் தாமறியாமலேயே அவர்களது மனதில் வேரூன்றிவிடும். செடிகளை நடுதல் என்பதைச் சிறுவர்கள் செய்வதாக வைத்துக்கொள்வோம். அதில், போதகாசிரியர் குழந்தைகளைச் சில பாகுபாடுகளாகப் பிரித்து ஒவ்வொரு வேலையைச் செய்யச் சொல்கிறார்; ஒருபகுதி நிலத்தைக்கொத்தவும், மற்றொருபகுதி விதை நடவும், பிறிதொருபகுதி களை பிடுங்கவும், இன்னொருபகுதி எருவிடவும், இம்மாதிரியே ஒவ்வொருவரும் ஒவ்வொரு வேலையைச் சரிவரச் செய்தால் தான், எல்லோரும் ஒன்றுகூடிச் செய்வதன் பலன் காணப்பெறலாம். ஒருவன் தன் வேலையில் செய்யவேண்டியதைத் தவறினால், பொதுவாக அடையக்கூடிய பலன் இல்லாதொழியும், இதனால் குழந்தைகளுக்கு 'அவனவன் வேலையைச் சரிவர செய்யவேண்டும்; அப்படிச் செய்யாமற்போனால், அவனுக்குக் கெட்டபெயர் வருவதுடன் பொதுவாகச் செய்யும் காரியம் நிஷ்பிரயோஜனமாகிவிடும்' என்னும் பயமும் ஏற்படுகிறது. அந்தச் சிறுவயதிலேயே இம்மாதிரியான ஸத்குணங்களைப் போதகாசிரியர் குழந்தைகளின் மனதிற் படும்படி செய்வ

தற்கு, கிண்டர்கார்டன் முறையே சிலாக்யமானது. அத்தகைய எண்ணம் குழந்தைகளுக்கு அந்த வயதிலேயே உண்டாகிவிட்டால், அவர்கள் பிற்காலத்தில் ஸத்குணசிகாமணிகளாயும், ஜனோபகாரிகளாயும், தேசாபிமானிகளாகவும், மதாபிமானிகளாகவும், விளங்குவார்களென்பதற்குச் சிறிதேனும் சந்தேகமுண்டோ.

உபாத்திமைத் தொழிலில் கீர்த்தி பெறவேண்டுமென்ற நன்னோக்கங்கொண்ட உபாத்யாயன் தன்வசம் ஒப்புவிக்கப்பட்டிருக்கும் பிள்ளைகளின் அபிவிருத்தியைப்பற்றி ஸதாஸர்வகாலமும் கவனமேற் கொண்டவராயிருத்தலவசியம். சிற்சில வேளைகளில் மாணவர்களின் அபிவிருத்தியைக் கோரும் பேரவாவினால் ஆசிரியன் அன்புக்கு விரோதமான ஒரு மார்க்கத்தைக் கையாடவேண்டியிருக்கும். ஒருசமயத்தில் ஒரு ஸம்ஸ்க்ருத பண்டிதர் தன்னிடம் வடமொழிபயிலும் மாணவர்களை இரும்புத்தடி கொண்டு மிரட்டியும் ஒவ்வோர் சமயத்தில் அதைப் பிரயோகித்தும் வந்தார். அப்பண்டிதர் மிகவும் விற்பன்னர். யாவராலும் புகழப்பெற்றவர்தாம். பிள்ளைகளைப் பயமுறுத்தி வந்தமையால் அவ்வூரிலுள்ள சிறுவர் ஸம்ஸ்க்ருதம் கற்றுக்கொள்ள இஷ்டங்கொள்ள பின்வாங்கத் தலைப்பட்டனர். இதைக் கண்டு அவ்வயோதிக உபாத்யாயர் தன்னெண்ணம் நன்கு நிறைவேறியதைக் கண்டு உவகைகொண்டார். அப்படிப்பட்டவரை நல்லவரெனக்கூறவோ வேண்டாவோ? உண்மையில் அவரைப் புத்தியுள்ளவரல்லரெனக் கூறலாகும். ஸம்ஸ்க்ருத பாஷைகற்றுக் கொள்வதினால் எத்துணைய அனுகூலமும் சந்துஷ்டியும் உண்டானாலும் அப்பாஷையைச் சிறுவர்களின் மனதில் பலவந்தமாக நுழையச் செய்வோமானால் அப்பலவந்தத்தைச் சிறுவர்கள் ஏற்றுக்கொள்ளாது எதிர்க்கத் தலைப்படுகின்றனர். ஸம்ஸ்கிருதத்தின்மீது ஒருவிதமான வெறுப்பை அடிக்கடிக் கொள்கின்றனர். அவ்வெறுப்பானது அவர்களது ஆயுளில் அநேகம் வருஷம் வரை மனதில் ஆழ்ந்து பதிந்துவிடுகிறது. இது மாதிரியேதான் ஒவ்வோர் கல்வியிலும் வெறுப்பு உண்டாகி வருகின்றது.

ஸாதாரணக் குழந்தைக்கு இயற்கையிலேயே யுண்டான ஆச்சர்யம் அதிகமாகக் குடிகொண்டிருக்கிறது. விஷயங்களைத் தெரிந்துகொள்ள சிறுவர்க்கிருக்கும் ஆர்வத்தைப்போல் பிரபஞ்சத்தில் வேறு எந்த ஜீவனுக்கும் கிடையாது. நமது பாடசாலைகளில் அச்சுபாவமான அறியும் ஆற்றல் தணிக்கப்படுகின்றது. பிள்ளைகள் தெரிந்துகொள்ள மனமில்லாத விஷயங்களைப்பற்றி உபாத்யாயன் விரிவாகக் கூறவேண்டியிருக்கிறது. இதனால் பிள்ளைகள் மனது ஒருபக்கம் செல்லவும் உபாத்யாயன் அவர்களது கவனத்தைத் தன் பக்கமிழுக்க முயல்வது மற்றோர் பக்கமுமாக அவர்கள் மனதில் இம்மாதிரியான குழப்பமும் உண்டாகிறது. உபாத்யாயர் மாத்திரம் அறிவும் ஆற்றலுமுள்ளவரானால் குழந்தைகளின் மனோதத்வத்

தைப்பற்றியும், அதைத் திருப்பும் வகையையும் தெரிந்து தான் சொல்லும் விஷயங்களை அவர்கள் மனதில் கொள்ளச் செய்வார். ஒவ்வொரு சிறுவனும் விளையாட்டை அதிகமாக விரும்புகின்றான். ஒருதரமோ அல்லது இருமுறையோ ப்ரம்மஞான கல்வி இலாகா காரியதரிசியானவர் சில வீரச் செய்கைகளைச் சிறு பிள்ளைகளுக்குச் எர்னஸ்ட் உட்செய்து காண்பித்தார்கள். அவர்களே அவைகளைச் செய்யும் விதத்தையுங் கூறினார்கள். முதலில் தங்களால் செய்யமுடியாது என்று எண்ணினவர்கள் பின்பு யாவரும் ஆச்சர்யப்படும் விதமாக அச்செய்கைகளைத் தாங்களே செய்து காட்டினர். கவனத்தைக் கொஞ்சம் நேரம் ஒரு வழிப்படுத்தும் மனோ பயிற்சியில் பிள்ளைகளைப் பழக்குவித்தால் அவர்கள் பிற்கால வாழ்க்கையில் மனதையடக்கவும், தானடங்கும் தன்மையை யடையவும் வெகு சுலபமாயிருக்கும். ஆகவே உபாத்யாயன் மாணவர்களைச் சிநேகங்கொள்ளும் பக்ஷத்தில் பிள்ளைகளின் நன்மைகளைத் தெரிந்து அவைகளைக்கொண்டு அவர்களை மேன்மேலும் அறிவிலும் ஆற்றலிலும் ஆசாரத்திலும் விருத்தியடையச் செய்யலாம்.

ஆனால் உபாத்யாயர்கள் மிகவும் தொந்தரவுப்படுத்தப் பட்டவர்கள். ஏனெனில், அவர்கள் ஏககாலத்தில் நாற்பது அல்லது அதற்கும் மேற்பட்ட எண்ணிக்கையுள்ள பிள்ளைகளுடன் மல்லு கொடுக்கவேண்டியிருக்கிறது. ஒரே சமயத்தில் எல்லா பிள்ளைகளுடைய கவனத்தையும் தன்பக்கம் இழுப்பது மிகவும் கஷ்டசாத்யமானதுதான். உபாத்யாயர் மாத்திரம் சூக்ஷ்ம திருஷ்டியும், அவதானமும், அநுதாபமும் உள்ளவராக இருந்தாலொழிய தற்காலத்திய முறைப் பிரகாரம் போதிக்குந்தொழில் நரம்பு வேதனையையுண்டாக்கத்தக்கது. பிள்ளைகளின் மனதில் விஷயங்களை நுழைக்க உபாத்யாயர் பலவந்தப்படுத்தாமலிருப்பின் அவரது வேலை வெகு எளிதாகின்றது. சூர்யனது பிரகாசத்தைக் கண்டதும் புஷ்பங்கள் மலர்வதைப் போல் பிள்ளைகளின் மனதைத் தானாக மலர்ந்து பக்குவமடைய ஆசிரியர்கள் விட்டுவிடவேண்டும். எவ்விதத்திலும் பிள்ளைகளின் மனதைத்தான் விகஸிக்கச் செய்வோன் என்ற எண்ணத்தைப் பிள்ளைகள் தெரிந்துகொள்ளா வண்ணம் உபாத்யாயர் மறைக்கவேண்டும். புளியங்கொட்டையிலிருந்து மதுரமான மாங்கனியையும் கர்ட்டாமணக்குச் செடியிலிருந்து பரிமளமுள்ள ரோஜா புஷ்பத்தையும் ஒருவராலும் உண்டாக்க முடியாது. ஆனால் அறிவும் திறமையுமுள்ள தோட்டக்காரன் தன் புஷ்பங்களை மிகவும் சுந்தரமும் சுகந்தமும் செழுமையு முள்ளனவாகவும் மரங்களை நேராக ஓங்கி வளரவும் தன் கைப்பாட்டினாலும் கவனத்தினாலும் உண்டாக்கவல்லவன்.

(இன்னும் வரும்.)

PART VII.

NEWS AND NOTES.

ஸமாசாரக் குறிப்புகள்.

"விவாக ஸம்ஸ்காரம்."

இதற்கு முந்தி நமது 'கல்பதரு'ச் சஞ்சிகைகள் மூன்றில் மேற்குறித்த பெயரோடு ஜனசாரக்கதை யொன்று பிரசுரிக்கப்பட்டிருந்ததை நமது அபிமானிகள் மறந்திருக்கமாட்டார்கள். அக்கதை 'குசிகர்' என்னும் மறுநாமம் புனையப் பெற்றவரால் முதன் முதல் 'இந்து'ப் பத்திரிகையில் பிரசுரமானதன் மொழிபெயர்ப்பாகும். அதன் காபிரைட் நமது நண்பரான ஸ்ரீமான் அ. மாதவையா அவர்களுக்கு உரிமையாகுமென்று தெரிய வருவதனாலே அவ்வழகிய மூல வியாஸத்தினை யாம் உபயோகித்ததற்காக அன்னவர்க்கு யாம் மனமுவந்து நன்றி செலுத்துகின்றோம்.

ஒரு மகத்தான தருமம்.

'தருமம் தலைகாக்கும்' என்பது முதுமொழி. ஈவு இரக்கம், பச்சாத்தாபம், ஜீவகாருண்யம் முதலான அம்சங்கள் எவரிடம் இருக்கின்றனவோ அவர்களே இக்கலியில் தர்மவான்களென்று மதிக்கப்படுபவர். நமது கல்பதருவைப் படிக்கும் அபிமானிகளும் நண்பர்களும் சென்னையிலுள்ள தர்மவான்களிருவரை நன்றாயறிவார்களென்றே மதிக்கின்றோம். கலவலா கண்ணன் செட்டியாரும் கலவலா ராமானுஜம் செட்டியாரும் கலியுகக் கர்ணர் என்று சின்னாள் முன்னர் இவ்விராஜதானிப் பெரிய 'தாதா' வான டாக்டர் ஸர் S. சுப்ரமணியய்யர் கூறியதும் நம்மவர்க்கு ஞாபகமிருக்கும். அவ்விரு இணைபிரியாப் பிராதாக்களில் மூத்தவரான ராவ் ஸாஹிப் கலவலா கண்ணன் செட்டியார் இப்போது மற்றோர் புதிய தருமம் செய்து என்று மழியாப்புகழுக்குப் பாத்திரவானாயிருக்கிறார். எழும்பூர் ஸ்டேஷனுக்கும் மதிராஸ் ஸெண்ட்ரல் ஸ்டேஷனுக்கும் மத்தியிலிருக்கும் ராஜா ஸர் சவலை ராமசாமி முதலியாருடைய சத்திரம் சென்னைக்குப் புதிதாய் வரும் சகல வருணத்தவர்க்கும் தங்குமிடமாயிருக்கிறதோ அப்படியே ஒரு ஸ்தாபனம் இருக்க வேண்டுமென்று கருதி எழும்பூருக்கு அருகில் தென்னிந்தியா ரெயில்வே பிரயாணிகள் வந்திறங்குமிடத்து அவர்கள் இரண்டு பர்லாங்கு நடந்து ராஜா ஸர் ராமசாமி முதலியாருடைய சத்திரத்திற்கு வருவதன் சிரமத்தைத் தவிர்த்து, ஸ்டேஷனுக்கு அருகாமையிலேயே ஒரு பெரிய கட்டிடம் வாங்கித் தமது தர்ம ஸத்திரமாகப் பெயரிட்டுப் பிரயாணிகளின் ஸௌகர்யார்த்தமாக விட்டுவிட்டார். நம் மாகாண கவர்னர் அக்கட்டடத்தைத் திறந்து வைத்தார். கோடையிலாகட்டும் மாரியிலாகட்டும் திக்குதிசை தெரியாது சென்னைக்குத் தென்னிந்தியா ரெயில் மார்க்கமாகப் புதிதாய் வந்திறங்கும் பிரயாணிகளுக்கும் மற்றோர்க்கும் இத்தங்குமிடம் விசேஷ உபயோகத்தைத் தருமென்பதற்குத் தடையில்லை.

யுத்த மும்முரம்.

ஐரோபாவில் யுத்தம் வெகு மும்முரமாக நடந்து கொண்டிருக்கிறது. 1914-ம் வருஷம் ஆகஸ்டு மாதம் 4-ந்தேதி ஆரம்பமான ஐரோபிய யுத்தம் இம்மூன்றரை வருஷகால மாகியும் நின்றபாடில்லை. உலகத்திலுள்ள பிரதான வல்லரசுகள் இக்கடூர யுத்தத்தில் சம்பந்தப்பட்டிருக்கின்றன; லட்சம் லட்சமாக உயிர்ச்சேதங்களும் பொருட்சேதங்களும் சேர்ந்துகொண்டிருக்கின்றன. ஜலக்கீழ்க்கப்பற் போராட்

மும் ஆகாய விமானப்போராட்டமும் பிர
கிருத யுத்தத்தில் தோன்றியிருக்கும் பிர
தான அம்சங்கள். இத்துடன் ருஷியா,
ருமேனியா போன்ற ராஜாங்கங்கள் சமா
தானத்திற் கிணங்கிவிட்டன; அது காரண
மாக மற்றுமுள்ள நேசவல்லரசுகளுக்கு
சிரமம் அதிகமே. என்றாலும் ஜர்மானிய
அகங்காரம் அடியுடனொழிந்து உலகத்தில்
சிநேகம், ஸ்வேச்சை, சமாதானம், நியா
யம், அமைதி முதலான ஸாத்வீகத்தன்மை
கள் மேம்படவேண்டு மென்பதே நேசவல்
லரசுகள் கைக்கொண்ட கருத்தாயிருப்பது
பற்றி, அவர்களுடைய கருத்து நிறை
வேறித் தேசத்தவர் சுகஜீவிகளாயிருக்க
எம்பிரான் கிருபை பாலிப்பாராக!

யுத்தக்கடனுக்கு உதவிசெய்யுங்கள்.

இதற்கு முந்திய சஞ்சிகைகள் பலவற்
றில் ஸ்கூலில் படிக்கும் பலர்களும் பாலி
கைகளும் தத்தம் சக்திக்குத் தகுந்தபடி
ஒரு தம்பிடியோ அல்லது காலணாவோ
கொண்டு வந்து தங்களுக்குப் படிப்பு
சொல்லிவைக்கும் உபாத்தியாயர்களிடத்தி
லாவது உபாத்தியாயினிகளிடத்திலாவது
கொடுத்து உண்டிப் பெட்டியிற் போட்டு
வைத்துப் பிறகு குறிப்பிட்டதோர் சமயத்
தில் அப்பணத்தை யுத்தரங்கத்தில் நமக்
காக ரத்தத்தைச் சிந்தும் நமது சகோதரர்
களின் ஸௌகர்யார்த்தமாக வுதவ அனுப்
பலாமென்றோமே. அம்மாதிரியே நமது
'கல்பதரு'விற் குறித்த குறிப்பை முன்
னிட்டு அனேக பாலிகா பாடசாலைகளில்
உண்டிப் பெட்டிகள் வைக்கப்பட்டிருக்கின்
றன வென்று கேட்க எமக்கு மிக்க சந்
தோஷமுண்டாகிறது. மிந்திரி மிந்திரி
யாய்ச் சேருவது மகத்தான தொகையாக
மாறும். ஆதலால் நாம் உதவுவது தினை
யாயினும் சடைசியாய்க் கணக்குப் பார்த்
தால் அது பனையாகுமாதலால் பிரதிபாட
சாலையில் ஓதும் சிறுவர்களும் சிறுமியர்
களும் தம் போன்ற ஜீவாத்மாக்களுக்கு
உதவி புரிவது தமது கடமையெனமதித்து
யுத்தம் முடியும் பரியந்தம் அவ்விதமே
நடப்பாராக.

ஸர் P. S. சிவஸ்வாமி ஐயர்.

நம் சென்னை வாசியாயும், சென்னை
கௌன்ஸில் மெம்பராக இருந்தவரும்,
திருக்காட்டுப் பள்ளியில் பாலர்களின்
கல்வி யபிவிருத்தியைக்கோரி லட்சம் ரூபா
யில் ஒரு ஐஸ்கூல் ஸ்தாபித்துச் செம்மை
யாக நிர்வகித்து நடத்திவருப வருமான
ஸர் P. S. சிவஸ்வாமி ஐயர் என்ற கன
வான், இந்துக்கள் புனிதமாகக் கொண்
டாடும் ஸ்ரீ கங்காநதியின் வடகரையிலிருக்
கும் ஸ்ரீ காசியென்னும் வாரணாவத
க்ஷேத்திரத்தில் ஸ்தாபிக்கப் பட்டிருக்கும்
இந்து யூனிவர்ஸிடி (Hindu University)
யென்னும் ஸர்வகலாஸபையின் வைஸ்-
சான்ஸலீராகத் தெரிந்தெடுக்கப் பட்டா
ரென்றும், அந்த எலெக்ஷனை லப்டி
னெண்ட் கவர்னரான ஸர் ஹார்க்கோர்ட்
பட்லர் அங்கீகரித்து விட்டாரென்றும்
தெரிகிறது. தனவானுக்குத் தன்னூரிற்
சிறப்பு, கல்விமானுக்குச் சென்றவிடமெல்
லாம் சிறப்பு என்று உலகத்தவர் சொல்லு
வார்கள். அதையொப்ப முப்பது மூன்று
கோடி ஜனங்கள் வசிக்கும் இவ்விந்தியா
வின் கண் நம்மிராஜதானியிலிருந்து
வைஸ்-சான்ஸலராக ஒரு கனவானைத்
தெரிந்தெடுத்தது இவ்விராஜதானியிலுள்
ளார்க்கு விசேஷ பெருமையைத் தருவ
தாகு மென்பதற்குத் தடையேது? ஐயர்
தீர்ந்த அனுபவமும் ஆழ்ந்த கல்வியும்
படைத்த யுத்திவானாதலால் இந்து யூனி
வர்ஸிடியின் வைஸ்-சான்ஸலராக விருந்து
அச்சர்வ கலா ஸபையின் நோக்கங்களைத்
தீவிரமாக நிறைவேற்றுவாரென்றே நாம்
பூர்ணமாக நம்பியிருப்போமாக!

A WARNING.

கவனிக்கப்படவேண்டிய ஓர் எச்சரிக்கை.

கடற்பிரயாணம், கரைப்பிரயாணம் ஆகிய
இரண்டு பிரயாணங்களுக்கும் ஏற்றகாலம்
இதுவல்ல. நிலக்கரி யகப்படாக்குறைவி
னால் யந்திரசாலைகளும் மற்றுமுள்ள
தொழிற்சாலைகளும் தத்தம் வேலைகளை
வெகுவாய்க் குறைத்திருக்கு மிச்சமயத்தில்
ரெயில்வே கம்பெனிகளும் கப்பற் கம்
பெனிகளும் முறையே தமது ஸர்விஸை
யும் குறைத்திருக்கிறார்கள். ரெயிற் பிர
யாணத்தில் ஏகமாய் விடப்பட்டிருந்த டிரெ
யின்கள் குறைவுபட்டதனாலும், அனேக
வண்டிகள் யுத்தகாரியத்தினிமித்தம் உப
யோகிக்கப்பட்டு வருவதனாலும், டிரெயின்
கள் வெகுவாய்க் குறைந்துபோய்விட்டன.
அது காரணமாக ரெயிற் பிரயாணஞ் செய்
வோர் படும் தொல்லை அற்பசொற்பமல்ல;
அம்மாதிரியே கடற்பிரயாணமும். அதில்
தோன்றுகிற அநர்த்தங்கள் இக்காலத்தில்
அதிகமென்பதை நாம் கூறவேண்டாம்.
போர் சம்பந்தமான காரியங்களுக்கும் வியா
பார விவகாரங்களுக்கும் கப்பல்கள் அபரி
மிதமாய்த் தேவையாயிருப்பது ஒருபுற
மிருக்க, மற்றோர் புறத்தில் யுத்த மண்டல
மென்று தொகுத்து வைக்கப்பட்டிருக்கும்
சமுத்திரப் பகுதியின்கண் கப்பலேறிப் பிர
யாணம் செய்வது அபாயம் என்று பலரும்
சொல்லுவார்கள். அம்மாதிரியான எச்
சரிப்பு இப்போது மதிராஸ் கவர்ன்மெண்
டாரால் தம் ஜன்மதேசம் புறப்பட்டுச்
செல்லும் மாதர்களின் விஷயத்தில் முன்
னிடப்பட்டிருப்பதா யறிகிறோம். இந்த
யுத்த காலத்தில் இந்தியாவிலிருந்து இங்கி
லாண்டிற்குச் செல்லுவோர் உத்தரவு
பெற்றே செல்ல வேண்டுமென்று விதி
ஏற்பட்டிருப்பதோடுகூட, மாதர்கள் அவ்
வித உத்தரவு பெற்றிருந்தும் மத்தியில்
மிக்க பரிசிரமப் படவேண்டி நேரிடு
மென்று கவர்ன்மெண்டார் எச்சரித்து
மிருக்கிறார்கள். இவ்வெச்சரிப்புக்கு அர்
த்தமென்ன? ஸ்திரீகளாகட்டும் குழந்தை
களாகட்டும் மத்திய தரைக் கடல் மூலமாக
இங்கிலாண்டிற்குக் கப்பலேறிச் செல்ல
லாகாதென்பதேயாம். வேறு வழியில்லை
யோ வென்றால் ஆபிரிகாவின் தெற்குக்
கோடியிலிருக்கும் நன்னம்பிக்கை முனை
யை (Cape of Good Hope)ச் சுற்றித்
தான் செல்லவேண்டும். என்றாலும் பம்
பாயிலிருந்து அம்முனையைச் சுற்றிச் செல்
லுங் கப்பல்களிருப்பதாகத் தெரியக்
காணோம். ஆகவே பம்பாயிலிருந்து ஒரு
மாது கப்பலேறித் தென்னாபிரிகாவிலுள்ள
நன்னம்பிக்கை முனைக்குச்செல்லுவதாக
வே வைத்துக்கொள்வோம். அங்கிருந்து
இங்கிலாண்டிற்குப் புறப்படுங்கப்பல் அவா
ளுக்குக்கிடைக்கு மென்பதற்கு நிச்சய
மென்ன? இப்போதிருக்கும் காலஸ்திதியை
யுத்தேசித்து நன்னம்பிக்கை முனைவரை
யிற் போவதுகூட சிரமம். பம்பாயிலிருந்து
தென்னாபிரிகாவுக்குச் செல்லும் பிரிடிஷ்
இந்திய ஸ்டீமர்கள் சரிவர செல்லுவதில்லை
யென்ற ரிப்போர்ட்டுங் கிடைத் திருக்
கிறது. இப்பேர்ப்பட்ட சந்தர்ப்பத்தில்
மாதர்கள் இங்கிலாந்துக்குச் செல்ல உத்
தரவு சீட்டுகள் பெற்றிருந்தபோதிலுங்
கூட பம்பாயிலிருந்து கப்பலேறுவதி
லுள்ள அஸௌகர்யங்களையும் அல்லல்
களையும் அவர்களுக்கு (அம் மாதர்களுக்கு)
அறிவிக்கவேண்டு" மென்று மதிராஸ்
கவர்ன்மெண்டார் உத்தரவிற் கண்டிருப்
பது ஒரெச்சரிக்கை யென மதித்து இவ்
வளவு தூரம் எழுதலானோம்.

PART VIII.

MORAL STORIES.

நீதிக் கதைகள்.

ஹரிஹரன்.

ஓர் இனிய நாடகம்.

கீ. பி. சேஷாத்ரி ஐயங்கார் எழுதியது.

முதல் அங்கம்.

நான்காம் களம்.

ஸுரே:—(திடீரென்று எழுந்து) யான் என்மனதிலிருப்பதை வெளியிட வேண்டும். என் மனம் தாங்கவில்லை. இந்தச் சமயம் சும்மாவிருப்பது பெரும் பாபத்துக்கு ஹேதுவாம். அத்தகைய பரிசுத்தமும், கபடமின்மையும், அங்கனு வனப்பும், அழகின் எழிலும் ஒரே வார்த்தையில் கற்பின் சிறப்பும், அடாது செய்யும அக்கிரம வரசன் கொடுங்கோன்மையால் வருத்தம் அடைய நாம் பார்த்தும் பராமுகமாய் இருக்கலாமோ? பகவானிற்கு கண் இல்லை போலும். கிராதகர்களுக்கு உதவியாக விருந்து, சிஷ்டர்களை பரிசோதிக்கிறரே. மன்னுதி மன்னு! க்ஷமிக்கவும். எவனே ஓர் அன்னியனை நான் இவ்விதம் மொழிந்ததற்கு என் உண்மை மனமும், ஊக்கமுமே காரணமாம். இதுபோன்ற காரணங்களில் பண்ணையர்கள் தங்கள் கார்களையெல்லாம் தீட்டி கட்கமெனக்கொண்டு, எப்படிப்பட்ட பஞ்சம் நேர்ந்தபோதிலும் நிலங்களை உழுது பயிரிடாது சகாயமும் புரிவார்கள். வித்தியார்த்திகள் தங்கள் வித்தையைவிட்டு யுத்தம் செய்ய சித்தமாயிருப்பார்கள். நியாயாதிபதிகள் இதனது முடிவை வாதாடி ஜயிக்காமல் போராடி ஜயிப்பார்கள். பெண்மணிகள் தங்களினத்தவளைக் காக்க மாரியைப்போல் கோபத்துடன் யுத்தத்திற்கு வருவார்களென்றல் யுவாககள் இப்பொழுதே சண்டைக்கு ஆரம்பித்து விடமாட்டார்களா? இப்பென்னங்கைக்கு உழைக்காதவர்களும் மனிதப்பிறப்போ? லக்ஷ்மியே உருவென்ன அவதரித்துள்ள இவ்வநிதைக்குத் துணை செய்யாதவர்களும் மானிட ஜன்மத்தவரா? இத்தருணி இச்சமயம் இருக்கும் நிலையைக் காணின் கல்லும் உருகுமே! ஏனே அந்தக் கன்னெஞ்சக் காதகனை ராஜேந்திரன் மனம உருகவில்லை. கல்லினும் கடினமோ அவன் ஹிருதயம்.

காஞ்:—(சிம்மாஸனத்திலிருந்து இறங்கிவந்து ஸுரேந்திரன் கைபிடித்து) மிகவும் வந்தனம் உமது பேரும் ஊரும் யாது சொல்வீரோ?

ஸுரே—ஸுரேந்திரன் கோசல நாட்டினன்.

காஞ்:—மாளவ நாட்டில் உம்போன்றவர்களிருப்பின் என் அதிர்ஷ்டமே ஆதித்தரே! நீர் விரும்பினல் சில விஷயங்கள் சொல்ல இஷ்டமுள்ளவனயிருக்கிறேம், இங்கு வாரும். மகபதீ! நீரும் உடன்வரலாம் புத்தியுங்கூற எனக்கு.

(காஞ்சேயன், அதித்தன், மகபதி, மூவரும் ஒரு பக்கம் செல்லல்.)

பிரதாபன்:—நேசரே! இந்த மனிதன் யாரென்றும், எவ்வூரினன் என்றும் தெரியுமோ தங்களுக்கு?

பால:—எனக்கு ஒன்றுமே தெரியாது. என்ன துணிவு! என்ன விநயம்! எவ்வளவு தவம் செய்தாலும் நமக்கு வராது.

பிர:—என்ன நேசரே! என்னமோ புகழ்கின்றீர் அவனை.

விசி:—ப்ரபோ (பிரதாபனைப் பார்த்து) அவரைப் புகழலாமோ! உம்மைத் தான் புகழவேண்டும்.

பிர:—விதூஷகரே! யார் அவன் உமக்குத் தெரியுமோ!

விசி:—அவரைப்பற்றி உமக்கு எதற்கு பிரபோ! அவர் தான் உமக்கும் தாழ்ந்தவராயிற்றே. அவர் யாராய் இருந்தால் என்ன.

பிர:—அதற்காகல்ல விதூஷகரே! அவர் உமக்குத் தெரியுமோ?

விசி:—ப்ரபுவே! அவர் எனக்குத் தெரியாது, வேண்டுமென்றல் தாமே நேரில் கேளும்.

பிர:—சரி! அப்படியே செய்கின்றேன். ஐயா! நீர் யார்.

(ஸுரேந்திரரிடம் செல்லல்.)

ஸுரே:—நான் ஒரு ப்ரபு.

பிர:—ஐய! கட்டியன் கூறுவதுபோல் ப்ரபுத்வத்தில் ஏற்றத்தாழ் விருப்பினும் உமது மேலோரிடத்தில் வெகு தீரமாக விருந்தீரே.

ஸுரே:—எனது மேலோர்—யார்.

பிர:—உமக்கு மேலோர். நீர் இளவரசரல்ல-நான் நினைத்த வண்ணம்.

ஸுரே:—நீங்கள் பிறந்திருப்பது உங்களதிர்ஷ்டம்தான். அப்பட்டத்திற்கு நீங்கள் உரியராக மாட்டீர்கள். எவரேனும் உமது வம்சத்தில் அப்பட்டமீ பெற்றிருப்பார்கள். ஆகவே அந்தப் பட்டம் உங்களுக்கும் வந்தது.

விசி:—வாஸ்தவத்தில் அப்படித்தான். (ஸுரேந்திரன் செல்லல்.)

பிர:—நேசரே! அவன் உரைத்ததைக் கேட்டீரோ என்ன கர்வங்கொண்டிருக்கின்றன்.

பால:—இருக்கட்டும். அதோ அரசர் வருகின்றர். (இருவரும் செல்லல்.)

(காஞ்சேயன், ஆதித்தன், மகபதி, ப்ரவேசம்.)

காஞ்:—அந்தமாதிரி இழிவான உடன்படிக்கைக்கு ஒப்பமாட்டோம். இந்த விடை உமது அரசருக்கு வெளியிடும். யுத்தத்திற்கு நாங்கள் ஆயத்தமாக விருக்கிறேம். நன்மார்க்கமான விஷயம் ஏதேனும் சொல்வீராஞல் நாங்கள் சம்மதிக்க மார்க்கம் ஏற்படும். இல்லையேல் யுத்தத்தன்று சமர்க்களத்தில் சந்திப்போம். இது தெரிவியும்.

விசி:—உங்களைத்தனைபேரையும் சமர்க்களத்தில் அமக்களம் செய்து விடுகின்றேன். ஆதித்தரே போய்சொல்லும்.

ஆதி:—வேந்தே! வேண்டாம். கடைசியில் மனமுடைந்து வருத்தப்படுவீர். செல்கின்றேன். (செல்கை விசித்திரன் செல்கை.)

காஞ்:—கண்மணீ! ஸரோஜனீ! இப்படிப் பிரிவோமென்று கனவிலும் கருதவில்லையே. மிருகங்களும், பக்ஷிகளும் கடைசிவரை தங்களது குட்டிக்குஞ்சுகளை மிகச் சாக்கிரதையாகக் காத்துக்கொள்கின்றன. தேடரிய ஜென்மத்தில் மானிடப்பிறவி பெற்று, அதிலும் அரசனாக ஜனித்து எனதருங் கண்மணியை கலக்க முறும்படியாக விட்டதே விதி. விதி எவரைவிட்டது, திரிமூர்த்திகளையும் விட்டதன்றே ஊழ்வினை. நமக்கு இப்பொழுது ஆயுதமாக இருக்கவேண்டுவது ப்ரார்த்தனைகளும், பகவானின் ஸ்தோத்ரங்களுமே. அனாதரக்ஷகா; தீனபந்தோ! ஆபத்பாந்தவா! என் ஸரோஜனியைக் காப்பது நின் பாரம். தீனசரண்யா! என்றும் எம்மீது கருணை கொள்ளல்வேண்டும். அமாத்யதிலக! மகபதீ! யுத்தத்தினின்று மீண்டுவரும்வரை ராஜ்ஜியத்தையும், என்னருமைப் புத்திரியையும் காப்பாற்றவேண்டும். இதுவே நான் கோருவது. கண்ணே! வருத்தப்படாதே! இன்று நமது சபையில் நல்வார்த்தைகூறிய ஸுரேந்திரர் நம்மைக் காக்கவந்த மூர்த்தியோ! சொன்னதும் எங்கேயோ போய்விட்டாரே. எல்லாம் நம்மை ச்ருஷ்டித்த இறைவன் செயல் மகபதீ! கண்மணீ! செல்வோம்.

(யாவரும் செல்கை.)

காட்சி முடிகின்றது.

முதல் அங்கம் முற்றிற்று.

KARPUTHIRUMALI.

கற்புத்திருமலி.

BY Mr. S. T. N. CHIDAMBARAM PILLAI.

(349-ம் பக்கத் தொடர்ச்சி.)

கற்பு:—நாம் பகலில் செய்த சமையல் வகைப்படி சாப்பாடிடுகிறதா? இரவில் சாப்பிடவேறு எவ்விதமும் அமைத்துப் படைக்கவேண்டுமா? என்பதைச் சொல்லக்கேட்டுக் கொள்ளுகிறேன்.

காந்தி:—இரவில் வேறுவிதமே. அதாவது சுவாமி தரிசனத்துக்குப் போன தத்தம் கணவரையே கடவுளாக தியானித்துக்கொண்டு,

> "இஞ்சி நெல்லி இலைகறி பாகற்காய்
> கஞ்சி வெண்டயிர் கங்குல ருந்திடில்
> பிஞ்சி பூமகள் போயுடன் மூத்தவள்
> கொஞ்சிக் கொஞ்சிக் குலாவி நடிப்பளே."

என்ற, ஆன்றோர் வாக்யப்படி இஞ்சி, நெல்லிக்காய், எவ்விதகீரைகள், பாகற்காய், கஞ்சி, தயிர் இவைகளின்றி பசும்பால் சர்க்கரை முதலியவைகளுடன் சாப்பாடிட முயர்ச்சிக்கவேண்டும்.

கற்பு:—கோவிலுக்குப்போய் கடவுளடி தொழுதுவந்த கணவரை எப்படி உபசரிப்பதம்மா?

காந்தி:—காதலுடன் வணங்கி இரவு போஜனமுறைப்படி சமைத்த சாப்பாடிட்டுப்பின் அவர் உண்ட மீத அன்னமுதலியவைகளை அரிதென அருந்தி அமைவுடன் அமர்ந்து ஆனந்த பரவசமாய்க் கடவுள் தரிசனவிஷயங்களைக் கணவரிடம்கேட்டுத் தியானித்துக்கொண்டு சுகாதாரத்துக்கேற்ற தமது வீட்டுப் படுக்கையறையில் மெத்தெனப்படுத்தல் நித்திரைக்கழகெய்துமெனப் புகன்றவாறு இலவம்பஞ்சு மெத்தையில்,

> "கிடக்குங் கால்கை கூப்பித் தெய்வந்தொழுது
> வடக்கொடு கோணம் தலை செய்யார்மீக்கோள்
> உடல்கொடுத்துச் சேர்தல் வழி."

என்று ஆன்றோர் அருமை மொழிக் கேற்பதங் கணவருடன்கூட "சந்ததிக்கழகுவந்தி செய்யாமை" என்ற இன் சொல்லிற்கியைய லீலாவினோதத்துடன் சேர்ந்து சுகித்திருந்து "சேமம் புகினும் சாமத்துறங்கு" எனும் வாக்யப்படி தம் கணவருறங்கப் பலபணிகள் செய்து பின் உறங்கிக்கணவர் எழுந்திருக்குமுன் அதிகாலையிலேயே நித்திரை விட்டெழுந்து நமது இல்லக்கடன்களைச் செவ்வனே செய்துவரல் வேண்டும். இப்படிக் கணவருக்குப் பணிவிடை, சமையல், வீட்டுவேலை முதலியதுகளே பெண்களுக்குரிய குருவழிபாடும், அக்கினி காரியமுமேயாம். என்று தமது புத்திரிக்குச் சற்புத்தி புகட்டிக் களிகூர்ந்திருந்தனள்.

மணமகனைத் தேடயோஜித்தல்.

காந்தி:—எனதன்புக்குரிய நாதா! நமது பெண்ணாகிய "கற்புத்திருமலி"க்கு வயது ஒன்பது ஆகிறதே, மணமுடிய வேண்டிய காலமும் நெருங்கிவிட்டதே, கல்வி கேள்விகளில் இச்சிறு பிராயத்திலேயே தேர்ச்சியடைந்திருக்கு மிவளுக்குச் சர்வேஸ்வரருடைய அனுக்கிரகத்தால் நல்ல புருஷன் வாய்க்கவேண்டுமே என்று மனக்கலக்க முறுகிறேன்.

களமலாதுரயர்:—அதற்கெல்லாம் நாம் என் செய்கிறது. அதன் தலைவிதி எப்படியிருக்கிறதோ? நமது ஊரிலே நமது வருணத்துக்கடுத்த நல்ல குடியிலே பிறந்து சகலசாஸ்திர விற்பன்னனாய் விளங்கி அடுத்த தெருவில் வாசம்பண்ணிக்கொண்டு ப்ரஹ்மசர்யம் வழுவாது ஓர் ஆடவனிருக்கிறான். அவனுக்கு இப்போது தான் யௌவன பருவம். அவயவங்களீனமின்றி சுகமுடன் அழகாயு மிருக்கிறான். அவனுக்குக் கொடுக்கலாமா?

காந்தி:—நமது பெண்ணோ; நன்றாகக் கற்றவள். அவளுக்கேற்ற உத்தம புதல்வரைத்தெரிந்து கொடுக்கத்தான் வேண்டும்.

களமலா:—

> "கற்புறு சிந்தைமாதர் கணவரையன்றி வேறோ
> ரிற்புறத்தவரை நாடார்யாங்களு மின்பவாழ்வுந்
> தற்பொறியாக நல்குந்தலைவ னின்னல் தோர்தெய்வம்
> பொற்புறக் கருதோங்கண்டாய் பூரணானந்த வாழ்வோ."

என்ற தாயுமானசுவாமிகள் திருவாய் மலர்ந்தருளியவாறிருக்குமெனது காதலியே; அவனுடைய குணங்கள், செய்கைகள் எல்லாம் நன்மையையே பயக்கும் என்பதற்குச் சற்றும் சந்தேகமில்லை. இப்போது வேதாந்த சாஸ்திரம் படித்துக் கொண்டிருக்கிறான். நான் நன்றாயறிவேன்.

காந்தி:—அப்படியானால் கடவுள் கிருபையால் நடைபெறவேதுவாக இன்று இரவு நமது கனவில் கடவுள் உதித்து கொடுக்க உத்திரவாகட்டுமே.

(இன்னும் வரும்.)

பிங்களஹு பங்குனி—சித்திரை௴. இங்கிலீஷ்—1918, பசலி—1327,
ஹிஜிரி—1336. பால்குணம்-சைத்ரம் உத்தராயணம்—வசந்தருது.

18	1	கக	திங்	பஞ ௬0-0, அநு சக-சக, வித் சo-ஙo, கௌ உக-கo, திருதினஸ்ப்ருக் கரிநாள்,
19	2	உ0	செ	பஞ 0-சச, கேட் ருங-கஅ, விய சo-உக, தை 0-சச, தி ச-ஙஅ,
20	3	உக	புத	ஷஷ்ஃ உ-உக, மூல ருகு-கள, வரீ ஙள-ஙகு, வணி உ-உக, தி கச-ஙஅ, ரா உக-சஉ,
21	4	உஉ	வியா	ஸப் உ-ஙக, பூரா ருகு-ஙரு, பரீ ஙங-கரு, பவ உ-ஙக, தி கங-உகு, வீதாதேவிவிரதம்,
22	5	உங	வெ	அவ்ஃ க-கு, உப ருக-ஙகு, உரா ருச-ச, சிவ உங-ஙக, கௌ க-கு, தை உங-உங, தி கரு-கு, அவமா,
23	6	உச	சனி	தச ருஉ-ஙக, ஞுவ ருo-ருக, சித் உங-க, வணி உகு-ரு, தி ங-ஙஉ,
24	7	உரு	ஞா	ஏகா சகு-சக, அவி சங-கு, சாத் ககு-உஅ, பவ ககு-கo, தி 0-ங, ஸர்வைகாதசி,
25	8	உசா	திங்	துவா ஙள-ருக, சத சo-க, சுப சு-ஙo, உப ருo-உஉ, கௌ கக-ருo, தி உ-ககு, ரா உங-ஙள,
26	9	உஎ	செ	திர உஅ-ருஅ, பூட் ஙங-கு, பிரா சங-ஙரு, கர ங-உகு, ரா உங-ஙo, திரயோதசிதிதி, கிருஷ்ணாங்காரகசதுர்த்தசி, பிரதோஷம்,
27	10	உஅ	புத	சசி கங-ஙo, உட் உகு-ஙச, மா ஙகு ருள, சகு கங-ஙo, ரா உக-கள, திதிதுவயம், [யாஸசிவராத்ரி,
28	11	உகூ	வியா	● கo-ரு, ரே கஅ-கங, வை உகு-உo, நாக கo-ரு, பிரதிபத்திதி, [தர்சனம், யுகாதி, துவிதியாதிதி, அவமா,
29	12	ங0	வெ	பிர க-கக, உப ருக-ருங, அசு கக-உரு, விஷ் ககு-உங, பவ க-கக, பால உள-கக, தி உ-ஙச, ரா உ-உரு, சைத்ரசுத்தம் சந்திர
1	13	க	சனி	திரி சங-உகு, பர ரு-ஙரு, பிரீ சு-கள, உப ருக-ருங, தை கங-சஅ, ரா உ-சஉ, மேஷரவி ககு-ருக, விஷுவத், ஸமார்க்கம், [உத்தமமன்வாதி, மாஸகௌரீவிரதம், சூன்யதிதி,
2	14	உ	ஞா	சது சக-கஅ, கிரு க-கஉ, உப ருள-கஅ, ஸௌ ருக-சo, வணி கங-ருஉ, ரா அ-சo, லக்ஷ்மீகணபதிவிரதம், சூன்யதிதி,
3	15	ங	திங்	பஞ ஙஅ-அ, மிரு ருள-சஅ, சோ சங-சo, பவ கு-சங, தி கஉ-உo, கூர்மகல்பாதி, வஸந்தபஞ்சமி, மத்ஸியஜயந்தி,
4	16	ச	செ	ஷஷ்ஃ ஙள-ச, ஆரு ருங-ரு, அதி சங-கக, கௌ எ-ஙரு, தி ஙக-ககு, எம்பெருமானார், விறன்மிண்டர்,
5	17	ரு	புத	ஸப் ஙஅ-உ, புந கூo o, சுக சக-ஙஉ, கர எ-ஙங, தி ஙo-சஉ, ஸந்தானஸப்தமி, முதலியாண்டான்,
6	18	சா	வியா	அவ்ஃ சo-ருஉ, புஷ உ-கக, திரு சக-கங, பத் கு-உள, தி உச-ருஅ, அசோகாஷ்டமி, கரிநாள்,
7	19	எ	வெ	நவ சகு-கஉ, பூச எ-கரு, சூல சகு-கஉ, பால கங-உ, ரா கக-ஙக, ஸ்ரீராமநவமி, கவீந்திரர், [வாஹனம்,
8	20	அ	சனி	தச ருo-ஙச, ஆயி கங-உங, கண் சங-சக, தை கள-ருங, ரா ககு-ருக, ரிஷபாயனம் ருச-ங, தர்மராஜதசமி, திருக்கச்சூர்-ரிஷப
9	21	கூ	ஞா	ஏகா ருங-ஙங, மக உo-உச, விரு சகு ருக, வணி உங-ஙங, ரா கங-ருள, ஸ்மார்த்த ஏகாதசி, டோலோத்ஸவம், [சேர்வை
10	22	க0	திங்	துவா கூo-0, பூர உள-சக, தரு சக-கக, பவ உங-ஙள, ரா கஅ-கு, வைஷ்ணவ ஏகாதசி, திருதினஸ்ப்ருக் தேவநாதன் கருட
11	23	கக	செ	துவா உ-சஉ, உத் ஙகு-கள, வியா ருo-உகு, பால உ-சஉ, வாமனதுவாதசி, மதனத்திரயோதசி,
12	24	கஉ	புத	திர அ-ஙக, ஹஸ் சஉ-உங, ஹர் ருஉ-உகு, தை அ-ஙக, சே உ-சரு, கிடாம்பியாச்சான், உமாபதி சிவாசார், [திருவள்ளூர் தீர்த்தம்
13	25	கங	வியா	சசி கச-கo, சித் சங-க, வஜ் ருச-o, வணி கச-கo, தி ச-ஙகு, பூர்ணிமாதிதி, மதுரைகவிகள், அனந்தாழ்வான், இசைஞானியார்,
14	26	கச	வெ	◯ கங-அ, ஸ்வா ருச-ருக, வித் ருகு-க, பவ கங-அ, தி ச-உகு, பிரதமதிதி ரௌச்சியமன்வாதி, சித்திராபூரணிமை, திருக் [குறிப்புத்தர்,
15	27	கரு	சனி	பிர உங-உஉ, விசா கூo-0, விய ருகு-உக, கௌ உங-உஉ, தி கo-கக, சைத்ரபகுளம், அதிதி கரிநாள் அபரம் கஅ-ஙக, அந்தம்
16	28	கசா	ஞா	துவி உரு-ஙங, விசா o-க, வரீ ருகு-ககு, கர உரு-ஙங, தி கo-ருஉ, துவிதியாதிதி, [உச-ருஉ,
17	29	கஎ	திங்	திரி ஷக-கஉ, அநு ச-ஙo, பரீ ருங-ஙங, பத் உங-கஉ, தி கங-கள, வாகீசர், திருநீர்மலை கருடசேர்வை,
18	30	கஅ	செ	சது ஙo-ஙஉ, கேட் எ-ருo, சிவ ருஉ-உக, பால ஙo-ஙஉ, தி உஅ-ஙகு,

அநேக நற்சாட்சிப் பத்திரங்கள் பெற்ற

50 சாமான்கள்இனும்] **ராஜா சுந்தரி ரோஜா** [50 சாமான்கள் இனும்

கூந்தல் வளரும் பரிமளத் தைலம்.

50 இனும் சாமான்களுடன் டின் 1-க்கு ரூபாய் 1—0—0.

தலைமயிரை வளரச் செய்வதோடு மயிர் உதிராமல் செய்யும். அதிக வாசனையுடனிருப்பதோடு, மூளையின் கொதிப்பைத் தணித்து கண்களுக்கு குளிர்ச்சியைத் தரும். சிரசிலுள்ள பல நோய்களையும் நிவர்த்தி செய்து கண்களில் நீர் வடிதல், தலையில் சுண்டு, புண், மயிர் வெடிப்பு, மயக்கம், தலைசுற்றல், தலைவலி, சொரி சிரங்கு, மஹோவியாகூலம் ஆகிய இவைகளைப் போக்கடித்து தேக ஆரோக்கியம் தரும் தைலம் இது ஒன்றுதான். 1-புட்டி தருவித்தால் இதன் அருமை தெரியும். அநேக நற்சாட்சிப் பத்திரங்களும் பெற்றிருக்கிறது. இது தேசமெங்கும் நல்ல பெயர் பெற்றிருப்பதே இதன் புகழ்ச்சிக்கு அத்தாட்சியாகும்.

இனும் சாமான்களின் விபரம்:—ஸ்திரீகள் தலையில் அணியும் கொண்டைக்கிளி 6, குங்குமச்சிமிழ் 1, மைச்சிமிழ் 1, அழகான முகம் பார்க்கும் கண்ணாடி 1, தாம்பூல மாத்திரைகள் 30, தந்தச்சீப்பு 1, ராஜா ராணி காரனேஷன் பெட்டி 1, ரவிவர்மா படங்களுள்ள போஸ்ட் கார்டுகள் 6, அத்தர் பில்லை 1, சந்தனப்பில்லை 1, ஸ்திரீகள் மார்பில் அணியும் ராஜா ராணி உள்ள சுந்தரமான புரோச் 1.

வேண்டுபவர்கள் அடியிற்கண்ட விலாசத்திற்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

தைரியலட்சுமி அண்டு கோ.,

நெ. 3, இருளப்பன் தெரு, மதராஸ்.

இனும்! **இனும்!!** **இனும்!!!**

அதாவது என்ன?

இன்வெண்டிங் சுவிஸ் வாட்சு ஒன்று ரூபாய் 3.



இங்கி தொடாமல் எழுதத்தகுந்த பவுண்டன் பேனா ஒன்று, கிளிப் ஒன்று, இங்கிபுட்டி ஒன்று இனும் கொடுக்கப்படும். வாட்சுக்கு ஒரு வருஷம் காரண்டி, நேர்த்தியானது. பொன் கிலிட் போட்ட சங்கிலி 1-க்கு 0 12 0 வெள்ளி கலருடைய சங்கிலி 1-க்கு 0 8 0 செப்புக் கட்டையின்பேரில் இலட்ரிக் கோல்டு கலர்போட்ட ரேக்கினால் செய்யப்பட்ட கைக்காப்பு ஜதை 1-க்கு ரூ. 3 0 0.

விலாசம்:—வி. கே. பென் அண்டு கோ.,
24, விநாயகமேஸ்திரி வீதி, மதராஸ்.

குறைந்த சந்தாவில் நிறைந்த குணங்களை அடங்கிய பத்திரிகை எது? அதுதான்,

"கல்பதரு"

இப்பத்திரிகை "கல்பதரு" என்னும் பெயருக்கு இசைய, படிப்போர்களுக்கு வேண்டும் விஷயங்களை யெல்லாம் அடக்கி, படிப்பவர்கள் மனத்தை களிப்புறச் செய்ய வல்லது. இது, (1) ஸ்ரீராஜாங்கம், (2) சுகாதாரம், (3) வியவஸாயம், வர்த்தகம், கைத்தொழில், (4) ஹிந்து லா, (5) கூட்டுறவுச் சங்கங்கள், இவைகளைக்குறித்த வியாஸங்களையும், (6) கல்வி, (7) வர்த்தமானங்கள், (8) ஞானத்தை அபிவிருத்தி செய்யக்கூடியதும் மனதை இன்புறச் செய்யக்கூடியதுமான கதைகள், நாடகங்கள் முதலியவற்றையும் அடக்கியுள்ளது. இந்தப் பத்திரிகைக்கு தபால் கூலி உள்பட வருஷம் ஒன்றுக்குச் சந்தா

உள்நாட்டுக்கு ரூபா 3—0—0 } மாதிரிக்காபி வேண்டியவர்கள் அரையணு ஸ்டாம்பு
வெளிநாட்டுக்கு ரூபா 4—0—0 } அனுப்பினால் மாதிரிக்காபி இனுமாக அனுப்பப்படும்.

மானேஜர்-"கல்பதரு" ஆபீஸ், 1/24, கிருஷ்ணன்கோவில் தெரு, மண்ணடி, சென்னை.

நற்சாக்ஷியை நன்ருகக் கவனியுங்கள்!

'ஜட்ஜ் மணி ஐய்யர்' என்னும் செல்வப்பெயர் கொண்ட டாக்டர்.

ஸர். எஸ். சுப்பிரமணிய ஐய்யர் அவர்கள் தெரிவிப்பது:—

பண்டித எஸ். எஸ். ஆனந்தரின் மஹா சந்தனுதி தைலத்தை எனது குடும்பத்தில் ஒரு வருஷகாலமாக உபயோகித்து நன்மையடைந்தோம். அது மனோகரமாக இருப்பதோடு நல்ல குணமும் செய்கிறது.

அவருடைய மற்ற மருந்துகளையும் பலரும் உபயோகிப்பதாகத் தெரிகிறது.

மஹா சந்தனுதித் தைலம். 12 அவுன்ஸ் புட்டி 2 0 0

வைத்தியசாலை, 24-நாட்டுப்பிள்ளையார் கோயில் தெரு, சென்னை,

மேக வியாதிக்கு லேகியம்.

இது பலவித மேகச்சூட்டினுலுண்டான வெள்ளை, நீர்சுருக்கு, நீர்கட்டு, நீர் அடைப்பு, நீர் துவாரத்திலிருந்து சீழ், இரத்தம் விழுதல் இதனுலுண்டாகும் உபத்திரவங்கள் எத்தனை நாள்பட்டதாக யிருந்தபோதிலும் எந்தமருந்து சாப்பிட்டும் குணப்படாமலிருந்தாலும் ஸ்திரீ புருஷாளிருவரும் இந்த லேகியத்தை பரிக்ஷிப்பவர்கள் கண்டிப்பாக 7-நாளையில் இதின் குணத்தை வெகு ஆச்சரிய அற்புதமென்று புகழ்ந்துகொள்ளத் தடையிராது. பத்தியம் மருந்துடன் தெரிவிக்கப்படும்.

டப்பி 1-க்கு கிரயம் ரூபா 1 0 0.

கண் சாலேஸரத்துக்கு தைலம்.

இந்த மகிமை பொருந்திய தைலத்தால் 6-வாரம ஸ்நானஞ் செய்ய அடியில் கண்ட வியாதிகள் கண்டிப்பாக தீரும். மேக சூட்டினுல் கபாலத்தைச் சேர்ந்த கண்ணெரிச்சல், கண் சிவந்து நீர்வடிதல், மங்கல் மஞ்சள், காமாலை, கண் கூசசல், கண்ணில் நீர் வடிதல், பார்வை மங்கல் யிவைபோன்ற கண் வியாதிகள் பற்றற நீங்கும். இதை உபயோகிக்கும் விதம் புட்டியின் மேல் ஒட்டி யிருக்கும். இதற்கு பத்தியமில்லை.

புட்டி 1-க்கு கிரையம் ரூபா 1 0 0.

கனவான்கள் இன்னும் சகல வியாதிகட்கும் அவுஷதம் வேண்டியவர்கள் வியாதியின் குணங்களை விபரமாய் தெரிவித்தால் அதற்காக அவுஷதம் வி-பி. மூலமாய் அனுப்பப்படும்.

குந்தல் வளர் தைலம் புட்டி 1-க்கு 0 8 0
மேகவியாதி லேகியம் டப்பி 1-க்கு 1 0 0

ஜீவரட்சணை அவுஷத சாலை,

வைத்தியர் கோவிந்துசாமி நாயுடு,

நெ. 17. ஜனரல் முத்தையா முதலிவீதி, சென்னை.

ஸ்ரீராமஜயம்.

கல்ப தரு.

KALPA THARU.

அறிவு வளர்ச்சிக்கான ஓர் மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

புஸ்தகம் 2. Vol. II. | காளயுக்திஸு சித்திரை, வைகாசி, ஆனிமீ. APRIL, MAY & JUNE 1918. | ஸஞ்சிகை 2. No. 2, 3 & 4 (...)

PART I.

CLERKS' UNION.

குமாஸ்தாக்களின் சங்கம்.

நாளது மேமீ 8உ சென்னை அரண்மனைக்காரத் தெருவிலுள்ள கோகலே மண்டபத்தில் மிஸ்டர் ஜார்ஜ் S. அருண்டேல் அவர்களது அக்கிராசனத்தில் குமாஸ்தாக்களின் சங்கமொன்று ஏற்பாடாயிற்று. சேர்ந்து வாழ்வதே சிறந்த வலிமை' யென்பதை மிஸ்டர் ஜார்ஜ் அருண்டேல் அன்று அம்மண்டபத்திற் கூடியிருந்தவர்களுக்கு விவரித்துக் கூறினர். தேசோபகாரமாகவோ ஜனோபகாரமாகவோ செய்யப்படும் எம்முயற்சியிலும் மிஸ்டர் அருண்டேல் கலந்துகொள்ளாம லிருப்பதில்லை. இச்சரீரம் பரோபகாரார்த்தம் ஏற்பட்டதேயல்லாமல் தன்னலத்தைக் குறித்தேற்பட்ட தல்லவென்பது அவரது கொள்கை; அது காரணமாக எப்பேர்ப்பட்ட பொதுஜன முயற்சிக்கும் அவர் போகாதிருப்பதில்லை; உண்மைத் தேசாபிமானிகளாயினர் அவரை அழைக்காமலு மிருப்பதில்லை. எனவே, பரஸ்பரம் அவருக்கும் ஜனங்களுக்கும் அபிமானம் உண்டாகிப் பொதுஜன வாழ்வை விருத்திசெய்யுங் காரியங்களில் அவரது கவனமும் உழைப்பும் அதிகம் ஏற்படுவதற்கு இடமுண்டாயிற்று. அன்று கூட்டப்பட்ட குமா

ஸ்தா சங்கத்தை அவர் அமைத்து அச்சங்கத்தினாலுண்டாகும் பலன்கள் இத்தன்மையனவென்று சுட்டிக் காட்டியபோது தாம் கேம்பிரிட்ஜு ஸர்வ கலாசாலைப் பரீக்ஷையில் தேறி வித்யாபட்டம் பெற்று முதன் முதலாகக் குமாஸ்தாவாகவே தாம் உத்தியோகம் வகித்ததாகச் சொன்னார்.

குமாஸ்தாவென்று சாதாரணமாகச் சொன்னால் அது சாமான்யமான பதவியைப்பற்றின உத்தியோகமென்று எவரும் நினைக்கலாகாது. நிர்வாக சம்பந்தமான எக்காரியத்திற்கும் குமாஸ்தா வின்றி தீராது. ஒரு கட்டடம் கட்டப்படும்போது எப்படி அடிப்புறத்திலிருந்து கட்டிக்கொண்டே போய்ப்படிப்படியாக உச்ச ஸ்தானத்தை யெட்டுகிறோமோ அதைப்போல நிர்வாக காரியங்களிலும் அடிப்படையாயிருப்பது குமாஸ்தா செய்யும்வேலையேயாகும். முதல் முதல் குமாஸ்தா ஒரு காரியத்தைச் செய்தால் அவனுக்கு மேலிருக்கும் தலைமை குமாஸ்தா, பின்னர் சூபரின்டெண்டெண்ட், பின்னர் அதற்கு மேலிருக்குந் தலைவர் ஆகிய இவர்கள் கிரமக்கிரமமாகப் பார்த்துக் கொண்டே போய்க் கடைசியாகப் பொறுப்பேறிய நிருவாகி யென்று அமர்த்தப்பட்டிருக்கும் உயர்தர ஆபீஸரிடம்போக, அவர் கையொப்பமிட்டு இதை அமுலுக்குக் கொண்டுவந்து விடுகிறார். இந்த விதமாக நிர்வாகத்திற் செய்யப்படும் சகல வேலைகளுக்கும் அடிப்படையாயிருப்பது குமாஸ்தாவின் ஸ்தானமென்பதை எவர் தான் மறுப்பர்? அப்பேர்க்கொத்த குமாஸ்தாக்கள் தங்களுடைய நிலைமையைச் சீர்திருத்திக்கொள்ள இப்போதேற்படுத்தப்பட்ட சங்கத்தைப்போல் ஓர் சேர்க்கை யிருப்பது அத்தியாவசியமாகும். இதையே மிஸ்டர் அருண்டேல் ஆரம்பத்திலெடுத்துக்கூறி இங்கிலாண்டு, பிரான்சு மற்றுமுள்ள தேசங்களி லெல்லாம் குமாஸ்தாக்களின் யூனியன்கள் ஸ்தாபனமாயிருக்க, இந்தியாவில் அஃதேற்படாததற்கு காரணந் தெரியவில்லை யென்று சுட்டிப்பேசினார். குமாஸ்தாக்களுக்கு ஏதேனும் மனத்தொல்லை யுண்டாகுமேயாயின், சிலர் அதை அதிகாரிகளான தம் மேலுத்தியோகஸ்தருக்கு எடுத்துக்காட்ட அஞ்சுவார்கள். மேலுத்தியோகஸ்தர்களின் மனத்திற் படாதது குமாஸ்தாவின் மனத்திற் பதியக்கூடும். இத்தியாதி சந்தர்ப்பங்களில் மேலுத்தியோகஸ்தர்களுக்கும் குமாஸ்தாக்களும் பரஸ்பரமான அன்பு முதிரவும் அஸமாதான மொழியவும் இடமுண்டு. மேலும் இந்த குமாஸ்தா சங்கமென்பது ராஜீய லட்சியங்களை விவரிக்கும் கூட்டமல்ல வாதலால், இதில் சுய ஆட்சியைக் கோருவோரும், அதைக் கண்டனஞ் செய்வோரும், ஐரோப்பியர்களும் இந்தியர்களும், பிராமணர்களும் பிராமண ரல்லாதாரும் மெம்பர்களாகச் சேரலாம் என்றிருப்பதனாலேயே இச்சங்கத்தின் நோக்கம் ஸர்வ ஜன சகோதரதத்துவ மென்பது (Comradeship) நிதர்சனமாகின்றது. 'முகநக நட்பது நட்பன்று, நெஞ்சத் தகநக நட்பது நட்பு' என்று திருவள்ளுவர் தம் குறளில் கூறிய வுண்மையை யூன்றிப் பார்க்குமளவில், சகோதர பாவத்தோடு கூடின நட்பினால் எவ்வளவு சிரம ஸாத்தியமான காரியத்தையும் சாதித்து விடலாமென்

பதை நாம் கூறாமலே நமது நண்பர் அறிந்துகொள்ளக்கூடும். எஜமானர்க்கு வரும் நற்பெயரோ அல்லது துர்ப்பெயரோ பெரும்பாலும் அவரிடம் வேலை செய்யும் குமாஸ்தாக்களைச் சார்ந்திருப்பதை எவரும் மறுக்கலாகாது. உலகம் முழுவதும் பரவியிருக்கும் ஸன்லைட்ஸோப் தொழிற் சாலைகளிலும் காட்பரியின் கோகோ தொழிற்சாலைகளிலும், பெல்மாண்ட் மெழுகுவர்த்திச் சாலைகளிலும் வேலைசெய்வோர் தம் எஜமானர்களிடம் நடந்துகொள்வதும், எஜமானர்கள் தம் குமாஸ்தாக்களை நடத்துவதும், வெகுவாய்ச் சிலாகிக்கத்தக்கன. பொதுக்காரியம் முன்னிடப்படுகையில் எஜமானன் குமாஸ்தா வென்னும் அந்தஸ்து பேதத்தைப் பாராட்டாமல் கூட்டுறவுடன் வேலைசெய்ய முந்துவது உலகிலுள்ள மற்றோர்க்கும் ஒருதாரணமாகும். ஆகவே குமாஸ்தாக்களாயினார் அவர் தம் நிலைமையை முதன் முதல் சீர்படுத்திக் கொள்ளவும், பின்னர்க் கூட்டுறவு மிகுந்து தமது தேவைகளை ஏகோபித்து மேலதிகாரிகளுக்குத் தெரிவித்துக்கொள்ளவும் முதன்முதல் முயற்சிக்கவேண்டும். இக்கூட்டுறவு ஏற்படுகையில் தேச வியாபாரம் தானாகவே சீரடையும். வியாபாரத்திற்கடுத்தது கைத்தொழில். யுத்தம் முடிந்ததும் உலகத்திலே புதிய புதிய தொழில்களை யாரம்பிக்கவோ, புதிய புதிய போட்டிகளில் தலையிடவோ இடமுண்டாகக்கூடும்; அப்போது நம்தேசத்தவர் முந்திக்கொள்ள வேண்டும். ஒருபெரிய யந்திரத்தை இயக்குவிக்க சிறு சிறு சுள்ளாணிகளும் மறைகளும் எவ்விதம் உபயோகப்படுமோ, அவ்விதமே நிர்வாகம் என்னும் யந்திரத்திற்குக் குமாஸ்தாக்களென்னும் உறுப்புகள் அவசியந்தேவை. பம்பாயில் ஏற்கெனவே இம்மாதிரியான ஸபையொன்றேற்பட்டு நல்ல வேலைசெய்து வருவதை யொப்பச் சென்னையிலும் இச்சபை நல்ல வேலை செய்யுமாறு இச்சங்கம் ஸ்தாபனமாயிற்று. இது குமாஸ்தாக்களின் லட்சியங்களை முற்படுத்தும் நோக்கத்துடன் ஏற்படுவதனாலே இதன் நிருவாகக் கமிட்டியில் அடியிற் குறித்தவர் சேர்ந்திருப்பார்களென்று அறிகிறோம்.—

ஸ்தாபனகர்த்தரிருவர், பாங்குகளின் பிரதிநிதிகளிருவர், ஜார்ஜ்டவுன் வியாபார ஸ்தலங்களிலிருந்து நால்வர், மவுண்ட்ரோட் வியாபார ஸ்தலங்களி லிருந்து இருவர், கிடங்குத்தெருவிலிருந்து இருவர், மதராஸ் கார்பொரேஷன் உள்பட கவர்ன்மெண்ட் ஆபீசுகளி லிருந்து ஐவர், ரெயில்வே ஆபீசுகளி லிருந்து மூவர், பொது இந்திய வியாபார ஸ்தலங்களைச் சேர்ந்த இருவர், வர்த்தமானப் பத்திரிகைகளைச் சேர்ந்த இருவர், சட்ட லட்சியங்களை யவலம்பித்த இருவர்.

இப் புதிய ஸ்தாபனம் ராஜீய லட்சியங்களில் தலையிடாதாதலால் நாம் மேலெடுத்துக் காட்டியபடி குமாஸ்தா வென்று பெயர் தாங்கி யிருப்போர் அனைவரும் இதிற் சேரலாம். இது காறும் எழுநூறுபேர் வரையில் சேர்ந்திருக்கிறார்களென்று தெரிவதனாலே, கூடிய சீக்கிரத்தில் ஆயிரக்

கணக்காக மெம்பர்கள் சேர்ந்து தேச முற்போக்குக்கு வேண்டிய ஸகோதர பாவத்தை இச் சங்கத்தின் மூலமாக பிரகாசிக்கும்படி செய்வார்களென்று நம்புகிறோம்.

இந்துநேசன்.

RAO SAHEB CUNNAN CHETTIAR'S FIRST PUBLIC UTTERANCE.

ராவ் ஸாஹிப் கண்ணன் செட்டியாரது முதல் பப்ளிக் பிரசங்கம்.

தர்மவானென்று தரணியெங்கும் பெயர்படைத்து, தேசாபிமானமும் தாராள நோக்கமுங் கொண்ட தன்யரென்று ஜனங்களாலழைக்கப்பெற்றுப் பரம்பரையாகக் கீர்த்திப் பிரபாவம் பிரகாசித்துக்கொண்டிருக்குமாறு மனவுறுதியோடு வேலைசெய்யும் கனவானான ராவ்ஸாஹிப் கலவல கண்ணன் செட்டியாரை நமது நேயர்கள் நன்றாயறிவார்கள். அவரைக்குறித்து ஜனஸமூகத்தவர்க்கு யாம் அதிகமாய் ஒன்றும் சொல்லவேண்டுவதில்லை. ஜாதிபேதம் வருணபேதம் ஒன்றையுமே பாராமல் ஸர்வ ஜனங்களுக்கும் உபயோகமாகும்படி அவர் செய்துவருகின்ற கைங்கர்யங்கள் பலவுள. எத்தனை ஸ்கூல்கள், எத்தனை வைத்தியசாலைகள், சத்திரம், சாவடிகள், மற்றுமுள்ள பல ஸ்தாபனங்களை அவர் நிர்வகித்து வருகிறார். எத்தனையோ வித்தியார்த்திகள் அவருடைய பொருள்காரணமாகக் கல்விபயின்று வருகிறார்கள். எத்தனையோ ஏழைகள் அவருடைய பரோபகாரத்தினால் பாரினில் வாழ்ந்து வருகிறார்கள். 'தருமம் தலைகாக்கும்' என்னும் முதுமொழியைக் கைப்பிடித்துச் செட்டியாரவர்கள் தம்மிடமிருக்கும் தனத்தை நற்காரியங்களில் செலவிடுவதற்கு இத்தியாதி காரியங்களைத்தவிர வேறு என்ன உதாரணம் வேண்டும்? தர்மம் ஈவதில் உயர்ந்தவனென்றும் தாழ்ந்தவனென்றும் வித்தியாஸம் பாராட்டாமல் அதனால் உற்பவிக்கும் பலன் ஜீவகோடிகளின் ஆத்ம திருப்திக்குக் காரணமாயிருப்பதை மட்டும் உணர்ந்து பேருதவி புரியும் செட்டியாரை எங்ஙனம் சகல ஜாதியரும் புகழ்ந்து பேசுகிறார்களோ அவ்விதமே இந்துக்கள், மகமதியர்களென்றும் பிராமணன், அப்பிராமணனென்றும் பேதம் பாராட்டாது ஸ்ரீமதி ஸரோஜனி தேவி சகல வருணத்தவர்க்கும் பிரதிநிதியாகக் காஞ்சிபுரத்திற் கூடிய 24-வது சென்னை மாகாணக் கான்பரென்ஸில் அக்கிராசனம் வகித்துக் கூறிய மொழிகளை எல்லோரும் சிலாகித்துப் பேசுகிறார்கள்.

புகழ் மிகுந்த தருமகுணசீலர் என்ற பெயரெடுத்திருக்கும் கண்ணன் செட்டியார் தர்ம கைங்கர்யங்களின் மூலமாக உலகத்தவர்க்கு முன் வந்தபோதிலும் ராஜீய விஷயங்களில் சுறுசுறுப்பாகக் கலந்து கொண்டது இதுவே முதல் தடவையாகும். இதனால் இவர் கொண்டிருக்கும் ராஜீய

அபிப்பிராயங்கள் ஒரு தலைப்பட்டன வென்று நமது நண்பர் நினைக்கலாகாது. பொது க்ஷேமத்தை நாடிய ராஜீய விஷயங்களில் அவருடைய போக்கு இத்தன்மையதென்பதற்கு அவருடைய உபசரணைப் பிரசங்கமே சான்று. அதிலிருந்து அவர் தேசீய விஷயங்களை எவ்வளவு தெளிவாக அறிந்திருக்கிறாரென்பது இனிது விளங்கும். தேச முற்போக்குக்காகப் பாடுபட்டுழைப்பவர் ராஜீயவிஷயங்களில் எவ்வளவு உரிமைகள் வேண்டுமென்கிறார்களோ அவைகளையே கண்ணன் செட்டியார் தெள்ளிதில் காட்டியிருப்பதனாலேயே அவர் தீர்ந்த தேசாபிமானியென்பதை எவரும் மறுக்கமுடியாது.

இம்மாதிரியான சந்தர்ப்பங்களில் தேசத்தேவைகளைக் குறித்தும் ஜனங்களுணர்ச்சியைக் குறித்தும் பேசாதிருப்பது ஸாத்தியமல்லவாதலால் மிஸ்டர் கண்ணன் செட்டியார் டெல்லிக் கான்பரென்ஸை ஆரம்பத்தில் எடுத்துக்கொண்டு சுய ஆட்சி சுதந்தரத்திற்காக இந்தியாவின் கோரிக்கை இவ்விதமாகுமென்று விவரித்தார். இந்திய ஜன ஸமூகத்திற்கு ராஜீய சுதந்தரம் கூடிய சீக்கிரத்தில் அளிக்கப்படுமென்று ராஜப் பிரதிநிதியார் டெல்லிக் கான்பரென்ஸின்போது கூறியிருந்திருப்பாரானால் இந்திய ஜன ஸமூகத்தார்க்கு அது எவ்வளவோ திருப்தியைக் கொடுத்திருக்குமென்றும், அச்சமயத்தைக் கைக்கொள்ளாதபடி ராஜப் பிரதிநிதியார் விட்டுவிட்டாரென்றும் அவரபிப்பிராயப்பட்டார். இந்தியத் திருத்தங்கள் நிறைவேற்றப் படுவதற்கு முந்தியே ராஜப் பிரதிநிதியார் உலக சுயேச்சையைக் குறித்தே ஆரம்பத்தில் ஆலோசனை செய்யப்படும் என்று கூறியதையொட்டி செட்டியாரவர்கள், 'உலக சுயேச்சையில் இந்தியாவின் சுயேச்சை சேரவில்லையா' வென்று கேட்கிறார். ஆம் இது மிகவும் மதியூகமான கேள்வி. ஆள்பலம் வேண்டுமென்றும் பொருள்பலம் வேண்டுமென்றும் கேட்கப்படும் விக்ஞாபனத்திற்குத் திரிகரண சுத்தியாக இந்தியர்கள் முன்வந்து உதவ அனுகுணமாயிருக்கும்படி டெல்லிக் கான்பரென்ஸின் போது நமது பிரதிநிதிகள் கலந்து முன் கொணர்ந்த தீர்மானம் ஒழுங்கீனமென்று எடுபட்டுப் போய்விட்டது எவ்வளவு விசனிக்கத்தக்கதென்பதைப் பாருங்கள்.

நமக்குத் தேவையாயிருக்கும் ஆரம்பத் திருத்தங்கள் காங்கிரெஸ் முஸ்லீம் லீக் இரண்டு ஸபைகளும் சேர்ந்த பிரேரணைகளேயென்பதை மிஸ்டர் செட்டியார் தீர்க்கமாகக் குறிப்பிட்டிருப்பதைக் கவனிப்போம். பிராமணர் சேர்ந்து தங்கள் செல்வாக்கை நாட்டுவதற்காக இந்தத் திருத்தம் வேண்டும் அந்தத் திருத்தம் வேண்டும் என்று சொல்லுகிறார்களெனச் சில தினங்களுக்கு முன் பிராமணரல்லாதார் பிதற்றியதை நம்மவர் கேட்டிருக்கக்கூடும். ராவ் ஸாஹிப் கண்ணன் செட்டியாரோ பிராமணரல்லர்; வக்கீலுமல்லர்; தனிகரான வியாபாரி யாவர். அவரே அவ்வித அபிப்

பிராயங் கொள்ளும்போது இந்தியாவில் எதிர்க்கட்சியாக வேலை செய்வோர்களும் இங்கிலாண்டில் லைடன்ஹாம் கட்சியார்களும் என்ன சொல்லுவார்களோ அறியோம். பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் இப்போது நெருக்கடியான ஸ்திதியிலிருப்பது எல்லோருக்குந் தெரிந்த விஷயம். இதை முன்னிட்டு இந்திய ஜனங்கத் தலைவர்கள் அவசரமாக முன்னேறிப் போய்ப் பேசுகிறார்களென்று சிலர் சொல்லுகிறார்களென்றாலும் "ஸ்வேச்சையும் ஸ்வதந்த்ரமும் நாகரிகமுமிகுந்த பூவுலகில் ஒவ்வொருவரும் அனுபவிப்பதா யிருக்கும்போது இந்தியா அதிகமாக ஒன்றையும் கேட்டுவிட வில்லையே" யென்று செட்டியாரவர்கள் அபிப்பிராயப்படுவது சரியே. இம்மாதிரியான நெருக்கடியில் இந்தியாவின் ராஜபக்தி ஒருபோதும் குன்றமாட்டாது. ஆரம்பம் முதல் இந்தியா ஆள்பலமும் பொருளுதவியும் கொடுத்திருக்கின்றது. இன்னும் கொடுக்கவும் தயாராயிருக்கிறது. அவ்விதமிருக்கச் சிற்சில ஆங்கிலோ இந்தியர்களும் அதிகார செல்வாக்குள்ள ஜீவர்களும் ஜன நிர்மாணத்திற்குத் தாமே காரணமென்று மனோ ராஜீயமாடுவதைச் செட்டியார் கண்டிப்பது அனேகர்க்கு விசேஷத் திருப்தியைக் கொடுக்குமென்பது திண்ணம். எதை யுத்தேசித்துப் பிரகிருதசண்டை வெகு கரேமாகப் போடப்பட்டு வருகிறதோ அதே நோக்கமுள்ள லக்ஷியத்தை இந்தியாவிலும் அனுஸரணைக்குக் கொண்டுவர வேண்டுமென்று செட்டியார் உறுத்திச் சொன்னதோடு யாமும் கலக்கின்றோம்.

L. அனந்தய்யர்.

PART II.

SANITATION.

ஆரோக்கிய விமர்சனம்.

THE NEW CONCEPTION OF PUBLIC HEALTH.

பொதுஜன ஸௌச்யத்தைப் பற்றிய புதுக்கொள்கை.

சென்ற சிலகாலமாக வைத்ய சாஸ்த்ர வித்பன்னர்களும் ராஜாங்க அதிகாரிகளும் பொதுஜன ஸுகாதாரத்தைப்பற்றி அதிகம் கவனித்து வருகிறார்கள். வைத்ய சாஸ்த்ர ஸம்பந்தமான ஆராய்ச்சிகள் நாளுக்குநாள் வ்ருத்தியடைந்து, பழைய நாளையக் குருட்டு நம்பிக்கைகள் ஆதாரமற்றவையென்றும், பழைய சாஸ்த்ரீயக் கொள்கைகளில் பல அனுபவத்துக்கு ஒத்து வரவில்லையென்றும் ஸ்தாபித்து வருகின்றன. பொதுஜன க்ஷேமத்தால் தேசத்துக்கு ரொம்ப நன்மையுண்டென்று கண்டு அது விஷயமாய் முதல் முதலில் ஊக்கம் காட்டினவர் முன்பு இங்க்லண்டின் மந்த்ரியாயிருந்த ஜோஸப் சேம்பர்லெய்ன் என்பவரே. ஜனங்கள் அஸௌக்ய மாயிராமல்

திட சரீரிகளாயிருந்தால், அவர்கள் செய்யக்கூடிய வேலை அதிகமாகும். உதாரணமாக ஸிலோனில் உள்ள கூலியாட்களில் பெரும்பாலார் ஒருவகைச் சிலந்தி வ்யாதியால் பீடிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு அந்த வ்யாதி யில்லாமலிருந்தால் அவர்கள் வ்யாதிஸ்தர்களை விடக் கால்பங்கு அதிகமான வேலை செய்யமுடிகிறது. ஆகவே எல்லாக் கூலியாட்களையும் மேற்சொன்ன வ்யாதியிலிருந்து ஸ்வஸ்தப்படுத்தினால், அவர்கள் ஸுக சரீரிகளாக ஆவதோடு அவர்கள் செய்யக்கூடிய வேலையும் அதிகமாகும்.

மிஸ்டர் சேம்பர்லெய்னுடைய கொள்கைகளை ஜனங்கள் இப்போது தான் அதிகமாக கவனித்து வருகிறார்கள்.

இவ்விதம் பொது ஜனங்கள் ஸுகாதார விஷயமாக அதிக ஊக்கம் காட்டிவந்தாலும், இங்க்லண்டிலும் பிரதேசங்களிலுமுள்ள படித்த வகுப்பார்களிடங்கூட இன்னும் வைத்ய ஸம்பந்தமான மூட நம்பிக்கைகள் குடிகொண்டிருக்கின்றன. தங்கத்தால் செய்த கல்யாண மோதிரத்தால் கண் இமைகளில் தேய்த்தால் கண் கட்டிகள் ஸ்வஸ்தமாகுமென்று பல ஆங்கிலேயர்கள் நம்பி வருகிறார்கள். காதில் த்வாரமிடுவதால் கண் நன்றாய்த் தெரியுமாம். சந்த்ரனின் வளர் பிறை தேய்பிறைக்குத் தகுந்தபடி பைத்யக் காரர்களின் பைத்யரோகம் மாறுபாடடையுமாம். க்ஷய ரோகம் வம்சபரம்பரையாக வரும் நோயாம். சிவப்பு ப்ளானலைக்கொண்டு தேய்ப்பதால், தொண்டைப் புண் ஸ்வஸ்தமடையுமாம். இன்னும் பலர் சின்னம்மையும் வேறு சில வ்யாதிகளும் குழந்தைகளுக்கு என்றைக்காவது ஒருநாள் வந்தே தீரும்; அதி சீக்ரம் வந்து விடுவதுதான் நல்லது; குழந்தைகளை மேற்சொன்ன வ்யாதிகண்ட குழந்தைகளுடன் சேராமல் பிரித்து வைக்கவேண்டியது அவச்யமுமில்லை. அப்படிப் பிரித்து வைப்பதால் ப்ரயோஜனமுமில்லை என்று சொல்லி அவ்விதமே அனுஷ்டித்தும் வருகிறார்கள்.

பொதுஜன ஸுகாதாரம்.

சென்ற சிலகாலமாக வைத்திய சாஸ்த்ரத்தின் அபிவ்ருத்தியால் பொதுஜன ஸுகாதார விஷயமாக புது அபிப்பிராயங்களும் லக்ஷியங்களும் தோன்றியிருக்கின்றன. உதாரணமாக பொதுஜன ஸுகாதாரம் என்றால் என்னவென்பதே இப்போது மாறுதலடைந்திருக்கிறது. இப்போது பொதுஜன ஸுகாதாரமென்பதில் (1) ஸுகாதாரத்தை வ்ருத்தி செய்யவோ (2) வ்யாதியை வராமல் தடுக்கவோ செய்யப்படும் எல்லா ஏற்பாடுகளும் அடங்கும். இதை இரண்டு பிரிவாகப் பிரிக்கலாம். ஒன்று மனிதனுடைய தேகத்தை ஸௌக்யமுள்ளதாக வைப்பதைப்பற்றியது. இரண்டாவது மனிதனைச் சுற்றியுள்ள சுற்றுப்புறங்களை ஸுகாதாரமுள்ளதாக வைப்பதைப் பற்றியது. ஸுகாதார விஷயமாய் உள்ள பழைய கொள்கைக்கும் புதிய கொள்கைக்கும் வித்யாஸமென்ன வென்றால், பழைய

கொள்கையில் மனிதன் இருக்கும் இடத்தை ஸுகாதாரமுள்ளதாக வைத்துக்கொள்வதே முக்யம். புதிய கொள்கையில் வெளிப்புற ஸுகாதாரம் அவ்வளவு முக்யமல்ல. ஒவ்வொரு மனிதனும் தன்னுடைய தேகத்தை ஸௌக்யமாகவும் வ்யாதி அணுகாதபடியும் வைத்துக்கொள்ள வேண்டும் என்பதே முக்யமானது. புது முறைப்படி மனிதன் தனக்குவரும் வ்யாதிக்குத் தானே காரணமாகிறான்.

வைத்திய சாஸ்த்ரிகள் தொற்று நோய்களை வராமல் தடுக்க அவை உண்டாகும் வழியையும், அவை பரவும் மார்க்கத்தையும் சரியாகக் கண்டு பிடிப்பதே தக்க ஸாதனமென்று ஸித்தாந்தம் செய்திருக்கிறார்கள். சில வருஷங்களுக்கு முன் வரையில் ஸுகாதார சாஸ்த்ர வித்பன்னர்கள் இவைகளை அதிகம் கவனிக்கவில்லை. உதாரணமாக ஒன்று சொல்லலாம். 20 வருஷத்துக்கு முன்னால் யாவரும் காலராவானது ஜலத்தின் மூலமாகத்தான் ஜனங்களிடம் பரவுகிறதென்று எண்ணி வந்தார்கள். வேறு வழியாகப் பரவக்கூடுமென்று எவரும் எண்ணினதில்லை. இப்போதோ தொற்று வ்யாதிகள் முக்யமாய் 6 விதமாகப் பரவுவதாகக் கண்டுபிடிக்கப் பட்டிருக்கிறது. அவையாவன: ஜலம், பால், ஆகாரம், ஈக்கள், கடிக்கும் பூச்சிகள், எலி முதலிய ஜந்துக்கள் ஒருவர்மேல் ஒருவர் படுவது, வ்யாதியஸ்தர் மூச்சை ச்வாஸிப்பது முதலியவையாம். ப்ளேக், மலேரியா, ஸன்னிபாத ஜ்வரம் முதலிய வ்யாதிகள் பரவுவதற்கு எலி, கொசு முதலிய கடிக்கும் பூச்சிகள் ஆகிய இவைகள் முக்ய காரணமாக இருக்கின்றன.

ஆகவே பொது ஸுகாதாரம் மாத்ரம் வ்யாதி பரவுவதைத் தடுக்குமென்று சொல்லுவதற்கில்லை. எந்த அசுத்தத்தால் அல்லது எந்தக் காரணத்தால் வ்யாதி பரவுகிறதோ அதைத்தடுப்பதால் வ்யாதி பரவாமலிருக்கும்.

1896-ம் வருஷத்தில் ப்ளேக் வந்தபோது எலிகளையும் ப்ளேக்கைப் பரவச்செய்யும் ஒருவகை ஈக்களையும் நாசம் செய்வதற்காகப் புகைபோடவும், பெர்க்ளோரைட் அப் மெர்குரி என்னும் மருந்தால் வ்யாதிக் காதாரமானவைகளென்று ஸந்தேகித்த இடங்களை சுத்தம் செய்யவும், சாக்கடைகளில் மருந்து ஊற்றவும் கோடிக் கணக்காகப் பணம், செலவழிக்கப்பட்டது. ஆனால் ஸாதகம் அதிகமாய் ஒன்றும் ஏற்படவில்லை. ஸாதாரண ஸுகாதார முயற்சிகளால் ப்ளேக்கைத் தடுப்பது முடியாத கார்யமென்று தெரியவந்தது. இப்போது கண்டுபிடித்திருப்பது என்னவென்றால், ப்ளேக் வ்யாதியுள்ள ஒருவகை ஈ மனிதனைக் கடிக்காதபடி செய்தால், வ்யாதி பரவாதென்பதே. மேற்சொன்ன ஈ விருத்தியடைய எலி வேண்டியிருப்பதால், எலி வீட்டுக்குள் வராதபடி செய்யவேண்டும். இதற்கு வீட்டில் எலிக்கு ஆகாரம் கிடைக்காதபடிக்கு செய்தும், வீட்டில் குப்பை, கல், மண் இவைகளின் குவியல்களில் அவை தங்கியிராதபடி குப்பை

முதலியவைகளை அப்புறப்படுத்தியும் விடவேண்டும். இது முன் முறையை விட ஸுலபமென்றாலும், ஜனங்களுடைய அச்ருத்தையாலும், அறியாமையாலும், அனுஷ்டிக்கப் படுவதில்லை.

இன்னொரு உதாரணம் சொல்லலாம். சமையலறையில் பாத்ரம் பண்டங்களும், இடங்களும், பொதுவாய் ரொம்ப சுத்தமாய்க் காணப்பட்டாலும், சமையல்காரியின் கையில் சேரக்கூடிய அழுக்கு சுத்தம்செய்த பாத்ரத்தில் சேரவில்லையென்று சொல்ல முடியுமா? சுத்தம் செய்த பாத்ரத்தின்மேல் மூச்சுவிடுவதாலும், இருமுவதாலும், வ்யாதி க்ருமியுள்ள காற்றும்; இருமும்போது வெளிவரும் வ்யாதி க்ருமியுள்ள ஜலம், கோழை இவைகளின் சிறுதுளிகளும் அந்தப் பாத்ரத்தில் சேரமாட்டாவா? பொதுவாய்க் கண்ணுக்குத் தெரியும் அழுக்கால் வ்யாதி பரவுவது கிடையாது. சிரிக்கும்போதும் தும்பும்போதும் இருமும்போதும் வெளிவரும் கண்ணுக்குத் தெரியாததும், வ்யாதிக்ருமி ஸம்பந்தமுள்ளதுமான த்ரவத் துளிகளால் தான் அந்த வ்யாதி அதிகமாகப் பரவுகிறது. பொதுவாய்ச் சொல்லுமிடத்து பார்வைக்கு அவலக்ஷணமுள்ளதும் கெட்ட நாற்றமுள்ளதுமான அழுகின குப்பை செத்தையால் தொற்று வ்யாதி பரவுவதில்லை. வ்யாதி க்ருமிகளுள்ள பல ஜலங்கள் அதில் சேர்ந்தால்தான் அவை அபாயகரமான வையாகின்றன.

மலேரியா.

மலேரியா, எண்டரிக் என்னும் ஸன்னிபாத ஜ்வரம் ஆகிய இந்த வ்யாதிகளைப்பற்றி கவனித்தால் வைத்திய சாஸ்த்ரம் எவ்வளவு முன்னேற்ற மடைந்திருக்கிற தென்பது நன்கு விளங்கும்.

மலேரியா என்னும் சொல்லுக்குக் கெட்ட காற்று என்று அர்த்தம். சென்ற நூற்றாண்டில் கடைசிப் பகுதிவரையில் யாவரும் இந்த வ்யாதி சதுப்பு நிலங்களில் உண்டாகும் ஒருகெட்ட காற்றால் உண்டாகிறதென்று எண்ணிவந்தார்கள். அக்காலங்களில் மனிதர்கள் மூலமாக இந்த வ்யாதி ஒருவரிடமிருந்து ஒருவரிடம் பரவக்கூடுமென்று எவரும் எண்ணவில்லை. மலேரியாக் காய்ச்சலுள்ள ப்ரதேசங்களில் அந்த வ்யாதி வராமல் தடுக்க க்வினைன் சாப்பிடுவதும், வீடுகளை உயர்ந்த தூண்களின்மேல் கட்டுவதுமே வழக்கமாக இருந்தன. வீட்டை உயரக்கட்டுவதன் காரண மென்னவென்றால் சதுப்பு நிலத்திலிருந்து உண்டாகும் விஷவாயு பூமிக்கு ஸமீபத்திலிருக்கிறதென்று எண்ணிவந்தார்கள்; வீட்டை உயரத்தில் கட்டினால், வீட்டிலுள்ளோர் கெட்டகாற்றை ச்வாஸிக்க நேரிடாது என்பது அவர்களுடைய எண்ணம். சில காலத்துக்கு முன் லாவரன் என்னும் நிபுணர் மனிதரத்தத்தில் மலேரியா வ்யாதி க்ருமியைக் கண்டுபிடித்தார். சிலகாலத்துக்குப் பிறகு இரண்டு சாஸ்த்ர நிபுணர்கள் இந்த வ்யாதி க்ருமியானது அனொபிலிஸ் என்னும் ஜாதிக் கொசுவால் மனிதர்களுக்குள் பரவக் கூடு

மென்று கண்டுபிடித்தார். இதன் மேல் மலேரியா ஸம்பந்தமான வைத்ய சாஸ்த்ரக் கொள்கைகளெல்லாம் மாறுபாடடையலாயின. ஒரு மலேரியா வ்யாதிக்காரன் கொசுவின் மூலமாக இதர ஸுகதேகிகளுக்கும் மலேரியா வ்யாதியைப் பரவச் செய்யக்கூடுமென்று ஏற்பட்டது. வ்யாதி பரவுவதற்கான மார்க்கங்கள் தெரியவரவே அதைத் தடுப்பதற்கான மார்க்கங்களை ஆலோசிக்கலானார்கள். அதற்கு மூன்று வழிகள் இருக்கின்றன. அவையாவன: (1) வ்யாதிஸ்தருடைய தேக ரத்தத்தில் உள்ள மலேரியா க்ருமிகளை க்வினைன் உள்ளுக்குக் கொடுத்து நாசம் செய்வது. (2) மலேரியா பரவுவதற்கு ஸாதகமாயுள்ள கொசுக்களை நிர்மூலமாக்குவது. (3) மனிதர்களுக்கு கொசுக்கடி ஏற்படாமலிருக்கும்படி ஜாக்ரதை எடுத்துக் கொள்ளுவது. இதன்மேல் வ்யாதியைத் தடுப்பதற்கான வழிகளைப் பற்றி இரண்டு கக்ஷிகள் ஏற்பட்டன. ஒரு கக்ஷியார் சொன்னதென்னவென்றால், கொசு உண்டாவதற்கு ஸாதகமாயுள்ள சதுப்பு நிலங்களையெல்லாம் நீர் வடித்து கட்டாந்தரையாக்கிவிடவேண்டு மென்றும், குளம் குட்டைகளில் கிரஸின் எண்ணெய் ஊற்றி அவைகளில் கொசு வ்ருத்தியாகாதபடி செய்ய வேண்டுமென்றும், இந்த வேலைகளைச் செய்ய கொசு நிவாரணப் படைகள் ஏற்படுத்த வேண்டுமென்றும் சொல்லி வந்தார்கள். இன்னொரு கக்ஷியாரோ இந்த மாதிரி வேலைசெய்து ஒழிப்பதென்பது அஸாத்யமென்றும், தக்க அளவில் க்வினைன் சாப்பிட்டு ரத்தத்திலுள்ள மலேரியா க்ருமிகளைக் கொல்ல வேண்டுமென்றும், கொசு கடிக்காமலிருப்பதற்காக கொசு வலை உபயோகிக்க வேண்டுமென்றும் கொசு வராதபடி வீடுகள் கட்டவேண்டு மென்றும் சொன்னார்கள். இப்படி இரண்டு கக்ஷிகளுக்கும் அபிப்ராய பேதம் ஏற்பட்டிருக்கும்போது வைத்ய ஆராய்ச்சியால் இன்னொரு முக்ய விஷயம் தெரிய வந்தது. ஸமீபத்தில் பம்பாயில் மலேரியா ப்ரபலமாயிருந்தபோது செய்த ஆராய்ச்சிகளால் குடித்தனக்காரர்களின் வீடுகளில் உள்ள சிறு கிணறுகளில் தான் வ்யாதியைப் பரவச் செய்யும் கொசு உற்பத்தியாகிறதென்றும், வெளியிடங்களிலுள்ள சதுப்பு நிலங்களில் உண்டாகும் கொசுக்கள் வ்யாதியைப் பரவச்செய்யவில்லையென்றும் தெரியவந்தது. ஆகவே கிணறுகளைத் தூர்த்தோ மூடியோ விட்டால் போதும்; அக்கம் பக்கத்து சதுப்பு நிலங்களையெல்லாம் கட்டாந்தரையாக்க முயலவேண்டியதில்லை. இன்னும் சாஸ்த்ர ஆராய்ச்சியால் வ்யாதியைத் தடுப்பதற்கான முறைகள் இன்னும் ஸுலபமாகலாம். ஊரிலுள்ள சதுப்பு நிலங்களையெல்லாம் மேடாக்கிக் கொண்டிருக்க வேண்டியதில்லை.

இதனால் நாம் அறிந்து கொள்ளக்கூடியதென்னவென்றால் ஒவ்வொரு வ்யாதிக்கும் காரண மின்னதென்றும், அது பரவும் விதம் இன்னதென்றும் ஆராய்ந்தறிந்து கொள்ளவேண்டும். பொது ஸுகாதாரத்தை மாத்ரம் நம்பி யிருப்பதில் பயனில்லை.

காலஞ்சென்ற ஸர்ஜன் ஜெனரல் ஸர் பார்டிஸ் லூகிஸ் இந்தியாவில் பொதுவாய் ஸ்த்ரீகள்-அதிலும் தாய்மார்கள் தான் தொற்று வ்யாதியைப் பரவவிடுவதில் முக்ய காரணமாயிருக்கிறார்கள் என்று சொல்லியிருக்கிறார். அவர்கள் அப்படிச் செய்வதற்குக் காரணம் வீட்டு ஸுகாதாரமும்குழந்தை வளர்ப்பும் தெரியாமையே. குழந்தைகளுக்கு எப்படியும் வ்யாதிவரும், அதைத் தடுப்பதில் பயனில்லையென்றும், குழந்தைகள் ரொம்ப சிறுவயஸாயிருக்கும்போதே வ்யாதிவந்தால் வ்யாதி கடுமையாயிராதென்றும் எண்ணி, தொற்று வ்யாதிவந்தால் வரட்டுமென்று சும்மா இருந்து விடுகிறார்கள். இதனால் குழந்தைகளுக்கு கடும் வ்யாதிகள் உண்டாகி அவைகள் சாச்வதமாக செவிடும், குருடுமாகி விடுகின்றன. அல்லது அவைகளுக்கு க்ஷயரோகமுண்டாகி வெகுநாளிருந்து உபத்ரவப் படுத்துகிறது. பிறந்தது முதல் 14-வயது வரையில் குழந்தைகளைத் தாய்மார்களே பராமரித்து வருகிறார்களாகையால், தாய்மார்களுக்கும் பெண்களுக்கும் தொற்று வ்யாதியைத் தடுப்பதெப்படி என்றும், ஸுகாதாரத்தை எப்படி கவனித்துக் கொள்ள வேண்டுமென்று கற்பிக்கவேண்டும். கவர்ன்மெண்டாரும். வ்யாதிக்காரணங்களையும் அவை பரவும் மார்க்கங்களையும் கவனிக்கவேண்டும். ஜலம், பால், ஆகாரம் ஆகிய இவைகள் சுத்தமாயிருக்கும்படி பார்த்துக்கொள்ள வேண்டும். ஈக்கள் வ்ருத்தியாகாதபடி வேண்டிய முயற்சிகள் எடுத்துக் கொள்ளவேண்டும். ஸ்த்ரீகளோ ஆகாரம், பால் முதலிய வற்றில் ஈக்களாலும் இதர காரணங்களாலும் அசுத்தம் சேராமலிருக்கும்படிக்கும் எலி, மூட்டைப்பூச்சி முதலியவை வீட்டில் சேராதபடிக்கும் பார்த்துக்கொள்ள வேண்டும்.

ஜனாபிமானி.

PART III.

KNOWLEDGE ON AGRICULTURE, etc.

By Mr. G. RAJAGOPAL,
Late Editor, "South Indian Agriculture."

விவஸாய ஞானம்.

கரும்பு.

(12-ம் பக்கத்தொடர்ச்சி).

அநேக யிடங்களில் வெறும் தாய்க்கரணையும் வயல் ஓரத்தில் எரிக்கப் படுகின்றன. விறகு குறைந்திருக்கு மிடங்களில் இவை அடுப்புக்கு உதவுகின்றது. பல்லாரியில் இவைகளைச் சாக்கிரதையுடன் சேர்த்துக் குவியல் போட்டு மண்ணால் மூடிவைக்க ஒரு வருஷத்தில் இற்று மண்ணாகி (புட்டுமண்ணு) அதாவது புத்து மண்ணொன்று பெயர் பூண்டு எருவாகிறது. [illegible]

தராத சருகுசக்கை வேர்க்கட்டை முதலியதை தீயில் எரிக்காமல் எருவு ஆக்கப்பட்டால் கரும்பு நிலத்தை இளைக்கச் செய்கிறது என்ற பெயரை தவிர்க்கும்.

வகைகள்.

ஆதியில் ஒரேவித கரும்பு இருந்ததாகவும் தேசகால வித்தியாசத்தால் அங்கங்கே இது வெவ்வேறு உருவமடைந்ததாகவும் சாஸ்திரிகள் ஊகிக்கிறார்கள். இந்தியாவில் அநேக வகைகள் இருக்கின்றன. சென்னைத் தமிழ் ஜில்லாக்களில் நாணல்கரும்பு, செங்கரும்பு, நாமக்கரும்பு, பூவங்கரும்பு, பூதங்கரும்பு, வெள்ளைக்கரும்பு என்றுபலவகைகளுண்டு. இவைகளில் வெள்ளைக்கரும்பு மோரீசிலிருந்து கொண்டுவரப்பட்டது. நாட்டுக் கரும்பில் எந்த ஜாதியும் இதற்கு ஈடாகாது.

தெலுங்கு ஜில்லாக்களில் இவைகள் தவிர பொந்த, பொந்தபால, வாலு, யானைக்கரும்பு முதலியன உண்டு. பின்னும் கோதாவரி ஜில்லா சாமல்கோட்டு கவர்ன்மெண்டு தோட்டத்தில் சிகப்பு மோரீஸ் கரும்பு, சிட்டநாமக்கரும்பு, கருப்புகரும்பு இன்னும் பற்பல நல்ல மோரீசு கரும்புகளுமுண்டு.

நாணற்கரும்பு என்பது இருவகைப்படும்; வெள்ளை நாணல், சிவப்பு நாணல். இதைக் கடித்துத் தின்பதும், ஆலையில் ஆட்டுவதும் மிகக்கஷ்டம். சாறு குழம்பாயிருப்பதால் வெல்லாம் காய்ச்சுவதற்கு விறகு அதிகம் செலவில்லை. சரக்கு வெளுத்திருக்கும். இது சுமார் 10 மாதத்தில் முற்றுகிறது. திருச்சிணாப்பள்ளி ஜில்லா அரியலூர் பிராந்தியங்களில் இது புஞ்சைப் பயிராக வளர்க்கப்படுகிறது.

செங்கரும்பு என்பது அநேககுணங்களில் நாணற்கரும்பை ஒத்திருக்கும். ஆயினும் சாதாரண மெல்லிய நாமக்கரும்புக்குச் சமானமாகப் பருத்திருக்கும். மற்றவை உடைய, இது உடையாமல் வளையக்கூடியதால் மன்மதன் கையில் இருக்கும் கரும்புவில் இந்த ஜாதியிலிருந்தே ஏற்பட்டிருக்க வேண்டும். இதன்சதையில் குறுக்கு நார் வெகு குறைவு. ஆனது பற்றியே நன்றாய் வளைகிறது. இதைக் கடித்தால் சதை கதனை கதனையாய்த் துண்டாகும்.

நாமக்கரும்பு சாதாரணமாய் எங்கும் கிடைக்கக்கூடியது. நாமம் போல் வெள்ளை செவப்புப் பட்டைகள் அடுத்தடுத் திருப்பதால் இந்தச் சாதிக்கு நாமக்கரும்பென்றும், தாசரிகரும்பென்றும், ஐயங்கார் கரும்பென்றும், பட்டைக்கரும்பென்றும் பெயர்கள் வழங்குகின்றன. இதற்குப் போத்து வெடிக்கும் குணம் விசேஷமுண்டு. மோரீசிலிருந்து வெள்ளைக் கரும்பு வந்தபிறகு இக்கரும்பு கோயம்புத்தூர் உடுமலைப்பேட்டை இவ்விடங்களில் அரிதாய்ப்போயிற்று. மிருதுவான தாகையால் இதற்கு நரிக்கடி அதிகம். பின்னும் இக்கரும்பு சாதாரணமாய் வெடிக்கிறது.

சூலைக்கட்டை என்னும் ஒட்டுவாரொட்டு நோவுக்குப் பயந்து கோயம்புத்தூரில் வெள்ளைக்கரும்புக்குப் பதிலாக பூவன்கரும்பு என்னும் ஒருவகைப் பயிரிடப்படுகிறது. இது அதிகமாய்க் களைக்கிறது. வெகு மிருதுவாயிருப்பதினால் நரிகடித்து நஷ்டப்படுத்தும். கரும்பு அதிகமாக வெடிக்கும். பதினொரு மாதத்திற்குப் பின் நிலத்தின்மேல் இக்கரும்பு இருந்தால் புளிப்பேறுகிறது; சிலவேளைகளில் பூவெடுப்பதுமுண்டு. வெள்ளைக் கரும்பு 1830-ம் வருஷத்தில் இவ்விராஜதானிக்கு வெளியிலிருந்துகொண்டு வரப்பட்டது. கடப்பை ஜில்லாவில் இருக்கும் வெள்ளைக்கரும்பு பார்வைக்கு அதைப்போலவே யிருந்தாலும் பருமன் குறைவா யிருப்பதோடு மாசூலும் குறைவாகவே யிருக்கிறது. 'கிருமி கீடக நியாயம்' அதாவது குளவி புழுவைத் தன்னிற மாக்குமென்பதுபோல வெள்ளைக்காரர் இந்த ஊரிலிருந்து கொண்டு போன கரும்பின் கெட்ட குணங்களையெல்லாம் அதிலிருந்து நீக்கி, வேண்டிய நல்ல குணங்களை மாத்திரம் அதில் பொருத்தி, விருத்தி செய்து நம்மூருக்கே அதைத் திருப்பிக்கொடுக்கிறார்கள். அக்கரும்பு மிகப் பருத்தும் உயர்ந்தும் வளர்வதுடன் நன்றாய்த் தூரும் கட்டுகிறது. தின்பதற்கு வெகு இனிப்புள்ளதானாலும் கொஞ்சநேரத்துக்குள் நாக்கு எரியும். நாணற் கரும்பிற்குச் சமானமாய் பட்டை உறுதியாயிருக்கிறது. இதில் சீனிச் சர்க்கரை ஆகக்கூடிய மணி அதிகம் இருக்கிறது. இலை கருக்கறிவாள் போலிருந்து திருடவரும் ஆட்களையும் வேலை செய்கிறவர்களையும் அறுத்து விடுகிறது.

கரூர் தாலுகா நெரூர் கிராமத்தில் கழுதைபூதன் என்ற ஒருவகைக் கரும்பு உண்டு. இதன்மேல் சுண்ணாம்பு பூத்திருக்கும். சாறு உப்புதட்டும்; வெல்லமும் அவ்வாறே. பின்னும் அநேக வகைகள் அதிக வித்தியாச மில்லாமலிருப்பதால் அவைகளையெல்லாம் இங்கு கூறாமல் விடப்பட்டன.

தேசகால முதலியன.

கரும்பு மழை அதிகமுள்ள உஷ்ணபாக மெங்கும் நன்றாய் விளைகிறது. கடலோரங்களில் அதிக செழிப்பாய் வளருகிறதாகச் சொல்லுகிறார்கள். கடற்காற்றிலிருந்து வரும் உப்பு கரும்பைப் பலக்க வைக்கிறதாம் "களரில் கரும்புவை" என்னும் வாக்கியத்தால் கரும்புக்கு உப்பு அவசியம் என்று தோன்றினாலும் பல்லாரி மதனபல்லி முதலிய உள்நாடுகளில் உப்புக் காற்றில்லாமலே கரும்பு நன்றாய் விளைகிறது. மாத மும்மாரிபெய்யும் தீவுகளில் கரும்பு கூடிய சீக்கிரம் முற்றாமல் வளர்ந்துகொண்டே யிருக்கும். கரும்பு நன்றாய் பக்குவப்படுவதற்கு சூரிய கிரணம் அடிக்கடி அதன்மேல் படவேண்டும். முற்றும் தருணத்தில் சூரிய உதவி அவசியம். காற்றும் குளிர்ந்திருப்பது சிலாக்கியம். ஆகையால் குளிர்ந்த இடங்களாகிய பெங்களூர், கோயம்புதூர், மதனபல்லி முதலியன கரும்புக்குப் பேர்போனவை. இவ்வாறு கரும்பு விருத்தியாவதற்கு மண்ணிலும் ஆகாயத்திலும் ஈரம்

குறையாமல் இருப்பது அவசியம். உஷ்ணபாகங்களில் இறைத்து நீர் பாய்ச்சிய கரும்பில் ஏகராவுக்குச் சுமார் பத்து டன் வரையிலும் சர்க்கரை எடுத்திருக்கிறார்கள். மாதம் மும்மாரியாய்ப் பெய்து வருஷத்தில் மொத்தம் அறுபது அங்குல மழையினால் வேறே யாதொரு நீராதாரமுமில்லாமல் கரும்புவிளையும். ஸ்டப்துரை யென்பவர் இவ்வறுபது அங்குல மழையில் 45 அங்குலம் வளரும் சமயத்திலும் மற்ற 15 அங்குலம் முற்றும் சமயத்திலும் வேண்டுமென்றும் இன்னும் அதிக மழை பெய்தாலோ கரும்பைப் பசுமையாகவே வைத்திருக்கும் என்றும் தெரிவிக்கிறார். 60 டன் மாசூலில் கொழுந்தாடையும் அடிக்கட்டையும் போக 45 டன் கரும்பாக இருக்கிறதாம். ராஸ் என்னும் துரையானவர் ஒரு வீசை உலர்ந்த பதார்த்தம் உண்டாக சுமார் 400 வீசை ஜலம் வேண்டுமென்று மதித்திருக்கிறார். மேற்படி 60 டன் மாசூலில் 16 டன் உலர்ந்த பதார்த்தம் இருப்பதால் மேற் சொல்லிய பிரகாரம் 6,400 டன் ஜலம் வேண்டியிருக்கிறது. ஒரு அங்குலம் மழை சுமார் 100டன் இருப்பதால் ஷை கரும்பு உண்டாக 64 அங்குல மழைவேண்டும். இவ்வளவும் கரும்புப் பயிராகும் காலம் முழுதும் நிரவிப் பெய்யவேண்டும். இந்த 64 அங்குல மழையும் பயிர் உண்டாவதற்கு மாத்திரமே வேண்டும். மழை பெய்தால் புரண்டு உருண்டு போவதையும், மண்ணில் சுவர்ந்து ஊற்றுக் கண்களுக்குச் செல்லுவதையும், காற்றில் ஆவியாய்ப் போகத் தக்கதையும், இன்னும் சில்லறை விஷயங்களில் செல்லுவதையும் இதில் சேர்க்கவில்லை. கரும்பை மழையுதவியினாலேயே வளர்க்குமிடங்களில் அதிக மழை வேண்டியிருக்கிறது. கரும்பு விளையும்படியான நமது நாட்டில் இவ்வளவு மழை இல்லாததால் கிணறு, ஏறி, ஆறு முதலிய ஆதாரங்களிலிருந்து நீர்பாய்ச்சப்படுகிறது. குறைந்து பேயும் மழை, நிலத்தில் நில்லாமல் வெள்ளத்தில் புரண்டு போய் சமுத்திரத்தில் சேர்ந்து விடுகிறபடியால் அதை மண்ணில் நிலைப்பிக்கும்படி முயற்சி செய்வது கரும்பு விளைவிப்பவர்களின் கடமை. இவ்வாறு செய்யாமல் நீராதாரங்களிலிருந்து எவ்விதமாகிலும் ஜலத்தை இறைத்துப் பாய்ச்சுவது நம்மவர்களுக்குப் பழக்கம் வெள்ளைக்காரர் மண்ணை ஆழமாக வெட்டிவைக்க மழை உருண்டுபோகாமல் நின்று பயிரைப் போஷிக்கிறது. இந்த ஈரம் நிலத்தில் ஊடுருவிச் செல்லாமலிருக்க மண்ணில் இந்திரவஸ்துவை அதிகமாகச் சேர்க்கிறார்கள். இவ்விந்திரவஸ்துவின் அருமை பின்வரும் கணக்கினால் தெரியவரும். இது ஆஸ்திரேலியா (*Australia*) நாட்டின் நியூஸௌத் வேல்ஸ் (*New South Wales*) வென்னும் மாகாணத்தில் பிரசுரம் செய்யும் வியவசாய சஞ்சிகையில் குறித்தெடுக்கப் பட்டது. இந்திரவஸ்து தன்னெடையைப்போல் 180 மடங்கு ஜலத்தைக் கிரகிக்க, வெள்ளைக் களிமண் 70 பாகமும், மணல் 25 பாகமும் கிரகிக்கின்றன. ஆவியாய்ப்போக இவ்வற்றை சில நாழிகை காற்றாய் விட்டால் இந்திர வஸ்து 20 பங்கும், களிமண் 32 பங்கும், மணல் 88 பங்கும் நஷ்ட

மடைகின்றது. பின்னும் இவைகளை ஒரே அளவு காங்கையில் உலர்த்தினால் இந்திர வஸ்து 144 பாகமும், களிமண் 48 பாகமும், மணல் 3 பாகமும் ஈரத்தை நிறுத்தி வைத்துக்கொள்ளுவதாகத் தெரியவருகிறது. இவற்றுடன் ஆகாயத்திலிருந்து நீரைக் கிரகிக்கும் குணமும் தெரிவது உத்தமம். ஆகாயத்தில் ஆவியாயிருக்கும் நீரை மணல் $1\frac{1}{2}$ பங்கு கிரகித்து உட்கொள்ள, களிமண் 17 பங்கும், இந்திரவஸ்து 60 பங்கும் உட்கொள்ளுகின்றன. மழை வேண்டும்போது ஒருவேளை பெய்யாவிட்டாலும் இவ்வித சக்தியால் நிலைக்கும் பயிர் நஷ்டமடையாதபடி காப்பாற்றப்படும். இவ்வாறு இந்திரவஸ்து எல்லா விஷயத்திலும் பயிரைச் சிக்கனமாய்க் காப்பாற்றுவதில் மேன்மைப்பட்டிருக்கிறது. இதன் பிரமாணத்துக்குத் தக்கபடி நிலத்தின் மேன்மை தாழ்வுமதிக்கப்படும். இலை முதலியவைகளை நிலத்தில் அதிகமாய் அடிக்கடி சேர்க்க இந்திரவஸ்து அதிகரிக்கிறது. மணல் நிலத்தில் 3-4 நாளைக்கொருதரமும் செவ்வலில் 8 நாளைக்கொருதரமும் ஜலம் பாய்ச்சுவதுண்டு. கரிசலில் ஜலம் அதிகம் கொள்ளுமானாலும் 15 நாளைக்கொருதரம் பாய்ச்சுவதுண்டு. இந்திரவஸ்து இவைகளில் அதிகப்பட்டால் இன்னும் இரட்டத்தனை நாளுக்கு ஒருதரம் நீர்பாய்ச்சலாம்.

COMMERCE AND INDUSTRY.

வர்த்தகமும் கைத்தொழிலும்.

A FIRST CLASS ENGINEERING ACHIEVEMENT.

ஒரு முதல்தரமான மராமத்து வேலை.

அவசியம் ஏற்படுகையில் அனுகூலங்களும் ஏற்படுவது உலகவியற்கை. இவ்வுண்மைக்கு தற்போதைய யுத்தத்தில் செய்யப்படும் பற்பல நூதன வேலைகளே போதிய சாக்ஷியங்களாகின்றன. ஓரிடத்தில் இருப்புப்பாதை உடைபட்டுப்போனதாகவும் மற்றோரிடத்தில் ரஸ்தாக்கள் அடைபட்டுப் போனதாகவும், இன்னோரிடத்தில் தந்திக்கம்பங்களும் கம்பிகளும் அறுபட்டுப்போனதாகவும் அடிக்கடி கேள்விப்படுகிறோம். யுத்தத்திற் சேர்ந்தவர்கள் எதிரிகளுக்கு இடங்கொடாதிருப் பதற்காகவும், உண்மைநிலையறியவொட்டாதபடிக்கும் செய்யப்படும் சமயோசித சூழ்ச்சிகளில் மேற்சொன்னவை சேர்ந்தன. இச்சூழ்ச்சிகளால் செய்து நிறைவேற்றப்படும் வேலைகள் யுத்த காலத்திற்கு மட்டும் பிரயோசனப்படுமென்று நம்நண்பர் நினைக்கலாகாது. தற்காலானுஸாரமாகச் செய்யப்படுவன யுத்த காலத்தில் பெரிதும் உபயோகப்படுவது ஒருபுறமிருக்க, மற்றோர் புறத்தில் யுத்தம் முடிந்து ஸாவதானம் ஏற்பட்டபிறகும் அக்காரியங்கள் பலன் தருவதை நாம் பலசமயங்களில் சரித்திரங்களின் மூலமாகப்படித்திருக்கிறோம். ஆகவே பிரகிருத யுத்தம் தீர்ந்த பிறகு உலகத்தில் முன்னிலும் பதின்

மடங்கதிகமான நடப்புவசதிகள் இருக்குமென்பதற்கு யாதொரு ஆக்ஷேபமுமில்லை. இதற்கு முன்னிருந்த ரெயில்வேக்களைக் காட்டிலும் அதிக லயன்களைப் பார்க்கலாம்; அதிக ரஸ்தாக்களைப் பார்க்கலாம்; அதிக பாலங்களைப் பார்க்கலாம். அதற்கறிகுறியாக இன்று லண்டனிலிருந்து கிடைத்த தந்தியொன்றில் ஸூயஸ் கால்வாயின் குறுக்காகப் போடப்பட்ட தொங்கு பாலம் (Swing bridge) சென்ற புதன்கிழமை பூர்த்தியாயிற்றென்று குறிப்பிடப்பட் டிருக்கின்றது. இதற்கு அர்த்தமென்ன? ஆபிரிகாவிலுள்ள ஈஜிப்டின் தலைநகரான கெய்ரோவிலிருந்து ஆசியாவிலுள்ள பாலஸ்டீனுக்கு நேராகச் செல்லலா மென்பதே. ஆபிரிகாவையும் ஆசியாவையும் மிகவும் நெருக்கமான ஸ்தலத்தில் பிரித்திருப்பது ஸூயஸ் கால்வாய் (Suez Canal) என்பதை இதற்குமுன் ஒரு விசை சொல்லியிருக்கிறோம். இக்கால்வாயின் குறுக்காக ஒருவாராவதி நிர்மாணிக்கப் பட்டதென்றால் கெய்ரோவிலிருந்து வண்டியி லுட்கார்ந்தபடி கீழிறங்காமல் பாலஸ்டீனுக்கு வருவது ஸாத்தியமாகு மாதலால் பாலஸ்டீனுக்குப் பெருஞ் செழிப்பு ஏற்படு மென்பதற்குத் தடையிராது. இப்போது பிரிடிஷார் ஸூயஸ் கால்வாயின் குறுக்காகப் போட்டிருக்குமிடம் 80 கஜம் அகலமுள்ளது. இப்பால் நிர்மாணத்திற் செய்யப்பட்டிருக்கும் மராமத்து வேலை விசேஷ திறமையும் புத்திக்கூர்மையும் கொண்டது துரஸ்து வேலையெனவே மதிக்கப்படவேண்டும். இது கட்டப்பட்டிருக்கும் எல்கண்ட்ரா வென்னுமிடத்திற்கும் போர்ட்ஸெட் துறை முகத்திற்கும் 25 மைல் தூரமுள்ளது. ஸூயஸ் கால்வாயின் வளைவில்லாப் பகுதியின் முதல் ஸ்தானத்து முனையிலிருக்கும் எல்கண்ட்ராவிலிருந்து யுத்தத்திற்கு முன்னிருந்தே இஸ்மேலியாவுக்கு இருப்புப்பாதை போடப்பட்டிருக்கிறது. இந்த இஸ்மேலியா வென்பது ஒரு ஜங்க்ஷன் ஸ்டேஷன். இதிலிருந்து ஸூயஸ் துறைக்கு ஒரு லயனும் கெய்ரோவுக்கு ஒரு லயனும் போகின்றன. இப்போது போடப்படும் புதிய ரெயில்வே ஜெரூஸலம் வரையில் நீட்சிக்கப்படுமானால், ஆங்கிலோ இந்தியரனேகர் எல்கண்ட்ராவில் தமது பிரயாணத்தை நிறுத்திப் பாலஸ்டீனிலுள்ள ஜெரூஸலம் என்னும் பிராசீன புண்ணிய பூமியைப் பார்த்து வருவதற்கு அனுகூலமாம். ஆனால் இப்போது அவ்விதம் செய்வது ஸாத்தியமாகாது. யுத்த ஆவசியகத்தை முன்னிட்டு ஸூயஸ் கால்வாயின் குறுக்காகத் தொங்குபாலங் கட்டி அதிகாரிகள் அனுகூலம் ஏற்படுத்திக் கொண்டது ஆரம்பத்தில் ராணுவகாரியங்களுக்கு உபயோகப்படுவதாயினும் காலக்கிரமத்தில் பொது ஜனோபகாரமான மார்க்கமாய் விடுமென்பதற்கு ஐயமில்லை. 'இன்பத்தின் முடிவே துன்பம், துன்பத்தின் முடிவே இன்பம்' என வழங்கும் பொதுமொழிக் கிணங்க உயிர்ச்சேதமும் பொருட்சேதமும் அபரிமிதமாக ஆய்க்கொண்டிருக்கும் இந்த மஹாயுத்தத்தினால் இப்போது துன்பம் லபிப்பதாகத் தோன்றினபோதிலும் இதன் இறுதி இன்பமாகவே முடியுமென்பதற்கு ஜரூராக நடத்தப்படும் பலவகை முயற்சிகளே சான்று.

L. அனந்தய்யர்.

SERICULTURE.

பட்டுத்தொழில்.

மைசூர் சமஸ்தானம் தேச முற்போக்குக்கான சகல அம்சங்களிலும் கவனஞ் செலுத்திவருவதற்கு ஆங்குள்ள நிர்வாகஸ்தர்களின் ஓய்விலா வுழைப்பே காரணமாகிறது. எத்துறையிலாகட்டும் ஏதேனும் அணுமாத்திரமாவது விருத்தியாம்சம் இருப்பதாக அவர்களுக்குத் தெரியும் பக்ஷத்தில் தக்ஷணமே அத்துறையிற் பரிசீலனைகள் செய்ய அவர்கள் முன்வராமலிருப்பதில்லை. சமீபத்தில் பட்டுத்தொழிலைக் குறித்து அந்த ஸமஸ்தானத்தில் விசேஷ பரிசீலனை செய்யப்பட்டதன்பேரில் புத்தியும் யுக்தியும் வாய்ந்த பொறுப்பாளிகள் அடங்கிய ஒரு கமிட்டி ஏற்படாயிற்று. அதற்கு மைசூர் ஸில்க் ஸிண்டிகேட் (Mysore Silk Syndicate) என்று பெயர். பட்டுப்பூச்சி வளர்ப்பதற்கும் அவைகளிலிருந்து பட்டெடுத்துப் பெரும் வியாபாரப் பொருளாகப் பட்டைச் சேர்ப்பதற்கும் அச்சமஸ்தான பூஸாரம் இடங்கொடுக்குமென்பதைப் பல வருஷ ஆராய்ச்சியினால் அந்த ஸிண்டிகேட்டார் கண்டு மைசூர் மாணவர்களை அத்தொழிலிற் பழக்குவிக்கவேண்டுமென்று கருதி நாளது ஜூன் மாதம் 1-ந் தேதியிலிருந்து பட்டுத்தொழிற் பாடசாலை யொன்றை ஏற்படுத்தத் தீர்மானித்திருக்கிறார்கள். அதில் ஆடவர்கள் படிக்கவும் மாதர்கள் படிக்கவும், ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாகவும் மல்பெர்ரிச் செடிப்பாதுகாப்பு, பட்டுக்கொட்டைப் பாதுகாப்பு (Seed-reeling) பட்டுநெசவு ஆகிய இவ்விஷயங்களில் போதிக்கப்படுமென்பதாகவும் அறிகிறோம். சேரவிரும்புவோர் ஆறு மாதத்திற்குக் குறையாமலும் ஒருவருஷத்திற்கு மேற்படாமலும் அப்பாடசாலையிற் சேர்ந்து கல்வி கற்கவேண்டும். இம் முழுப் படிப்புமாகக் கட்டணம் பன்னிரெண்டு ரூபாயென்று நிர்ணயித்திருக்கிறார்கள். அதில் பாதியைச் சேரும்போதும், மற்றோர் பாதியை அடுத்த வருஷம் ஜனவரி மாதத்திலும், செலுத்தவேண்டும். இப் பாடசாலையில் சேர விரும்புவோர் இங்கிலீஷ் பாஷை எழுதப் படிக்கத் தெரிந்தவர்களாயிருக்கவேண்டும். சென்ற மேமாதம் 25-ந் தேதிக்குள்ளாக மேற்படி ஸ்கூல் ஸூபரிண்டெண்டண்டுக்கு அப்ளிகேஷன் எழுதிக்கொண்டிருக்கவேண்டும். இதில் தேர்ந்தவர்களுக்கு மாதம் 15 ரூபா முதல் 50 ரூபா வரையில் சம்பளங் கொடுத்து மேற்படி ஸிண்டிகேட்டார் தமக்குள்ளாகவே வேலைபார்க்கும்படி அமர்த்திக் கொள்ளக்கூடுமென்றும் தெரிகிறது. பட்டு சாதாரணமானது தானேயென நாம் அசிரத்தை கொள்ளலாகாது. அந்தஸ்துக்காகவும் 'ஜோப்பு'க்காகவும் பட்டு உபயோகப்படுவதன்று; இந்த யுத்தகாலத்தில் பட்டின் பிரயோசனத்தைக் கவனித்துப்பாருங்கள். மின்சாரவிசையினாலாகும் காரியங்களுக்குப் பட்டு அவசியந் தேவையாயிருக்கிறது. ஆகாயத்திற் பறக்கும் புகைக் கூண்டுகளின் (balloons) உட்புறத்தில் புகையை யடைத்துக் கொண்டிருப்பது பட்டினாலான மூட்டமே. ஆகவே பட்டின்பிராதான்யம் எப்படிப்பட்டதென்பதை இதற்கதிகமாய் நாம் சொல்லவேண்டுவது அனாவசியம்.

PART IV.

HINDU LAW.

ஹிந்து லா.

(17-ம் பக்கத்தொடர்ச்சி.)

கே.—ஜீவனாம்சத்தை யேற்படுத்துவதில் ஏற்பட்டுள்ள விதி எப்படி?

ஜ.—ஜீவனாம்சமானது கொடுக்கவேண்டியவன் உடைத்தாயிருக்கும் சொத்தின் பரிமாணத்தையும் பெறுகிற நபரின் அந்தஸ்துக்குத் தக்கபடி செலவுக்கு எவ்வளவு பிடிக்குமோ அதையும் அனுஸரித்ததாகயிருக்கும்.

அல்லாமலும் விதவையின் ஜீவனாம்சமானது குடும்ப அந்தஸ்துக்கு தக்கப்படி அவளுடைய செலவுக்கு வேண்டியிருக்கிற அளவையும் இவளுடைய புருஷனுக்கு குடும்பசொத்தில் எவ்வளவு பங்குபாத்தியமிருந்ததோ அதையும் அனுஸரித்ததாகவே இருக்கும். இ. லா. ரி. 12. அல 558; இ. லா. ரி. 21. அல 232; இ. லா. ரி. 22. கல் 410.

இதன்றி விதவையால் செய்யப்பட வேண்டிய வைதீகச் சடங்குகளின் செலவுகளை யுத்தேசித்தும் ஜீவனாம்சத்தொகை நிஷ்கரிக்கப்படவேண்டியதாக யிருக்கிறது. இ.லா. ரி. 12. அல 558; 5. இ. அ 55. ஜீவனாம்ச பாத்தியமானது எப்போதும் பாகபாத்தியத்துக்குள்பட்டதாக யிருக்கிறபடியால் விதவையின் வருஷவாரி ஜீவனாம்சத்தொகையானது அவளுடைய புருஷன் பங்குக்குள்ள வருஷ வரும்படிக்கு அதிகப்படமாட்டாது.

மேலும் ஷை ஜீவனாம்சம் புருஷன் பங்குக்குள்ள வருய்படியில் மூன்றில் ஒருபாகத்துக்கு குறையாம லிருக்கவேண்டுமென்றும் பம்பாய் ஹைக்கோர்ட்டாரால் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. இ. லா. ரி 9 பம் 283; இ. லாரி, 11 பம் 199.

ஆகையால் ஒரு விதவையின் ஜீவனாம்சத்துக்காக வருஷத்துக்கு அல்லது மாசத்துக்கு இவ்வளவென்று ஏற்படுத்தப்படும் தொகையானது அவளுடைய புருஷன் உயிரோடிருந்தால் அவனுக்கு என்ன பாகம் கிடைத்திருக்குமோ அப்பாகச் சொத்துக்குள் வருஷம் அல்லது யாத வரும்படிக்கு மேற்பட முடியாதென்றும் அவ்விதம் தீர்மானிக்கப்படும் தொகையானது அவளுடைய காலக்ஷேமாதிகளுக்குப் போராததாகயிருந்தாலும் அதற்குமேல் அவளுக்கு யாதொன்றும் கிடைக்க சட்டப்படி நியாயமில்லையென்றும் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. இ.லா. ரி. 2 பம் 639; 1 பம் 199.

மேலும் ஜீவனாம்சம் கொடுக்கவேண்டியவனுடைய குடும்பசொத்தானது சொல்பமாயும் அச்சொத்தின் வரும்படி ரொம்ப அல்ப்பமாயுமிருந்தால், விதவைக்குத் தனியான ஜீவனாம்சம் கொடுக்கும்படி பர்த்தா உயில் முதலியது எழுதிவைத்துவிட்டு இறந்துபோ யிருந்தாலும்கூட அப்படிப்பட்ட சந்தர்ப்பத்தில் விதவையானவள் குடும்பத்தாரோடு சேர்ந்திருந்தே காலக்ஷேபத்தை நடத்திக்கொண்டு வரவேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. (இ. லா. ரி. 2. பம் 573; 4 பம் 261; 22 பம் 52.

கே.—ஜீவனாம்சம் கேழ்க்கிற விதவைகளுக்கு பிறரால் விடப்பட்டவும் வரும்படி தரக்கூடியவுமான ரொக்கம் பூஸ்திதி முதலிய சொத்துக்கள் ஸ்திரீதனமாக கிடைத்திருந்தால் அவளுக்கு பர்த்தாவின் குடும்பத்திலிருந்து ஜீவனாம்சம் கிடைக்கும் பெறுபர் தாரணை எப்படி?

ஜ.—ஜீவனாம்சம் கேழ்க்கிற விதவைக்கு பிறரால் விடப்படவும் வரும்படி தரக்கூடியதுமான ரொக்கம் பூஸ்திதி முதலிய சொத்துக்கள் ஸ்திரீதனமாக கிடைத்திருந்தால் அவளுக்கு பர்த்தாவின் குடும்ப சொத்திலிருந்து ஜீவனாம்சம் கொடுப்பதில் முன் ஷை விதவை ஜீவனாம்சமாக அடைந்து உடைத்தாயிருக்கிற சொத்துக்களின் வரும்படிகளையும் கணக்கிட்டுத்தான் அந்த விதவையினுடைய ஜீவனாம்சத்தொகை நிஷ்கரிஷிக்கப்படும். இ. லா. ரி. 2. பம். 573.

PART V.

CO-OPERATION.

கூட்டுறவு.

செட்டியார்.—அப்படியே சரி. அடுத்த மனு என்ன?

காரியதரிசி.—கருப்பய்யா ரூ. 25 கடன் கேட்கிறான், சுப்பன் ஜாமீன் போட்டிருக்கிறான்.

செட்டியார்.—சன்னாசி மகன் கருப்பய்யாவா? மகா இழுவைக்காரன், அவன் முன்னே வாங்கியிருந்தானே சரியாய் வந்ததா?

காரியதரிசி.—இல்லை, டயன்படி செலுத்தவில்லை. ரூ. 10 பாக்கி நேற்றுதான் செலுத்தினான். இன்று மனுக்கொண்டு வந்துவிட்டான்; இதோ நிற்கிறான்.

இராமஸ்வாமி.—ஏண்டா கருப்பய்யா, ஏன் இப்படி தாமதம். நேற்று ரூ. 10 கொடுத்துவிட்டு இன்று எதற்காக ரூ. 25 கேட்கிறாய்? ஏன் சரிவர கொடுக்கவில்லை?

கருப்பய்யா.—இல்லை-சாமி-பஞ்சகாலமாய்ப் போச்சு என்ன செய்கிறது. டயன்படி கொடுக்காவிட்டால் எனக்குத்தானே நஷ்டம், அபருத வட்டிபோட்டு வாங்கிவிடுவார்கள். எஜமானக்கு ரொம்ப நஷ்டமாக்கும் !

இராமஸ்வாமி.—எஜமானுக்கு ஒரு பைசாக்கூட லாபமில்லையப்பா, டயன்படி பணத்தை சரியானபடி கொடுக்கவேண்டியது என்பது தான் முக்கியமான ரூல். இச்சங்கங்களில் வட்டி அதிகம் கொடுத்தால் உனக்கும் நஷ்டம், சங்கத்திலும் கடுத்தவரி கொடுப்பவர்களின் கணக்கு அதிகமாகும். நேற்று ரூ. 10 எப்படி கொடுத்தாய்?

கருப்பய்யா.—சாமி கடுக்கனை அடகுவைத்து வாங்கிவந்தேன். இன்று இங்கு வாங்கித்தருகிறேன் என்று சொல்லிவந்தேன்.

வேம்புவய்யர்.—சரி, போ.

காரியதரிசி.—அவ்வளவு திருப்தியாயில்லை. மனுவைத் தள்ளிவிடலாம், பணம் சரியாய் வராது.

செட்டியார்.—அப்படியே செய்துவிடலாம். பட்டணத்திலெல்லாம் சண்டைக்கித் தயாராயிருக்கிறார்களாமே. கச்சேரிகளெல்லாம் 4-மணிக்கு அப்புறம் கிடையாதாமே.

அய்யாவய்யர்.—என்காதிலும்பட்டது. என்னமோ.

வேம்புவய்யர்.—எல்லாம் கடைவீதிப் பொய். அப்படியொன்றுமில்லை. வருஷத்திற்கு ஒருமுறை கோட்டையை சீர்திருத்துவார்கள். அதிலிருந்து கட்டிவிட்டு விட்டார்கள் இன்னம்.

காரியதரிசி.—டயன் ஆகிறது. வேலையிருக்கு. நல்லய்யாசேர்வை மாடுவாங்குவதற்கு என்று நம்மிடம் ரூ. 100 வாங்கிக்கொண்டு போய், காலணா வட்டிக்கு பக்கத்தில் கடன் கொடுத்திருக்கிறதாக மனுவந்தது. விஜாரித்தேன் சேர்வையே ஒப்புக்கொள்ளுகிறான்.

செட்டியார்.—நமக்கு என்ன அது, அவன் தெருவிலே போட்டுவிடுகிறான், இப்படியெல்லாமா விசாரிக்கிறது? பணம் சரியாய்வருமா? புள்ளி நல்ல புள்ளியாவென்று மட்டும்தான் விசாரிக்கலாம். வீடுகட்டுவதற்கு பணம் வாங்கி நெல்லுவாங்கப்படாதா? நகை செய்யக்கூடாதா? இதென்ன வேடிக்கை அய்யா நன்றாய் இருக்கிறது.

(கோவாப்ரேடிவ் இன்ஸ்பெக்டர் வருகிறார்.).

வேம்புவய்யர் & காரியதரிசி.—வாருங்கள், வாருங்கள், இப்பொழுதுதான் வருகிறீர்களோ நல்ல சமயத்திற்கு வந்தீர்கள், ஒரு விவகாரம் நடந்துக்கொண்டிருக்கிறது.

இன்ஸ்பெக்டர்.—இப்பொழுதுதான் வருகிறேன், விவகாரம் என்ன கேட்போம்.

அய்யாவய்யர்.—எல்லாம் வீண்பேச்சு பேசுகிறார்கள். பள்ளிக்கணக்கு புள்ளிக்குதவாதென்பது சரியாயிருக்கிறது. எதற்கு கடன் வாங்கினாளோ அதற்குத்தான் உபயோகப்படுத்தவேண்டுமாம். நம் காரியதரிசி சொல்லுகிறார். உளுந்துவாங்க என்று சொல்லி கொள்ளு வாங்கக் கூடாதாம்.

இன்ஸ்பெக்டர்.—என்னமோ அவருக்கு தோன்றினதைச்சொன்னார், தங்கள் அபிப்பிராயம் என்ன ? இவ்விசாரணை எல்லாம் கூடாதா ? அல்லது அப்படி விசாரிப்பது பாபமென்றா?

அய்யாவய்யர்.—அதெல்லாம் நமக்கென்னய்யா? பணம் நஷ்டம் வராமல் கொடுக்கவேண்டியது. அவ்வளவுதான் முடியும். ஊர் விசாரணை செய்ய நம்மால் முடியுமா?

இன்ஸ்பெக்டர்.—முடியாமல் இருக்கலாம். முடிகிற கேஸ்களில் விசாரிக்க வேண்டுமென்பதுதான் சரியானது. கூட்டுறவு விதிகளில் ரூல் 27ஐ பாருங்கள். கூட்டுறவு சங்கங்களுக்கும் இதர லேவாதேவி சங்கங்களுக்கும் முக்கிய வித்தியாசம் இதுதான். இந்த கேஸில் இதோ விசாரணைசெய்திருக்கிறார். இதன்மேல் action எடுக்கவேண்டியதுதான்.

செட்டியார்.—என்ன செய்கிறது. அப்படி எல்லாம் விசாரித்தால் ஜனங்கள் ஓடிப்போய்விடுவார்கள். சங்கங்களில் சேரமாட்டார்கள்.

இன்ஸ்பெக்டர்.—செட்டியார் சொல்வது சரி. ஆனால் ஐக்கிய நாணய சங்கங்களின் கொள்கைப்படி சங்கம் நடத்தாமல் உண்டியல் கடையைப்போல் சங்கம் நடத்துவதற்கு சங்கம் இல்லாமல் இருந்தாலும் நல்லதுதான். ஆனால் உடனே செய்யவேண்டுமென்று ஒருவரும் சொல்லவில்லை. இப்பொழுது உங்கள் நோட்டீஸுக்கு ஒரு கேஸ் வந்திருக்கிறது. இதில் action எடுத்துக்கொள்ளுங்கள். மெம்பர்களுக்கு சங்கங்களில் பிசகு செய்யக்கூடாது என்று ஒரு எண்ணம் உண்டாகும். கொஞ்சம் கொஞ்சம் advance செய்தால்தான் உங்கள் சங்கம் நல்ல சங்கமாகலாம்.

செட்டியார்.—அது சரி —அப்படிச் செய்யலாம், ஆனால் திடீரென்று அவசரப்பட்டு ஒன்றும் செய்யக்கூடாது. இதில் பணத்தை வசூல் செய்துவிட வேண்டியதுதான்.

காரியதரிசி.—பணத்தை வாங்கின காரியத்திற்கு உபயோகப் படுத்தாமல் ரூல் 27-க்கு புறம்பாய் நடந்த சேர்வையிடமிருந்து பணத்தை உடனே வசூல் செய்ய எற்பாடு செய்யவேண்டும் என்று தீர்மானம் செய்யலாம்.

வேம்புவய்யர்.—அப்படியே செய்யலாம்.

காரியதரிசி.—வீரப்பன் மகன் ஆண்டி தன்னை சங்கத்தில் சேர்த்துக் கொள்ள வேண்டுமென்றும் தனக்கு 5 பங்குகள் கொடுக்கவேண்டும் என்றும் மனுக்கொடுத்திருக்கிறான்.

இராமஸ்வாமி.—ஆர் அந்த ஆண்டி?

காரியதரிசி.—வீரப்பன் என்று ஒரு கங்காணி இருந்தான். அவன் மகன்.

செட்டியார்—ஆர், அந்த மாட்டுக்கேஸில் அகப்பட்டுக் கொண்டானே அவனா? அந்த கேஸ் என்ன ஆச்சு.

வேம்புவய்யர்.—அதில் இவனுக்கு ரூ. 100 அபராதம் போட்டார்கள். அது 4-வருஷம் ஆச்சு.

PART VI.

EDUCATION.

By Mr. N. R. KEDARI RAO, M. A., L. T.

கல்வி.

HOW TO TEACH YOUNG CHILDREN?

சிறுவர்களுக்குக் கல்வி போதிப்பதெப்படி ?

'சிறுவர்களுக்குக் கல்வி கற்பிப்பது வெகு சுலபமானது' என்று பலரும் எண்ணியிருத்தல் கூடும். யோசித்துப்பார்க்கின், அது அப்படியன்று. பெரிய வகுப்புக்களுக்குச் சொல்லிக்கொடுப்பதைக் காட்டிலும், சிறிய வகுப்புக்களுக்குச் சொல்லிக்கொடுப்பதே சிரமமானது என்று தெரிய வரும்; ஏனெனில், நாம் எந்த விஷயத்தைப்பற்றிப் பேசுகிறோமோ அந்த விஷயம் மாத்திரம் நமக்கு நன்றாய்த் தெரிந்திருந்தால், அதை நாம் எப்படிச் சொன்னாலும் பெரிய பிள்ளைகளுக்கு அர்த்தமாய்விடும். அதே விஷயத்தைச் சிறுவர்களுக்குக்கூடத் தெரியும்படி சொல்லுவதற்கு மிகுந்த சாதுரியம் வேண்டும். உதாரணமாக: குழந்தைகட்குக் கசப்புமருந்து என்றால் பிடிக்காது. ஆனால், அதைச் சர்க்கரையில் கலந்து கொடுத்தால் சுலபமாய்ச் சாப்பிட்டுவிடும். அதே மாதிரியாக, கடினமான கல்வியையும் உருசியுண்டாகும்படி கற்பித்தால், குழந்தைகள் சுலபமாய் அவற்றை ஏற்கும். எந்த உபாயங்களினால் கல்வியை உருசியுண்டாகும்படி செய்யலாம் என்று யோசிப்போம்.

முதன் முதலில் கல்வி என்றால் என்ன? முற்காலத்தில் எழுதப்படிக்கத் தெரிந்திருப்பது, கணிதம், தத்வசாஸ்திரம், தர்க்கசாஸ்திரம், வியாகரணசாஸ்திரம் முதலியவைகளே கல்வி என்று நினைத்திருந்தார்கள். இப்பொழுதோ, ஊர் நடவடிக்கை முதற்கொண்டு இயற்கை யற்புதங்கள், சித்திரம் வரைதல், பூகோள சாஸ்திரம், நம் தேச சரித்திரம், வியாபார விஷயத்தில் பேரேடு முதலிய கணக்குக்களை ஸரிவர வைத்துக்கொள்ளும் விதம், தச்சுவேலை, கொல்லத்துவேலை முதலிய தொழில்கள்—இவையெல்லாம் கல்வி யென்றே பெயர் பெற்றிருக்கின்றன. தவிரவும், முன்னாளில் 'அடிமேல் அடி அடித்தால் அம்மியும் நகரும்' என்னும் வாக்கியத்தையே உபாத்தியாயர்கள் எப்போதும் அனுஷ்டித்து வந்தார்கள். அதன் பயன் என்னவென்றால், குழந்தைகளுக்குப் பள்ளிக்கூடம் போவதென்றால் தலைவலி வந்துவிடும். உபாத்தியாயரைக் கண்டால், உடம்பெல்லாம் நடுநடுங்கும். தற்காலத்திலோ பிரம்பை ஒரு உபாத்தியாயரும் உபயோகிக்கிறதில்லை; குழந்தைகளை அடிக்கிறதில்லை. அவர்களைப் பக்ஷமாகப் பாராட்டியே கல்வி கற்பிக்கவேண்டும் என்று நினைக்கிறார்கள். மூன்றாவது, முற்காலத்தில் பள்ளிக்கூடங்களில் உலக விஷயங்களைப்பற்றி ஒன்றுமே சொல்லிக்கொடுப்பதில்லை. இப்பொழுதோ, ரெயில்வே, தபால், தந்தி, முனிஸிபாலிடி முதலிய உலகவிசார ஸம்பந்தமான பல விஷயங்களையும் சொல்லிக்கொடுக்கிறார்கள். நான்காவது பண்டைக்காலத்தில் ஒரு பையனுடைய புத்திசாலித்தனத்தையே அதிகரிக்கவேண்டுமென்று கருதியிருந்தார்களே தவிர, அவனுடைய தேக ஸ்திதியைப்பற்றிக் கொஞ்சமும் கவனிக்கவேயில்லை. இப்பொழுதோ, ஒருவனுக்கு உடம்பில் திறமையிருந்தால்தான் அவன் மனம் நன்றாய் வேலை செய்யும் என்பதைத் தெரிந்து கொண்டு, தேகாரோக்கியத்துக்கு வேண்டிய விளையாட்டுக்களையும், டிரில் ஜிம்னாஸ்டிக்ஸ் முதலிய விஷயங்களையும் புதிதாய் ஏற்படுத்தியிருக்கிறார்கள்.

முற்கால நிலைமைக்கும் தற்கால நிலைமைக்கும் இவ்வளவு வித்தியாசம் ஏன் இருக்கிறது என்பதை ஒருவர் ஆராய்ந்தால், அவருக்குப் பல நுட்பமான சங்கதிகள் தெரியவரும். முன்னாளில் ஒரு உபாத்தியாயர் தான் எந்தப் பாடத்தைச் சொல்லிக்கொடுக்கிறாரோ அதில் மாத்திரம் நிபுணரேயொழிய, குழந்தைகளின் இயற்கை என்ன? எவ்விதமாய்ச் சொல்லிக் கொடுத்தால் அவர்களுக்கு நன்றாய்த் தெரியவரும்? என்பனவற்றைப் பற்றி ஒன்றுமே தெரியாது. இப்பொழுதோ, குழந்தைகளின் குணதிசயங்களைப்பற்றி ஒவ்வொரு உபாத்தியாயருக்கும் தெரிந்திருப்பது அவசியம் என்று ஏற்படுத்திவிட்டார்கள்.

அவ்வண்ணம் நோக்கின், குழந்தைகளுக்கு ஆறாவது வயதளவும் மூளை குறைச்சலாயிருக்கிறது என்று தெரியவருகிறது; ஆகையால், ஞாபக சக்தியும் குறைவே. ஏதாவது ஒரு சப்தம் உண்டானால், சப்தம் உண்டாயிருக்கிறது என்று தெரியுமே தவிர, அது எங்கிருந்து உண்டாகிறது, எதனால் உண்டாகிறது என்ற விவரம் அவற்றிற்குத் தெரியாது; இந்த விஷயம் சம்பாவிதம் என்றும், இந்த விஷயம் அசம்பாவிதம் என்றும் தெரியாது; நாம் என்ன செய்கிறோமோ அப்படியே நம்மைப் பார்த்துச்

செய்புமே தவிர, தானாக ஒன்றும் செய்யத்தோன்றாது. ஆறுவயது முதல் எட்டு வயது வரையில் தேகம் பருத்து வளரும்; ஆதலின், புத்தி அதிகமாக இடமில்லை. எட்டு வயது முதல் பன்னிரண்டு வயது வரையிலோ புத்தியானது வெகு சீக்கிரமாக வளரும்; தேகத்தில் களைப்பே தோன்றாது. நன்னடக்கைகளைப் போதிப்பதற்கு இதுவே உயர்ந்த காலம்; ஞாபகசக்தியும் அதிகம். ஆகையால்தான் எந்தப்பாடத்தையும் நெட்டுருப் போடுவது சுலபமாயிருக்கும். இளமெழுகில் பிரதி எப்படி அமையுமோ அப்படியே மனதில் எவ்விஷயமும் நன்றாய்ப் பதியும். பெரியோரைப் பேணுதல், சுறுசுறுப்பு, உண்மை பேசுதல் முதலிய நற்குணங்களையெல்லாம் இப்போது சொல்லிக்கொடுத்தால்தான் வாழ்நாள் முழுதும் நன்கு அமைந்திருக்கும். 'விளையும்பயிர் முளையிலே' என்று நாம் கேள்விப்பட்டிருக்கிறோமல்லவா? இவ்விஷயங்களையெல்லாம் இப்போது கற்பிக்காவிட்டால், பிற்பாடு அவர்கள் கற்பது மிகவும் கஷ்டமாயிருக்கும்.

பன்னிரண்டு வயது முதல் பதினான்கு வயது வரையில் தேகவளர்ச்சி ஜாஸ்தியாயும், புத்தி தீக்ஷணியம் கொஞ்சம் குறைச்சலாயும் இருக்கும். மறுபடியும், பதினான்கு வயது முதல் பதினெட்டு வயது வரையிலும் புத்தியானது வெகு தீவிரமாய் வளரும். பையன்களுக்கே கல்வியில் உருசி தோன்றும் காலம் இதுவே. விளையாட்டு விஷயங்கள் நீங்கி, ஒரு காரியத்தின் முன்பின் விஷயங்களை ஆலோசிக்கும் திறமையும் இப்பொழுதுதான் உண்டாகும். 'நாமும் கல்வியிற் தேர்ந்தவராய், யாவரும் புகழும்படி சற்காரியங்களைச் செய்யவேண்டும்' என்ற அவா இப்பொழுதுதான் அவர்களுக்குத் தோன்றும். அவர்களுக்கு நாம் 'இப்படிச் செய்வது உத்தமம்' என்று சொல்லலாமே தவிர, 'இப்படித்தான் செய்யவேண்டும்' என்று கட்டாயப்படுத்தக்கூடாது. அப்படிச் செய்தால், பிள்ளைகள் வணங்காமுடியாய் விடுவார்கள். அவர்களுக்கு மனம் ஒரு நிமிஷ நேரமும் சும்மா இராது; 'துருதுரு' என்று தத்தளித்துக்கொண்டேயிருக்கும். ஆதலின், இவ்வயதில் துன்மார்க்கர்களோடு பையன்களைச் சகவாசஞ்செய்ய விடவே கூடாது; சத்சங்கம் இன்றியமையாதது; மனதின் துருதுருப்பை நல்ல வழியில் செலுத்தினால்தான் நன்மையுண்டாகும். வகுப்பில் சட்டாம்பிள்ளை வேலையைக் கொடுத்தல், சிறுவர்கள் விளையாடுவதை மேற்பார்வை பார்த்தல் முதலிய சிறுவேலைகளை அவர்களுக்குக் கொடுத்து மனத்துருதுருப்பை உபயோகிக்கச் செய்வது மிகவும் உசிதமாகும்.

மேற்கூறியவைகளினின்று, சிறு பிள்ளைகளின் குணம் பெரிய பிள்ளைகளின் குணம் இவ்விரண்டிற்கும் பலவித வேறுபாடுகள் இருக்கின்றனவென்று விளங்குகின்றதன்றோ? ஆதலின், பெரியவர்களுக்குக் கல்வி கற்பிக்கும்விதமாகவே சிறுவர்க்கும்கல்வி கற்பித்தல் பெரிய பிசகாகும். ஆயினும், இந்த விஷயம் வெகுபேருக்குப் பலநாள் வரையில் தெரியாமலிருந்தது. இப்போது நூறு நூற்றிருபது வருஷங்களாகத்தான் இவ்விஷயத்தைப்பற்றிப் பலரும் சிரத்தையோடுயோசிக்க ஆரம்பித்திருக்கிறார்கள். ஜெர்மனியில் 'பிரோபல்' என்ன,(Froebel), பிரான்ஸில் 'ரூஸோ' என்ன (Rousseau) இத்தாலியாவில் 'மாண்டிஸோரி' (Madame Montessori) என்ன இவர்களெல்லோரும் இதை ஆராய்ச்சி செய்து அரிய பல நூல்களை எழுதியிருக்கிறார்கள். அவர்கள் சொல்லும் விஷயங்கள் எல்லாவற்றையும் நாம் கிரகிக்காவிடினும், நமதுதேச கால வர்த்தமானங்களுக்கு உரியவை எவை என்பதைமட்டும் ஆராய்ந்து அறிதலே மேன்மை.

PART VII.

NEWS AND NOTES.

ஸமாசாரக் குறிப்புகள்.

AMERICA'S HELP.

அமெரிக்காவின் உதவி.

நேசக்கட்சிகளுக்கும் ஜெர்மனிக்கும் நடக்கும் தற்போதைய யுத்தத்தில் முதல்வர்க்கு உதவிபுரிய முன் வந்திருக்கும் அமெரிகா செய்யும் உதவிகள் கொஞ்ச நஞ்சமல்ல. அமெரிக்கா ஐக்கிய மாகாணங்களிற் கிடைக்கும் ஸகல விதமான சாதகக் கருவிகளும் யுத்த காரியத்திற்கென்றே தனித்து வைக்கப் படுகின்றனவென்றும், நேசக்கட்சியாருக்கு வேண்டிய போராயுத முஸ்தீப்புகள் அமெரிகாவிலுள்ள ஒவ்வொரு தொழிற்சாலையிலும் செய்யப்பட்டு வருகின்றனவென்றும், கப்பல் கட்டுந் துறைகளில் கப்பல் வேலைகள் வெகு மும்முரமாக நடைபெறுகின்றன வென்றும், சில தினங்களுக்குமுன் அறிவிக்கப்பட்டது. இக்காரியங்கள் இவ்வளவு சீராக நிறைவேறுவதுடன் சேனைக்கு வேண்டிய துருப்புகளும் சேகரிக்கப் படாமலிருக்கவில்லை. ரிக்ரூடிங் வேலையும் ராணுவத்திற் சேர்ந்தோரைப் பழக்குவிக்கும் வேலையும் தினந்தவறாது காலை மாலை யிவ்வேளைகளிலும் அமெரிக்க ராணுவங்களில் அனுஸரணையிலிருந்து வருகின்றன. இக்கூடங்களிலிருந்து ஐந்து லட்சம்பேர்கள் இப்போது மேற்கரங்கப் போர்முனையாகிற பிரான்ஸுக்கு அனுப்பப்பட்டிருக்கிறார்கள். இவ்வளவு பேர்களை அட்லாண்டிக் மகா சமுத்திரத்தின் மூலமாக அமெரிகாவிலிருந்து பிரான்ஸுக்கு அனுப்புவது ஸாமான்யமல்ல; மத்தியிலாங்காங்கு ஜர்மானிய ஜலக்கீழ்க்கப்பல்கள் கன்னிருன் திருடர்களையொப்ப அமிழ்ந்தும் கிமிர்ந்தும் பதுங்கிப் பார்த்துக் கொண்டிருக்த போதிலுங்கூட, வெகு சாதுர்யமாக அமெரிகா தனது லட்சக்கணக்கான துருப்புகளை ஸாவதானமாக மேற்கரங்கத்திற் கொண்டுவந்து சேர்த்தது அதற்கு மிக்க பெருமையை யுண்டுபண்ணாமற் போகாது. இதுவே அமெரிகா நேசக்கக்ஷியாருக்கு உதவிசெய்ய விரதம் பூண்டிருப்பதற்கோர் சாக்ஷி. இதுவல்லாது அமெரிக்கத் துருப்பாளர் இங்கிலாண்டிற் காலடி வைத்ததும் அவர்களை நல்வரவு கூறித் தம் விசுவாஸத்தை யறிவிக்கும் நற்செய்தியை நம்மரசர் அவர்களுக்கு அளிக்கும்படி செய்ததினாலே இந்த யுத்தம் நேர்மையான காரியத்தை யொட்டியே நடைபெறுவதாக எவர்க்கும் தோன்றுவது திண்ணம். மேற்கரங்கத்தில் இப்போது அபாரமான சேனாஸமுத்திரம் காணப்பட்ட போதிலும், ஆங்கிருக்கும் ஸ்திதிகதிகளை நன்காராய்ந்து பார்ப்போமானால், அமெரிக்கா அனுப்பிய 40 டிவிஷன்களடங்கிய ஐந்துலட்சம் பேர்கள் போதாது. இதைப்போல் இன்னும் நான்குமடங்கு வருவது நலமாகும். அவ்வப்போது துருப்புகளை யனுப்புவதில் தடையிருக்கலாகாதென்றே

அமெரிக்கா கருதிப் போர்வீரர்களைத் தயார்ப்படுத்திக் கொண்டிருப்பதனாலே, அவ்வப்போது வீரர்கள் தடையில்லாமல் மேற்கரங்கத்திற்கு அனுப்பப்படுவதில் அமெரிக்கா ராணுவ அதிகாரிகள் அசிரத்தையாயிருக்கமாட்டார்கள். போர்க்களவாடங்கள், பீரங்கிகள், வெடிமருந்துகள், ரொக்கம் ஆகிய இவைகளோடு ஆள்கலத்தையும் கொடுத்து ஸ்வேச்சைக்கான இந்த யுத்தத்திற்குதவும் அமெரிக்கா, அது இப்போது வகித்திருக்கும் ஜனநாயக ஆட்சியின்கண் ஸ்வேச்சாபத்தியம் மிகுந்த கௌரவத்தை இன்னும் பிரகாசிக்கச் செய்வதை மறுப்பாருமுளரோ?

SCHEMES FOR POPULARISING THE WAR LOAN.

யுத்தக்கடனை ஜனங்களறியச் செய்வதற்கான ஏற்பாடுகள்.

இரண்டு வருஷங்களுக்குமுன் யுத்தக்கடனுக்காகக் கவர்ன்மெண்டார் விசேஷ கவனமெடுத்துச் செய்த பலவகை முயற்சிகளையும் நம்மவர் அறிவார்கள். இப்போது இரண்டாவது யுத்தக்கடனெழுப்பப் போவதாக இந்தியா கவர்ன்மெண்டார் அறிவித்திருக்கின்றனர். மும்முரமாக நடைபெறும் யுத்தத்தைத் தளர்வின்றி நடத்தி நமக்கு ஜயம் கிடைக்கும்படியான மார்க்கங்களைச் செய்யப்பிரதமத்தில் தேவையாயிருப்பது பணமே. பணமில்லாது எக்காரியமும் பூவுலகில் நிறைவேறுவது ஸாத்தியமல்ல. "குணமிருந்தாலும் குலமிருந்தாலும் கொழுங்கலைஞர் மணமிருந்தாலும் மதியிருந்தாலும் பணமிலேல் யாரும் அஞ்சலிசெய்யார்;" ஆனதுபற்றி எக் காரியத்திற்கும் பணமே பிரதானமாகும். ஆள் சேர்க்கவோ, ஆகாராதி பண்டங்களைச் சேகரிக்கவோ, போர்த்தளவாடங்களைத் தொழிற்சாலைகளிலிருந்து ஒன்று திரட்டி களத்திற் கனுப்பவோ, மற்று மாகவேண்டிய கூலிவேலைகளைச் செய்யவோ பணமில்லாமல் முடியாது. ஆகவே பணச் சேகரிப்புக்காக இப்போது இரண்டாவது யுத்தக்கடன் வாங்க விளம்பரிக்கப்பட்டிருக்கிறது. விளம்பரங்களைப் பார்த்து படிக்கக் கூடியவர்கள் மட்டுமே யுத்தக்கடனை நன்கறிய ஸாத்தியமாகுமேயன்றி எங்கேயோ கிராமாந்தரங்களில் மூலை முடுக்குகளி லிருப்போர் இதையுணர வேண்டியதாயின், இதற்கு பலவிதமான ஏற்பாடுகள் செய்வது பொருத்தமாகும். இவ்விரண்டாவது யுத்தக் கடனைப் பராச்செய்வதற்காக வங்காள யுத்தக் கமிட்டியார் மிகவுந் தீவிரமாக வேலை செய்ய வாரம்பித்திருக்கிறார்கள். இவர்களுக்குக் கீழ் பற்பல ஸப் கமிட்டிகளும் அமைக்கப்பட்டு, அவைகளில் மெம்பர்கள் தினந்தவறாது மீட்டிங்குகூடி ஆலோசித்து வருகிறார்கள். இந்த யுத்தக்கடனுக்குப் பணம் உதவினால், அரனிமித்தம் இன்னின்ன லாபங்களுண்டென்பதைப் பணம் போட்டு வைப்போருக்குத் தெளிவாயெடுத்து வைக்க வேண்டுமென்றும், இதற்காகப் பலர் ஆங்காங்கு உபந்நியசிக்கப் புறப்பட்டிருப்பதாகவுந் தெரிகிறது. முதல் தரமான லைப் இன்ஷியூரென்ஸ் கம்பெனிகள் இவ்விஷயற்றைத் தம் தினசரிக் காரியத்தோடு சேர்த்துக் கவனிப்பதுடன், வெளிகளிலிருக்கக்கூடிய தமது ஏஜெண்டுகளின் மூலமாகவேலை செய்யச்சொல்லிப் பணம் சேர்க்கலாமென்றும் அக்கமிட்டியார் பிரேரணை செய்திருக்கிறார்கள். இன்ஷியூரென்ஸ் கம்பெனியாரது கூட்டுற விருப்பதும் நலம். இந்தியா வியாபாரிகளாகட்டும் ஐரோப்பிய வியாபாரிகளாகட்டும் பேதமின்றிக் கலந்து ஸபைகள் கூட்டித் தத்தம் தொழிற்கூடங்களிலும் தொழிற்சாலைகளிலும் வியாபார ஸ்தாபனங்களிலும் வேலை செய்யும் தொழிலாளிகளையழைப்பித்துப் பணம்போடச் சொல்லலாம். இந்த விதமாக ரொக்க ஸர்டிபிகேட்டுகள் லட்சக் கணக்காகப் பிரப்பப்படக்கூடும். மற்றும் ஜனங்கள் புதினமான வகையாய் இருக்கக்கூடிய மார்க்கமும் உண்டு. ஜனங்கள் சந்தோஷப்படக்கூடிய தமாஷாக்களை வைப்பது, பிரஜைகளுக்கு உபயோகமுண்டாக்கும் கண்காட்சிச் சாலைகளை வைப்பது, இரண்டு வருஷங்களுக்கு முன்போல் யுத்தக் கடன் லாட்டரி போடுவது முதலியவைகளையும் அவலம்பிக்கலாம். லண்டன் நகரில் போர்க்கவச மிட்ட 'டாங்கு' ஒன்றை வீதியிற் கொணர்ந்து நிறுத்தி அதிலிருந்து ரொக்க ஸர்டிபிகேட்டுகள் விற்கப்பட்டன; ஜனங்கள் அஃதோர் புதுமையென்று மதித்து லட்சக் கணக்காக *முன்வந்து பணங்கொடுத்து ரொக்க ஸர்டிபிகேட்டுகளை வாங்கிச் சென்றார்கள். அதுபோல ஒரு சிறிய யுத்தக் கப்பலையோ அல்லது ஜலக்கீழ்க் கப்பலையோ

செய்து வைத்து ஒரு புதினமாக ஜனங்கள் எண்ணும்படி செய்தால் அதன் மூலமாகக் கிடைக்கக்கூடிய பலன்கள் அற்பசொற்பமாயிராவென்பது நிச்சயம்.

TRAGIC END OF CHUNG LING SOO.

சங் லிங் ஸூவின் பயங்கர முடிவு.

'பாம்பாட்டிக்குப் பாம்பினால் சாவு' என்று உலகத்தவர் பொதுவாகச் சொல்லுவதுண்டு; அவ்வழக்கச் சொல் சங் லிங் ஸூவென்பவரது விஷயத்திலும் பலித்துவிட்டது. இந்தப் பெயர் நமது நண்பர்களுக்குப் புதிதல்ல. சங்கலிங் ஸூவென்பவர் விசேஷபெயரும் பிரக்கியாதியும் பெற்ற ஜாலவித்தைக்காரர். இவர் சென்னைக்குவந்து மவுண்ட் ரோட்டிலுள்ள எல்பின்ஸ்டன் தியேட்டரில் ஜாலவேடிக்கை மாந்த்ரீக வேலை முதலான தமாஷாக்களைக் காட்டிச் சென்றார். மற்றும் இந்தியாவிலுள்ள சிற்சில முக்கிய பட்டணங்களுக்குச் சென்று தமது ஆட்டங்களைக் காண்பித்துக் கடைசியாய்க் கடந்த மார்ச்சு மாதம் இங்கிலாண்ட் போய்ச் சேர்ந்தார். அம்மாதம் 23-ந்தேதி லண்டனிலுள்ள வுட் க்ரீன் எம்பயர் தியேட்டரில் இவர் வேடிக்கை காட்டிக்கொண்டிருந்தபோது ப்ரோக்ராமிற் கண்ட வேலைகள் அனைத்தும் முடிந்து கடைசித் தமாஷாவுக்காக வித்தம் செய்தபோது அவருடைய காலம் முடிந்தது. அக்கடைசித் தமாஷா என்னவென்றால் இரண்டுபேர் சேர்ந்து ஓரோர் மூலையில் நின்றுகொண்டு சங் லிங் ஸூவைப்பார்த்துச் சுடுவதென்றும், அப்படிச் சுட்டபோதிலும் கைத் துப்பாக்கிகளிலிருந்து விடுக்கப்படும் குண்டுகள் சங் லிங்ஸூவின் சரீரத்திற்பட்டு அவருக்கு அபாயம் விளைவிப்பதில்லையென்றும் நிகர்சித்துக் காட்டப்படும் தாமாஷவாம். இத் தமாஷவை இவர் பலதடவை பலவிடங்களில் மகுடந்தரித்த மகீபதிகளுக்கு முன்னிலையின் செய்திருக்கிறாம். அன்றையதினம் என்னவோ தெரியவில்லை, அத் தமாஷாவுக்காக வேடிக்கை பார்க்கவந்திருந்த ஜனங்களிலிருந்துஇருவரை அரங்கமேடையிலழைத்து இருமூலைகளில் நிறுத்தித் தம்மை நோக்கிச் சுடும்படி சொன்னாரும். அவ்விதமே இவர்கள் சுட்டனர். உண்மையாகவே சங் லிங் ஸூவின் சரீரத்திற்குள் துப்பாக்கி ரவைகள் பாய்ந்துவிடவும் துடிக்கும் புழுவையொப்ப அவர்கீழேவிழுந்தார். இத் தமாஷா செய்கையில் குண்டு தம் சரீரத்திற்பட்டதை யொப்ப அவர் சிறிது நேரம் பாசாங்கு செய்வதுண்டாம்; ஆனால் இவர் இச்சமயத்திற் கீழே விழுந்ததைப் பார்த்த இவரது மானேஜர் முதன் முதன்முதல் சங் லிங்ஸூ பாசாங்கு செய்வதாக நினைத்தபோதிலும் 'ஐயோ தெய்வமே' யென்று சங் லிங்ஸூ வாய்விட்டுக் கதறியதைக் கேட்டுச் சமீபத்திற் போய்ப் பார்க்க, உண்மையாகவே ஒருகுண்டு அவரது ஹிருதயத்திற் பாய்ந்து ஊடுருவிச் சென்றிருப்பதாகக் தெரிந்தது? தக்ஷணமே வட்க்ரீன் ஆசுபத்திரிக்கு சங்லிங் ஸூவைக் கொண்டுபோனார்களென்றாலும் சொற்பநேரத்திற்குள் அவர் இறந்தேபோனார். பிரக்யாதிபெற்ற ஜாலவேடிக்கைக் காரரான சங்லிங்ஸூவின் ஜீவ வாழ்க்கை இங்ஙனம் முடிந்தது! நிலக்கரிச்சுரங்கங்களில் வேலை செய்வோரும் மின்சார வேலைசெய்வோரும் நீராவிக் கலங்களில் வேலைசெய்வோரும் முறையே தத்தம் இலாகாக்களில் செய்யும் வேலைகளின் அரைகுறையால் உயிரிழப்பதைப்போல இந்த சங் லிங்ஸூவின் ஜீவியகாலமும் அவர் கைப்பிடித்த ஜீவனோபாயத்தின் மூலமாக முடியவேண்டியிருந்தது போலும்! சீன-அமெரிக்க வம்சத்திற் பிறந்த இவருக்கு 59 வயதாம்.

PART VIII.

MORAL STORIES.

நீதிக் கதைகள்.

KARPUTHIRUMALI.

கற்புத்திருமலி.

By Mr. S. T. N. CHIDAMBARAM PILLAI.

(29-ம் பக்கத் தொடர்ச்சி.)

களமலாதூயர் :—ஆ ! ஆ ! ! அப்படியே ஆகுக,

" ஊட்டுவிப்பானு முறங்குவிப்பானு மிங்கொன்றோடொன்றை
மூட்டுவிப்பானு முயங்குவிப்பானு முயன்றவினை
காட்டுவிப்பானு மிருவினைபாசக் கயிற்றின்வழி
யாட்டுவிப்பானு மொருவனுண்டே தில்லையம்பலத்தே "

என்ற, பட்டினத்துப் பிள்ளையார் திருவாய் மலர்ந்தருளிய பாடலும் என் ஞாபகத்திலிருக்கிறது. மேலும், நமது புதல்வி சற்புத்திரியே அவ்வாடவனும் சற்புத்திரனே. அவர்கள் விஷயத்தில் கடவுள் சம்மதம் தெரியட்டும்.

காந்திமதி கனவுகண்டு விழித்தல்.

காந்தி :—ஏ ! பிராண நாயகா ?

" தாயறிவாண் மகனருமை தண்டலைநீ நெறிநாதர்தாமே தந்தை
ஆயறிவாரெமதருமை பரவையிடந் தூது சென்றாரறிந்திடாரோ
பேயறிவார்மு ழுமூடர்தமிழருமை யறிவாரோ பேசுவாரோ
நாயறியாதொரு சந்திச்சட்டிபானையினந்த வியாயந்தானே "

என்ற, படிக்காசுப்புலவர் திருவாய் மலர்ந்தருளிய பழமொழிக்கிணங்க நான் இன்றிரவு படுத்து நித்திரை செய்துகொண் டிருக்கையில் ஓர் பெரியவர் வந்து என்னைப் பார்த்து உனது பெண்ணை உங்கள் தெருவுக் கடுத்திருக்கிற தெருவில் வேதாந்த சாஸ்திரம் படித்துக்கொண் டிருக்கிற " கற்றறிநெறி " என்பவனுக்கு விவாகம் செய்துகொடு என்று சொல்லி மறைந்தார். அவ்வாடவன் பெயர் உங்களுக்குத் தெரியுமா ?

களமலாதூயர் :—ஏ ! என் காதலி ! ! எனது கனவிலும் சொல்லி மறைந்திருக்கிறார். அதாவது நேற்று நாம் பேசிக்கொண்டிருந்த பையனை இவ்விடமோர் பெரியவர் அழைத்துவந்து இப்பையன் நல்லவன். இவனுக்கு மதுபெண்ணை கல்யாணம் செய்துக்கொடும். என்று சொல்லிப் பின் இவன் உமது பெண்ணால் பூரண ஆயுளை அடைவான் என்றும் சொல்லி மறையக் கண்டேன்.

கற்றறிநெறி யாத்திரையாக வரல்.

கற்றறி :—எம்மைக் கனமுடன் நேசிக்கும் களமலாதூயராகிய ஸ்ரீமானே !

" அன்னைசுற்றம் பெண்டுபிள்ளை யாசையென்னு மிப்பொருளை
இன்னதின்ன குணமென்றறி யாரம்மானே
இன்னதின்ன குணமென்றறி வாராமாகில்
தன்னுருவங் கண்டறிந்து சாற்றுவரோ வம்மானே
சாற்றுவார் சற்குருவைச் சார்ந்தாக் காலம்மானே "

என்றபடி நான் சற்குருவைத்தேடி புண்ணிய ஸ்தலங்களுக்கு யாத்திரை செல்ல தங்களிடம் சொல்லிக்கொள்ள வந்திருக்கிறேன். அடியேனை ஆசீர்வதித்தருள்க.

களமலா :—கற்றறிநெறி ! வாரும், உட்காரும். நல்லவேளை நீர் வந்தது. கருணைப்பெருங் கடலையுடைய சிவபெருமான் அருளாலல்லவா ? நான் உம்மைத் தேடிவந்து சமர்ப்பிக்கும் எனது பெண்ணை நீர் வலியவந்து என்னைக் காணும்படி செய்தவர் கடவுளே ! கற்புத்திருமலியாகிய எனது பெண் கற்பிற் சிறந்தவளாயும் கல்வி கேள்விகளில் வல்லவளாயுமிருக்கிறாள். அவளுக்கு இப்போது தான் வயது ஒன்பதாகிறது. அவளை உமக்குத் திருமணம் செய்ய சிந்தையில் கொண்டோம் தயவு செய்து ஏற்றுக் கொள்வீராக.

கற்றறி :—*" தேடப்படும் பொருளைச் சிக்கனவாகப் புதைத்துக்*
கோடிக்கொரு வீமிடங்கொள்ளுகினும்—கூடாத
வாணாளை வீண்கழிக்கு மானிடரைப் போன்மயக்கம்
பூணார் பொய்கண்டு துறப்போர் "

என, கண்ணுடைய வள்ளாலாரும் திருவாய் மலர்ந்திருக்கிறார்களல்லவா ? பதராதகாரியம் சிதராது. என்றபடி கல்யாண விஷயத்தில் திடீரென தீர்மானிப்பது சரியல்ல. தாங்கள் எனக்குத் தங்கள் புத்திரியை விவாஹம் செய்யும் எண்ணத்தைவிட்டு நான் ஞானசாரியாரை அடைய புண்ணியஸ்தல யாத்திரைபோக விடைதந்தருள்க.

களமலா :—அப்பா ! எங்கள் புத்திரிக்கு ஒத்தமணவாளன் சித்திக்காததால் மெத்தநாளாக சித்தம் வருந்தினோம். அன்பருக்குற்ற துன்பந்தவிர்ப்பதே இன்பமாய்க் கொண்ட சின்மயானந்தராகிய ஜெகதீசன் நின்னை எம்மிடம் சேர்ப்பித்ததுமன்றி எனக்கு நேற்றிரவு கனவில் வந்து உனக்கு எமது புதல்வியை மணஞ்செய்து கொடுக்கும்படி அனுக்கிரகித்து மறைந்தார். ஆதலால் நீ ! தடுத்துரைப்பது அடுக்குமோ ?

(இன்னும் வரும்.)

காளயுக்திஹு ஆனிமீ சாலிவாஹனம். கஅசுO. கலியுகாதி இOசக. பசலி சகூஉஎ. ஹிஜரி சகூகூ. இங்கிலீஷ் 1918.

4	14	க	வெ	ஷஷ்ஷ திஅ-ககக மக சுO-O, ஹர் கூO-கூO, கௌ உக-இஉ, தி கூO-உகூ, மிரு கூ, மிதுனரவி டகூ-இசு, மிரு உ, பு உ-எ, மிரு உ, கு இஎ-கூ,
5	15	உ	சனி	சப் சுO-O, மக உ-இஅ, வச் கூக-கசு, கர கூO-சகூ, தி உசு-இகூ, மிரு கூ, பு சகூ-கூ, மிதுனசுக்சப்தமீ சூன்யதிதி பு O-உO,
6	16	கூ	ஞா	சப் உ-சஅ, பூர அ-இஉ, சித் கூஉ-உஅ, வண உ-சஅ, தி உஅ-சஇ, பு O-சO
7	17	ச	திங்	அஷ் எ-கூO, உத் கஇ-அ, வி கூகூ-இஅ, பவ எ-கூO, ரா கூ-டஇ, மிரு ச, பு கூO-கச, பா ச, சு சு-கச, ஆ க, சனி சO-அ பு O-சO
8	18	இ	செ	நவ கஉ-உஇ, அஸ் உக-கூகூ, வரி கூஇ-கூO, கௌ கஉ-உஇ, ரா கக-கூஅ, மிரு சு, ரவி O-கூசு, உத் கூ, குஜ கூ, அ, பு, O-இO
9	19	கூ	புத	தச கஎ-இ, சித் உஎ-சஉ, பரி கூசு-சகூ, கர கஎ-இ, ரா கக-O, திரு க, பு கசு-கஇ, கிரு க, சு இஎ-க, ஏகாதசிதிதி கரிநாள் பு க-O
10	20	எ	வியா	ஏக உக-கO, சுவா கூகூ-கூ, சிவ கூஎ-உகூ, பத் உக-கO, ரா கக-கஅ, அதிதி பு க-கூ, [திருஉல் பு க-கஅ, துவாதசிதிதி பு க-கஅ
11	21	அ	வெ	துவா உச-கக, விசா கஎ-சஎ, சித் கூஎ-உகூ, பா உசு-கக, ரா ககூ-உஉ, அக கூஉ, கடகாயனம் இஎ-சஅ, திரு க. ரவி கூக-கO,
12	22	கூ	சனி	திர உகூ-உக, அநு சக-கஇ, சாத் கூகூ-உஅ, தை உகூ-உக, ரா உகூ-சகூ, திரு கூ, பு சஎ-உO, கிரு உ, சு இO-இ. திரயோதசிதிதி பு க-உஎ
13	23	கO	ஞா	சது உஎ-அ, கே சகூ-உஅ, சு கூசு-கக, வண உஎ-அ, தியா O, பு க-கூஎ, [பௌர்ச்யமன்வா பு க-சஎ
14	24	கக	திங்	○ பௌ உகூ-கூஎ, மூல சசு-உசு, சப் கூக-கூஉ, பவ உகூ-கூஎ, தி கூ-சஎ, ரா அ-உக, திரு ச, பு கூகூ-க, கிழ, உத, குரு சO-கO
15	25	கஉ	செ	ப்ர உசு-இகூ, பூரா சசு-கO, ப்ர உஎ-கஇ, கௌ உசு-இகூ. தி அ-கஅ. திரு உ, ரவி க-இO, உத்-ச, செ உஅ-எ, கிரு கூ, சு சகூ-எ, ப்ரத
16	26	ககூ	புத	துவி உஉ-க, உத் சஉ-இக ஆயி உஉ-சகூ கர உஉ-க, திகூ-சசு, ரா உO-கூக, புன க, பு கக-கூஉ, திதிதுவயம் பு உ-எ [மாதிதி பு க-இஎ
17	27	கச	வியா	திரு கஅ-கூ, திரு சO-கூக, வை கஎ-கக, பத் கஅ-கூ, ரா கஅ-உ, சதுர்த்திதிதி பு உ-கஎ [பு உ-உஎ
18	28	கஇ	வெ	சது ககூ-கூஅ, அவி கூஎ-சஎ, விஷ் கO-இகூ, பா ககூ-கூஅ, ரா உஉ-சஎ, திரு கூ, ரவி கூஉ-சகூ, புன உ, பு கஉ-கூ, கிரு ச, சு கூசு-கூ,
19	29	ககூ	சனி	பஞ் அ-உஉ, சத கூசு-சகூ, ப்ரீ ச-கூ, ஆயு இஉ-சசு, தை அ-உஉ, ரா கஎ-கக, மிரு கூ, குரு கஉ-இ, பு உ-கூஎ [பு உ-சக
20	30	கஎ	ஞா	ஷஷ்ஷ உ-கூஅ, சப் இகூ-இகூ, பூரட் கூO-உஉ, சௌ சக-உகூ, வண உ-கூஅ, ரா உO-சஎ, அஸ் க, செ கூஉ-ச, புன உ, பு இ-அ,
21	1	கஅ	திங்	அஷ் இO-உச, உத்ட் உகூ-சகூ, சோ சக-சஅ, பா உஅ-கஎ, ரா உஉ-கஅ, புன ச, பு இஅ-ச, ரோ க, சு உசு-கூ, பு உ-இக
22	2	சகூ	செ	நவ சச-உச, ரே உஉ-சஉ, அதி கூச-கஎ, தை கஎ-உச, தியா O, திரு ச, ரவி கூ-சஉ, பு கூ-சு
23	3	உO	புத	தச கூஅ-சஇ, அசு கஅ உஉ, சுக உஎ-O, வண கக-கூச, தி கூ-க, ரா கூ-இ, பூச க, பு இக-கக, பு கூ-கக
24	4	உக	வியா	ஏகா கூகூ-கூச, பர கசு-இஅ, திரு உO-எ, பவ சு-அ, ரா கக-கஅ, ரோ உ, சு கசு-இ, மேற்கே உத பு சக-இ, கிருத்திகை பு கூ-உசு
25	5	உஉ	வெ	துவா உஅ-இஇ, *கிரு கஉ-அ. சு ககூ சகூ, கௌ க-ககூ, ரா கஅ-இஉ, புன க, ரவி கூச-கூஅ, பூச உ, பு சக-கஇ, கூர்மஜயந்-ப்ரதோ
26	6	உகூ	சனி	திரயோ உஇ-சக, ரோ கO-ச, கண் எ-இச, வண உஇ-கக, தி உகூ-சக, அஸ் உ, செ சஉ-கூ, திரயோதசிதிதி பு கூ-சக [பு கூ-கூசு
27	7	உச	ஞா	சது உஉ-உக, மிரு அ-இக, விரு உ-இஉ, தரு இஇ-இஉ, ச உஉ-உக, தி கூO-O, பூச கூ, புத இஉ-கஉ, ரோ கூ, சு எ-கஉ, திதிதுவய
28	8	உஇ	திங்	● அமா உO-இஇ, திரு கூ-க, வியா இஇ-சO, கா உO-இஇ, ரா எ-சக, ப்ரதிபத்திதி அமாசோமவிருதம் பு ச-சு [பு கூ-இகூ
29	9	உசு	செ	ப்ர உO-ககூ, புன கO-கஎ ஹர் இகூ-ககூ, ப உO-ககூ, தி கூக-எ, புன உ, ரவி இ-கஎ, பூச ச, பு இஇ-சு, ரோ ச, சு இஅ-கசு, துவிதீயாதிதி
1	10	உஎ	புத	துவி உக-கூகூ, பூச கஉ-சஎ, வச் இஉ-உக, கௌ உக-கூகூ, ரா கசு-இஇ, ஆக கூக-இஉ, அதிதி பு ச-உகூ [ஆஷாடம் பு ச-கக, ப் ச-கூகூ
2	11	உஅ	வியா	திரு உகூ-சகூ, ஆயி ககூ-கூஉ, சித் இஉ-கஅ, கர உகூ-சகூ, ரா கஎ-ச, ஆயி க, பு இஅ-கூ, ஆயி உ, சனி சகூ-கO, திருதீயாதிதி
3	12	உக	வெ	சது உஎ-கO, மக உக-உக, விய இஉ-இகூ, பத் உஎ-கO, ரா கக-உஇ, புன கூ, ரவி கஇ-இகூ, அஸ் கூ, செ இO-கஉ, மிரு க, சு சகூ-கக
4	13	கூO	சனி	பஞ் ககூ-கஅ, பூர உஎ-எ, வரி இச-கக, பா கக-கஅ, ரா கஇ-அ, மிரு ச, குரு உO-கூ, பஞ்சமீதிதி பு ச-இகூ [சதுர்த்தீதிதி பு ச-சகூ
5	14	ககூ	ஞா	ஷஷ்ஷ கஇ-கூ, உத் ககூ-உஉ, பரி இஇ-சஉ, கௌ கூ-சO, ரா உசு-சகூ, ஆயி உ, பு இக-உஉ, மிதுன சு. ஷஷ்டிதிதி பு இ-இ
6	15	கஉ	திங்	சப் சO-இஇ, அஸ் ககூ-சகூ, சிவ இஎ-கச, கர அ-உக, சே O-ககூ, மிரு உ, சு சO-உஉ, மிதுன சு சப்தமீதிதி, பு இ-கஇ

அநேக நற்சாட்சிப் பத்திரங்கள் பெற்ற

50 சாமான்கள் இனும்.] ராஜா சுந்தரி ரோஜா [50 சாமான்கள் இனும்.

கூந்தல் வளரும் பரிமளத் தைலம்.

50 இனும் சாமான்களுடன் டின் 1-க்கு ரூபாய் 1—0—0.

தலைமயிரை வளரச் செய்வதோடு மயிர் உதிராமல் செய்யும். அதிக வாசனையுடனிருப்பதோடு, மூளையின் கொதிப்பைத் தணித்து கண்களுக்கு குளிர்ச்சியைத் தரும். சிரசிலுள்ள பல நோய்களையும் நிவர்த்தி செய்து கண்களில் நீர் வடிதல், தலையில் சுண்டு, புண், மயிர் வெடிப்பு, மயக்கம், தலைசுற்றல், தலைவலி, சொரி சிரங்கு, மனோவியாகூலம் ஆகிய இவைகளைப் போக்கடித்து தேக ஆரோக்கியம் தரும் தைலம் இது ஒன்றுதான். 1-புட்டி தருவித்தால் இதன் அருமை தெரியும். அநேக நற்சாட்சிப் பத்திரங்களும் பெற்றிருக்கிறது. இது தேசமெங்கும் நல்ல பெயர் பெற்றிருப்பதே இதன் புகழ்ச்சிக்கு அத்தாட்சியாகும்.

இனும் சாமான்களின் விபரம்:—ஸ்திரீகள் தலையில் அணியும் கொண்டைக்கிளி 6, குங்குமச்சிமிழ் 1, மைச்சிமிழ் 1, அழகான முகம் பார்க்கும் கண்ணாடி 1, தாம்பூல மாத்திரைகள் 30, தந்தச்சீப்பு 1, ராஜா ராணி சாரனேஷதன் பெட்டி 1, ரவிவர்மா படங்களுள்ள போஸ்ட் கார்டுகள் 6, அத்தர் பில்லை 1, சந்தனப்பில்லை 1, ஸ்திரீகள் மார்பில் அணியும் ராஜா ராணி உள்ள சுந்தரமான புரோச் 1.

வேண்டுபவர்கள் அடியிற்கண்ட விலாசத்திற்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

சர்வஜாதக சந்தேக நிவர்த்தி.



இதுவரையிலும் அநேக ஜோதிட சாஸ்திரங்களைப் பார்த்து பரீட்சித்து இருந்தபோதிலும் இந்த ஜாதகங்களைப்பார்த்து பலன்சொல்லும் திறமையும் உணரும் பொருட்டுச்சமாயம் சுலப நடையாகவும் எழுதி ஆங்காங்கு உதாரணமாக சக்கரங்களும் அமைத்து நல்ல கிளேஸ் கடிதத்தில் அச்சிட்டிருப்பதால் இப்புத்தகம் சோதிடர்கள் ஒவ்வொருவர் கையிலும் இருக்குமாயின் அவர்களுக்கு வேறு சோதிடம் வேண்டுவது அவசியமில்லை. ஆதலால் இலௌகீக வைதீகரிடத்திலும் ஒவ்வொரு குடும்பங்களிலும் அவசியம் இருக்குமாயின் அவர்களே அப்போதைக்கப்போது பல பலன்களை வெகு சூட்சமமாக பார்த்து மனம் திருப்தியடையலாம். இதன் விலை அணு 12.

எஸ். பி. கே. லால் அண்டு கம்பெனி,
சூளை போஸ்டு, மதறாஸ்.

குறைந்த சந்தாவில் நிறைந்த குணங்களை அடங்கிய பத்திரிகை எது? ஃதுதான்

"கல்பதரு"

இப்பத்திரிகை "கல்பதரு" என்னும் பெயருக்கு இசைய, படிப்போர்களுக்கு வேண்டும் விஷயங்களை யெல்லாம் அடக்கி, படிப்பவர்கள் மனதை களிப்புறச் செய்ய வல்லது. இது, (1) இராஜாங்கம், (2) சுகாதாரம், (3) வியவஸாயம், வர்த்தகம், கைத்தொழில், (4) ஹிந்து லா, (5) கூட்டுறவுச் சங்கங்கள், இவைகளைக்குறித்த வியாஸங்களையும், (6) கல்வி, (7) வர்த்தமானங்கள், (8) ஞானத்தை அபிவிருத்தி செய்யக்கூடியதும் மனதை இன்புறச் செய்யக்கூடியதுமான கதைகள், நாடகங்கள் முதலியவற்றையும் அடங்கியுள்ளது. இந்தப் பத்திரிகைக்கு தபால் கூலி உள்பட வருஷம் ஒன்றுக்குச் சந்தா

உள்நாட்டுக்கு ரூபா 3—0—0 } மாதிரிக்காபி வேண்டியவர்கள் அரையணு ஸ்டாம்பு
வெளிநாட்டுக்கு ரூபா 4—0—0 } அனுப்பினல் மாதிரிக்காபி இனுமாக அனுப்பப்படும்.

மானேஜர்-"கல்பதரு" ஆபீஸ், 1/24, கிருஷ்ணன்கோவில் தெரு, மண்ணடி, சென்னை.

நற்சாக்ஷியை நன்ருகக் கவனியுங்கள்!

'ஜட்ஜ் மணி ஐயர்' என்னும் செல்வப்பெயர் கோண்ட டாக்டர்.

ஸர். எஸ். சுப்பிரமணிய ஐயர் அவர்கள் தேரிவிப்பது:—

பண்டித எஸ். எஸ். ஆனந்தரின் மஹா சந்தனுதி தைலத்தை எனது குடும்பத்தில் ஒரு வருஷகாலமாக உபயோகித்து நன்மையடைந்தோம். அது மனோகரமாக இருப்பதோடு நல்ல குணமும் செய்கிறது.

அவருடைய மற்ற மருந்துகளையும் பலரும் உபயோகிப்பதாகத் தெரிகிறது.

மஹா சந்தனுதித் தைலம். 12-அவுன்ஸ் புட்டி 2 0 0

வைத்தியசாலை, 24-காட்டுப்பிள்ளையார் கோயில் தெரு, சென்னை

மதுரை மீனாக்ஷியம்மன்

அழகிய புட்டாசேலை விலை ரூ. 3-12-0.

18 முழம் நிகளம், 2½-முழம் அகலம், சாயத்திற்கு உத்தரவாதம். சைவ ஸ்திரீகளும் மேன்மையாய் கட்டுகிருர்கள். இதில் ரெப்பில் சிகப்பு அல்லது வெள்ளையில் 1 புள்ளி, 3 புள்ளி, 5 புள்ளி முதலிய அநேகவிதமான ரகங்கள் உண்டு. 1 சேலை வாங்குவோர்க்கு எலெக்ட்ரிக் பொன் மோதிரம் ஒன்று பரிசு அளிக்கப்படும்.

பார்சி இமிடேஷன்

பட்டுப் புடவை.

16 முழம் நிகளம், 2½ முழம் அகலம், பார்வைக்கு 10, 15 ரூபாய் மதிக்கத்தகுந்ததாகும்.

விலை ரூ. 5—8—0.

சாண்டோ வாச்சு கம்பெனி,

நெ. 2, ராமானுஜ ஐயர் தெருவு,
சௌகார்பேட்டை, மதராஸ்.

27 JAN 1919

ஸ்ரீராமஜயம்.

கல்பதரு.

KALPA THARU.

அறிவு வளர்ச்சிக்கான ஓர் மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

புஸ்தகம் 2. } காளயுக்திஸு ஆடி, ஆவணி, புரட்டாசிமீ. { ஸஞ்சிகை 5, 6, 7.
Vol. II. } JULY, AUGUST & SEPTEMBER, 1918. { Nos. 5, 6 &7.

PART I.

GOVERNMENT EXAMINATIONS.

கவர்ண்மெண்ட் பரீக்ஷைகள்.

BY Mr. L. ANANTAIYAR,
Editor, "The Hindu Nesan."

1917—18-ம் ஆண்டில் நடந்த கவர்ண்மெண்ட் பரீக்ஷைகளை நடத்திய கமிஷனராபீசு பரிபாலன ரிபோர்ட்டை விமர்சித்துக் கவர்ன்மெண்டார் செப்டம்பர் மாதம் 5-ந்தேதி பிறப்பித்த G. O. நம்பர் 1160 வெளியாயிருக்கின்றது. அந்த ஆபீசார் நடத்திய பரீக்ஷைகளின் விவரங்களும் தேறிய மாணவர்களும் சங்கியைகளும் அந்த ஆபீசுக்குத் தலைவர்களாக இருந்தவர்களின் உழைப்பு விசேஷமும் மற்றுமுள்ள பற்பல அம்சங்களும் அதனில் தொகுக்கப்பட்டிருக்கின்றன. ஸ்கூல் லீவிங் பரீக்ஷை, அப்பர் ஸெகிண்டரி பரீக்ஷை, டெக்னிகல் பரீக்ஷைகள், தையல் வேலை, சித்திர வேலை, மெஷின் வேலை, ஸங்கீதம், வைத்தியம், முதலியன பற்பல கலைகளிலும் பரீக்ஷைகள் நடந்திருக்கின்றன. இந்த ஆபீஸின் விஷயம் நன்கு புலப்படுமாறு நம் மாகாணத்துக் கல்வியிலாகாவின் அமைப்பை இதனடியிற் சிறிது விவரிப்போம்,

நம் மாகாணத்தில் வித்தியா பரிபாலன்ம் செய்து குடிகளின் கல்வி வளர்ச்சியைக் கவனிப்பதற்காகக் கவர்ன்மெண்டார் ஓரிலாக்காவைத் தனியாக ஏற்படுத்தி அதற்குத் தலைவராக ஓரதிகாரியையும், அவருடைய அதிகாரத்தின் கீழ் பற்பல உத்தியோகஸ்தர்களையும் உபாத்தியாயர்களையும் பள்ளிக்கூடங்களையும் கல்லூரிகளையும் ஏற்படுத்தியிருக்கிறார்கள். இந்த இலாகாத் தலைவருக்கு டைரெக்டர் என்று பெயர். அந்த டைரெக்டருடைய ஆபீசு மிகப் பெரியது. அது நுங்கம்பாக்கத்திலுள்ளது. இம்மாகாணத்து வித்தியா விஷயங்களெல்லாம் அந்த ஆபீசினாலேயே நடத்தப்படுகின்றன. இவர்களுக்குமேல் சென்னை கவர்ண்மென்டாபீசில் வித்தியா சாகையொன்றும், அதற்கதிபதியாகக் காரியதரிசி யொருவரும் பெரிய அதிகாரிகளாக இருக்கிறார்கள்.

இதைத் தவிர சென்னை யூனிவர்ஸிடி யென்றொரு சங்கம் இருக்கின்றது. அந்தச் சங்கம் துரைத்தனத்தாருடைய பட்டயம் பெற்றது; அவர்களுடைய உதவியும் பெற்றது. பெரிய துரைத்தனாதிகாரிகளே அதற்கும் தலைமையதிகாரிகளாவார்கள். இந்தச் சங்கத்தாருடைய விசாரணையில் ஊர்ப்படிப்பு ஒப்புவிக்கப்பட்டிருக்கின்றது. இந்தச் சங்கத்தார் ஆமோதித்துள்ள கலாசாலைகளுக்குத் துரைத்தனத்தார் பொருளுதவி செய்கிறார்கள். கலாசாலைகளின்படிக்கும் மாணவர்களை வருஷவாரியில் பரீக்ஷித்து அவரவருடைய யோக்கியதைக்குத் தக்கவாரி மெட்ரிகுலேஷன், எப். ஏ. (Intermediate) பி. ஏ., எம். ஏ., எல். எல். டி., முதலான ஆங்கில சம்ஸ்கிருத, திராவிட வித்தியாபட்ட மளிப்பவர்களும் இந்தச் சங்கத்தார்களே.

அந்தந்த ஊரிலுள்ள முனிசிபாலிடியாரும் டிஸ்டிரிக்ட் போர்டாரும் தாலூகா போர்டாரும் ஏற்படுத்தி நடத்திவரும் பள்ளிக்கூடங்கள் முதலிற் சொல்லிய வித்தியா இலாகாத் தலைவராகிய டைரெக்டரவர்களின் விசாரணையில் இருக்கின்றன. டைரெக்டரால் அங்கீகரிக்கப்பட்ட புஸ்தகங்களே எலிமெண்டரி ஸ்கூல்களிலும் ஸெகண்டரி ஸ்கூல்களிலும் பாடங்களாக வைக்கப்படுகின்றன. அந்த பாடபுஸ்தகங்களை நிர்ணயிப்பதற்கு பாடபுஸ்தக கமிடி (Text Book Committee) என்றொரு சங்க மிருக்கின்றது. அந்தச் சங்கத்திற்கு மேற்சொல்லிய டைரெக்டரே தலைவராவர். மெட்ரிகுலேஷனுக்கு மேற்படிப்புள்ள கலாசாலைகளுக்குரிய பாடபுஸ்தகங்களை நிர்ணயிப்பவர்கள் இரண்டாவதாகச்சொல்லிய யூனிவர்ஸிடி சங்கத்தார். அந்தப் பாட புஸ்தகங்களை நிர்ணயிக்கும் அதிகாரி கணத்திற்கு பாடபீடம் (Bard of Studies) என்று பெயர். டைரெக்டரவர்கள் அங்கீகரித்த முனிசிபல் ஸ்கூல்களுக்கும் லோகல்பண்டு ஸ்கூல்களுக்கும் பிரைவேட் ஸ்கூல்களுக்கும் கவர்ண்மென்டார் வருஷவாரியில் பணவுதவி செய்கிறார்கள். அந்தப் பணவுதவிக்குக் கிராண்ட்-இன்-எயிட் (Grant-in-aid) என்று பெயர்.

யூனிவர்ஸிடி சங்கத்தாரால் அளிக்கப்படும் வித்தியா பட்டங்களைக் கவர்ண்மென்டார் ஆமோதித்து அந்தப் பட்டதாரிகளுக்கு, அவரவருடைய யோக்கியதைக்குத் தக்கவாறு உத்தியோகங்கள் அளிக்கிறார்கள். ஆனால் ரெவினியூ இலாகா, ஜூடிஷியல் இலாகா, கணக்கிலாகா முதலான இலாக்காக்களுக்குத் தனித்தனிப் பயிற்சியும், அந்தப் பயிற்சித் தரத்தில் படிக்கிரமமும் இருக்கின்றன. அந்தப் படித்தரங்களைக் குறிப்பதற்கு ஒவ்வொரு பரீக்ஷையுண்டு. அந்தப் பரீக்ஷைக்குரிய பாட புஸ்தகங்களும் வேறு வேறுள. அந்தப் பரீக்ஷைகளை நடத்தி அவைகளில் தேறியவர்களுக்குப் பட்டங்கள் அளிக்குங் காரியத்தை யூனிவர்ஸிடி சங்கத்தாருக்கும் வித்தியா இலாகாத் தலைவரான டைரெக்டருக்கும் ஒப்புவியாமல் கவர்ண்மென்டார் தம் வசத்திலேயே வைத்திருக்கிறார்கள். இந்த இலாகாவுக்குக் கவர்ண்மென்ட் பரீக்ஷா சாகையென்று பெயர். இதற்குத் தலைவர் கவர்ண்மென்ட் பரீக்ஷைக் கமிஷனர் எனப்படுவர். இந்த ஆபீசும் நுங்கம்பாக்கத்தில் டைரெக்டர் ஆபீசை ஒட்டியேயிருக்கின்றது. இந்த ஆபீசு சிறியதே யாயினும், மிகவும் முக்கியமானது. வருஷந்தோறும் பற்பல கவர்ன்மெண்ட் பரீக்ஷைகளும் நடந்தபிறகு, மாணவர்களுடைய விடைப்பத்திரங்களை ஆராய்ந்து, அவைகளைக் கணிப்பதற்கும், அப்படிக் கணித்த பிந்துக்களை (மார்க்குகளை)த் தொகுப்பதற்கும் வேண்டிய ஜனங்களை நூற்றுக்கணக்காக அப்போதைக்கப்போது நியமித்துக்கொள்வார்கள். மெட்ரிகுலேஷன் என்னும் யூனிவர்ஸிடி சங்கத்துப் பரீக்ஷைக்குப் பதிலாக இப்பொழுது கவர்ண்மென்டார் நடத்திவரும் ஸ்கூல் லீவிங் ஸர்டிபிகேட் பரீக்ஷை யென்பதும் இந்த ஆபீஸார் நடத்துவதேயாம். இந்த ஆபீஸின் பெருமையும் பொறுப்பும் எத்தன்மையதென்பது ஆயிரக் கணக்கான மாணவர்களுடைய அபிவிருத்தியையும் க்ஷீணத்தையும் வருஷந்தோறும் நிர்ணயிக்கவேண்டியிருப்பதனாலேயே நன்கு விளங்கும்.

பெரிய அதிகாரிகளாக இருப்பவர்களும் ஆபீசுகளுக்குத் தலைவர்களாக இருப்பவர்களும் மிகுந்த கெட்டிக்காரர்களாகவும் யோக்கியதையிற் சிறந்தவர்களாகவும், யுக்தி புத்திகளில் வல்லவர்களாகவும் இருக்கவேண்டுமென்பதும், இருப்பார்களென்று ஜனங்கள் நம்புவதும் உண்மையே. ஆனால் அந்தப்பெரிய அதிகாரிகளே அந்த இலாகா விவகாரங்களிலெல்லாம், உட்புகுந்து விமர்சித்து வகையறுத்து விவகரிப்பது ஸாத்தியப்படாத காரியம்; ஆகையால் அந்தந்த அதிகாரிகளுக்கு மந்திரிகளைப்போன்ற நிர்வாககர் ஒருவர் ஒவ்வோராபீசிலும் இருப்பார். அந்த நிர்வாககருக்கு மானேஜர் என்று பெயர். உண்மையில் விவகாரங்கள் நடத்துவது அந்த மானேஜரே. மானேஜர் நடத்தும் காரியங்களனைத்தும் அந்த இலாகா அதிகாரியின் பெயரினாலேயே வழங்கப்பெறும்; ஆதலால் அந்த ஆபீசுக்கும் ஆபீசு தலைவருக்கும் உறும் புகழும் பொல்லாப்பும் அவரவரினாலேயே விளைவ

தன்று, ஆபீசுப் பொறுப்பாளியாகிய மானேஜரின் ஊக்கத்தினாலும் விளைவதாகும்.

கல்லுஞ் சுண்ணாம்பும் கையினால் தொடாத எஞ்சினீருக்கே பாலங் கட்டிய புகழும் பெருமையும் பணப்பேறும் பட்டமும் வாய்க்குமல்லாது, உள்ளபடி நல்ல சாமான்களைப் பொறுக்கி யெடுத்துத் திண்ணமாக நன்கமைத்த கற்றச்சனை அந்த எஞ்சினீர் பார்த்து மெய்ச்சினாலல்லாமல், அவனுக்குக் கூலியைத் தவிர வேறு பெரும்பயன் இல்லை. இந்த உதாரணம் ஜில்லாவையாளும் கலெக்டராபீசு, சிரஸ்ததார்களுக்கும், அதுபோன்ற பெரிய ஆபீசுகளின் மானேஜர்களுக்கும் ஒருவாறு பொருந்தும். நமது வித்தியா இலாகாவுக்கும், கவர்ன்மெண்ட் பரீக்ஷை யிலாகாவுக்கும் பொருந்துமென்று சொல்லவும் வேண்டுமோ?

ஆனால் வித்தியாசம் ஒன்றுண்டு; மற்ற இலாகா தலைவர்கள் தம்மானேஜர்களின் திறமையையும் பெருமையையும் பொருட்படுத்திப் பேசுவது அவ்வளவாகக் காணோம். வித்தியா இலாகாத் தலைவராகிய டைரெக்டர்கள் இதுவரையில் அப்படியிருக்கவில்லை. அவர்களுக்கு வாய்த்த புகழ்ச்சிக்கும், பட்டங்களுக்கும் அவர்களுடைய பர்ஸனல் அஸிஸ்டெண்டாகிய ராவ்பகதூர் கிருஷ்ணசாமி ஜடாவல்லபர் என்னும் மூதறிவும் முயற்சியும் மிகுந்த மகானே முக்கியகாரணமென்று ஒவ்வொரு டைரெக்டரும் இத்தனை காலமாக சந்தோஷமாக எழுதியிருக்கிறார்கள். இது அந்த டைரெக்டர்களின் பெருந்தன்மையை விளக்குகிறதென்று சொல்லுவது ஒருவாறிருக்க, அந்த ஜடாவல்லபரவர்களுடைய பேரூக்கத்தின் பெருமையானது எந்த டைரெக்டரும் அதனைக் கௌரவிக்கும்படி. கட்டாயப் படுத்துகின்றது என்பதாம். இவர் மானேஜராக வந்தபிறகு இரண்டுமூன்று டைரெக்டர்களுக் கதிகம் தலைமையதிகாரம் வகித்திருந்திருக்கிறார்கள். அவர்களில் ஒவ்வொருவரும் ஜடாவல்லபரவர்களுடைய பேரூக்கத்தின் பெருமையானது எந்த டைரெக்டரும் அதனைக் கௌரவிக்கும்படி கட்டாயப் படுத்துகின்றது என்பதாம். இவர் மானேஜராக வந்தபிறகு இரண்டு மூன்று டைரெக்டர்களுக்கதிகம் தலைமையதிகாரம் வகித்திருந்திருக்கிறார்கள். அவர்களில் ஒவ்வொருவரும் ஜடாவல்லபரவர்களுடைய அருந்திறமையையும் நேர்மையையும் ஞாபக சக்தியையும் அனுதினமும் வியந்து கூறியதன்றி, அவரில்லையெனின், அந்த டைரெக்டர் உத்தியோகத்தைத் தம்மாற் சரியாக நிர்வகித்திருக்க முடியாதென்றும் சிலர் ஒப்புக்கொண்டதுண்டாம். முந்நாளில், ஷேக்ஸ்பியர் நாடகக் கிரந்தம் இந்தியாவில் எங்கும் கிடையாமற் போகுமளவில் கும்பகோணம் கவர்ன்மெண்ட் காலேஜு தலைவராகவிருந்து காலஞ்சென்ற கனவானாகிய கோபாலராயரவர்கள் வாய்மொழியாக அந்தக் கிரந்தத்தை அடிமுதல் நுனிவரையில் மனப்பாடமாக முழுதும் ஒப்புவித்துவிடுவாரென்று எமது நண்பராகிய ராவ்ஸாஹிப் T. V. சிவகுமார

சாஸ்திரிகளவர்கள், எமக்குச் சிறுவயதிற் சொல்லக் கேட்டிருக்கின்றோம். டைரெக்டராபீசு நடவடிக்கைகள் ரெக்கார்டுகள் இம்மாகாணத்து வித்தியா இலாகா உத்தியோகஸ்தர்களின் குணாகுணங்கள் யோக்கியதைகள் முதலியவைகளின் விஷயத்தில் ஜடாவல்லபரவர்களுடைய ஞாபக சக்தியும் அப்படிப்பட்டதே யென்று சொல்லலாம்.

ஜில்லாக் கலெக்டருக்கு ரெவினியூ இலாகா உத்தியோகம் வேறும், மாஜிஸ்டிரேட் உத்தியோகம் வேறும், ஆக தனித்தனி இரண்டுத்தியோகங்கள் இருப்பதுபோல வித்தியா இலாகா டைரெக்டருக்கு டைரெக்டர் உத்தியோகமொன்றும் உண்டு. இவ்விரண்டு உத்தியோகங்களையும் வகிப்பவர் ஒருவரே. டைரெக்டர் விவகாரங்களை நடத்தும் ஆபீசில் அவருக்கு உதவியாக டிபுடி டைரெக்டர் ஒருவரும் உண்டு. அந்த மானேஜரைப் பற்றியே மேலே சொன்னோம். கவர்ன்மெண்ட் பரீக்ஷை விவகாரம் நடத்தும் ஆபீசில் அவருக்கு உதவியாக செக்ரிடெரி ஒருவரும் மானேஜர் ஒருவரும் உண்டு.

டைரெக்டராபீசுக்குத் துணையாபீசாகிய கவர்ன்மெண்ட் பரீக்ஷை கமிஷனராபீசுக்கும் டைரெக்டராபீசு மானேஜருக்குள்ள திறமையும் ஊக்கமும், நேர்மையும் நட்புக்குணமும், வாய்ந்த மானேஜர் வாய்த்திருப்பது தெய்வவசமே. இந்த மானேஜர் மிஸ்டர் R. கிருஷ்ணராவ் பான்ஸ்லே எனப்படுவார். இவரது பெரு முயற்சியினாலும் நிதானத்தினாலும் நல்லொழுக்கத்தினாலும் ஊறுபடா ஊக்கத்தினாலுமே அந்தக் கவர்ன்மெண்ட் பரீக்ஷையிலாகா ஆபீசு நன்கு நடைபெற்று வருகின்றதென கண்டுகளிக்கின்றோம். இவர்களைப்போன்ற ஆபீசு நிர்வாககர்கள் அங்கங்கே உள்ளாரென்பதற்கு ஐயமில்லை. அவ்வளவு திறமை வாய்ந்தவர்கள் நம் தென்னாட்டிற் குறைவில்லை. இந்தியா முழுமைக்கும் மதாசாரியர்களோ, மந்திரிமார்களோ, மற்றுமுள்ள கலைகளில் நேர்ந்த கனவான்களோ உற்பவித்த தென்னாட்டில் இப்படிப்பட்ட பெருமையுள்ளவர்களுக்குப் பஞ்சம் ஒருநாளுமில்லை. ஆனால் மேலதிகாரிகள் அவர்களுடைய பெருமைகளை யெடுத்துப் பாராட்டவேண்டும்.

PART II.

SANITATION.

ஆரோக்கிய விமர்சனம்.

தானியங்கள்.

தானியங்களிலெல்லாங் கோதுமையர்ந்து மகாவிசேஷித்ததும் பலமுள்ளதுமான போஜனமாயிருக்கின்றது. ஏனென்றால் அதில் சதையை யுண்டாக்குஞ் சத்து அதிகமாயிருக்கின்றது. நம்முடைய தேசத்தில் விசேஷித்த போஜனமாகிய அரிசியில் சதையை யுண்டாக்குஞ் சத்து மிக

வுஞ் சொற்பம். இந்தச் சொற்பத்திலும் ஒருபாகம் சோற்றை வடித்துப் போடுகிறதினால் வடிகஞ்சியில் சேர்ந்து நஷ்டமாய்ப்போகின்றது. ஆனால் கேழ்வரகு, அல்லது கேப்பை, சோளம், கம்பு முதலான தானியங்கள் சதையை யுண்டுபண்ணுவதில் அரிசியைப் பார்க்கிலும் எவ்வளவோ மேலானவை. கேழ்வரகானது சதையை யுண்டாக்குஞ் சக்தியில் அரிசியைப் பார்க்கிலும் 2½ பங்கு அதிகமும், கோதுமைக்குச் சமம், அல்லது சற்று மேலானதாயு மிருக்கின்றது. கோதுமை, கேழ்வரகு, சோளம், கம்பு முதலிய தானியங்களைச் சாப்பிடுகிற ஜனங்களெல்லோரும் அதிக பலமும், உறுதியும், மிகுந்த சுகமும் பொருந்திய தேகமுள்ளவர்களா யிருக்கின்றார்கள். மேலும் அவர்கள் பூரணமான தேகவளர்ச்சியை யடைந்து, நீடிய சுகத்தையும் ஆயுளையும் அநுபவித்து வருகின்றார்கள். ஆனால் அரிசிச் சோற்றைச் சாப்பிடுகிறவர்க ளெல்லோருங் குன்றினதும் பலவீன முள்ளதுமான சரீரத்தை யுடையவர்களா யிருக்கின்றார்கள், மேலும் அவர்கள் ஏனைய தானியங்களைச் சாப்பிடுகிறவர்களைப்போல் பிரயாசத்தையும் உழைப்பையுந் தாங்கமாட்டார்கள்.

சேலத்திலிருந்த ஓர் ஐரோப்பிய வைத்தியர் கேழ்வரகின் குணத்தைப்பற்றிச் சொல்லுகிற தென்னவென்றால், கேழ்வரகைச் சாப்பிடுகிற ஜனங்கள் சதை புஷ்டியுள்ளவர்களாயும் உறுதியான கட்டுச் சரீரமுள்ளவர்களாயும் சொரி சிரங்கு முதலிய தோலைப் பற்றிய வியாதிகளை யடையாதவர்களாயும் எவ்வித கடினமான வேலையையும் யாதொரு சோர்வின்றி ஊக்கத்துடன் செய்து நிர்வகிக்கத் தக்கவர்களாயு மிருக்கிறார்களென்கிறார். மதுரை ஜில்லாவிலிருந்த ஒரு டாக்டர் கம்பு என்கிற தானியத்தைப் பற்றிப் பேசும்பொழுது மதுரை ஜில்லாவின் தென்கிழக்குப் பக்கத்தில் வாசம் பண்ணுகிற ரெட்டிகளென்னப்படுகிற ஜனங்கள் கம்பு ஒன்றையே விசேஷமாகச் சாப்பிட்டு வருகின்றார்கள். அவர்கள் அதிக உயரமாய் வளர்ந்த ஆட்கள். அவர்கள் உறுதியும் பலமும் இறுகினதுமான சதை புஷ்டியுள்ள தேகமுள்ளவர்கள். அவர்கள் பயிரிடுகிற வியவசாயத் தொழிற்காரர். அவர்களிற் சிலரை அளந்து பார்த்ததில் ஆறு அடிக்குக் குறையாத உயரமுள்ளவர்களாயிருந்தார்கள். இந்த உயரத்திற்குத் தகுந்த பருமனு முடையவர்களா யிருக்கின்றார்கள் என்கிறார்.

கடப்பையிலிருந்த ஒரு வைத்தியர் இந்த ஜில்லாவில் விசேஷமாய்ச் சோளத்தை ஜனங்கள் சாப்பிட்டு வருகிறார்கள். அது தேகத்திற்கு சுகமுள்ளதாயும் சதையை அதிகமாய் வளர்க்கத்தக்கதாயு மிருக்கின்றது. கடினமும் பிரயாசையுமுள்ள வேலைகளைச் செய்கிற ஜனங்கள் இயல்பாய் அரிசிச் சோற்றை முற்றிலுந் தள்ளிவிட்டு சோளத்தையே விசேஷமாய்ச் சாப்பிட்டு வருகிறார்கள் என்கிறார். வேறொரு டாக்டர் மராட்டிய ஜனங்கள் அரிசியை மிகவுஞ் சொற்பமாயும் கேப்பை, கம்பு, சோளம் முதலிய

தானியங்களை மிகவும் விசேஷமாயும் கையாண்டு வருகிறார்கள். அவர்கள் உறுதியும் பலமும் பொருந்திய தேகமுள்ளவர்கள். அவர்கள் எவ்வித பிரயாசத்தையும் தாங்கத்தக்கவர்கள்; அவர்கள் வாசம்பண்ணுகிற நாடு ஒருவாறு சுகவீனமுள்ளதா யிருந்தபோதிலும் அவர்களுடைய சாப்பாட்டின் மூலமாய் அதிக சுகமுள்ளவர்களா யிருக்கிறார்கள் என்கிறார்.

மேலே காட்டப்பட்ட பிரகாரம் தேகத்திற்குப் பலத்தையும் சுகத்தையும் வருவிப்பதில் அரிசியானது கேழ்வரகு, கம்பு, சோளம் முதலிய தானியங்களைப் பார்க்கிலும் தாழ்வாயிருந்தும் பொதுவாய் நமது தேசத்து ஜனங்கள் அரிசிச் சோற்றையே அதிக மேன்மையாகப் பேசுவதும் அதையே ஆசிக்கிறதும் ஆச்சரியமான காரியங்கள். கேழ்வரகு, கம்பு, சோளம் முதலான தானியங்கள் சதையை வளர்க்கிற சத்துவத்தில் அரிசியைப் பார்க்கிலும் இரண்டு அல்லது இரண்டரைப் பங்கத்தனை அதிக முள்ளவைகள். மேலும் அவைகள் அரிசியைப் பார்க்கிலும் கிரயத்தில் இரண்டத்தனை சகாயமாயு மிருக்கின்றன. சில வேளைகளில் ஒரு பவுன் நிறையுள்ள அரிசியின் கிரயத்தினால் 3-அல்லது 4-பவுன் நிறையுள்ள ஏனைய தானியங்களை வாங்கலாம். இப்படி யிருந்தும் ஜனங்களுடைய பிரியம் அரிசியின்மேலேயே சாருகின்றது. கடினமான தேக உழைப்புள்ள எளிய ஜனங்கள் தாங்கள் செய்யவேண்டிய முயற்சிகளைத் தாங்குவதற்கு அரிசிச் சோறு ஏற்றதல்லவென்பதையும், அரிசியின் கிரயம் அதிகமென்பதையும் அநுபவத்தினால் கண்டு அரிசியை நீக்கிவிட்டு ஏனைய பலமுள்ள தானியங்களையே சாப்பிட்டு வருகிறார்கள். ஆயினுஞ் சமயாசமயங்களில் அவர்கள் அரிசிச் சோற்றையும் நெய்யையும் நினைத்துப் பெருமூச்சு விடுகிறார்கள். இதற்குக் காரணமென்னவென்றால் நமது தேசத்தில் பெரும்பான்மையும் யாதொரு தேகமுயற்சியு மற்றுச் சோம்பலா யிருக்கிற ஐசுவரியமுள்ள உயர்ந்த ஜனங்கள் அரிசிச் சோற்றை விசேஷமாய்ச் சாப்பிட்டு வருகிறபடியால், வேலைசெய்கிற எளிய ஜனங்கள் பெரியவர்களும் ஐசுவரியவான்களும் சாப்பிடுகிற போஜனத்தைத் தாங்களுஞ் சாப்பிட்டால் அதனால் கனம் வருமென்று வீணாய் எண்ணிவருகிறார்கள். இப்படியே ஏனைய தேசங்களிலும் பிரபுக்களும் ஐசுவரியவான்களுஞ் செய்கிற சில காரியங்கள் எவ்வளவும் பிரயோஜனமற்றவைகளா யிருந்தபோதிலும் எளிய ஜனங்கள் அவைகளைத் தாங்களுஞ் செய்யக்கூடுமானால் அதனால் தங்களுக்குப் பெருமையுங் கனமு முண்டாகுமென்று அவிவேகமாய் நினைத்து அநேக தவறுகளுக் குள்ளாகின்றார்கள்.

இதனடியில் வரைந்திருக்கும் அட்டவணையானது, பலவகைப் போசனங்களில், சதையை உண்டாக்கத்தக்க சத்தும், அனலையுங் கொழுப்பையு முண்டாக்கத்தக்க சத்தும், தண்ணீர் முதலியவைகளும், 100-ல் இத்தனை பங்கிருக்கின்றனவென்று காட்டுகின்றது.

போஜனங்களின் பெயர்கள்.	சதையை உண்டாக்குவது.	அனலையுங் கொழுப்பையு முண்டாக்குஞ் சத்து.	தண்ணீர்.	உப்புகள்.
அரரூட்மாவு	0	81	18	¾
உருளைக்கிழங்கு	2	23	74	1
சர்க்கரை	0	96½	3	½
அரிசி	6½	79	14	½
கம்பு அல்லது புல்	12	71	16½	¾
சோளம்	13	72	13¾	1¼
கோதுமை மாவு	15	69	15	1
கேழ்வரகு அல்லது கேப்பை	15½	69¼	14	1
கடலை, துவரை, உளுந்து, அவரை முதலிய பயறுகள் ...	24½	59	14	2½
வெண்ணெய், நெய், எண்ணெய் கொழுப்பு முதலியவை ...	¼	94	4¾	1
பசுவின்பால்	5	8	86	½
பால்கட்டி (Cheese)...	33½	24½	37¼	5½
முட்டை	14	11	74	1
சில மீன்கள்	14	7	78	1
எலும்பில்லாத இறைச்சிகள்	20	7	72	1
ரோஸ்டு இறைச்சி	27½	15½	54	3

இந்து தேசத்திலுள்ள ஜனங்களுடைய பிரதான போஜனம் அரிசியே. பூர்வகாலத்தில் வெவ்வேறான அந்நிய சாதியார்கள் வடக்கே யிருந்து இந்து தேசத்திற்கு வந்து இதை ஜெயித்துத் தங்கள் கைவசமாக்கினார்கள். அவர்களில் முன்வந்த ஒவ்வொரு அந்நிய ஜாதியாரும் பின் வந்த ஜாதியாரால் ஜெயிக்கப்பட்டு அவர்களுக்குக் கீழடங்கிப் போனார்கள். இதற்கு ஒரு காரணமென்னவென்றால் இத்தேசத்தை ஜெயித்துப் பின்பு அதில் குடியேறின ஒவ்வொரு அந்நிய ஜாதியாரும் சிலகாலத்திற்குள் இந்துக்கள் சாப்பிட்டு வந்த பலமற்ற போஜனங்களைச் சாப்பிடத் தொடங்கி தங்கள் சரீர மனோபலங்களை யிழந்து அவர்களைப் போலவே துர்ப்பலமுள்ளவர்களாய்ப் போனார்கள்.

தேக மனோதன்மைகளில் இந்துக்களுக்கும் மற்றும் அநேக அந்நிய தேசஸ்தருக்குமுள்ள வித்தியாசத்திற்கு முக்கிய காரணம், இந்துக்கள் வாசம் பண்ணும் தேசத்தின் தன்மையே தவிர அவர்கள் சாப்பிடும் போஜனத்தன்மை யல்லவென்று சிலர் சொல்லுகிறார்கள். ஆனால் இவ்விஷயத்தைப்பற்றி நாம் நன்றாய் யோசிப்போமானால் ஒரு தேசத்தின் வித்தியாசமான தன்மையினால் அத்தேசத்தில் தானிய முதலிய பல விளைவுகள் வித்தியாசப்பட்டிருக்குமென்றும், அந்த வித்தியாசமான விளைவுகளை அத்தேசத்தார் உபயோகிக்கிறவிதம் எப்படியோ அப்படியே அவர்களுடைய தேகமனோ தன்மைகளிருக்குமென்றும் நாம் காணலாம்.

மசாலை முதலிய சம்பாரங்கள்.

மசாலை முதலிய சம்பாரங்களும் போஜனத்தில் சேருகிற வாசனைத் திரவியங்களும் தங்களில் தாமே சதையை வளர்க்கத்தக்க யாதொரு சத்துவத்தை யுடையவைகளா யிராதபோதிலும் போஜனத்தை ஜீரணிக்கச் செய்யும்பொருட்டு வயிற்றிலிருந்தும் வாயிலிருந்தும் ஊறுகிற ஜீரண நீர்கள் அதிகமாய்ச் சுரக்கும்படிச் செய்கின்றன. இச்சம்பாரங்கள் தானியம் முதலான மரக்கறி போஜனங்களை அதிகமாகச் சாப்பிடுகிறவர்களுக்கு அதிக அவசியமுள்ளவைகளா யிருக்கின்றன. மாம்ச போஜனங்களை கையாடுகிறவர்களுக்கு மசாலை சம்பாரங்கள் சொற்பமாய்த்தான் வேண்டியன. ஏனென்றால், மாம்ச போஜனங்களைக் கொஞ்சமாய்ச் சாப்பிட்டால் தேகத்திற்குப் போதுமானதா யிருக்கும். இந்தக் கொஞ்சம் அளவுள்ள போஜனத்தை வயிற்றிலிருந்து இயல்பாய் ஊறுகிற ஜீரணநீர் இலகுவாய் ஜீரணமாக்கிவிடும். ஆனால், தானிய முதலிய மரக்கறி போஜனங்களைச் சாப்பிடுகிறவர்கள் அப்போஜனங்களை அதிகமாய்ச் சாப்பிடவேண்டியது அவசியம். இந்த அதிக அளவுள்ள போஜனத்தை ஜீரணிக்கச் செய்ய வயிற்றிலிருந்தும் வாயிலிருந்தும் இயல்பாய் ஊறுகிற ஜீரண நீர்கள் போதுமானவைகளாயிராவாம். ஆகையால் காரசாரமுள்ள பலவகைச் சம்பாரங்களை அப்போஜனங்களோடு சேர்க்கிறதினால் போதுமான ஜீரண நீர்கள் சுரக்கின்றன. இதினிமித்தந்தான் பலவகை மசாலைச் சம்பாரங்களை இந்துக்கள் அதிகமாகவும் ஐரோப்பியர் மிகவுஞ் சொற்பமாகவும் உபயோகித்து வருகிறார்கள். மேலும் மாம்ச முதலிய போஜனங்கள் மரக்கறி போஜனங்களைப் பார்க்கிலும் அதிக ஜீரண நீர்களைச் சுரக்கச் செய்யத்தக்கவையா யிருக்கின்றன. மசாலை முதலியவற்றை அதிகமாய்க் கையாளுகிறதினால் தீமைகளுண்டாகும். விசேஷமாய் மாம்ச போஜனங்களோடு அதிகமாய் மசாலை சம்பாரங்களைச் சேர்க்கிறது வியர்த்தமானதும் தீமையுள்ளதுமான காரியம். மசாலை சம்பாரங்கள் மிகுதியாய்ச் சேர்ந்திருக்கிற மாம்ச போஜனங்களைப் போதுமானபடி சாப்பிடக்கூடாமல் போகிறதுந் தவிர அவைகளினால் ஜீரணக் கருவிகளுக்குச் சேதங்களும் நேரிடும். மாம்ச பதார்த்தங்களைச் சமைப்பதில் இங்கிலீஷ்காரரைப் பார்க்கிலும் இந்துக்கள் மசாலைச் சம்பாரங்களை மிகவும் அதிகமாய்க் கையாண்டு வருகிறார்கள். இது தீமையான வழக்கம். ஐரோப்பியர் தங்கள் சுகத்திற்கும் பலத்திற்கும் ஆதாரமென்று நினைத்துச் சாப்பிட்டு வருகிற பலவகை மாம்சங்களில் மிகவுஞ் சொற்பமாய் மசாலைச் சம்பாரங்கள் சேருகின்றன. மேலும் மசாலை

கள் அதிகமாய்ச் சேர்த்துவந்த வெகுகால வழக்கத்தினாலும் போதுமான தேகமுயற்சி யின்மையினாலும் தங்கள் ஜீரணக் கருவிகளைப் பலவீனப் படுத்திக் கொண்டவர்களுக்குத்தான் அதிக மசாலைகள் சேர்ந்த காரசார முள்ள போஜனங்கள் வேண்டியிருக்கின்றன. நமது தேசத்தில் கடின மான தேக முயற்சிகளைச் செய்கிற கூலிக்காரரும் உழுது பயிரிடுகிறவர் களும் பலமுள்ள ஜீரணக் கருவிகளை யுடையவர்களா யிருக்கிறபடியால் அவர்கள் மசாலைகள் மிகவுஞ் சொற்பமாய்ச் சேர்ந்த எந்தவகைப் போஜ னங்களையும் பிரீதியோடு சாப்பிட்டு அவைகளை நன்றாய் ஜீரணிக்கச் செய் யக்கூடியவர்களா யிருக்கிறார்கள். அவர்கள் அதிக மசாலைகள் சேர்ந்த போஜன பதார்த்தங்களை வெறுக்கிறார்கள். (வரும்.)

சக்ரவர்த்தினி.

PART III.

KNOWLEDGE ON AGRICULTURE.

By Mr. G. RAJAGOPAL,

Late Editor, "South Indian Agriculture."

விவஸாய ஞானம்.

கரும்பு.

(45-ம் பக்கத்தொடர்ச்சி).

II. வளர்த்தல்.

பயிர் மாற்றல்.

பயிர் மாற்றலென்பது ஒரேவிதப் பயிரையே அடுத்தடுத்துவிளைவிக் காமல் அப்போதைக் கப்போது வெவ்வேறு ஜாதியில் சேர்ந்த பயிர்களை மாற்றிவிளைவித்து வருவதாம். இதனால் மண்கூடியவரையில் இளைக்கிற தில்லை. பூச்சிப் புழுக்கள் நோய்நொடிகள் விருத்தியாவதற்கும் மார்க்கம் குறைவு. இந்நாட்டில் கரும்புவைத்தபிறகு நெல்லும், நெல் அறுத்தபிறகு கரும்புமே அநேகமாய் விளைவிக்கப்படுகின்றன. இவ்வாறு விளைவிப்பதி னால் கறையான் கரும்பை நாசப்படுத்துவது குறைகிறது. நெல்விளையா நிலத்தில் கறையான் உபத்திரவம் அதிகம். ஆனாலும் நெல்லும் கரும்பும் ஒரே ஜாதியில் சேர்ந்தபடியால் அவைகள் பயிர்மாற்றலுக்கு யோக்கிய மானவை அல்ல. பின்னும் மண் எவ்வளவு கொழுமையாயிருந்தபோதி லும் ஒரே சாதிப்பயிரை இடைவிடாமல் விளைவிப்பதினால் மண் அப்பயி ருக்கு உதவாமற்போகிறதென்பது விவசாயவிளக்கம் என்னும் நூலைப்

படித்தவர்களுக்கு இதுவரையிலுமே தெரியலாம். மண்ணில் கரையும் பதார்த்தங்களை ஒருபயிர் நீக்க மறுவருஷத்திற்கு மண்புரட்டப்படுவதினா லும், வேர் சருகு முதலியன மட்குவதினால் உண்டாகும் கரிமலவாயுவினா லும் கரையாப் பதார்த்தங்கள் சிறுக்ச் சிறுகக்கரைந்து நாளாவட்டத்தில் மற்றப்பயிருக்கு உதவுகின்றன. கரும்பு ஒருடன் விளைவதற்கு சுமார் $\frac{2}{3}$ ராத்தல் சாம்பல் காரமும் (*Potash*), ஒன்றரை ராத்தல் பிரகாசதமும், (*Phosphorus*) முக்கால் ராத்தல் சுண்ணாம்பும் (*Lime*) ஒன்றரை ராத்தல் சிகண வாயுவும் (*Nitrogen*) வேண்டியிருக்கிறபடியால் ஒரு ஏகராவில் 60 டன் விளைவிப்பதனால் $142\frac{1}{2}$ ராத்தல் சாம்பல் காரமும், 90 ராத்தல் பிரகா சதமும், 45 ராத்தல் சுண்ணாம்பும், 90 ராத்தல் உப்பு வாயுவும் ஆகிய இவைகள் ஒரு ஏகராமண்ணிலிருந்து நீக்கப்படுகின்றன.

இந்த ஜாதியிலேயே சேர்ந்த வேறு ஏதாவது பயிர் விளைவிக்கப் பட் டால் இந்தத் தாதுப் பொருள்களே அதற்கும் உபயோகப்படும். மண் ணின் மற்ற தாதுப்பொருள்கள் யாதொரு பயன்படாமல் நிலத்திலேயே இருக்கும். பிறஜாதியில் சேர்ந்த பயிர்களை விளைவித்தால் அவை சுண் ணாம்பை அதிகமாகவும் பிரகாசதம் சாம்பல்காரம் இவற்றை குறைவாகவும் அருந்தி மண்ணின் மற்றத் தாதுப்பொருள்களையும் உபயோகப்படுத்தும். அப்போது அதன்பின்பு விளைவிக்கப்படும் கரும்புக்கு கூடியவரையில் தகுந்த உணவு நிலத்திலிருக்கும்.

கோயம்புத்தூரிற் சில பாகங்களில் கொடிக்காலழிந்த பிறகு அதிக மாய்க் கொழுத்திருக்கிற மண் கரும்புக்கு உதவுகிறது. நிழலுக்கென்று வெற்றிலையுடன் விளைவிக்கும் அகத்தியே அதற்கு முக்கிய காரணமாகும்.

துங்கபத்திரை பாய்ச்சலுள்ள ஒசப்பேட்டை (*Hospet*) தாலுகாவில் அநேக விதமான காய்கறிகளையும், அவரை மொச்சை முதலிய காய் தானி யப் பயிர் வகைகளையும் விளைவித்து அவற்றின் இலைகொடி முதலியவற்றை மண்ணில் புதைத்துக் கரும்புபயிரிடுகிறார்கள். இங்கே கரும்பு, நெல், காய் தானியம் முதலியவைகள் மாறிக்கொண்டிருக்கின்றன. இது சிரேஷ்ட மான பழக்கமாகையால் ஒவ்வொருவரும் இதை அங்கீகரித்து அனுசரித் தால் மேன்மை உண்டாகும். நிலத்தின் கொழுமைக்குத் தகுந்தபடி சில இடங்களில் கரும்பு 2 வருஷம் முதல் 5 வருஷம் வரையில் அதே நிலத் தில் நிலைத்திருக்கிறது. அதிகக்கொழுமையுள்ள வேறு இடங்களில் 20 வரு ஷம் அதிகக் கொழுமையுள்ள வேறு இடங்களில் 20 வருஷம் வரையில் கரும்பு அழியாமல் நிலையிலேயே இருக்கிறது.

மண்.

நமது நாட்டு மண் சிரேஷ்டமானதென்றும் இதன் வளம் மிகச்சிறந்த தென்றும் அனேகர் தெரிவித்திருக்கின்றார்கள். வேறு சிலர் இதுமிக ஏழ் மைப்பட்டிருக்கிறதென்றும் அதனால் விளைவு நாளாவட்டத்தில் குறைந்து

வருகிறதென்றும் அபிப்பிராயப்படுகிறார்கள். இவ்விஷயத்தைச் சீர் தூக்கிப் பார்க்க, டாக்டர் லெதர் என்பவர் பல பக்கங்களிலிருந்து விளைவு மண்ணை ரசாயன உதவியால் பரீக்ஷை செய்து மற்ற நாட்டு மண்ணை விட இந்த நாட்டுமண் சத்து குறைந்ததென்று ஒத்துக்கொள்ளுகிறார். இது இயற்கையாகவே சத்து குறைந்த ஸ்திதியிலிருப்பதினால் தற்காலம் நடந்தேறிவரும் வியாபாரத்தால் மண் இளைக்கவில்லையென்கிறார். என்ன அபிப்பிராயமடைந்தபோதிலும் இந்தநாட்டில் மாசூல் தகுந்தபடி கிடைப்பதில்லையென்பது திண்ணம். எருவாக உபயோகப்படும் வஸ்துக்களைத் தகுந்தபடி பிரயோஜனப்படுத்துவதில்லையென்பதும் சரியே. உழவு குறைவினாலும் நிலத்தின் மேல்மண் மழையிலடித்து வெள்ளத்தில் போவதினாலும் மண்சாரம் குறைகிறதென்பதற்கு யாதொரு சந்தேகமுமில்லை. இம்மண்ணுக்கு எரு, தழை முதலியவைகளைச் சேர்க்க மாசூல் அதிகப்பட்டு வருகிறதும் அனேகருக்குத் தெரியும்.

மண் கொழுமைக்கு ஆதரவாகிய சிகணவாயு மழையினாலும் காய்தானியம் பயிரிடுவதினாலும் கிடைத்தாலும், புஷ்பக்காய்களை போஷிக்கும் பிரகாசதம் மண்ணில் குறைவாகயிருக்கிறதென்பது பிரகாசத எருவை உபயோகித்தால் கிடைக்கும் மேன்மையான மாசூலால் விளங்குகிறது பின்னும் சென்னை இராஜதானியில் கிடைக்கும் பலவித மண்ணில் சுண்ணாம்பு தாது அங்கிலேய நாட்டிலிருப்பதைவிட மிகக்குறைவாயிருக்கிறது. தக்கபடி சுண்ணாம்பு தாது இருந்தால், நெல்விளைவுக்காக உபயோகப்படுத்தும் தழை யெருவினால் உண்டாகும் புளிப்பு நிலத்தில் ஒழியும். அப்போது மண் இன்னும் அதிக கொழுமையடையும். இந்த நெல் நிலமே சாதாரணமாய்க் கரும்பு விளைவிப்பதற்கு உபயோகப்படுகிறதாகையால் சுண்ணாம்பு கரும்புவிளைவுக்கு மிகக் குறைந்திருக்கிறது.

சாம்பல் காரச் சத்து மழையிலடித்துப் போகுமாகையாலும், இவ்விராஜதானி மண் அனேக இடங்களில் ஏழ்மைப்பட்டிருப்பதாலும், சாம்பல் அங்கங்கே உபயோகப்படுவதினால் விளைவு அதிகக் கிடைக்கிறதினாலும் இச்சத்து நமது நிலத்துக்கு அவசியமென்பதைச் சந்தேகமறக் காட்டுகின்றது. இவ்வாறு காவேரியாற்று படுகை நிலமுள்பட கரிசல் செவ்வல் முதலிய மண்ணின் நிலவாக்குத் தகுந்ததல்லவென்று தெரிகிறதினால், முயற்சி கொண்டு செய்நேர்த்திசெய்து, எரு முதலியவைகளால் மாசூலை அதிகப்படுத்துவதவசியம். காவேரி மண்ணில், யாதொரு எருவுமில்லாமலும் எந்தப் பயிரையும் விளைவிக்கலாம் என்றும் எண்ணம் இப்போது சாஸ்திர பரீக்ஷையால் அடிபட்டுப்போகிறது. ஆகையால் எந்தப் பயிருக்கும் எரு அவசியமென்று தோன்றினாலும் கரும்புக்கு எரு இன்றியமையாததென்று ஐயமறத் தெரிகிறது.

இவ்வூரில் அடியிலிருந்து நீரை வடிக்கச்செய்யும் கரிசல், செவ்வல்

கரும்புக்குத் திறமானவை. இம்மண்ணில் நீரைக் கிரகித்துச் சிக்கனமாய் உபயோகப்படுத்தும் வஸ்துக்கள் கூடியவரையிலும் இருக்கின்றன. சுக்கான் சரளை, முதலியனவும், சில இடங்களில் உபயோகப்படுகின்றன. இதில் எவ்வளவு ஈரம் தங்கக்கூடுமோ அவ்வளவு இருந்து அதிகமான ஈரம் வெளியேறும். அவ்வாறு செல்லும் ஜலத்துடன் காற்று சென்று மண்புரைச்சல்களில் அடைந்து மண்ணைக் குளிரச்செய்யாமல் உஷ்ணமுண்டாக்கும்.

அம்மண்ணில் அப்போது கொழுமைக்கு ஆதரவாகிய கருக்கள் (*Bacteria*) விருத்தியாகும். வேர் பாய்ந்து மண்ணுக்குள் செல்லும் இவ்வாறு பரவும் வேருக்கு மண்ணில் இடமில்லாவிட்டால் மேலேவரும் கணுக்களில் வேர் விட்டுக்கொண்டே கரும்பு நுனிவரையிற் போகும். ஆகையால் ஜலம் ஊடுருவிப் பாயாத நிலம் கரும்புக்குப் பிரயோசனமில்லை. அதில் வேர் மண்மேலேயே படரும். இவ்வகை நிலம் நீர்ப்பாய்ச்சலுக்கு அனுகூலமென்று சிலர் அபிப்பிராயப்படுகிறார்கள். வெயிற் காலத்தில் வறண்ட மாதங்களில் மாத்திரமே இவ்வகை நிலம் உதவும். மழை வந்தால் மண்குளிர்ந்து பயிர் நரைத்து நாசமாகும். ஜலம் ஊடுருவிப்பாயாவிட்டாலும் வயலின் ஓரங்களிலும் மத்தியிலும் வாய்க்கால்களை வெட்டி அதை வெளியேற்றுகிறார்கள். பின்னும் மண் கண்டமாயும் இளகலாயுமிருப்பதுடன் வேர் தங்கு தடையின்றிப் பாய்ந்து ஆகாரத்தை யருந்தும்படி இருக்கவேண்டும், வாயல்பாடு தாலுகாவில் அழுத்தமான சரளை நிலங்களில் முத்துக்கொட்டை குச்சிகளைப் புதைத்து மண்ணில் காற்று கலக்க வைக்கிறார்கள்.

கரூர் தாலுகாவில் சில விடங்களில் நீர் களிமண் நிலத்தின்மேல் பாய்ந்தால் மண் அழுந்துகிறதென்று 10-12 அடி தூரத்தில் ஆழமான கிடங்குகளை வெட்டி அதில் ஜலம் நிரப்பிவைப்பதினால் நிலம் முழுவதும் ஓதத்தால் நனைந்து பயிரைப்போஷிக்கிறது. இவ்விடத்து படுகை மண் மணல்பேரில் இருப்பதால் இவ்வாறு செய்யவாய்க்கிறது.

மணல் நிலங்களில் நீர் பாய்ச்சல் அதிகம் கொள்ளும் அங்கே மாசூல் குறைந்தாலும் சரக்கு மிக வெண்மையாயிருக்கும். ஜலம் குறைவில்லாமலிருக்கும்படியான தாக்குகளில் இந்நிலம் உத்தமம். நீர் பாய்ச்சல் குறைவினால் செலவு குறையுமென்றே களிமண் நிலம் கரும்புக்கு தெரிந்தெடுக்கப்படுகிறது. இதன் அடி மண் சுக்கான் சரளை முதலியவைகளாயிருந்தால் இது மிகப் பிரயோசனமானது. "களரில் கரும்புவை" என்னும் வாக்கியத்தால் களர் கலந்த நிலம் கரும்புக்கு சிரேஷ்டமாக மதிக்கப்படுகிறது. இதில் சரக்கு வெகு சுத்தம் வெல்லத்தின் ருசி உப்புதட்டும். சீனிசர்க்கரைக்கு இந்த வெல்லம் அநேகமாய் உதவாது.

COMMERCE AND INDUSTRY.

BY Mr. T. V. RAMAKRISHNA AIYAR.

வர்த்தகமும் கைத்தொழிலும்.

செடிகளை நாசம்பண்ணும் சில சாதாரண பூச்சிகளைக் கொல்வதற்கு எளிதில் வீட்டில் செய்யக்கூடிய ஔஷதங்கள்.

சென்னை ராஜதானியில் பற்பலவிடங்களிலிருந்து, காய்கறி தோட்டங்களிலும் பூ பழவகை தோட்டங்களிலும் சேதத்தை உண்டுபண்ணும் சாதாரண பூச்சிகளைப்போக்கடிக்கும் பரிகார முறைகளைத் தெரிவிக்கும்படி அடிக்கடி எமக்கு கடிதங்கள் வருவதுண்டு.

ஆகையால், பின்வரும் சில முறைகள் இப்பேர்ப்பட்ட தொந்தரவு செய்கின்ற பூச்சிகளை அப்புறப் படுத்துவதற்குக் கொஞ்சம் ஏதுவா யிருக்குமென்பதற்கு ஐயமில்லை.

தொந்தரவு செய்யக்கூடிய பூச்சிகளில் சாதாரணமானவைகள் பின்வருபவன:—

(i) செடிப்பேன் அல்லது அசுவணி:—இவை இயற்கையாய் எல்லாவித மரம் செடிகளிலும் இருப்பவை. சாதாரணமாய் செடியினது துளிர்களிலும், கொம்புகளிலும், கொழுந்து இலைகளிலும், மொக்கு, பூ முதலானவற்றிலும் கூட்டம் கூட்டமாய்க் காணலாம். அவைகள் உறுஞ்சும் பூச்சிகள். ஆனதினாலே மிருதுவான இடங்களிலிருந்து செடியின் சாரத்தை உறுஞ்சுகிறது. ஒரு செடியில் அதிகமாய் இப்பூச்சிகள் காணும்பொழுது இலைத்துளிர்களும், மொக்குகளும் அதிக நஷ்டத்தையடைகின்றன. இலைகளும் சுருங்கி, துளிர்விடுவதும் நின்று பூச்சியினால் பீடிக்கப்பட்ட பாகங்கள் கொஞ்சம் கொஞ்சமாகக் காய்ந்து கடைசியில் செடியே பட்டுப்போகின்றது.

சற்றுநேரம் இந்தச் செடிப்பேனை உற்றுப் பார்ப்போமாகில் அதற்கு 6 கால்களும் 2 மீசைகளும் தலையின் அடிப்பாகத்தில் ஊசி போன்ற ஒரு ஆயுதத்தையும் காணலாம்.

இதைத்தவிர அதன் உடலின் பின்பாகத்தில் ஒவ்வொரு பாகத்திலும் ஊசிபோன்ற சிறு குழாய்களுண்டு. இவைகளுக்குத் தேன் துவாரங்களென்று பெயர். பூச்சியானது இத் துவாரங்களினின்று தேன்போன்ற மதுரமான சாற்றை வெளியாக்குகிறது. இது காரணத்தால் எறும்புகள் அவ்விடங்களை அதிகமாய் நாடி வரும். எறும்புகள் விளையும் பயிர்களுக்குக் கெடுதி விளைவிப்பது மிக்க அபூர்வம். எறும்புகள் அதிகமாய்ச் செடிகளின் பேரில் காணப்படும்போது அவைகள் செடிப்பேன் அல்லது அசுவணியைத் தேடித்திரிகிறதென்று நிதானிக்கலாம். செடிப்பேன் கூட்டத்தின் பெரும்பான்மைக்கு இறகுகள் கிடையாது. ஆனால் மெதுவாய் ஊரும் சக்தியுடையது.

மொச்சைச் செடி சாதாரணமாய் இப்பேனினால் அதிகமாய் பீடிக்கப்படும் செடிகளிலொன்று. ஆயிரக் கணக்கான பேன்கள் இளஞ்செடிகளையும் துளிர்களையும் பூக்களையும் முற்றிலும் மூடியிருப்பதை அடிக்கடி காணலாம். இப்பூச்சியினால் சாதாரணமாய் பீடிக்கப்படக்கூடியசெடிகளாவன:—

பருத்தி, புகையிலை, கத்தரி, முட்டைகோஸ், முள்ளங்கி, அகத்தி முதலானவை.

(ii) மாப்போன்ற பூச்சி:—செடிப்பேனைப்போல இவைகளும் செடியின் சாரத்தை உறுஞ்சும் பூச்சிகள். ஆனால் அவைகள் வடிவத்தில் வித்தியாசமானவை. இவைகள் மிருதுவான தேகத்தோடு கூடியதும் ஒருவித பட்டுபோன்ற தூளினால் மூடப்பட்டுமிருக்கும். சில பிராணிகளில் இப்பட்டுடை மிகுதியாயும் இன்னும் சிலவற்றில் குறைவாயும் மற்றவைகளில் அந்த ஜந்துவின் உடம்பிலிருந்து கிளம்பும் அநேகமான சிற்சில முளைகளாய் காணப்படும்படியாயும் அப்பட்டுடையினால் மூடப்பட்டுள்ளது.

ஆனதுகொண்டு இப் பூச்சிக்கு மாப்பூச்சி என்று பெயர். இந்தப் பூச்சியின் ஒருமாதிரி, சாதாரணமாய் பூச்செடிகள் ரோஜா இன்னும் மற்ற தோட்டத்தின் செடிகளிலும் வெள்ளை வெள்ளையாய் புலப்படும் அநேக ரகங்கள் நிறைந்துள்ள இப்பூச்சிகள் பருத்தி, கத்தரி, மா, கரும்பு அன்னாசி தக்காளி முதலியவற்றில் அதிகமாய்க் காணலாம்.

(iii) செதிள் பூச்சி—பழக்க வழக்கங்களில் இப்பூச்சிகள் மேற்கூறிய இரண்டு பூச்சினங்களைப்போல உறுஞ்சுகின்றவர்களேயாயினும் பார்வையில் அவைகள் ஜீவனில்லாதவைப் போலத் தோன்றும். இப்பூச்சிகள் தங்கள் பிராயத்தில் செடிகளில் ஒட்டப்பட்டிருக்கின்றன. அவைகளில் பெரும்பான்மை சிலாம்புபோலக் காணப்பட்டு செடியின்மேல் மூடப்பட்டிருக்கும். அவைகள் இளந்துளிர்களையும், மரக்கிளைகளையும், நடு மரத்தையும் நாசம் பண்ணும். இவ்விதப் பூச்சினால் பழவிருக்ஷங்களும், காப்பி, தேயிலைபோன்ற பயிர்களும் மிச்சமாய் சேதமடைவதுண்டு. இப்பூச்சினத்தில் அதிகமாய் அறியப்பட்டவை காப்பிச் செடியில் விழும் தவிட்டு நிறமுள்ள பூச்சியும், பச்சைவர்ணமுள்ள பூச்சிகளுமே. இன்னும் மற்றவை கொய்யா, வேம்பு, கருவேல், மா மற்றும் பல சாதாரண மரங்களிலுங் காணப்படும்.

இந்தப் பூச்சிகளெல்லாம் ஏராளமாயும் அதிசீக்ரமாயும் பெருகக்கூடிய சக்தியுடையது. ஆனதுபற்றி அவைகளை முதலிலேயே, பெருகவிடாமல் தடுக்கவேண்டும். இல்லாவிடில் அவைகள் ஏராளமாய் நஷ்டத்தை விளைவிக்கக் கூடியன. அந்த நஷ்டத்தைத் தடுப்பதற்கு பின்வருவதும் எளிதில் வீட்டில் செய்யக்கூடியதுமான ஔஷதமுறைகள் அதிக அநுகூலமானவை;

சீமை எண்ணை ஔஷதம்:—இதைச் செய்யும் முறை 1 அல்லது $1\frac{1}{2}$ பவுன் சாதாரண மட்ட சவுக்காரத்தை $2\frac{1}{2}$ படி (பட்டணம் படி) தண்ணீரில் கரைத்து அடுப்பேற்றி நன்ருய் கொதிவந்தவுடன் அடுப்பிலிருந்து எடுத்துவிட்டு கொஞ்சம் கொஞ்சமாய் 5 படி சீமை எண்ணையை அதில் விட்டுக்கொண்டே ஒரு குச்சியினல் முழுவதும் வெள்ளையாகும் வரையிலும் கலக்கவேண்டியது. இப்படி செய்த இந்த மருந்தை, உறுஞ்சும் பூச்சிகளை நாசம்பண்ண செடிகளில் பிரயோகிக்கும்போது 150 படி தண்ணீர் கலக்கி உபயோகிக்க வேண்டியது. மருந்தை கொஞ்சம் ஜலம் விட்டோ, அல்லது அதிகம் ஜலம்விட்டோ, சந்தர்ப்பத்திற்கு தகுந்தாற்போல் உபயோகிக்கலாம். உப்பு ஜலமாயிருந்தால் சவுக்காரம் எளிதில் கரையாது. அதிக சவுக்காரம் தேவையாயிருக்கும். இந்த மருந்து அசுவுணி செடிப்பேன் முதலிய மிருதுவான தேகத்தோடு கூடிய பூச்சிகளை நாசம்பண்ண 150 அல்லது 175 படி தண்ணீரில் கலக்கி நல்ல பலன் உண்டாகும்படி உபயோகிக்கலாம். கெட்டியான தேகமுடைய பூச்சிகளுக்கும் இலைகளின் சிறு தத்துப்பூச்சிகளுக்கும் அதிக காரமாக இம்மருந்தை உபயோகிக்க வேண்டும். அதாவது 75 அல்லது 100 படி தண்ணீர் மாத்திரமே விட்டுக் கலக்க வேண்டும். இம்மருந்து எலிப் புழுவுக்கும் கால் நடைகளின் சிரங்கு முதலான பூச்சி சம்பந்தமான வியாதிகளுக்கும் உபயோகிக்கலாம்.

புகையிலை மருந்து:—இதைச் செய்யும் முறை 1 பவுன் புகையிலையை (கவைக்குதவாத புகையிலைத் தூளும் தண்டும் போதுமானது) $2\frac{1}{2}$ படி தண்ணீர் போட்டு அரைமணி நேரம் காய்ச்சி இறக்கிவைத்துக்கொள்ளலாம். அல்லது காய்ச்சாமல் ஒரு நாள் முழுவதும் புகையிலையை ஊறவைத்து சாற்றை எடுத்து வைத்துக்கொள்ளலாம். இதில் கால் பவுன் சவுக்காரத்தைப் போட்டுக் கரைக்கவும். இப்படி செய்த மருந்தை செடிகளின் பேரில் பிரயோகம் செய்யுமுன் 6 அல்லது 7 மடங்கு தண்ணீரில் கலக்கவும். இம்மருந்து சீமை எண்ணை நாற்றம் பிடியாதபடி அசுவுணி மாப்பூச்சி இவைகளை போக்கடிக்கவேண்டிய தருணங்களில் அதி உபயோகமானது. அதாவது கீரை முதலிய இலைகளில் சீமை எண்ணையை உபயோகித்தால் சாப்பிட முடியாது. அவ்வித தருணங்களில் இம்மருந்தை உபயோகப்படுத்தலாம். புகையிலைச்செடி செடிப் பேனினல் பீடிக்கப்படும் போதும் இதை உபயோகிக்கலாம். (தொடரும்.)

கற்பகம்.

PART IV.

HINDU LAW.

ஹிந்துலா.

(49-ம் பக்கத்தொடர்ச்சி.)

கே.—ஜீவனும்சம் கேழ்க்கிற விதவையிட மிருக்கும் ஸ்திரீதனம் வகையரு சொத்துக்கள் வரும்படி கொடுக்கக்கூடாத ஆடை ஆபரணதிகளாகவும், பண்டங்களாகவு மிருந்தால் அப்படிப்பட்டவைகளை ஜீவனும்சத்திலிருந்து கழிப்பதுண்டா?

ஜ.—அப்பேர்ப்பட்டவைகளை ஜீவனும்சத்திலிருந்து கழிப்பதில்லை. (2. பம்ஹை. கோ. ரி. 341; 2-பம். ஹை. ரி. 584.)

கே.—ஜீவனும்சம் கொடுக்கக் கடமைப்பட்ட ஒருவன் ஜீவனும்சத்தை மோசம் செய்யவேண்டுமென்ற நோக்கத்துடன் யாதொரு நியாயமுமின்றி அக்கிரமமாய் சொத்தை அழித்தால் ஜீவனும்சத் தொகை குறைந்துபோமா?

ஜ.—ஜீவனும்சத் தொகை குறைக்கப்படமாட்டாது. (இ. லா. ரி. 8. மது 94; இ. லா. ரி. 24. பம். 386.)

கே.—ஜீவனும்சம் பெறும் பாத்தியதையை யுடைய ஒரு விதவை அவள் புருஷன் வீட்டிலேயே வசிக்கவேண்டுமென்ற கட்டாயமா?

ஜ.—அப்படி வசிக்கவேண்டுமென்பது கட்டாயமில்லை. அதற்கு அடியில் கண்ட காரணங்களே நியாயம். பாலியத்தில் புருஷனை இழக்கிற இளம் விதவைகளுக்கு புருஷன் வீட்டி லிருப்பதைவிட பிறந்தவீட்டிலிருப்பதே மிக்க சௌகரியமாக யிருக்கும், புருஷன் இறந்தபின் அவனுடைய பாகஸ்தர்களுடன் வசிப்பது ஸங்கோஜமாயும் நிர்ப்பந்தமாயு மிருக்கும். ஆகையால் அவ்விதவைகள் புருஷன் வீட்டில் வசிக்காமல் வேறு இடங்களில் வசித்தாலும் ஜீவனும்சம் பெறும் பாத்தியத்தை அவர்கள் இழந்துவிட மாட்டார்கள்.

கே.—ஒரு விதவையானவள் புருஷன் வீட்டில் வசித்தால்தான் ஜீவனும்சம் பெறும் பாத்தியதை அவளுக்கு உண்டென்றும் அப்படி அவள் வசிக்காத பக்ஷத்தில் அவளுக்கு ஜீவனும்சம் பாத்தியதையே கிடைக்காதென்றதும் யேர்ப்படக்கூடிய கேசும் உண்டா?

ஜ.—பின்வருமாறு ஏற்படக்கூடிய கேசுகளும் உண்டு. ஒருவன் தன் பெண் சாதி யானவள் தன் குடும்பத்தாருடன் (அதாவது புருஷனுடைய குடும்பத்தாருடன்) புருஷன் வீட்டில் வசித்தால் மட்டும் ஜீவனும்சத்தைப் பெறுவாளென்ற நிபந்தனையை ஒரு புருஷன் இறந்துபோவதற்கு முன் உயில் முதலிய சாஸனங்களால் யேர்ப்படுத்தி வைத்திருந்தால் அப்போது அவனுடைய விதவை அன்னிபந்தனைப்படி நடக்க வேண்டியவளாகிறாள். அதை மீறி வேறு இடங்களில் குடியிருந்தால் அவளுக்கு யாதொரு ஜீவனும்சமும் கொடுக்கவேண்டிய நியாயமில்லை. (இ. லா. ரி. 15. பம். 236.)

கே.—ஜீவனும்சம் பெறப் பாத்தியதை உள்ள ஒரு விதவை தான் புருஷனுடைய குடும்பத்தார் வீட்டிலேயே வசிக்கவும் அதை விட்டுப் போக மனமில்லாதவளாகவும் இருக்கிறாள். அவளை அப்புறப்படுத்த அவளுடைய புருஷனைச் சேர்ந்தவர்களுக்கு அதிகாரமுண்டா?

ஜ.—ஒரு விதவையானவள், ஜீவனும்சப் பாத்தியத்தைத் தவிர தன் புருஷனுடைய குடும்ப வீட்டிலேயே குடியிருந்து கொள்ளும்படியான பாத்தியத்தையும் உடையவளாயிருக்கிறாள். ஆனதால், அவளுடைய கொழுணன், மகன் முதலானவர்களுக்காவது அவர்களிடமிருந்து சொத்தை விகியோகம் பெறுகிற அன்னியருக்காவது, ஷை சொத்துகளைக் கோர்ட்டு ஏலத்தில் எடுத்தவர்களுக்காவது அவளை குடும்ப வீட்டிலிருந்து அப்புறப்படுத்த அதிகாரமில்லை. (இ. அ. 262; இ. லா. ரி. 7. பம். 282; இ. லா. ரி. 6. பது. 130.)

PART V.

CO-OPERATION.

கூட்டுறவு.

(52-ம் பக்கத் தொடர்ச்சி.)

அய்யாவய்யர்.—இப்போது அவன் ரூ. 5,000-க்கு நிலம் வாங்கி இருக்கிறான் என்று கேள்வி, எப்பவோ கேஸில் அகப்பட்டுக்கொண்டால் நமக்கென்ன? Inspector ஐ கேட்போம், ஏன் ஐயா இவனை சேர்த்துக் கொள்ளலாமா?

இன்ஸ்பெக்டர்.—ஐக்கிய நாணய சங்கங்களில் character மெம்பர்களுக்கு முக்கியம். நல்லகுணம் அவசியமானது. யோக்கியனும், கண்ணியமுள்ளவனும் இருப்பவனையும், நாணயமுள்ளவனையும் மட்டுமே தான் சங்கங்களில் சேர்த்துக்கொள்ளவேண்டும். கிரிமினல் கேஸ்களில் தண்டனைப்பட்டவனையும், பொய், புரட்டு சொல்பவனையும் சேர்த்துக் கொள்ளக்கூடாது. நாணயம் மிகவும் முக்கியமே ஒழிய ஐவேஜி முக்கியமாகாது. ஒருவனிடம் ரூ. 10,000 ஐவேஜி இருக்கலாம், நாணயமிராது, வேறொருவனிடம் ஐவேஜி சுவல்பமாய் இருக்கலாம், நாணயம் இருக்கும். இவன் சங்கத்திற்கு நல்ல மெம்பர்.

இராமஸ்வாமி.—இவன் மனுவை தள்ளிவிடுவோம், கிரிமினல் கேஸில் தண்டனைப்பட்டிருக்கிறான், இவன் சங்கத்தில் மெம்பராயிருக்க லாயக்கில்லை என்று கண்டெழுதிவிடுங்கள்.

காரியதரிசி.—அப்படி செய்வதில் ஆக்ஷேபனையில்லை. அப்படியே செய்துவிடலாம்.

செட்டியார்.—இன்னம் என்ன நிரம்ப வேலை யிருக்கோ, நாழிகையாயிற்றே.

காரியதரிசி.—இன்று வேலை அதிகமிருக்கு, இன்னம் அரைமணி யாகும், சமீபத்தில் இறந்துபோன மகாதேவய்யர் சம்சாரம் மங்களத்தம்மாள் ரூ. 200 டிபாஸிட் செய்வதாயும், வட்டி தனக்கு ஸ்பெஷல் கேஸாக மாதமாதம் வேண்டுமென்றும் எழுதியிருக்கிறார்கள்.

இராமஸ்வாமி.—வட்டி மாதமாதம் கொடுக்கலாமா?—மூன்று மாதத்திற்கு ஒருமுறை கொடுப்போமே.

செட்டியார்.—அந்த அம்மாள் நம்பி நம்மிடம் டிபாஸிட் செய்யவருவது மிக்க ஆச்சரியமானது. இதுசமயம், தவரவிடக்கூடாது. வட்டி மாத மாதம் கொடுக்கலாம்.

வேம்புவய்யர்.—அப்படியே செய்யலாம். டிபாஸிட்கள்தான் அதிகம் சேர்க்கவேண்டும்.

இன்ஸ்பெக்டர்.—அதுதான் அவசியம். டிபாஸிட் சேரச்சேரத்தான் சங்கம் நல்ல சங்கம் என்று சொல்லப்படும். எச்சங்கங்கள் ஸென்டிரல் பாங்கியிலிருந்து அதிகக் கடன் வாங்காமல் உள்ளூரிலேயே டிபாஸிட் வாங்குகிறதோ அவைகளைத்தான் முதல் கிளாஸ் சங்கம் என்று சொல்வார்கள்.

காரியதரிசி.—அதுதான் Sir சொல்லிக்கொண்டிருக்கிறேன். செட்டியார் மனது வைக்கால் டிபாஸிட் அதிகம் கிடைக்கும்.

இன்ஸ்பெக்டர்.—செட்டியாரே! நீங்கள்தான் இச்சங்கத்தை நல்ல அபிவிருத்திக்கு கொண்டுவரவேண்டும், டிபாஸிட்கள் சேர்க்கவேண்டும்.

செட்டியார்.—அதற்குத்தான் சிரமப்படுகிறேன், சொன்னால் ஜனங்களுக்கு எங்கே தெரிகிறது, தாசில்தார் எஜமான் கொஞ்சம் ஜாடையாய்ச் சொன்னால் கேட்பார்கள். என்னமோ மாட்டேன் என்கிறார். அந்த நாளில் தாசில்தார் என்றால் கிடுகிடென்று நடுங்குவார்கள். இந்த நாளில் மதிப்பே போய்விட்டது. எல்லாம் ரூலும் சட்டமும்தான்.

இன்ஸ்பெக்டர்.—அது கிடக்கிறது, தாசில்தார் உதவி அவசியமில்லை, நீங்கள் ஏதாவது டிபாஸிட் செய்திருக்கிறீர்களா?

காரியதரிசி.—அதுதான் அவாளை வெகுநாளாய் கேட்டுக்கொண்டிருக்கிறேன். இதோ அதோ என்று சொல்லுகிறார்கள். வெள்ளனூர் சங்கம் ரிஜிஸ்தரான அன்று ஆண்டியப்பனம்பலகாரன் ரூ. 500 அரை வட்டிக்கு டிபாஸிட் செய்திருக்கிறான்.

செட்டியார்.—நான் பணம் வந்தவுடன் ரூ. 300 டிபாஸிட் தருகிறேன், காரியதரிசி விடமாட்டார்போல் இருக்கு.

காரியதரிசி.—இன்னம் கடன் மனுக்கள் ஏராளமாயிருக்கின்றன. பணம் கையில் இல்லை. அதற்காக டவுன் பாங்கியிலிருந்து ரூ. 1,5000 கடன் வாங்கினால் நல்லது. அதற்காக மனு தயார்செய்துவைத்திருக்கிறேன்.

(இன்னும் வரும்.)

PART VI.

EDUCATION.

கல்வி.

HOW TO SPEND LEISURE HOURS.

By Mr. D. S. Nesamani.

விடுதிப் பொழுதைக் கழிக்கும் ஆறு.

[" சுறுசுறுப்புடைய ஒரு சிறு தேனீ, ஒளிரும் ஒவ்வொரு மணி நேரத்தையும் ஸப்ரயோகஞ்செய்து, அலர்ந்த ஒவ்வொரு புஷ்பத்தினின்றும் எப்படி தேன் சேர்க்கின்றது! நானும், உழைப்பதிலும், சாதுர்ய

வேலை செய்வதிலும் சுறுசுறுப்புடையவனா யிருப்பேன்; ஏனெனில், வேலை வெறுக்குங் கரங்களுக்குக் கலிபுருஷன் ஆராய்ந்து தீங்கைக் கண்டுபிடித்துக் கொடுத்துதவுகிறான். (நான் ஜீவித்த) ஒவ்வொரு நாளைப்பற்றியும் கடைசிக் காலத்தில் நான் நற்சரித்திரத்தைக் கொடுக்கக்கூடியவனாகும்படி என் முதற் பர்வம் நூற்பயிற்சியில் அல்லது நற்கருமம் புரிவதில் அல்லது ஸ்வஸ்த விநோத விளையாட்டில் கழிவதாக.' உவாட்ஸ்]

நாம் வஸிக்கும் இந்நூற்றாண்டு நாளுக்கு நாள் கல்வியறிவு முதிரப் பெறுங் காலம். இது மநுஷ்யர் தம் கைக்கு எவ்வெவை கிட்டுகின்றனவோ அவ்வவற்றினின்று நன்மைபெற முயலுங்காலம்; தம்மை நோக்குபவர் மநஸ்ஸை ரம்யப்படுத்தி, வேதநாயகனது இருப்பைக் கூறறிஞருக்கு உணர்த்தவே யல்லாமல் வேறெதற்கும் உதவாதனபோல் தோன்றும் நீர்வீழ்ச்சிகளினின்றும் மநுஷ்யர் மின்ஸாரத்தை உத்பத்தியாக்கி, பெருநகரங்களுக்கு ஒளியுதவி, வண்டித்தொடர்களை இருப்புப் பாதைகளின் மீது எளிதில் துரிதமாய்ச் செலுத்தி, பல தொழிற்சாலைகளின் யந்த்ரங்களை இயக்கிக் களிக்கும் காலம். ப்ராணனை உடலினின்று பிரிக்கும் மஹாமாரியைப் பரவச்செய்து, என்றும் தொந்தரையே தருவனவென்று எண்ணப்படுவதனால் கொல்லப்படும் எலிகளையும் மானிடர் போஷித்து, அவற்றைக்கொண்டு நிலக்கரிக் குழிகளின் யந்த்ரங்களின் சக்கரங்களைச் சுழற்றிக் கொள்ளுங் காலம் இது. எனவே, இது, ஆறறிவினர் தம்மாலியன்றவரை தம்பாலுள்ளவற்றைப் பயன்படுத்திக்கொள்ளும் காலம்,

மற்றும், இது, மநுஷ்யர் தேற்றமடையுங் காலம். நாம் நம் மூதாதையர்களினும் சில துறைகளில் சற்றேனும் தேர்ச்சியடைந்துள்ளோம்; நடையுடைபாவனைகளில் இக்காலத்திற்கு ஏற்ற கோலந்தரித்து மகிழ்கின்றோம். தம் பெயரும் எழுதத் தெரியாதவர்களின் தொகை, சில பத்து வர்ஷங்களுக்கு முன்னிருந்ததைவிடத் தற்காலத்தில் குறைந்ததே. சுருங்கச்சொன்னால், உண்மையாகவே, இது, நாம் வ்ருத்தியடைய ப்ரயாஸப்படுங் காலம்.

ஆம்: நாம் பலதுறைகளில் தேர்ச்சியடைந்திருக்கிறோம்; ஆனால், நம் காலத்தை ஆதாயப்படுத்திக்கொள்ளும் வித்தையில் தேர்ந்திருக்கிறோமா? விசேஷமாக, நாம் நந்தொழிற்சாலைகளினின்று வெளிப்பட்டபின், நமக்குள்ள விடுதிப்பொழுதை நாம் ஸரியாக ப்ரயோகிக்கிறோமா?

'விடுதிப்பொழுது' என்னுந் தொடர்மொழியால், நாம், மநுஷ்யர் வேலையொழிந்து ஓய்ந்திருக்கும் நேரத்தைக் குறித்தோமாதலால், இக்கேள்வி அநாவச்யமானது என்று பலர் கருதல் அறியாமையின்பாற்படும்

என்பது நிச்சயம்; ஏனெனில், இது காலத்தைப்பற்றியது; சுிலம் நம மாயுளே.

"மனிதர்க்கு வயது நூறல்ல தில்லை;
ஐம்ப(து) இரவில் அகலும் துயிலினால்;
ஒட்டிய இளமையால் ஒரைந்து நீங்கும்;
ஆக்கை இளமையில் ஐம்மூன்று நீங்கும்;
எழுபது போக நீக்கிருப்பன மூப்பதே."

என்பதனால் நாம் விடுதிப்பொழுதின் பெறுமதி உள்ளங்கையிற் பொருந்திய நெல்லிக்கனிபோல் தெற்றென விளங்கும். (ஒரு மநுஷ்யன் ப்ரதி தினமும் இரண்டுமணி நேரமட்டும் ஓய்ந்திருக்கக் கூடுமானால், அவன் தன் வாணாளான எண்பது வர்ஷங்களில் $6\frac{2}{3}$ வர்ஷம் ஓய்ந்திருக்கலாம். இவ் வோய்வு காலம் அவனுண்மையாயுளில் நான்கிலொரு பாகத்திற்கு மேற் படுகின்றது!) "ப்ரெஞ்சு மொழியில் 'எனக்கு நீ ஒருவனைக் குறித்து அவனது நண்பர் இன்னாரென்று தெரிவி; அவன் எத்தகையன் என்று நான் உனக்குத் தெரிவிப்பேன்' என்பது ஒரு முதுமொழி. அவ்வண்ணமே, நாம், ஒரு மநுஷ்யன் தன் விடுதிப்பொழுதை எவ்வாறு செலவிடுகிறானென்று எனக்கறிவி அப்பொழுது நான் உனக்கு அவன் எப்படிப் பட்டவன் என்று சொல்லிவிடுவேன் என்று கூறலாம்" என்று ஒரு ஆங்கில வ்யாசத்திரட்டுக்கர்த்தா கூறுகிறார். இவர் கூற்று முற்றுமுண்மையே; ஏனெனில், பாடசாலையிலும், தொழிற்சாலையிலும், ஜநஸமூஹத்திலும், ஒருவன் தன்னடையைக் காத்துக்கொள்ளலாம்; ஆனால் அவனது குணசீலத்தை நிஜநிஜமாக வெளிப்படுத்துவது அவன் தன் விடுதிப்பொழுதைக் கையாளும் விதமே. இதனால், அவன்தான் ஸ்வாதீனனோ அல்லனோ எனத் தன்னைப் பிறர்க்கு ஸூசிப்பிக்கின்றான். ஒருவன் இப்பூதவுடம்பை நீத்தபின் அவனுக்கு நேரிடுவது இன்னதென்று எவரேனும் அறிய வேண்டுமாயின், அவன் தன் னொழிவுப் பொழுதைக் கழிக்குமாற்றைக் கவனிக்கவேண்டும். ஆதலின், விடுதிப்பொழுதின் திறம் இவ்வளவவ்வளவு என்று கூறல் தரமன்று. ஒழிவு நேரங்கள் மிக வருமையானவை; அவை ஜாஜ்வல்யமாய் ப்ரகாசிக்கும் விலையுயர்ந்த ரத்நங்களினும் மிகவருமையானவை.

ஒருவன் ஓய்வுநேரத்தில் ஓய்ந்திருக்கவேண்டு மென்றறிவார் பலர், ஏன்றாலும், ஓய்ந்திருத்தல் என்பது இப்படியிருத்தல் என்றறிவார் சிலர்; 'ஒருவேலையுமின்றி ஓரிடத்தில் உட்கார்ந்து வீண் காலக்ஷேபஞ் செய்தல்' என்றெண்ணுவார் எண்ணிறந்தோர். ஆனால், மநஸ்தத்வ சாஸ்த்ரப்படி ஓய்ந்திருத்தலாவது, மநஸிற்கு ஆயாஸந்தரும். தினச்சரிச் செய்தொழிலுக்கு மாறாக மநஸிற்கு இனிய ஒரு தொழிற் செய்தலேயாம்; ஒருவன்

தான் நெடுநேரம் வருந்திச் செய்துகொண்டிருந்த தொழிலை விட்டு, அவ் வேலையினின்று வித்யாஸமான ஒரு தொழிலை மேற்கொள்ளுதலே ஓய்ந்திருத்தல். பகலிற் பெரும்பாகம் கல்விக் கழகத்திற் கல்வி கற்பதிற் செலவிட்டுச் சேர்ந்திருக்கும் மாணவர் தேஹாப்யாஸஞ் செய்யின் ஓய்ந்திருப்பார்கள். வெய்யோன் காய்ந்து கொல்லும் பகற்பொழுதெல்லாம் தம் மெய்வருந்த உழைத்துக் களைத்த ஒரு உழைப்பாளி, சில நீதிநூல்களை வாசித்து ஓய்ந்திருக்கலாம். 'ஓய்வு' என்னும் மொழியை இவ்வாறேயன்றி வேறெங்ஙனம் அர்த்தப்படுத்தலாம்? ஒருவன் ஓய்ந்திருக்கவேண்டுமானால், தன்மநஸை அரிக்குங் கவலை முதலியனவற்றை மாற்றவல்ல ஒரு மார்க்கத்தில் தன் மநஸைச் செலுத்தவேண்டும். அத்தகைய நெறி எது? ஒருவன் தன் னவயவங்களைச் சிறிது சிரமத்துடன் பந்திக்கலாம். ஆனால், தம் மநஸை ஒருவித எண்ணமுமெண்ணாமல் பந்திக்கவல்லவர் நூற்றுவரில் எத்தனைபேர்? 'வேலை வெறுப்பு, உயிருடனிருக்கும் மநுஷ்யனது ப்ரேத வறை' என ஷேக்ஸ்பியரென்னும் ஆங்கில நாடககவி புகன்றார்.

(கண்புதைந்த மாந்தர்)..

"உண்பது நாழி; உடுப்பது நான்குமுழம்;
எண்பது கோடிநினைந் தெண்ணுவன"

எனப் பெரியோரும் விளம்பினரே!

அமெரிக்கக் கவிஞரொருவர், "மேதாவிகளின் ஜீவ்ய சரித்ரங்கள், நாம் மாண்புடன் ஜீவிக்கலாம் என்னும் ஸத்யத்தை நமக்கு ஞாபகப் படுத்துகின்றன. அவர்கள் தம்பின் நாமும் தொடர்ந்து செல்லுமாறு, காலமாகிய மணற்பாதையில் நமக்குத் தோன்றும்படி, தம் காலடிச் சுவடுகளைப் பதிப்பித்துச் செல்கின்றனர்" என்று பணித்தார் இவ்வுரையைப் பெயர்ப்பிக்க வல்லார் எவருமில்லையென்று கூறலாம். மேனாட்டு வெள்ளையராலுமென்? கீழ் நாட்டு இந்தியராலுமென்? மநுஷ்யர் தோற்றத்திலும், மதவிஷயத்திலும், நாகரிகத்திலும் வேறுபட்டாலும், மனவமைப்பில் ஒரு தன்மையரே. ஆதலின், நாம், மேனாட்டு மேதாவிகளான சிலர் அறிஞரான மார்க்கம் எதுவென்று விசாரித்தல் பயன்றரும். நாம் மேதாவிகளென்று இன்றழைக்கும் சிலர் அறிஞரான வழி எதுவெனில், தம் விடுதிப்பொழுதைத் தக்க முறையில் ஸரிவர ப்ரயோகித்ததேயாம். இன்னணங் கூறியதனால், நாமொவ்வொருவரும் ஜகத் ப்ரஸித்திபெற்ற நிபுணராவோமென்று நாம் உறுதிவாக்குரைத்தோமில்லை. இப்பூமி அழியாதிருக்குமளவும் மநுஷ்யர்க்குள்ளும் ஏற்றத் தாழ்வு இருந்தேதீரும். எவ்விதத்திலும் தமக்குள் வேற்றுமையில்லாது மநுஷ்யரனைவரும் இவ்வவனிமிசை என்றேனும் வாழ்வாரானால், அன்று மோக்ஷவின்பத்தை ஒருவாறாய் இங்கேயே மானிடர் நுகர்ந்திட்டார் என்று கூறல் மிகையாகாது.

எனவே, நாம் முன்னேற்ற மடையவேண்டுமென்பதையே நாம் வற்புறுத்தியவாறு. ஒவ்வொரு மநுஷ்யனிடத்திலும் சில அருஞ்சக்திகள் உள. அவற்றை அவனவன் வ்ருத்திசெய்யவேண்டும். அவற்றை வ்ருத்திசெய்து ப்ரயோகியாதிருத்தல் தவறாகும். எனவே, இனிவரும் பத்திகளில், ஸாமாந்யர் பலர் தம் விடுதிநேரங்களை எவ்வெத்துறைகளில் செலவிட்டுப் பயனடைந்தார் என்று காட்டுவோம்.

இதன்முன், நாம் வ்ருத்தியடைய வேண்டியதேன்! என்று முதலில் ஆராயவேண்டும்: பெரும்பாலும், அவச்யம் ஏற்பட்டாலொழிய அக்கரை ஏற்படுவதில்லை; ஒரு வஸ்து அல்லது விஷயத்தின் அருமை பெருமை விளங்குவதுமில்லை. நாம் ஏன் வ்ருத்தியடையவேண்டும்?—இவ்வினாவிற்குப் பல விடைகள் அளிக்கலாமெனினும், முக்யமான நான்கு காரணங்களைச் சுருக்கமாய்க் கவனிப்போம். முதலாவதாக: 'யாக்கையை யாப்புடைத்தாப்பெற்ற' நாம் ஸுகமாகவும் இன்பமாகவும் நம்மாலியன்றவரை வாழ்ந்திருக்கவேண்டுமானால், நாம் வ்ருத்தியடையவேண்டும். தம்மிடத்தில் அன்பில்லாதார் எவர்? இரண்டாவதாக: பிறர் இன்புடனிருக்க. தான் இன்புடனிருக்கவேண்டில், பிறரும் இன்புடனிருக்கவேண்டும். மூன்றாவதாக: நம்மைக் கவனித்துப் பிறர் நெறி வழுவாது வாழுமாறு நாம் முன்னேற்ற மடையவேண்டும். பெரும்பாலும், மநுஷ்யர் ஒருவரையொருவர் கவனித்து நடக்கின்றனரேயன்றி, தாமே சிந்தித்து நடப்பதில்லை. நம்மைக் கெடுத்துக்கொள்ள நமக்கே அதிகாரமில்லையாக, பிறர் கேட்டுக்குக் காரணராகலாமா? இறுதியாக: நம் முன்னோரிடத்திலிருந்து பல நன்மைகளை அநுபவிக்கும் நாம், நம்பின்னோர்க்குச் சிறிது நன்மையேனும் தராது மறைதல் புன்மையன்றோ? "தக்கார்க்கு......மானமழியா ஒழுக்கத்தின் மிக்கதூஉமில்லைப் பழியாமல் வாழுந்திறம்." "உன்னிடத்தில் நீ அன்பு கூருமாறு பிறரிடத்தும் அன்புகூர்க" என்பது விவ்விய வேதம். "அன்புடையார் என்பும் உரியர் பிறர்க்கு" என்பது திருக்குறள். இத்யாதி காரணங்கள் பற்றி(யும், பிறகாரணங்கள்பற்றியும்) நாம் முன்னேற்றமடையவேண்டும்.

நிற்க, எவ்வெத்துறைகளில் நாம் வ்ருத்தியடையலாம்? இவ்வுலகில் ப்ரக்யாதிபெற்ற பெரியோர் பல சாஸ்த்ரங்களிலும் வ்யுத்பத்தியடைந்தார்கள். சிலர் வானசாஸ்த்ரத்திலும் சிலர் பூமிசாஸ்த்ரத்திலும், சிலர் தத்வசாஸ்த்ரத்திலும் சிற்சிலர் ஏனைய சில சாஸ்த்ரங்களிலும் வல்லுநரானார்கள். ஆனால், நாம் இச்சாஸ்த்ரப் பயிற்சியைத் தவிர்த்து எளிதிற்கொண்டு பெரிதும் பெருமை யடையக்கூடிய சில துறைகளையே கவனிப்பாம்.

தா. ஸு. நேசமணி.

PART VII.

NEWS AND NOTES.

ஸமாசாரக் குறிப்புகள்.

RANGOON RICE.

இரங்கூன் அரிசி.

ஐரோப்பிய யுத்தம் ஆரம்பமானது முதல் பொதுவாக வியாபாரம் மலினமடைந்தும், அதே காரணமாக ஒவ்வொரு பண்டத்து விலையும் உயர்ந்தும் போயிருப்பது உலகறிந்த சித்தாந்தம். பொதுவாகச் சொன்ன இவ்விஷயத்தை இன்னுஞ் சிறிது உள்ளாராய்ந்து கவனிப்போமானால், உலகத்தில் மானங் காத்து வஸிக்கவும், உஜ்ஜீவித்து வாழவும் இன்றியமையாதனவாயிருக்கும் ஊண், உடை ஆகிய இவ்விரண்டிற்கும் வந்திருக்கும் கிராக்கி செப்பத்தரமல்ல வென்றே எவருக்குந் தோன்றும். வஸ்திரமல்லாமல் வாழ்வதெங்ஙனம்? ஒரு ரூபா கொடுத்து வாங்கக்கூடிய வஸ்திரத்தை ஆறு ரூபா கொடுத்து வாங்குவதானால் அற்பக்கூலி பெற்று ஜீவனம் செய்யும் எளியோனால் இயலுமா? தினந்தோறும் நெற்றி வியர்வை நிலத்திற் சொரியக் காலை முதல் மாலை வரையில் கட்டை வண்டி இழுத்தோ, பாரமான மூட்டைகள் சுமந்தோ, ரிக்ஷா வண்டி யிழுத்தோ வேலை செய்து நாலணா அல்லது ஆறணா கூலி விகிதம் பெறும் வேலைக்காரன் மனைவியோடும் குஞ்சு குழந்தைகளோடும் சுபிக்ஷமாகக் காலந்தள்ளுவ தெப்படி? ஆடைப்பஞ்சம் அதிகரித்திருக்கு மித்தறுவாயில் உணவுப் பொருள்களுக்கான கிராக்கி பெரிதும் பலமாயிருக்கிறது. கால் வயிற்றுக்கஞ்சிக்குக்கூட மார்க்கமில்லாமல் ஏழை ஜனங்கள் மனம் வெதும்பி, முகம் வாடி, மெய் சோர்ந்து, கண்ணீர் சொரிந்து பிரலாபிக்கிறார்கள். இதே காரணத்தை யொட்டியே பற்பல விடங்களில் லூட்டிகள் நேர்ந்திருப்பதான தகவல்களும் கிடைத்தன. அனாவசியமான படாடோபங்களுக்காவது தற்புகழ்ச்சி, வீண்டம்பம் முதலியனவற்றிற்காவது மற்றும் நசுவரமான வெளிப்பகட்டை யொட்டிய நாகரிகத்தன்மைக்காவது ஜனங்கள் வேண்டவில்லை; ஜீவாதாரப்பொருளாகும் உண்பண்டங்களுக்காகவே அவர்கள் ஊடாடுவது; அப்பண்டங்களும் திருப்திகரமாகக் கிடைக்காமற் போமாயின் உலகத்தில் உயிர் வாழ்வ தெதற்காகவோ தெரியவில்லை. என்னே காலம்! என்னே உலகம்! என்னே வாழ்க்கை!

இவ்விதம் விரக்தியோடு நாம் குறிப்பிட்டதனால் நமது நண்பர்கள் ஆசங்கையுறவேண்டுவதில்லை. மரம் வைத்தவன் ஜலம் ஊற்றாமற் போகமாட்டான். "நின்று தளரா வளர்தெங்கு தாளுண்ட நீரைத் தலையாலே தான் தருதலால்" என்றபடி எப்படித் தென்னையானது சிறு கன்றாக இருந்தபோது ஜலம் ஊற்றப்பெற்று வளர்ந்து பின்னர் முதிர்ந்து பெரிதாகையில் அதே நீரை இளநீர் ரூபமாகத் தருவது போல எல்லாம் வல்லவனும் ஸர்வவியாபியுமான இறைவன் ஏழைகளின் வேண்டுகோட் கிரங்கி உஜ்ஜீவிப்புக் கவசியமான உண்பண்டங்களின், முக்கியமாக அரிசியின், விலையை, ஏழைகளும் தாங்குமாறு தணியும்படி செய்வாரென்பது திண்ணம். இந்தியாவில் அரிசிக்குக் குறைவு சிறிதுமில்லை. நன்செய் நிலங்கள் இருக்குமிடங்களிலெல்லாம் நெற்பயிர் மிகுதியே. அவ்வித மிருந்தபோதிலுங்கூட இந்திய மகா ஜனங்களுக்கு இக்காலத்தில் வேண்டியிருக்கும் அவசியமான அரிசி கிடைப்பது துர்லபமாயிருக்கிறது. அரிசி அதிகமாயிருக்கும் ரங்கூன் முதலான விடங்களிலிருந்தாவது அரிசியைத் தருவித்துத் தற்போதைய நிலைமையைச் சமனமாக்கலாகாதா வென்று பலர் கேட்கலாம்; என்றாலும் வேறு பல காரணங்களை யொட்டி வெளிகளிலிருந்து அரிசி வருவது சிரமமாகின்றது. போதுமான கப்பல்களில்லை; உள்ளூரிலேயே ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்குச் சரக்குகள் ஏற்றிச் செல்ல போதுமான ரெயில்வாகன்கள் கிடையா, வருத்தமறியா வியாபாரிகள் பலர் பொருளீட்டுதற்குத் தக்க சமயம் இதுவேயென மதித்துத் தாறுமாறாகத் தானியாதிகளின் விலையை யுயர்த்தி வட்டமிடுகிறார்கள்.

இப்படிப்பட்ட நிலைமையில் எளிய குடிகள் என்செய்வது? காருண்ய கவர்ன்மென்டார் கருணை காட்டினலொழியத் தீராது.

ஆயினும், சரக்குகளை ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்குக் கொண்டுபோவதற்கு வேண்டிய ஏற்றுமதி இறக்குமதி அனுகூலங்களைச் செய்வதாகக் கவர்ன்மென்டார் வாக்களித்திருக்கிறார்கள்.

ரங்கூனிலிருந்து சமீபத்தில் தந்திவர்த்தமான மொன்று வந்தது. அந்த வர்த்தமானத்தின்படி ரங்கூனிலிருந்து கல்கத்தாவுக்கு அரிசி ஏற்றுமதி செய்யக்கூடாதென்று விதித்திருக்கிறார்களாம். ஆயினும் சென்னைக்கு அனுப்புவதற்கு மாத்திரம் பர்மா அரிசி கமிஷனர் ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறாராம். பர்மாவிலிருந்து நம்மூருக்கு அரிசி கொண்டுவருவதற்காகச் சென்னையிலுள்ள பின்னி கம்பெனியார் தமது கப்பல்களுள் இரண்டினைக் கவர்ன்மென்டார் வசம் ஒப்புவிப்பதாகச் சொல்லியிருக்கிறார்களாம். பின்னி கம்பெனியாருடைய தயாளத்திற்கு மெச்சுகின்றோம். ஆனல் உணவுப்பொருள்களைக் கொண்டுவரும் விஷயத்தில் கப்பற்சாதனத்திற்காகப் பிச்சை புகுவது பரிதபிக்கத்தக்கதாக இருக்கின்றது. கவர்ன்மென்டார் இந்நிலைமைக்கு இழிவானேன்? இந்தியாவுக்கு அவசியமாகவேண்டிய கப்பல்களையும் அரிசியையும் கெட்டிப்படுத்தி வைத்துக்கொண்டு அதிகமாக வுள்ளதை மற்ற இடங்களுக்கு உபயோகிக்கக் கூடாதா? தனக்கு மிஞ்சித் தருமமே யல்லாமல் தன்னை வஞ்சித்துத் தருமமில்லை. பர்மாவிலிருந்து கீழ் நாடுகளுக்கு அரிசி ஏராளமாக ஏற்றுமதி யாவதைத் தடுத்து இந்தியாவுக்கு வேண்டிய அளவு வரும்படி செய்வது நமது கவர்ன்மென்டாருக்கு அஸாத்தியமா?

ரங்கூனிலிருந்து அரிசி வரவழைப்பதனல் சென்னை ஜனங்களின் ஏக்கம் ஒருவாறு மட்டுப்படும். ஆனல் இப்படிப்பட்ட முயற்சிகளினல் நீடித்த நன்மை உண்டாகுமோ? உண்மையில் நமது கஷ்டத்தை நிவர்த்திக்கவேண்டுமானல், என்ன செய்ய வேண்டும். இறக்குமதிக்கு வேண்டிய அனுகூலங்களைச் செய்வதன்றி, எடுகூலியைக் குறைக்கவேண்டும். எடுகூலியாவது, வண்டிச் சத்தம், ரெயில்வே சத்தம், கப்பற்கேவு, இன்ஷியூரென்சு கட்டணம், முதலியன வெல்லாம் சேர்ந்து ஓர் ஊரில் சரக்கு இறக்குமதி யாகுமளவும் பிடிக்கும் செலவு. அப்படி யில்லாமல், எடுகூலியானது இப்பொழுதுள்ளபடியே ஓங்கி நின்றால், இறக்குமதிச் சரக்கினல் ஊரிலுள்ள சரக்கு நிலுவை சற்று அதிகப்படுமேயல்லாமல், சரக்கின் விலை சிறிதும் குறைவுபடாது. இறக்குமதி வியாபாரிகள் அந்தச் சரக்குகளை மலிவாக விற்கமுடியாது. உதாரணமாக கல்கத்தாவிலிருந்து ஒருமூட்டை அரிசி ரெயில்மார்க்கமாகவாவது கப்பல் மார்க்கமாகவாவது சென்னைக்கு வந்து சேர பதின்மூன்று ரூபா அடக்கமானல், அந்த விலைக்கு அதிக மூட்டைகள் வந்து பயனென்ன? எடுகூலியைக் குறைப்பதற்கு வழி தேடுகிறவரையில் நல்ல அரிசி நம்மூரில் நாலுபடி விற்குமென்று எண்ணுவதற்கிடமேயில்லை. எடுகூலியைக் குறைப்பதற்கு எவரும் பிரயத்தனப்படுவதாகத் தெரியவுமில்லை.

சென்னை நகரத்துச் சௌகர்யங்களை மாத்திரம் கவனிப்பது போதாது. நமது மாகாணத்தின் உட்பிரதேசங்களிலும் அரிசிக் கஷ்டம் அதிக கஷ்டமாக இருக்கின்றது. அரிசியின் விலை, நாம் ஏற்கனவே எதிர்பார்த்துச் சொல்லியதுபோல, மறுபடி ஏறிவிட்டது. சென்னை நகரத்தில் ஊட்டிகளுக்கு முன்னல் எத்தனைபடி அரிசி விற்றதோ அந்த மட்டத்திற்கு மறுபடியும் விலை ஏறிவிட்டது. சென்னை நகரத்துக் கஷ்டம் ஒருவாறிருக்க, மாகாணத்திலுள்ள அனேக ஊர்களில் அதிக விலை கொடுத்தபோதிலும் நல்லஅரிசி ரூபாய்க்கு மூன்றுபடி கிடைப்பது அருமையாயிருக்கின்றது. கிடைக்கவில்லை யென்றே சொல்லலாம்.

இப்படிப்பட்ட பிரதேசங்களில் எவ்வகையாகக் கஷ்டத்தைக் குறைக்கலாமோ அந்த வகையை உடனே நாடவேண்டியது ஆவசியகமாகும். கவர்ன்மென்டார் இவ்விஷயத்திற் கவனித்து முயற்சிசெய்து கொண்டிருப்பது உண்மையாயினும், பட்டணவாஸங்களின் கஷ்டமே அவர்களுக்குப் பெரிதும் புலப்படக்கூடும். உட்கிராமங்களின் கஷ்டமும் குக்கிராமங்களின் கஷ்டமும் பெரிதும் கவர்ன்மென்டாரது மனக்கண்ணில் மங்கிக் காணக்கூடும். இப்படிப்பட்ட அனுதரவான ஊர்களை மறவாமல், அவைகளுக்கு வேண்டிய உதவியேற்பாடுகளையும் உடனே கவர்ன்மென்டார் செய்வார்களாக. அந்தக் கிராமத்தவர்கள் கெட்டியாக முறையிடவில்லையென்று எண்ணிக் கவர்ன்மென்டார் அயர்வுற்றிராமல், அவர்களை முக்கியமாகக் கவனிக்க வேண்டும். ரங்கூனிலிருந்தாவது கல்கத்தாவிலிருந்தாவது ஏராளமாக அரிசி வரவழைக்கக் கூடுமானல், ஆயிரக்கணக்காக மூட்டைகளை நமது மாகாணத்தில் தென்னட்டுத் துறைமுகங்களுக்கு நேரே அனுப்புவதற்கு ஏற்பாடு செய்யவேண்டும். அப்படிச் செய்வதனல் எடுகூலி குறையும்; சாமான்யமாகச் சென்னையிலிருந்தும் செங்கற்பட்டு ஜில்லாவிலிருந்தும் இம்மாகாணத்தின் தென்பிரதேசங்களுக்கு அரிசி ஏராளமாகப்போகின்றது. கப்பல் வழியாக நேரே அந்தந்தத் துறைமுகங்களில் கொண்டு போய் இறக்காவிட்டால், அவை சென்னைத் துறையில் இறங்கிக் கரைமார்க்கமாகப் போகவேண்டி வரும்; அல்லது கடற்கரையோரமாகவே கப்பலிற் செல்வதாயினும், தொல்லையும் செலவும் அதிகப்படும்.

L. அனந்தய்யர்.

PART VIII.

MORAL STORIES.

நீதிக் கதைகள்.

பிதுர்வாக்கிய பரிபாலனம்.

அங்கம்—1

காட்சி—2

இடம்:—அயோத்தியில் ஒரு தெரு.

மாதவன் கோவிந்தன் நாராயணன் என்னும் மூன்று வாலிபர்கள் பேசிக்கொண்டே போகிறார்கள்.

மாதவன்:—நாராயண! நாளைக்கு இந்நேரமெல்லாம் இந்த அயோத்தி எப்படி யிருக்கும் தெரியுமா? ஒரு புது நகரம் போலல்லவா விளங்கப் போகிறது. இப்பொழுதே பார்! கொடிகளும் தோரணங்களும் பூரணகும்பங்களும் பதுமைகளும் பகரமுடியாத புதுமைகளும் அதி மனேரம்மியமாக அமைக்கப்பட்டிருக்கின்றன.

நாராயணன்:—அடே நீ ராஜவீதிகளைப் பார்க்கவில்லையே! அங்கெல்லாம் ஸ்ரீஇராமச்சந்திரருக்குப் பட்டாபிஷேகம் நடக்கப்போகிறதென்று பறைசாற்றிய அன்றே அலங்கரிக்கத் தொடங்கிவிட்டார்கள். இன்னும் அங்கங்கே பார்த்தால் என்ன அலங்காரம் தெரியுமா? அடே என்ன சொல்லட்டும் நான்! அடடா! தெருக்களும் மாடமாளிகைகளும் கண்ணைக் கவர்கின்றன.

(மாதவனும் நாராயணனும் போய்க்கொண்டேயிருக்கின்றார்கள்; கோவிந்தன் ஒருபக்கம் பார்த்துக்கொண்டிருக்கின்றான்.)

மாதவன்:—(மெதுவாய்) நாமென்ன பேசிக்கொண்டுபோகிறோம்? கோவிந்தன் எங்கேயோ பார்த்துக்கொண்டே வருகிறான் பார். பைத்தியக்காரன் மாதிரி நடக்கின்றானே!

நாராயணன்:—அவனுக்கு ஒரு குறையுண்டுபோலும்! இந்தமாதிரி கொட்டு முழக்கு, குதூகலம், அலங்காரம், பாட்டுக்கச்சேரி இவ்வைபவங்களைக் காணும்போதெல்லாம் நமக்கு எப்போது கல்யாணமாகப்

போகிறது, நாமெப்போது இவ்வைபவங்களை யெல்லாம் அனுபவிப்போம் என்கிற விசனம் வந்து அவன் மனதில் குடிபுகுந்துவிடும். அப்பொழுது அவன் இப்படிப் பைத்தியக்காரன்போல் விழிப்பான்! அதை யொரு சமயம் கவனித்தேன். அந்த நிலையிலிருக்கிறன்போ லிருக்கிறது இப்போது?

கோவிந்தன்:—(திரும்பிப்பார்த்து) என்னடா நாராயணா! உருட்டுகின்றாய் மேலும் கீழுமாக! அப்பாடா என்று இருக்கிறதோ பிழைப்பு! கல்யாணம் பண்ணிக்கொண்ட பெருமைபோலிருக்கிறது! நாளைக்குப் பெண்சாதியிடம் உப்புக்கும் புளிக்கும் பிடுங்குபடும்போது தெரியும் கல்யாணத்தின் சுகம்.

மாதவன்:—அவன் சொல்லுகிறான் என்று கோபித்துக்கொள்ளுகிறாயே! நீ எங்கேயோ பார்த்துக்கொண்டு பைத்தியக்காரன்போல் நடந்தாயே! சும்மா பேசுவே நீ! கல்யாணம் பண்ணிக்கொள்ளவேண்டும்! பெண் சாதியும் பிள்ளையுமாக இருக்கவேண்டு மென்கிற எண்ணம் யாருக்கில்லை? எல்லாருக்குந்தான் உண்டு; பத்தைப்பெற்று பத்தைக் குழியில் போட்ட கிழவன்கூட கல்யாணம் செய்துகொள்ள விரும்புகிறான், ஓடுகிற பாம்பை மிதிக்கிற காலம் உனக்கு, நீ அப்படி யெண்ணங் கொள்ளக் கேட்கவேண்டுமா?

கோவிந்தன்:—ஏதடா மாதவா! நீகூட.. அதோ அங்கே பாரடா, கூனி தன் வீட்டிலிருந்து குனிந்து குனிந்து அங்குமிங்கும் பார்ப்பதையும் அவள் வீட்டு வாசலில் தோரணக்கால் நடுவதற்குக் கூலியாள் பாடிக்கொண்டு குழி தோண்டுவதையும், நான் அதைப் பார்த்துக்கொண்டே வந்தேன். பைத்தியக்காரனென்று என்னவோ உளறுகிறாய் நீ!

நாராயணன்:—எங்கேயடா கவனம் உனக்கு! கூனியின் அழகிலா உனக்குக் கண்கள் செல்லவேண்டும்? வெகு விந்தை! கூனியையும் கூனி வீட்டையும்விட வேறெதுவும் உன் கண்ணுக்குப் படவில்லைபோலிருக்கிறது! வெகு அழகு! நகரமே புதுநகரமாக விளங்குகிறதே! அலங்காரங்கள் கண்களைக் கவர்கின்றனவே! அதியற்புதமாகத் தோற்றவில்லையா இவை உன் கண்ணுக்கு?

கோவிந்தன்:—எல்லாந் தெரிகிறதடா! கூனி கோலை ஊன்றிக்கொண்டு இங்குமங்கும் ஓடுகிறாள்; ஓடுவதோடு இன்னொருத்தியுடன் என்னமோ அவசர அவசரமாகப் பேசுகிறாள்; அதில் புத்திசென்றிருந்தது. அதனால்—

மாதவன்:—போடா! மதியிலி! கூனியையும் கூனி பேச்சையும் யாராவது கவனிப்பனோ? நகரமண்டப அலங்காரங்களையும் அரண்மனை அலங்காரங்களையும் ராஜாக்கள் வரும் அழகையும், கூடாரங்களின் அழகையும், யானை, ஒட்டகம், குதிரை முதலியன வரும் விமரிசையையும் சைன்னியங்களின் அமைப்பையும் பேரிகை முழக்கத்துடன் வரும் விருதுகளின் அழகையும் போய்ப் பார்ப்போம். வா? கல்யாணப் பித்துப்பிடித் தலையாதே வா போவோம். (போகிறார்கள்)

"சக்ரவர்த்தினி."

அநேக நற்சாட்சிப் பத்திரங்கள் பெற்ற

50 சாமான்கள் இனாம்.] **ராஜா சுந்தரி ரோஜா** [50 சாமான்கள் இனாம்.

கூந்தல் வளரும் பரிமளத் தைலம்.

50 இனாம் சாமான்களுடன் டின் 1-க்கு ரூபாய் 1—0—0.

தலைமயிரை வளரச் செய்வதோடு மயிர் உதிராமல் செய்யும். அதிக வாசனையுடனிருப்பதோடு, மூளையின் கொதிப்பைத் தணித்து கண்களுக்கு குளிர்ச்சியைத் தரும். சிரசிலுள்ள பல நோய்களையும் நிவர்த்தி செய்து கண்களில் நீர்வடிதல், தலையில் சுண்டு, புண், மயிர் வெடிப்பு, மயக்கம், தலைசுற்றல், தலைவலி, சொரி சிரங்கு, மனோவியாகூலம் ஆகிய இவைகளைப் போக்கடித்து தேக ஆரோக்கியம் தரும் தைலம் இது ஒன்றுதான். 1-புட்டி தருவித்தால் இதன் அருமை தெரியும். அநேக நற்சாட்சிப் பத்திரங்களும் பெற்றிருக்கிறது. இது தேசமெங்கும் நல்ல பெயர் பெற்றிருப்பதே இதன் புகழ்ச்சிக்கு அத்தாட்சியாகும்.

இனாம் சாமான்களின் விபரம்:—ஸ்திரீகள் தலையில் அணியும் கொண்டைக்கிளி 6, குங்குமச்சிமிழ் 1, மைச்சிமிழ் 1, அழகான முகம்பார்க்கும் கண்ணாடி 1, தாம்பூல மாத்திரைகள் 30, தந்தசீப்பு 1, ராஜா ராணி காரனேஷன் பெட்டி 1, ரவிவர்மா படங்களுள்ள போஸ்ட் கார்டுகள் 6, அத்தர் பில்லை 1, சந்தனப்பில்லை 1, ஸ்திரீகள் மார்பில் அணியும் ராஜா ராணி உள்ள சுந்தரமான புரோச் 1.

வேண்டுபவர்கள் அடியிற்கண்ட விலாசத்திற்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

தைரியலட்சுமி அண்டு கோ.,

நெ. 3, இருளப்பன் தெரு, மதராஸ்.

சர்வஜாதக சந்தேக நிவர்த்தி.



இதுவரையிலும் அநேக ஜோதிட சாஸ்திரங்களைப் பார்த்து பரீட்சித்து இருந்தபோதிலும் இந்த ஜாதகங்களைப்பார்த்து பலன்சொல்லும் திறமையும் உணரும் பொருட்டு சூட்சமாயம் சுலப நடையாகவும் எழுதி ஆங்காங்கு உதாரணமாக சக்கரங்களும் அமைத்து நல்ல கிளேஸ் கடிதத்தில் அச்சிட்டிருப்பதால் இப்புத்தகம் சோதிடர்கள் ஒவ்வொருவர் கையிலும் இருக்குமாயின் அவர்களுக்கு வேறு சோதிடம் வேண்டுவது அவசியமில்லை. ஆதலால் இலௌகீக வைதீகரிடத்திலும் ஒவ்வொரு குடும்பங்களிலும் அவசியம் இருக்குமாயின் அவர்களே அப்போதைக்கப்போது பலா பலன்களை வெகு சூட்சமமாக பார்த்து மனம் திருப்தியடையலாம். இதன் விலை அணா 12.

எஸ். பி. கே. லால் அண்டு கம்பெனி,

சூளை போஸ்டு, மதராஸ்.

குறைந்த சந்தாவில் நிறைந்த குணங்களை அடக்கியபத்திரிகை எது ? அதுதான்

“கல்பதரு”

இப்பத்திரிகை “கல்பதரு” என்னும் பெயருக்கு இசைய, படிப்போர்களுக்கு வேண்டும் விஷயங்களை யெல்லாம் அடக்கி, படிப்பவர்கள் மனதை களிப்புறச் செய்ய வல்லது. இது, (1) இராஜாங்கம், (2) சுகாதாரம், (3) விவஸாயம், வர்த்தகம், கைத்தொழில், (4) ஹிந்து லா, (5) கூட்டுறவுச் சங்கங்கள், இவைகளைக்குறித்த வியாஸங்களையும், (6) கல்வி, (7) வர்த்தமானங்கள், (8) ஞானத்தை அபிவிருத்தி செய்யக்கூடியதும் மனதை இன்புறச் செய்யக்கூடியதுமான கதைகள், நாடகங்கள் முதலியவற்றையும் அடங்கியுள்ளது. இந்தப் பத்திரிகைக்கு தபால் கூலி உள்பட வருஷம் ஒன்றுக்குச் சந்தா

உள்நாட்டுக்கு ரூபா 3—0—0 } மாதிரிக்காபி வேண்டியவர்கள் அரையணாஸ்டாம்பு
வெளிநாட்டுக்குரூபா 4—0—0 } அனுப்பினால் மாதிரிக்காபி இனாமாக அனுப்பப்படும்.

மானேஜர் “கல்பதரு” ஆபீஸ், 1/24, கிருஷ்ணன் கோவில் தெரு, மண்ணடி, சென்னை.

நற்சாக்ஷியை நன்றாகக் கவனியுங்கள் !

‘ஜட்ஜ் மணி ஐயர்’ என்னும் செல்வப்பெயர் கொண்ட டாக்டர்.

ஸர். எஸ். சுப்பிரமணிய ஐயர் அவர்கள் தெரிவிப்பது :—

பண்டித எஸ். எஸ். ஆனந்தரின் மஹா சந்தனாதி தைலத்தை எனது குடும்பத்தில் ஒரு வருஷகாலமாக உபயோகித்து நன்மையடைந்தோம். அது மனோகரமாக இருப்பதோடு நல்லகுணமும் செய்கிறது.

அவருடைய மற்றமருந்துகளையும் பலரும் உபயோகிப்பதாகத் தெரிகிறது.

மஹா சந்தனாதித் தைலம். 12-அவுன்ஸ் புட்டி......2 0 0

வைத்தியசாலை, 24-நாட்டுப்பிள்ளையார் கோயில் தெரு, சென்னை

எந்த சேலையாயினும், ஒரே தடவையில் 4 சேலை வாங்குவோர்க்கு வி. பி. சார்ஜ் இல்லை.

மதுரை மீனாக்ஷியம்மன் புட்டா சேலை	ரூ.	6	0	0
பார்சி இமிடேஷன் பட்டுப்புடவை 8 கெஜம்	,,	7	8	0
ஷை 9 கெஜம்	,,	8	8	0
அசல் பட்டு கோகர்ஜான் சேலை	,,	25	0	0
சாவித்திரி சரிகை சேலை.	,,	8	0	0

சாண்டோ வாச்சு கம்பெனி,

நெ. 2. ராமானுஜ ஐயர் தெருவு,

சௌகார்பேட்டை, மதராஸ்.

புதிதாக வந்த தமிழ் புஸ்தகங்கள்.

—:o:—

921. ஸம்ஸ்கிருத கீதாம்ருதம் 0 12 6
கே. என். ஸங்கரராம சாஸ்த்ரி எழுதிய ஸம்ஸ்க்ருத கீர்த்தனங்கள் அடங்கியது. தமிழர்கள் பாடுவதற் கேற்ப பாட்டுகள் தமிழிலும் எழுதப்பட்டிருக்கின்றன.

931. ஸுந்தராங்கி ... 1 0 0
கே. துரைஸாமி அய்யங்கார் இயற்றிய தமிழ் நாடகம்.

932. ராஜேந்த்ர மோஹனா 0 12 0
கே. துரைஸாமி அய்யங்கார் இயற்றிய தமிழ் நாடகம்.

935. மானிட ஜீவ்ய சிந்தாமணி 2 0 0
அல்லது ஆண்மையின் அழிவும் அதனையகற்றும் விதமும். டாக்டர் எஸ். சந்திரசேகர் இயற்றியது.

936. சிகித்ஸா ரத்னதீபம்... 2 0 0
இதில் பலவகை மருந்துச் சரக்குகளின் சுத்தியும், கஷாயம் முதல் பஸ்பம் வரையில் மருந்துகள் செய்து உபயோகிக்கும் விதம் கூறப்பட்டிருக்கின்றன.

938. ஆத்திசூடி நீதிக்கதைகள் 0 8 0

945. கதாரஸ மஞ்சரி ... 0 4 6
பற்பல நீதிக்கதைகள் கொண்டது. பண்டித எம். எம். நாராயணஸாமி அய்யர், எஸ். யஜ்ஞஸாமி அய்யர் இயற்றியது.

951. ஸ்ரீராமர் பட்டாபிஷேகம் 0 12 0
இதில் ராமாயணத்தில் ஸுக்ரீவர் ஆஜ்ஞைக்குப் பிறகு ராமர் பட்டாபிஷேகம் வரைக்கும் உள்ள பாகம் நாடக ரூபமாய் அமைந்துள்ளது. டி. பக்தவத்ஸலம் இயற்றியது.

954. தேவ லோக கிரிமினல் கேஸ் ... 1 8 0
இதில் அரிச்சந்திர சரித்திரம் சூர்ப்பநகை பங்கம், வாலி வதம், லங்காதகனம், துரௌபதை வஸ்த்ராபரணம், கீசகன் முதலியவைகள் கோர்ட்டுக் கேஸுகள் நடப்பதுபோல் எழுதப்பட்டிருக்கின்றன. கோட்டாறு ஷேக்குத்தம்பி பாவலர் எழுதியது.

956. மனோரமா ... 0 8 0
அல்லது ஆனந்த குடீரத்தின் அற்புத அதிசயங்கள் ... 1 0 0
ஆர். கிருஷ்ணஸாமி சர்மா இயற்றிய துப்பறியும் நாவல்.

956. கோபாலன் ... 0 8 0
சே. ஜி. ராமஸாமி அய்யர் இயற்றிய ஒரு துப்பறியும் நாவல்.

958. லீலாதரன் ... 0 12 0
டி. எம். பாஷ்யமய்யங்கார் இயற்றிய ஒரு தமிழ் நாடகம்.

959. சுந்தரேசன் அல்லது உரிமை இழந்தோன் 1 0 0
டி. எம். பாஷ்யமய்யங்கார் இயற்றிய ஒரு நாவல்

961. தமிழ் இங்க்லீஷ் அகராதி 4 0 0
நூதன முறையில் அமைக்கப்பட்டது. எல்லாத் தமிழ் வார்த்தைகளுக்கும் இங்க்லீஷ் கொடுக்கப்பட்டிருப்பதோடு.

962. ஷை தோல் பைண்ட் 5 0 0

முக்ய அறிவிப்பு :—எங்கள் ‘ஜனாபிமானி’ ‘வெல்த் அப் இண்டியா’ என்னும் பத்ரிகைகளின் சந்தாதார்களுக்கு, எங்கள் ஸொந்த ப்ரசுரங்களின் விலையில் ரூபாய்க்கு 2-அணா வீதமும், இதர புஸ்தகங்களின் விலையில் ரூபாய்க்கு 1-அணா வீதமும் கழித்துக் கொடுக்கப்படும்.

ஜீ. ஏ. வைத்யராமன் அண்டு கம்பெனி, 3, 4, கோண்டிசெட்டித் தெரு, மதராஸ்.

ஒவ்வொரு குடும்பத்திலும் அவசியமாய் இருக்கவேண்டிய ஒளஷதங்கள்.

இந்த ஒளஷதங்கள் ஆயுர்வேத சாஸ்திர முறைப்படி வெகு சீக்கிரத்தில்குணத்தைக் கொடுக்கும்படி தயார் செய்யப்பட்டிருக்கின்றன. இவை தவிர அநேகம் இதர மருந்துகள் எப்போதும் கிடைக்கும். விலை ஜாபிதாவுக்கு எழுதுங்கள். வியாதி என்னவென்று எழுதினுல் தக்க மருந்து என்னவேண்டுமென்று உடனே பதில் எழுதுகிறோம். ஏழைகளுக்கு தர்ம வைத்யம் நேரில்.

ஜீவன் பிரபா.

இது அநேக அபூர்வ, மூலிகைகளாலும், பொன் வெள்ளி ஸாரங்களும் சேர்க்கப்பட்டு எப்பேர்ப்பட்ட சோகை, பாண்டு, ரத்தக்குறைவு, ஞாபக் குறைவு முதலிய பலவகை வியாதிகளையும் கண்டித்து, மூளையையும் தேகத்தையும் நரம்புகளையும் வலுப்படுத்தி ஸௌகத்தைக் கொடுக்கும். விலை, ரூ. 1-10-0.

ஸ்திரீஸஞ்சீவினி.

ஸ்திரீகள் அவஸ்தைப்படும் அநேக வியாதிகளை இது குணப்படுத்தும். கர்ப்பாசயத்துக்கு வலுவைக் கொடுத்து தேகத்துக்கு அழகையும் உற்சாகத்தையும் சீக்கிரத்தில் உண்டுபண்ணும். இந்த ஒளஷதத்தினுல் நல்ல ஸந்தானம் உண்டாகும் பொதுவில் ஸகலவிதமான ருது வியாதிகளைப் போக்கும் விலை, ரூ. 1-10-0.

ஸௌகந்தாமலக தைலம்.

எண்ணெய் தேய்த்துக்கொண்டு வரும் ஒவ்வொருவரும் இந்த குளுமையான தைலத்தை ஒருமுறை உபயோகித்தால் அவர்கள் அனுபவிக்கும் ஸௌகத்தை அவர்களே யறிவார்கள். கண், தலை, மூளை முதலியவைகளைக் குளிரச்செய்து தேகாரோக்கியத்தைக் கொடுக்கும். விலை, 6-அவுன்ஸ் புட்டி விலை, ரூ. 0-10-0.

ஸௌதர்சன் பிரயாக்.

ஸகலவிதமான ஜ்வரங்களையும், தினம்விட்டு தினம் வரும் ஜ்வரங்களையும், மலேரியா ஜ்வரங்களையும் வயிற்றில் கட்டியுடன் வரும் ஜ்வரங்களையும், எல்லாவித குளிர் ஜ்வரங்களையும் சீக்கிரத்தில் குணப்படுத்தும். விலை, ரூ. 1-0 0.

கூஷ்மாண்ட மீட்டாய்.

ஆயுர்வேத அற்புத ஒளஷதம் என்று இதைச் சொல்லவேண்டும். இது வெகு இனிமையாயும் மருந்து வெறுப்புள்ளவர்களுக்கு அமிர்தம் போலவும் அதிசீக்கிரத்தில் குணத்தைக்கொடுக்கும் ஒளஷதம் எல்லாவிதமான தோலைப்பற்றிய வியாதிகளையும் போக்கி ரக்த சுத்திசெய்து சரீர ஸௌகத்தைக் கொடுக்கும். பவுண்டு விலை ரூ. 2-8-0.

ஆயுர்வேத பூஷண பண்டிட் L. N. ஷர்மா, A M., A. C.
102, சைனபஜார் வீதி, சென்னை.

1-MAR 1919 MADRAS

உ

ஸ்ரீராமஜயம்.

கல்ப தரு.

KALPA THARU.

அறிவு வளர்ச்சிக்கான ஒரு மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

புஸ்தகம் 2.	காளயுக்தி௵ அற்பசி-கார்த்திகை-மார்கழி௴.	நெ. 8, 9, 10.
Vol. II.	OCTOBER-NOVEMBER-DECEM-1918.	Nos. 8, 9&10

"KALPATHARU."

"கல்பதரு."

நமது 'கல்பதரு' பொன்னிறமான செங்கனிகளைப் பழுக்க ஆரம்பித்து ஏறக்குறைய இருபது திங்களாகின்றன. அக்கனிகள் யாவையும் தமிழுலகினருக்குப் பேதமின்றி அது உதவி வந்தது. இப்பழங்கள் சிற்சில சமயங்களில் சரியாகக் கிடைக்காமலிருக்கும். இதற்குக் காரணம் யுத்தமென்றே கூறவேண்டியதாயிருக்கிறது. தற்போது நிகழ்ந்து வரும் கடும்போர் காரணமாக நேர்ந்த துன்பங்களை நாம் ஒரு பொருட்படுத்தாது ஒருவாறு 'கல்பதரு'வின் கனிகளை அன்பர்கட்கு உதவி வந்தோம். ஆனல் சென்ற சில மாதங்களாகக் கல்பதருவின் பழங்களை அன்பர்கள் சுவைக்க வியலாது போனது எமக்கு அளவிலாத் துயரைத் தருகின்றது. இதற்குக் காரணங்கள் பல. அவை நாம் எதிர்பாராதவை. முதலில் நமது பத்திரிகைக்கு வேண்டிய 'ராயல்' அளவு காகிதம் கிடைக்கவில்லை. இதன் பொருட்டு எமக்குண்டான அலைச்சலும் கவற்சியும் எழுதிமுடியாது. முதுமை காணுத மக்களை எமனடியில் சேர்ப்பித்த 'இன்புளுயன்ஸா' என்னும் பெருநோய் நமது பத்திரிகை அச்சிடப்படும் சாலையிலும் விருந்துண்ணவந்தது. நம்மையும் எவரிடமும் நடுவு நிலைமையுடன் நடந்து கொண்ட அந்நோய் அணுகியது,

அதனால் யாம் அடைந்த துன்பங்கள் எண்ணிறந்தன. இம்மும்மதிகளாக எமக்குண்டான இடையூறுகள் எண்ணிலவேனும் நம்மை எந்நாளும் ஆதரிக்க முன் வந்துள்ள சந்தாதார்கள் கல்பதருவின் கனியைச் சுவைக்க முடியாமற் போயிற்றே என்ற ஏக்கமே எம் உள்ளக் கவலைகளின் முன்னணியில் நின்றது.

இப்பத்திரிகை பொருள் நலங் கருதாது நடக்கின்றதென்பதைப் பல்காலும் பத்திரிகை வாயிலாக வெளியிட்டுள்ளோம். சென்ற நாலரை ஆண்டுகளாக நடந்த கடும்போர் முடிந்தது. நமது மன்னர் பிரான் வெற்றி பெற்றனர்; ஜர்மானியரின் கொட்டம் அடங்கியது. கூடிய விரைவில் காகிதமும் பிற சாமான்களும் மலிவுபடும் என்று எதிர் பார்க்கப்படுகிறது. இனி மாதந்தோறும் பத்திரிகை தவறாது வெளி வருவதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. இதுவரை பத்திரிகை காலங் கடந்து வந்ததைக் குறித்து யாம் பெரிதும் வருந்துகின்றோம். இதற்குமேல் நாம் என்ன செய்யவல்லோம். அடுத்த ஜனவரி மாதத்து சஞ்சிகை அதிக பக்கங்களுடனும் விசேஷ வ்யாசங்களுடனும் குறித்த தினத்தில் வெளிவரும். இதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. கல்விக் கடலில் முழுகித் திளைத்த அறிஞர் பலர் கல்பதருவிற்கு வியாசங்கள் எழுதி உதவுவதாக வாக்களித்திருக்கின்றனர். இதுவரை அன்பர்கள் தங்கள் ஆதரவையும் அன்பையும் காட்டி வந்ததுபோல் இனியும் காட்டி வர வேண்டுமாய்க் கேட்டுக் கொள்கின்றோம்.

உலகிற்கு உபகாரஞ் செய்தல்வேண்டும் என்ற ஒரு பெரு நெறியைக் கடைப் பிடித்தொழுகும் எமக்குத் தளரா ஊக்கம் தந்து எம்மைக் கைவிடாது ஆதரிக்கவிருக்கும் அன்பர்களுக்கு, அருட்பெருஞ் செல்வமும் உலகியற் செல்வமும், அருளும்படிக்கு, முத்தொழிற் காரணனை, நித்தியானந்தனை, நிர்மலநாதனை மனமொழி மெய்களால் இறைஞ்சி நிற்கின்றோம்.

பத்திரிகாசிரியர்.

PLAGUE AND ITS PREVENTION.

BY MR. K. P. SESHADRI AIYANGAR,
Teacher, Muthialpet High School, Madras.

ப்ளேக்கும் அதைத் தடுக்கும் முறைகளும்

(9-ம் பக்கத் தொடர்ச்சி)

III.

கைகண்ட முறைகள் எவை?

ப்ளேக் என்னும் கொள்ளைநோய் தலைகாட்டாதொழிய வேண்டுமானால் முதன் முதலில் எலிகளைக் கொல்லவேண்டும். இல்லாவிட்டால் எலி ஈக்களையாவது நாசப்படுத்தவேண்டும். இவ்விரண்டையும் ஒரு

மிக்கச் செய்வதுதான் சிறந்தது. ப்ளேக் கிருமிகளுக்கு உறைவிடம் எலிகள்தான். இவ்வியாதியால் பீடிக்கப்பட்டு இறந்த எலியினின்று, திடமாயும் உயிருடனுமுள்ள எலியை நாடி, அதையும் பீடிக்கச் செல்லும் ஈக்கள்தான் இப்பெருவாரியை பரவச்செய்பவை. ப்ளேக் எமனது தூதனும் ஈக்கள் அப்பிரதேசத்திலுள்ள எலிகளை யெல்லாம் நமனுலகனுப்பிய பின் தாம் வருத்த பிறிதொரு எலியையும் காணாததனால் அங்குள்ள அடுத்த ஜீவப்பிராணியான மனிதர்களை அணுகி வருத்த ஆரம்பிக்கும். இவ்விதமாக எலிகளிலிருந்து ஈக்கள் மனிதர்களுக்கு ப்ளேக் பெருவாரியை உண்டாக்குகின்றன.

இதைத் தடுத்து ஒழிக்க மிகச் சிறந்த முறை ஒன்றிருக்கின்றது. ஒவ்வொருவரும் இனாகுலேஷன் அதாவது அம்மைக் குத்திக்கொள்ளவேண்டியது. அப்போது ப்ளேக் கிருமிகள் நமது தேகத்திலுள்ள இரத்தத்தில் வாழத்தகுதியற்றதாகும். சில அறிவிலிகள் அம்மைக் குத்திக்கொள்வதினால் யாதொரு பயனும் உண்டாவதில்லை யென்றும், கவர்ன்மெண்டார் வீணாக ஜனங்களை இனாக்குலேஷன் (ப்ளேக் அம்மைப்பால் குத்திக்கொள்ளும்படி) ஹிம்சிக்கிறார்களென்றும் கூறுவதுண்டு. இவ்விதம் உரைப்பது அறியாமையே யன்றி வேறல்ல. இனாக்குலேஷன் செய்து கொள்ளாதவர்களுக்கு ப்ளேக் காணின் 100-க்கு 99 ஆக நஷ்டப்படுத்திவிடுகின்றது. ப்ளேக் அம்மைப்பால் குத்திக்கொண்டவர்களுக்குப் பிளேக் கண்டால் 100-க்கு 85 ஆக சுகமடைகின்றனர். ப்ளேக்கை வென்று வெற்றிமாலை புனைகின்றனர். உதாரணமாக, பெல்காம் என்றவிடத்தில் 83 பேர் அடங்கிய ஒரு சிறு சேனையில் 80 பேர்கள் இனாக்குலேஷன் செய்துகொள்ள சம்மதித்துக் கொண்டார்கள். மற்ற மூவர் ப்ளேக் அம்மைப்பால் குத்திக்கொள்ள மறுத்துவிட்டனர். ப்ளேக் பரவிவந்த அந்த சமயத்தில் இனாக்குலேஷன் செய்துகொண்ட ஒருவரிடமாவது ப்ளேக் அண்டவே யில்லை. மற்ற மூவரில் இருவருக்குக் கொள்ளைநோய் கண்டு அதற்கு இரையாயினர்.

ஹூப்ளியில், ரெயில் உத்தியோகஸ்தர்கள் 3020 பேரில் அங்கே ப்ளேக் தலைகாட்டியபொழுது 1260 பேர்கள் ப்ளேக்கைத் தடுக்க இனாக்குலேஷன் செய்துகொண்டனர். மிகுந்த 760 நபர்கள் அம்மை குத்திக் கொள்ளச் சம்மதிக்கவில்லை. 1260 பேரில் இருவர் பெருவாரிக்குப் பலியாயினர். 760 பேரில் இருபத்தொன்று மனிதர்கள் மாண்டனர். நாகப்பூரில் எம்பிரஸ் யந்திரசாலையில் 3779 கூலியாட்களிருந்தனர். அவர்களில் 1116 பேர் இனாக்குலேஷனுக்கு ஒருப்பட்டனர். இவர்களில் ஆறுபேர் மாத்திரமே இறக்க நேர்ந்தது. மீதியிருந்த இனாக்குலேஷனுக்கு சம்மதிக்காத 2663 பேர்களில் 179 பேர்கள் வீணாக மாண்டனர்.

இன்னொரு திருஷ்டாந்தம், பம்பாயில் நகர விசாரணை இலாகாவைச் சார்ந்த 3317 வேலையாட்கள் ப்ளேக் அம்மைப்பால் குத்திக் கொண்டார்

கள். அவர்களில் மூன்றேபேர் மரணமடைந்தார்கள். இனாக்குலேஷன் செய்துகொள்ள மனமில்லாத 838 காவற்காரர்களில் 18 பேர் காலனை அடைந்தனர்.

மேலே குறிப்பிடப்பட்டவைகளில் ஒரு அணுவும் பிசகில்லை. அவைகளைப்பற்றிச் சிறிதும் சந்தேகம் கொள்ளவேண்டாம். முற்றிலும் உண்மையே. ப்ளேக் அம்மைப்பால் குத்திக்கொண்டவன் ப்ளேக் பெருவாரி கண்டால் இறக்கவேமாட்டான் என்று உறுதியாக நம்புவதற்கும் இடமில்லை. ஆயின் அதனால் பிரயோஜனம் என்னவென்றால் ப்ளேக் காணுவதற்குக் கொஞ்சம் தடையை இனாக்குலேஷன் உண்டாக்குகின்றது. ஆகவே கற்றுத் தெளிந்த அறிஞர்கள் ப்ளேக் கிளம்புங்காலத்து தாங்களாகவே இனாக்குலேஷன் செய்துகொள்ள முன்வந்து விடுகிறார்கள்.

இனாக்குலேஷன் செய்துகொண்ட பிறகு ப்ளேக்நோய் காணுகிறதில்லை. அப்படிக்கின்றி ஒருவேளை கண்டாலுங்கூட மிகவும் உபத்திரவப் படுத்தாமல் எளிதில் குணமடைந்து விடுகிறது.

கவனிக்கவேண்டியவை எவை?

ப்ளேக் நோய் எங்கும் மும்முரமாகத் தன் கொடுந்தொழிலைப் புரிந்து வரும்போது நாம் வசிக்கும் வீட்டை வெள்ளை யடித்து காற்றும் வெயிலும் வெளிச்சமும் நடமாடும்படி வைத்திருக்கவேண்டியது அத்யாவசியகம்.

சுத்தமான ஆகாராதிகளை உட்கொள்ளல் முறைமை. படுக்கைகளின் மீதிலுள்ள எலித்தெள்ளுப் பூச்சிகளைத் தொலைக்க "நாப்தலேன்" (Naphthalin) என்ற மருந்தைத் தெளிக்கவேண்டும். அவைகளை ஒழிக்க இதுவொரு சுலபமும் நயமுமான வழி. ஆனால் இம்முறையைக் கைகொள்வதில் கொஞ்சம் மருந்து வாங்க நேரிடும். இன்னொரு மார்க்கமுண்டு. அதைக் கடைப்பிடித்தால் ஒரு காசும் செலவில்லை. ஆகையினால் யாதொரு செலவுமில்லாமல் அதிக ஏழையாய் இருப்பவர்களும் உபயோகிக்கக்கூடிய வேறொரு வழி கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது. அதாவது 1911-ம்ஞு ஏப்ரல்மீ 11உ யுள்ள பம்பாய் கவர்ன்மெண்ட் கெஜட் 599-ம் பக்கத்தில் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது. துணிமணிகளையும் படுக்கை தலையணை முதலியவைகளையும் மணலுள்ளதும் சமமானதும் மரம் மட்டைகளில்லாததுமான ஓர் இடத்தில் சூரிய கிரணம் முழுதும் படும்படிக் காயப்போடவேண்டும். மேற்படி தரையானது மட்டமாயிருக்கவேண்டும். கற்களாவது பசும் புல்லாவது இருக்கக்கூடாது. மணல் பாங்கான இடம் இல்லாவிட்டால் அந்த இடத்தில் மூன்று அங்குலம் ஆழம் வெட்டி மணலைச் சமமாய்ப் பரப்பிக்கொள்ளவேண்டும். துணிகளைக் காயப்போடுமுன் மணல் அதிக சூடுள்ளதா யென்று பார்க்கவேண்டும். ஆகையால் காலை 10-மணி மேற்கொண்டுதான் காயப்போடத் துவக்கவேண்டும். மாலை 4-மணிக்குமேற்

கொண்டு காயப்போடுவதில் பயனில்லை. ஏனெனில் மணலில் சூடு குறைந்துவிட ஆரம்பிக்கிறது. துணிகளை மடித்துப்போடக் கூடாது. துணிகள் குறைந்தது ஒரு மணி நேரமாகிலும் உலரவேண்டும். மெத்தை, தலையணை, ஜமக்காளம், கம்பளி, பாய் முதலிய பருமனுள்ளவைகளைத் திருப்பித்திருப்பி பலமுறை காயப்போடவேண்டும். துணிகாயுமிடத்தைச் சுற்றிலும் மணலிருக்கவேண்டும். இல்லாவிட்டால் கிருமிகள் சூட்டுக்காக மெல்ல ஊர்ந்துசென்று பிழைத்துக்கொண்டு வியாதியைப் பரவச்செய்யும். உடைகளை உலரப்போடுமுன் மணல்தரையில் கால் நடைகள் சென்று காலடி வைக்காமல் பார்த்துக்கொள்ளவேண்டும். இல்லாவிடில் சமமாய்ச் சூடு தாக்காது, கிருமிகள் இறவா. மேற்கண்ட விதமாகத் துணிகளைக் காயப்போட்டால் கிருமிகளெல்லாம் மாண்டுவிடுகின்றன வென்று பரிசோதனைகளாலும் ஆராய்ச்சியாலும் கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது. ஆகையால் இதனைச் சாமானியமாய் நினைக்கலாகாது. துணிகள், படுக்கை, கம்பளி, தலையணை இவைகளை வெயிலில் உலர்த்த வேண்டியது எவ்வளவு அவசியமாக நினைக்கின்றோமோ அதுபோலவே மற்ற தானியவகைகளையும், உணவு பதார்த்தங்களையும் வெயிலில் உலர்த்தவேண்டியது மிகவும் அவசியம்.

ப்ளேக் வியாதி கண்டவர்களை அந்த க்ஷணமேயே வீட்டைவிட்டு வெளிப்படுத்தி நகரத்துக்கு வெளியே தனியிடமேற்படுத்தி அதில் இருக்கச்செய்து மருந்துதவவேண்டும். அந்த வீட்டிலுள்ள துணிமணிகளையும் உணவுப்பொருள்களையும் தீயிலிட்டுக் கொளுத்திவிடவேண்டும். இவ்விதம் செய்வதால் ப்ளேக் கிருமிகள் நாசமடைந்துவிடும். அந்த வீடு குடிசையாயிருந்தால் அதை அக்னிக்கு இரையாக்கிவிடவேண்டும். ஓடு வேய்ந்த வீடாக விருந்தால் சூரிய கிரணமும் காற்றும் வெளிச்சமும் நன்றாகப் படும்படி ஓடு களைப்பிரித்து வைக்கவேண்டும். மாடி வீடானால் சுவர்களின் மூலைகளில் மண்ணெண்ணெயை ஊற்றிவைக்க வேண்டும். கந்தகப் புகையை எழுப்பவேண்டும். இவ்வண்ணம் செய்வதால் கிருமிகள் அடியுடன் மாள்கின்றன. ப்ளேக் பிரதேசங்களினின்று ஜனங்கள் வேறிடங்களுக்கு அதிமாகச் செல்வதைத் தடுக்கவேண்டும்.

ப்ளேக் வியாதிக்குரிய முக்கிய சின்னங்கள்.

மனிதனுடைய தோலின் வழியாக பிளேக் கிருமிகள் தேகத்திற்குள் புகுந்தால் தேகத்திலுள்ள அவயவங்கள் அவைகளைத் தேகத்தில் ஓடவிடாமல் தடுக்கின்றன. அப்படித் தடுத்து நின்று கொண்டால் கட்டிகள் உண்டாகின்றன. அப்படிப்பட்ட கட்டிகள் அக்குள், துடைச்சந்து, பிடரி முதலிய இடங்களில் காணும். அப்பொழுது ப்ளேக் கண்டவன் அயர்ந்து பேசாமலிருப்பான். பல் கொஞ்சம் வெளியில் தெரியும். நாக்கு பல் முதலியவைகள் உலர்ந்துபோயிருக்கும். உடம்பு காயும், கண் சிவந்திருக்

கும், படுக்கையில் புரளுவான் ; வீடு வாசல் ஊர் முதலியவைகளை விட்டு அப்புறம் போகவேண்டுமென்று ஆசை யுண்டாகும். பிரக்ஞை தவறிப் போய்விடும். புத்தி நிலையில்லாமலிருந்து பிறகு மாறாட்டமுண்டாகும். குடித்து வெறிகொண்டவன்போல் உளறுவான், அலறுவான், பெரிதும் வருந்துவான். ஜுரம் 104 முதல் 107 டிகிரி வரை ஏறிவிடும். அடிக்கடி பெருமூச்சு விடுவான். நாக்கு அழுக்குப்படிந்து வெடித்திருக்கும், வாந்தி காணும். மலம் கிரமமாய் வெளிக்கிளம்பாது தடைபடும். சிற்சில சமயங்களில் மூக்கிலிருந்தும் ஆஸனத்திலிருந்தும் இரத்தம் வடியும். சிற்சில சமயங்களில் விஷபேதி (Cholera) மாதிரியாக வாந்தியும் பேதியும் கண்டு மனிதன் அயர்ந்துபோவான். சில சமயம் ஜன்னியும் காணும் ; உடம்பு அல்லித் தண்டைப்போல் குளிர்ந்திருக்கும். சில சமயம் இருமலும் காணும். இப்பெருவாரியின் சின்னங்களைச் சொல்லியபின் சிகித்ஸையைச் சொல்லாமலிருந்தால் என்ன பிரயோஜனம் ?

ப்ளேக் சிகிச்சைகள்.

இக்கொள்ளை நோய்க்குக் கொடுத்துப் பரிசோதிக்காத மருந்தே கிடையாது. ஒருவனுக்குக் கொடுத்த ஔஷதம் மற்றொருவனுக்குப் பிடிக்காது. முதலில் இது கண்டதும் தகுந்த மருந்தைக் கொடுத்தால் சௌக்கிய முண்டாகும். காலஹரணமாய் விடுமாயின் காலனுக்குக் காணிக்கையாக வேண்டியதுதான். நமனுலகில் பிரவேசித்து வாழவேண்டிவரும். இக்கொடிய வியாதிக்குப் பற்பல விடங்களில் கொடுத்து ஜெயங்கொண்ட சில சிகிச்சைகளைக் கீழ் விவரிப்போம்.

(1) ப்ளேக் கண்டவன் ஆலிவ் எண்ணெயை (Olive Oil) தேகம் முற்றிலும் பூசிக்கொள்வதுடன் வேளை யொன்றுக்கு ஒரு தேக்கரண்டி (Tea Spoon) வீதம் தினம் 5, 6 முறை உட்கொள்ளவேண்டும். இந்த சிகிச்சைசெய்து பார்த்ததில் 100-க்கு 5-வீதம் தவறி விட்டதாக டாக்டர் ரீஸ் என்பவர் தெரிவித்திருக்கின்றார். மற்ற 95 பேர்கள் சௌகர்ய மடைந்து விட்டதாகவும் கூறுகின்றார். எவ்விதமான எண்ணெயும் ப்ளேக் நோய்க்குச் சத்ருவென்று அநுபவத்தில் தெரிந்திருக்கிறது. இதற்குதாரணமாக முதல் முதல் பம்பாய்ப் பட்டினத்தில் பிளேக் தேவதை பிரவேசித்து அமளிப்படுத்தின காலத்திலுங்கூட செக்காடுபவர்களுக்கும், எண்ணெய் வியாபாரிகளுக்கும் இந்நோய் ஒருபோதும் கண்டதில்லை.

(2) ஈர வெங்காயத்தை நன்றாய் நசுக்கி தனிச்சார் எடுத்துச் சுமார் இருமணிக் கொருதரம் ஆழாக்கு வீதம் உள்ளே கொடுத்து, அதன் சக்கையை ப்ளேக் கட்டியின்மீது வைத்துக் கட்டிவர இரண்டே தினத்தில் சௌக்கியமாகும். விஷக்காற்றைக் கிரகிக்கும் சக்தி ஈர வெங்காயத்திற்கு உண்டென்பது முன்பே நம்மவர்களுக்குத் தெரிந்த விஷயமென்றாலும் இப்போது நன்கு ரூபிக்கப்பட்டிருக்கிறது. வட இந்தியாவில் பிளேக்காவது வைசூரியாவது தோன்றிய காலத்தில் ஈர வெங்காயத்தை மாலையாகக் கோர்த்து வீட்டு முகப்பில் தூக்கி வைப்பது ஜனங்களின் வழக்கம். இந்த வழக்கம் மிகவும் நன்மையானதென்றும், விஷக்காற்றை ஈரவெங்காயம் கிரஹித்துக் கொள்கிறதென்றும் ஐரோப்பிய வைத்திய சாஸ்திரிகள் கண்டு பிடித்திருக்கிறார்கள். வேப்பிலைக்கும் இதைப்போலவே விஷக்காற்றைக் கிரஹிக்கும் சக்தி யுண்டென்று நமது ஆயுர்வேத நூல்கள் கூறுகின்றன.

(3) வேப்பிலையை அரைத்து ப்ளேக் கட்டியின்மீது வைத்துக் கட்டுவதுடன், வேப்பெண்ணெயை வேளை யொன்றுக்கு ஒரு தேக்கரண்டி வீதம் 3-மணிக்கொருமுறை உள்ளுக்குக் கொடுக்கவும். வேப்ப மரமானது முக்கியமாய் விஷக்காற்றுகளையும், விஷக்கிருமிகளையும் நசிக்கச் செய்வதற்கு ஓர் அரிய பெரிய சஞ்சீவி என்றே சொல்லலாம்.

(4) போர்ட் வைன் (Port Wine) இதைச் சாப்பிட்டால் கட்டாயம் குணம் உண்டாகும். அதாவது பிளேக் வியாதியினால் இறக்கும் தருவாயிலிருந்த ஒரு யுத்தவீரன் அந்திய காலத்தில் போர்ட் வைன் குடிக்க ஆசைப்பட்டான். அதுவே பிளேக்கைத் தொலைக்கவும் காரணமாகி அவனும் பிழைத்துக் கொண்டான். அதுமுதற்கொண்டு இந்த சிகிச்சையைக் கையாடி வருவதில் 100-க்கு 99 பேருக்குக் குணம்.

(5) ஒரு பெரிய கரண்டி (சுமார் 2 அவுன்ஸ்) "எப்ஸம் ஸால்ட்" உப்பை (Epsom Salt) இரண்டு தேக்கரண்டி நல்ல பிராந்தியில் கலந்து கொடுக்கவும். அத்துடன் சுடு ஜலமும் கொஞ்சம் கொடுக்கவும். குழந்தைகளுக்கு $1\frac{1}{4}$ அவுன்ஸ் அதாவது 3 தோலா உப்பை ஒரு தேக்கரண்டி நல்ல பிராந்தியில் கலந்து கொடுக்கவும் சுடுஜலமும் உடன் சாப்பிடவேண்டும். இது "டைம்ஸ் ஆப் இந்தியா" பத்திரிகை நிரூபாது முறை. இதில் 100-க்கு 98 பேருக்குக் குணம்.

(6) ப்ளேக் நோய்கண்டவுடன் நோயாளியின் தேக திடத்திற்கும் நோயின் வீரியத்திற்கும் தகுந்தபடி 16 முதல் 22 தானிய எடை இபிகாக் பௌடர் (Pulvis Ipecachue) கொடுக்கலாம். இப்பௌடரை மாவுபோல் தூளாக்கிப் பாலில் அல்லது ஜலத்தில் கலக்கி மூன்று பாகமாக வகுத்துக் கால் மணி நேரத்திற் கொருமுறை கொடுக்கவும். இது மிஸ்டர் பால்ஸ் என்பவரது அனுபவமுறை 100-க்கு 80 பேருக்குக் குணம்.

ப்ளேக் நோய்க்கு அயோடைன் மருந்து.

ப்ளேக் நோய்க்கு அயோடைன் மருந்து உபயோகிப்பதைப்பற்றி இந்தியா சால்வேஷன் ஆர்மியைச் சேர்ந்த F. டல். பூத், டக்கர் என்பவர் பின்வருமாறு எழுதுகிறார்.

ப்ளேக்நோய் இந்தியா முழுவதும் பரவி வருவதைப்பற்றி மிக்க வருந்துகிறேன். ப்ளேக் நோய் வருவதைத் தடுக்கவும், ப்ளேக்நோய் வந்த

பின் சிகிச்சை செய்யும் விஷயமாயும் அயொடைன் மருந்து உபயோகமாவதைப்பற்றி பஞ்சாப் மாகாண கவர்ன்மெண்டார் பின்வரும் விளம்பரஞ் செய்திருக்கிறார்கள்.

ப்ளேக்நோய் வந்த காலத்து டாக்டர் சமீபத்திலில்லாமற் போனால் அனுஷ்டிக்க வேண்டிய முறை.

1. மிகவும் விசாலமானதும் சுத்த காற்று அதிகமாய் நடமாடக்கூடியதுமான அறையில் படுக்கையில் அமரிக்கையாய்ப் படுத்துக்கொள்ளல். அறையின் கதவுகளும், ஜன்னல்களும் திறந்து வைக்கப்படவேண்டும். காற்று சுகமாயிருந்தால் வீட்டு வெளியில் நிழலான இடத்தில் படுத்துக் கொள்ளலாம்.

2. திராவக ரூபமான ஆகாரம் மட்டும் சாப்பிடவேண்டும்.

3. தாகமாயிருந்தால் சுத்தமான குளிர்ந்த ஜலம் சாப்பிடவேண்டும். தாகமாயிருக்கிறதென்று கூறும் வியாதியஸ்தனுக்கு குடிக்கக் குளிர்ந்த ஜலம் கொடுக்காமலிருப்பது மிகவும் பிசகு.

4. இரண்டு மணி நேரத்திற்கொருதரம் அரை அவுன்ஸ் ஜலத்தில் ஒரு துளி அயொடைன் டிங்சர் போட்டு சாப்பிடவும் (நோயாளி படுத்துக் கொண்டிருந்தால் மருந்து கொடுப்பதற்காகவேனும் எழுப்பக் கூடாது.)

5. தினம் காலையிலும் மாலையிலும், இருவேளை அயொடைன் டிங்சருடன் பெயின்ட் பூபோஸ் (Paint Buboes) கலந்து சாப்பிடவும். வேறெந்த மருந்தும் சாப்பிடக்கூடாது.

ப்ளேக் பரவியுள்ள ஜில்லாக்களில் இனமாக இம்மருந்தை பஞ்சாப் மாகாண கவர்ன்மெண்டார் பட்வாடா செய்தார்கள். அயோடைன் மருந்தை உபயோகிப்பதைப்பற்றி பலவித அபிப்பிராயங்கள் சில வருஷங்களுக்குமுன் பரவியிருந்தன. பஞ்சாப் மாகாண கவர்ன்மெண்டாரே இம் மருந்தை பட்வாடாசெய்ய முன் வந்துள்ளார்களாதலால் இதன் பிரயோஜனத்தைப்பற்றிச் சொல்லவேண்டியதில்லை.

இந்தியா முழுவதற்கும் ப்ளேக் நோய்க்கு மருந்து பட்வாடாசெய்து வந்த பம்பாயிலுள்ள மேஜர்கிளென்லிஸ்டன் என்பவரும் நல்லபிப்பிராயமே கூறுகின்றார்.

பஞ்சாப் மாகாணத்தில் நம்மிலாகாவைச் சேர்ந்தவர்கள் ரிப்போர்ட்டு செய்வதென்ன வென்றால், ப்ளேக் நோய் கண்ட 750 வியாதியஸ்தர்களுக்கு இம்மருந்து கொடுத்ததில் 573 பேர் சுகமடைய 132 பேர்மட்டும் இறந்தார்கள்.

இம்மருந்தை உபயோகித்து அனுபவத்தில் சித்திபெற்ற உத்தியோகஸ்தர்கள் பலர் இம்மருந்து மிகவும் நல்லதென்று அத்தாட்சி கொடுத்திருக்கிறார்கள்.

இந்த ஸமயம் சென்னையில் ப்ளேக் நோய் பரவி வருகின்றது. இச் சென்னையின் சீதோஷ்ண ஸ்திதி அக்கொள்ளைநோய் அதிக மும்முரமாய்த் தன் கொடுமையைச் செய்ய ஏற்றதாகவில்லை. சுமார் 25 வருஷத்திற்குமுன் ஒரு முறை ப்ளேக் சென்னைக்கு விருந்துண்ண வந்தது. சில நாட்களுக்கெல்லாம் அடியுடன் மறைந்துவிட்டது. அதுபோலவே இன்னுஞ் சில நாட்களுக்குள் அது இருந்தவிடம் தெரியாது தொலைந்துவிடும் என்று எதிர் பார்க்கப்படுகிறது. மேலே குறிக்கப்பட்டுள்ள விஷயம் ஒவ்வொன்றினையும் கருத்தில் கொண்டு அதன் பிரகாரம் நடந்து வந்தால் உண்மையில் ப்ளேக்கை வெற்றிகொள்ளலாம் என்பதில் சிறிதேனும் ஐயமில்லை.

கீ. பி. சேஷாத்திரி ஐயங்கார்.

AGRICULTURE AND ITS GREATNESS.

BY MR. V. SWAMINATHA SARMA.

"கிருஷித் தொழிலின் மேன்மை"

உலகத்தில் வசிக்கும் எல்லா ஜீவன்களும் இன்பமாய் வாழ்வதற்கு இன்றியமையாப் பொருள் உணவேயாகும். இதனைப்பெற்று உயிர் வாழ்வதன் பொருட்டு மனிதனன்றி மற்றெல்லாப்பிராணிகளும் உழைக்க வேண்டியது அத்யாவசியகம். இம்மாதிரி பாடுபடும் தொழிலுக்கே "கிருஷி" (பிரயத்தனம்), விவசாயம் என்று பெயர். பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாசம் என்னும் ஐந்து பூதங்களின் சேர்க்கையால் உண்டாவது பயிர். அப்பயிர் வகைகளைப் பன்னிரண்டு வகையாகப்பிரிக்கலாம். அவை கீழ் வருவன.

நன்செய்ப் பயிர்	...	நெல்.
புன்செய்ப் பயிர்	...	துவரை, உளுந்து முதலியவை.
தோட்டப் பயிர்	...	காய்கனிகள்.
விருக்ஷ வர்க்கப்பயிர்	...	ஆல், அரசு, மா, பலாமுதலியவை.
மூலவர்க்கப் பயிர்	...	கிழங்கு தினுசுகள்.
தைலவர்க்கப் பயிர்	...	எள்ளு, ஆமணக்கு முதலியவை.
நார்வகைப் பயிர்	...	காசல், கற்றாழை.
வியாபாரப் பயிர்	...	அவுரி, பருத்தி.
வேலிப்பயிர்	...	கொறுக்காய் புளிக்காய், சிகைக்காய்,
கொடி வகைப்பயிர்	...	மிளகு, வெற்றிலை.

புஷ்ப வகைப்பயிர் ... பலவித புஷ்பங்கள்.
புல்வகைப் பயிர் ... நாணல், புல் தினுசுகள்.

இன்னும் பலவிதமாகவும் பிரிக்கலாம். ஒருவன் விவசாயத்தில் தேர்ச்சியடைய வேண்டுமானால் பூகோள, ககோள, பௌதிக, ரசாயன, வைத்திய, ஜோதிஷ, தாதுவர்க்க, விருக்ஷவர்க்க, பிரக்ருதி சாஸ்திரம் முதலிய நூல்களின் பயிற்சியும் வேண்டும். நிலம், நீர், மழை, கால் நடை, கருவி, உழவு, எரு, விதை முதலியவைகள் விவசாயத்தொழிலுக்கு ஆதாரமானவைகள். அன்றியும் வெயிலும் காற்றும் பயிர் செழித்தோங்கி வளருவதற்கு வேண்டிய பொருள்கள். பனியும் பயன்தரத்தக்கதே.

எல்லாத் தொழில்களிலுஞ் சிறந்து, நாடு நகரங்களைச் செழிப்பித்து, கோயில் குளங்களைச் சிறப்பித்து மாட மாளிகை கூட கோபுரங்களை எழில் பெறச் செய்து, எட்டுவிதச் செல்வங்களுக்கும், முப்பத்திரண்டு தர்மங்களுக்கும், எல்லாவித புண்ணியச் செயல்களுக்கும் காரணமாய் நிற்பதும் பயிர்த்தொழிலேயாகும். பசி என்று வந்தவனின் கஷ்டத்தைக் கிருஷிகன் ஒருவனே ஆற்றவல்லான் என்றால் எத்தொழிலையும் விட இத்தொழிலே சிறந்தது என்பது சொல்லாமலே விளங்கும்.

இப்பேர்ப்பட்ட மேன்மையினையுடைய கிருஷித் தொழிலுக்குரிய குடிவளமோங்கினால் தானே கொற்றவன் கோலுயர்ந்தோங்கும். பிரஜைகளால் செலுத்தப்படும் பகுதிப் பணத்தாலன்றோ அரசன் பொக்கிஷம் நிரம்புவது? இவ்வகையிற் சேர்த்த பொருளல்லவா பொது நன்மைக்குரிய பாதைகள், பாலங்கள், பாடசாலைகள், வைத்தியசாலைகள், சத்திரங்கள், மடங்கள் முதலியவைகள் செழித்தோங்குவனவாயின. அதிகமாகச் செல்வானேன்? கஷ்ட ஜீவியாகிய விவசாயியின் கஷ்டார்ஜிதத்தைப் பாகித்துக் கொள்ளாத ஜீவப்பிராணி இவ்வுலகினில் உள்ளதா?

இத்தகைய சிறந்த தொழிலை கல்வி கற்றவர்களும் செல்வமுற்றவர்களுமான நம் நாட்டுக் கனவான்கள் "ஜீவிக்கத் தெரியாதவர்கள் கஷ்டப்பட்டுச் செய்யுந் தொழில்" எனப் பராமுகஞ் செய்திருந்தனர். இன்னும் சிலர் அப்படியே தான் இருக்கின்றார்கள் என்றே சொல்லவேண்டும். இத்தேசத்தில் இப்படி க்ஷீணித்து வர ஐரோப்பா, அமெரிக்கா, சீனா ஜப்பான் முதலிய தேசங்கள் அநேகம் பெரியவர்களின் பிரேரணையினால் வருஷா வருஷம் விதவிதமான சீர்திருத்தங்கள் செய்துவருகிறார்கள்.

இதற்கு உதாரணமான விவசாயத்தின் அபிவிருத்திக்கென்று லண்டனில் ஓர் பிரபு தன் முழு ஆஸ்தியையும் தத்தஞ் செய்த பேருபகாரத்தைக் கேள்வியுற்றதும் நமக்கு வரும் சந்தோஷத்திற்கு அளவேது? இம்மாதிரியான புண்ணிய புருஷர்களின் நன்கொடையினாலன்றோ ஏழைக் குடியானவர்களின் குடித்தனங்கள் ஈடேற வேண்டும்.

இந்நாட்டுத் தனவான்கள் வர்த்தகத்தில் நோக்கம் வைத்து அவ்வகையில் பொருள் சம்பாதிக்க வேண்டி எடுத்துக்கொள்ளும் பிரயாசையில் கால்பங்காயினும் பயிர்த் தொழிலில் கண் வைப்பாராயின் இப்பொழுது ஐரோப்பாவில் நடக்கும் மஹா யுத்தத்தின் காரணமாக நம் நாட்டிற்கு ஏதேனும் பஞ்சம் நேரிடுமோ என்ற திகில் நீங்கிப்போகும். பழக்கத்தில் கிருஷித் தொழிலில் அனேகரது கவனம் போகாதபடியினால் ஒரு ரூபாய்க்கு இரண்டு படி அரிசியும் கிடைப்பது அருமையாய்விட்டது. ஏழைக் குடியானவர்களால் என்ன முடியும்? எலும்பொடித்து நெற்றி வியர்வை நிலத்தில் விழ உழுது பயிரிடும் கிருஷிகளுக்குச் சமயத்தில் சகாயமுண்டானால் நாட்டு வளம் ஏன் சிறந்து விளங்காது?

இதற்குத் திருஷ்டாந்தமாக சீன தேசத்து ச்சக்ரவர்த்தி நிலத்தை உழுவதற்கென்றோர் நல்ல நாள்பார்த்துத் தன் கீழுள்ள மந்திரி பிரதானிகள் யாவரும் தன் செய்கையைப் பின்பற்றி நிற்க கழனியில் தன் கையால் பொற் கலப்பையொன்றை யூன்றி உழுது குடிகளுக்கு ஓர் உற்சாகத்தை உண்டுபண்ணுவது வழக்கமாம். அது போல் இத்தேசத்துச் சீமான்கள் தங்களாலியன்ற யோசனைகளும், பண உதவியும் செய்வார்களாயின் எப்பேர்ப்பட்ட சங்கடங்களுக்கும் நம் தேசம் ஈடு கொடுக்கும் என்பதற்குச் சந்தேகமுண்டோ? மேழிச் செல்வம் கோழைபடாது என்ற ஔவையார் வாக்குக்கு இழுக்கு வருமோ.

நமது நாட்டில் பிரதி வருஷமும் ஜனத்தொகை அதிகமாகிக்கொண்டு வருவதால் அதற்குத் தக்கபடி சாகுபடி நிலங்களும் விருத்தியாக வேண்டியது அவசியமாதலின் இனி இந்நாட்டில் கரம்பு நிலம் கண்ணில் படலாகுமா? இது வரையிலும் ஏதோ சில காரணங்களினால் பூசாரம் குறைந்து வந்த நிலங்களை அப்படியே வைத்துக் கொண்டிராமல், நன் முயற்சி செய்து எரு முதலிய இந்திரிய வஸ்துக்களைச் சேர்ப்பதினாலும், வெவ்வேறு மண் வகைகளை நிலத்தின் நிலைமைக்குத் தகுந்தபடி கலந்து பண் படுத்துவதினாலும், இதர உபாயங்களினாலும் அக்குறைவுகளை நிறைவு செய்து கொள்ள வேண்டும்.

தற்சமயம் இந்து தேச வாசிகள் கஷ்டத்துக்குட்பட நேரிட்டிருக்கின்றதாயினும் விவசாயத்திற்கு முக்கியமான சூரிய வெப்பமும், நீர் வற்றாத ஜீவநதிகளின் இடையறாப் பாய்ச்சலும் இயற்கையினாலே யமையப்பெற்ற நம் நாடு மறுபடியும் மாதமும்மாரி பெய்து கொண்டிருக்குங் காலத்தில் எத்தகைய செழிப்பினை அடைந்திருந்ததோ அத்தகைய செழிப்பினை அடைய வேண்டுமாறு தெய்வத்தைப் பிரார்த்திக்கின்றோம்.

வே. சாமிநாத சர்மா.

COMMERCE AND INDUSTRY.

வர்த்தகமும் கைத்தொழிலும்.

ANCIENT INDIA AND GOLD MINING ANTS.

By AN ANTIQUARIAN.

பூர்வீக இந்தியாவில் பொன்-தோண்டும் எறும்புகள்.

இந்தியாவில் பொன்-தோண்டும் எறும்புகளென்று சில ஜந்துக்களைப் பற்றி பாரஸீகர்கள் எழுதியிருந்ததை ஆதாரமாகக் கொண்டு, பூர்வீக கிரேக்கு நூலாசிரியரான ஹெராடொடஸ் என்பவரும் தாம் எழுதிய நூல்களில் அவைகளைப்பற்றிக் கூறியிருக்கிறார். அவருக்குப் பின் வந்த கிரேக்கு ரோமன் நூலாசிரியர்களான ஸ்ட்ராபோ, அர்ரியான், டியோகிரைஸோஸ்டம் முதலிய பலரும், ஹெராடொடஸ்ஸை யனுசரித்து, அவரவர்களுடைய நூல்களில், பொன்-தோண்டும் எறும்புகளைப்பற்றி கூறியிருக்கிறார்கள். பொன்-தோண்டும் எறும்புகளைப்பற்றி ஹெராடொடஸ், பின்வருமாறு சொல்லுகிறார்:—

"பக்தியிகா தேசத்தைச் சேர்ந்த, காஸ்பதிரஸ் நகரத்து எல்லையில் ஒருவித இந்திய ஜாதியார் இருக்கிறார்கள். அவர்கள் மற்ற ஜாதியாரை விட யுத்தத்தில் அதிகப் பிரியமுள்ளவர்கள். அந்த ஜாதியார் தங்கத்தைக் கொண்டு வரும்படி அனுப்பப்படுகிறார்கள். அவர்கள் வசிக்கும் அந்தப் பாகத்தில் தான் பாலைவனம் இருக்கிறது. அப்பாலைவனத்தின் மணலுக்குள் நாய்களைவிடச் சிறியவைகளும், நரிகளைவிடப் பெரியவைகளுமான, பெரிய எறும்புகள் வசிக்கின்றன. அவ்வித எறும்புகளில் பல பாரஸீக அரசனிடம் இருக்கின்றன. அவைகள் அனைத்தும், வேடர்களால், பிடிக்கப்பட்டவைகள். இந்த எறும்புகள் மணலுக்குள் ஆழத்தில் குழிகள் பறித்து அக்குழிகளில் வசிக்கின்றன. இந்த எறும்புகள் உருவத்தில் கிரேக்கு தேசத்து எறும்புகளை ஒத்திருக்கின்றன. அவைகள் குழிகளைப் பறிக்கும்பொழுது மணலை எறும்புப் புற்றுகள்போல தரை மட்டத்தின் மேல் குவிக்கின்றன. அந்த மணற் குவியல்களில் தங்கம் கலந்திருக்கிறது. இந்தியர்கள் அவ்விதத் தங்கமணலைக் கொண்டு வருவதற்காக அம்மணற் காட்டின் வழியாகப் பிரயாணம் போகும்பொழுது மூன்று ஒட்டகங்களைக் கொண்டுபோவார்கள். தங்கம் கிடைக்கும் ஸ்தலத்திற்குச் சென்று தங்கம் கலந்திருக்கும் மணலைச் சாக்குகளில் நிரப்பி அவைகளை ஒட்டகங்களின் மேல் ஏற்றிக்கொண்டு வேகமாய்த் திரும்பி விடுகிறார்கள். தங்கங் கலந்த மணலை அவர்கள் எடுத்துக்கொண்டு போகிறார்கள் என்பதை மோப்பத்தால் அறியும் அவ்வெறும்புகள், அவர்களைப் பிடிப்பதற்காகத் தொடர்ந்து போகும். அவர்களைத் தொடர்ந்து போவதற்காக, எறும்புகள் தங்களுடைய கூட்டங்களைச் சேர்த்துக்கொண்டிருக்கும் சமயத்தில் இந்தியர்கள்

161435

வேகமாய் ஓடிப்போவார்கள். அப்படிக்கில்லாவிட்டால், தங்கத்தைக் கொண்டு வருவதற்காகச் செல்லும் எவரேனும் அவ்வெறும்புகளினிடமிருந்து தப்பித்துக்கொண்டு வரமாட்டான். இவ்விதமாய் இந்தியர்கள் ஏராளமான தங்கத்தைக்கொண்டு வந்து சேர்க்கிறார்கள்" என்று பாரஸீகர்கள் சொல்லுகிறார்கள்.

இந்தியாவில் பொன் தோண்டும் எறும்புகளைப்பற்றி பரம்பரையாய் வழங்கிவரும் கதைகளை மத்தியகாலங்களில் எழுதப்பட்டிருக்கும் நூல்களிலும், அராபிய ஆசிரியர்களால் எழுதப்பட்டிருக்கும் நூல்களிலும் 16-வது நூற்றாண்டு வரையிலும் எழுதப்பட்டிருக்கும் துருக்கிய ஆசிரியர்களின் நூல்களிலும் காணலாம். 18-வது நூற்றாண்டின் கடைசி பாகத்தில், ஹெராடொடஸ்ஸால் எழுதப்பட்டிருக்கும் நூல்களைப் பிரெஞ்சு அக்காடெமி மெம்பர்களில் ஒருவரான வாச்செர் என்பவர் மொழிபெயர்த்து பிரசுரித்திருக்கிறார். கிரேக்கு நூலாசிரியரால் எழுதப்பட்ட கதைகளைத் திரஸ்காரஞ் செய்யக்கூடாதென்பதை அந்நூலில் அந்த வாச்செர் வற்புறுத்தியிருக்கிறார். பொன்தோண்டும் எறும்புகள், என்பவை கறையான் பூச்சிகளையன்றி (White ants) வேறல்லவென்று 1788-வது வருஷத்தில் மேஜர் ரென்னல் ஸ்திரப்படுத்திச் சொல்லியிருக்கிறார். பொன் தோண்டும் எறும்புகள், எறும்புகளல்லவென்றும், அவைகள் கழுதைப் புலிகள், நரிகள், அல்லது குள்ள நரிகளைப்போன்ற பிராணிகளாகுமென்றும், 19-வது நூற்றாண்டின் ஆரம்பத்திலிருந்த பழைய காலத்துச் சின்னங்களை ஆராய்ச்சி செய்கிறவர்கள் அபிப்பிராயப்பட்டார்கள். இந்தியாவின் பூர்வீக சமஸ்கிருத நூல்களில் இவ்வெறும்புகளைப்பற்றிக் கூறப்பட்டிருக்கின்றனவென்று வில்ஸன் கூறியிருக்கிறார். உதாரணமாக மஹாபாரதத்தில், யுதிஷ்டிர மஹாராஜாவுக்கு, இந்தியாவின் வடகோடிப் பிரதேசங்களிலுள்ள ஜாதியாரால் அனுப்பப்பட்ட பலவித காணிக்கைகளில் பைபீலிகாத் தங்கமடங்கிய மூட்டைகள் இருந்தனவென்று சொல்லப்பட்டிருக்கிறது. (பிபீலிகா) எறும்புகளால் சேகரிக்கப்பட்டவைகளாததால் அவைகளுக்கு பைபீலிகாத் தங்கம் என்று பெயர் வழங்கிவந்தது.

ஒரு நூற்றாண்டுக்கு முந்தி மால்டி ப்ரன் என்ற ஒரு பிரெஞ்சு மேதாவி, எறும்புகள் என்ற பெயருடன் வழங்கி வந்தவைகள் உண்மையில் எறும்புகளல்ல. ஆனால் அவைகள் மனிதவர்க்கத்தைச் சேர்ந்த ஒரு ஜாதியாராவார்கள் என்று சொல்லுகிறார்.

கிரேக்கு நூலாசிரியர் சொல்லுகிறபடி பக்தியிகா தேசத்தைச் சேர்ந்த கஸ்பதிரஸ் என்ற நகரத்தண்டை தான் அவர்களுடைய இருப்பிடம். கஸ்பதிரஸ் என்பது கஷ்யபுரம் அல்லது இப்பொழுது வழங்கி வரும் காஷ்மீர தேசத்தைக் குறிக்கிறது. பக்தியிகா என்பது பாக்டம் என்பதைக் குறிக்

கிறது. போஷ்டன் என்ற பெயர் எப்படி மேற்கு ஆப்கானிஸ்தானத்தைக் குறிக்கிறதோ அப்படியே, பாக்டம் என்னும் பெயரும் ஆப்கானிஸ்தானத்தின் கிழக்குப் பிரதேசத்தைக் குறிக்கும் ஆப்கன் பெயராக இருக்கிறது. போஷ்டன் என்ற இந்த வார்த்தையினால் தான் பட்டாணிகள் பேசும் பாஷைக்கு புஷ்டு என்று பெயர் உண்டாயிருக்கிறது.

பூர்வகாலம் முதற்கொண்டு, காஷ்மீர தேசத்து ராஜாக்கள் திபேத்து தேசத்திற்குள் புகுவதற்காகப் பலமுறை பிரயத்தனஞ் செய்துவந்தார்கள். பொன் தோண்டும் எறும்புகள் வசிக்கும் தேசம் இந்தியாவின் வடகோடியிலிருக்கும் தேசமென்று ஹெராடொடஸ் சொல்லியிருக்கிறார். அதனால் அந்த தேசத்தைத் திபேத்து தேசம் என்று சொல்லுவதில் என்ன தடை இருக்கிறது. பைபீலிகா தங்கத்தைக் கொண்டு வந்தவர்கள் காஸாஸ் என்னும் ஜாதியாராவார்கள் என்று மஹாபாரதத்தில் கூறப்பட்டிருக்கிறது. காஸாஸ் என்ற ஜாதியார், காஸ்மீர தேசத்துக்கடுத்தாற் போலிருக்கும் பிரதேசத்தில் வசித்து வந்தார்கள் என்பது ராஜதரங்கினி அல்லது காஸ்மீர தேச சரித்திர நூலை வாசிக்கத் தெரியவரும். அதே தேசத்திலிருந்து யுதிஷ்டிரருக்கு அனுப்பப்பட்ட வேறு காணிக்கைகளில், ஹிமயமலைப் புஷ்பங்களிலிருந்து இறக்கப்பட்ட மதுரமான தேனும் திபேத்துப் பிராந்தியத்தில் சஞ்சரிக்கும் யாக் என்னும் சடை எருமை வாலின் நுனியிலிருக்கும் மயிரினால் செய்யப்படும், சந்திரனைப்போல வெண்மையும் பிரகாசமுமான சாமரங்களும் அடங்கியிருந்தன வென்று சொல்லப்படுகிறது. திபேத்து நாட்டைச்சோதிப்பதற்கு 1865-ம் வருஷத்தில் பிரிட்டிஷ் கவர்ன்மெண்டார் சில பண்டிதர்களை அனுப்பினார்கள். அவர்களில் ஒருவர் காயலாவால் முன்செல்ல முடியாமல் நாறி கோர்ஸம் என்ற மாகாணத்திலுள்ள ஒரு தங்கம் கிடைக்குமிடத்தில் தாமதிக்கும்படி நேரிட்டது. அது திபேத்திய சுரங்கக்காரர்கள் வசிக்கும் முக்கிய ஸ்தலம். அவர் அங்கே தங்கி, திபேத்திய தங்கச் சுரங்கங்களில் நடந்தேறும் வேலைகளின் விசேஷத்தை அறிந்து கொள்ளுவதற்கு அவகாசம் பெற்றார். 1868-ம் வருஷத்தில் மற்றொரு பண்டிதர் திபேத்திலுள்ள தங்கம் கிடைக்கும் மற்ற ஸ்தலங்களைப் பார்க்கச் சென்றார். திபேத்தைச் சேர்ந்த ஒரு மாகாணத்திற்கு இன்னும் தங்கம் விளையும் தேசமென்றே பெயர் வழங்கி வருகிறது. ஒரு பாலை வனத்தின் மத்தியில் பொன் தோண்டும் எறும்புகள் இருக்கின்றனவென்று ஹெராடொடஸ் சொல்லியிருக்கிறார். திபேத்தில் தங்கப் கிடைக்கும் பிரதேசம் விசாலமான இடமென்று சொல்லப்படுகிறது. திபேத்து நாட்டுச் சுரங்கத்தில் வேலை செய்கிறவர்கள் அடியிற்கண்ட காரணங்களினால் பிராணிகள் என்று வழங்கப்படுகிறார்கள். குளிர் காலங்களில் சுரங்கங்களில் வேலைசெய்வோர்கள் குளிரைத் தாங்குவதற்காக மிருகங்களின் மிருதுவான மயிர்களால் செய்யப்பட்ட உடுப்புகளை அணிந்து

கொள்ளுகிறார்கள். அப்படிக்கில்லாவிட்டால், அக்குளிரைச் சகித்துக் கொண்டு வேலை செய்வதற்கு எவராலும் முடியாது. குளிருக்கு அடக்கமாயிருக்கும்பொருட்டு, தலையிலிருந்து கால் வரையிலும் மான்தோலை தரித்துக்கொள்ளும் லாப் லாண்டர்களை டார்னேயஸ் ஜாதியார் அவர்களைச் சில மிருகங்களென்றே பாவித்து வரும்பொழுது, குளிருக்காக மிருகங்களின் மிருதுவான தோலைத் தரித்துக்கொள்ளும் திபேத்துச் சுரங்கங்களில் வேலை செய்கிறவர்களையும் அம்மாதிரி பாவிப்பதில் என்ன ஆச்சரியம். பனிக்காற்று அடிப்பதினால், திபேத்து நாட்டில் குளிர் மிகுதி. அந்தக் குளிரைப் பொறுக்காமல் அங்கிருப்பவர்கள் பூமிக்குள் 7-அல்லது 8-அடி ஆழத்திற்குக் குழிகளைப் பறித்து அவைகளில் வசித்து வருகிறார்கள். அவர்களைப் பொன் தோண்டும் எறும்புகள் என்று ஹெராடொடஸ் சொல்லுகிறது பொருத்தமாகும். சந்திரகுப்தன் அரசு செலுத்துங்காலத்தில் பாடலி புத்திரத்தில் வசித்த மெகாஸ்தினீஸ் என்ற கிரேக் தூதன் இந்தப் பொன் தோண்டும் எறும்புகளைப்பற்றி பின்வருமாறு எழுதுகிறார். "குளிர் காலத்தில்தான் அந்த எறும்புகள், குழிகளிலிருந்து மணலை எறும்புப் புற்றுகள் போலக் குழியின் முகத்துவாரத்தில் குவிக்கின்றன." அந்த எறும்புகள் குளிர் காலத்தில் தங்கம் கலந்த மணலைக் குழிகளிலிருந்து புற்றுகளுக்குமேல் குவிக்கின்றன. இந்தியர்கள் அவைகளைக் கோடைக்காலத்தில் எடுத்துக்கொண்டு போகிறார்கள் என்று பிளினி என்பவர் மேற்கண்ட விஷயத்தை ஸ்திரப்படுத்துகிறார். தற்காலத்து யாத்திரிகர்கள் பின் வருமாறு சொல்லுகிறார்கள்:—குளிர் மிகுதியாயினும் அதைக் கவனியாமல் திபேத்து சுரங்கங்களில் வேலை செய்கிறவர்கள் குளிர் காலத்திலேயே வேலைசெய்யப் பிரியப்படுகிறார்கள். கோடைகாலத்தில் அவர்களுடைய கூடாரம் 300 ஆக இருக்கும். குளிர் காலத்தில் 600 ஆக உயரும். பொன் தோண்டும் எறும்புகள் வேட்டையாடி ஜீவிக்கின்றனவென்று மெகெஸ்தெனீஸ் எழுதுகிறார். திபேத்துச் சுரங்கங்ளிகல் வேலை செய்கிறவர்கள், சடை எருமை முதலிய காட்டு மிருகங்களை வேட்டையாடி அதனால் ஜீவிக்கிறார்கள். தங்கங்கலந்த மணல் குவியல்களை பக்கத்தில் வசிக்கிறவர்கள் வந்து திருடிக்கொண்டு போகாமலிருப்பதற்காக அவர்கள் காவல் நாய்களை வளர்க்கிறார்கள். இந்தத் திபேத்துக்காவல் நாய்கள் கழுதைகளைப்போல அவ்வளவு பெரியவைகளாய் இருந்தனவென்றும், காட்டு மிருகங்களை வேட்டை யாடுவதில் அவைகள் கிரம்ப சாமர்த்தியமுள்ளவைகளென்றும், M. போலோ என்பவர் எழுதுகிறார்:—இந்த நாய்களின் வேகத்தையும், மூர்க்கத்தையுங் கண்டுதான் பொன் தோண்டும் எறும்புகள் என்று சொல்லப்படும் மிருகங்கள் தங்கத்தைத் திருடிக் கொண்டு போகிறவர்களைப் பிடிப்பதற்காக வேகமாகத் தொடர்ந்து போகுமென்று ஹெராடொடஸ் குறிப்பிட்டிருக்கிறார்போல் காண்கிறது.

இந்த வேட்டை நாய்களில் சில நாய்கள், பாரஸீக அரசரின் அரண்மனைக்குக் கொண்டுபோகப்பட்டிருக்கலாம். மஹா அலெக்ஸாண்டரின் தோழரும் கூடவந்தவருமான நியார்கஸ் என்பவர் இந்தியாவை விட்டுப் போனபொழுது, அவர் பின்வருமாறு எழுதியிருக்கிறார்:—நான் இந்தியாவில் இருக்கையில், பொன்தோண்டும் எறும்பைப் பார்த்ததில்லை யாயினும் அந்த எறும்புகளில் ஒன்றின் தோலைப் பார்த்ததுண்டு. அது ஒரு சிவிங்கியின் தோலைப்போலிருந்தது. திபேத்துச் சுரங்கங்களில் வேலை செய்கிறவர்களின்தோல் சிவிங்கியின் தோலை எப்படி ஒத்திருக்கும் என்ற சந்தேகத்திற்குப் பரிகாரம் அடியில் வருமாறு:—மேல் அஸ்ஸாமில் உயர்ந்த உத்தியோகத்தை வகுத்துவந்த கர்னெல் ஹால்ராய்ட் என்பவர் ஒரு காலத்தில் அவருடைய விருந்தாளியாக இருந்த ஒரு ஐரோப்பியருக்கு அப்பொழுதுதான் ஹிமய மலையைக் கடந்துவந்த திபேத் தேசத்தவர்களில் சிலரைக் கொடுத்தார். அவர்கள் சடை எருமையின் தோல்களை அணிந்திருந்தார்கள் கொம்புகள்கூட அத்தோலுடன் இருந்தன. அக்கொம்புகள் அவர்களின் தலைக்குமேல் நீட்டிக்கொண்டிருந்தன. அதைத்தான் சிவிங்கியை யொத்த தோல் என்று நியார்க்ஸ் சொல்லியிருக்கக்கூடும்.

யுதிஷ்டிர மகாராஜாவுக்கு மயிரடர்ந்த கொம்பையுடைய கங்கர்கள் காணிக்கைகளைச் செலுத்தியிருக்கிறார்கள் என்று மகா பாரதத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. கங்கர்கள் என்ற ஜாதியார் கிழக்கு திபேத்தில் வசிப்பவர்கள். அவர்கள் சடை எருமைகளின் கொம்புகளுடன் சேர்ந்த தோல்களை உடையாகத் தரித்துக்கொள்ளுகிறவர்கள். கிரேக்கு தேசத்து சரித்திர நூலாசிரியர்களால் சொல்லப்பட்ட பொன் தோண்டும் எறும்புகள் என்பவை, எறும்புகளுமல்ல; பிராணிகளுமல்ல; திபேத்துச் சுரங்கங்களில் வேலை செய்யும் மனிதவர்க்கத்தைச் சேர்ந்தவர்களாவார்கள்.

ஆனால் அவர்கள் குளிர் தேசத்தில் வசித்து வந்ததினால் அவர்களுடைய நடை, உடை பாவனைகள் முழுவதும் மாறியிருந்தன. அதனால் அவர்கள் மனிதவர்க்கத்தில் சேர்க்கப்படாமல், பொன் தோண்டும் எறும்புகளென்றும் மிருகங்கள் என்றும் பாவிக்கும்படியாய் இருந்தார்கள்.

புராதனப்பிரியன்.

இனிய தமிழ் நவீனங்கள்.

ஜகதீசன் 1—4—0. நளினாக்ஷி 0—5—0. ஸரோஜா 0—5—0.

கோகிலாம்பாள் 0–12—0. மதிமுகி 0–10—0. மனோரமா 0—8—0.

ஸ்ரீரங்கா அண்டு கோ., 4, வெங்கடய்யன் தெரு, சென்னை.

CO-OPERATION.

கூட்டுறவு.

ஒரு கிராம பஞ்சாயத்தாருக்கு ஒரு மீட்டிங்கு.

(80-ம் பக்கத் தொடர்ச்சி.)

செட்டியார்—வேண்டியதேயில்லை. உள்ளதை வைத்துக்கிட்டுக் கொண்டுவித்தால் போதும். ஏராளமாய் பணம் வாங்கக்கூடாது. அப்புறம் பொருப்பு யாருடையது? வேண்டாம்.

இராமஸ்வாமி பிள்ளை—இப்படிச்சொன்னால் சங்கம் எப்படி நடக்கும். மனுக்களுக்கு பைசல் சொல்லுகிறதுமில்லை, ஊரில் டிபாஸிட்டும் கிடைக்கிறதில்லை, கொடுக்கிறேன் என்று சொன்னால் டவுன் பாங்கிலும் வாங்குவதில்லை, இதென்ன இப்படிச் சொன்னால் சங்கம் விருத்தியாவது எப்படி?

அய்யாவய்யர்—ஸெக்ரிடரி கோபித்துக் கொள்ளுகிறார். செட்டியாரே! இந்தத்தடவை மட்டும் வாங்குவோம்.

இன்ஸ்பெக்டர்.—சங்கம் (Progress) ஆகவேண்டும், பணங்கிடைத்தால் டவுன் பாங்கிக்கு கொடுத்துவிடலாம். நிர்ப்பந்தம் கிடையாது.

செட்டியார்.—வட்டி கூட 100-க்கு ரூ. -7½ கேட்கிறார்கள், குறைத்துக் கொடுத்தால் என்ன? பணந்தான் ஏராளமாயிருக்கே.

இன்ஸ்பெக்டர்.—கொஞ்சங் கவனிக்கவேண்டும், டவுன் பாங்கியில் ரூ. 100-க்கு ரூ. 6-வட்டிக்கு டிபாஸிட்டு வாங்குகிறார்கள், 100-க்கு ரூ 7½-க்கு சங்கங்களுக்கு கொடுக்கிறார்கள், 100-க்கு ரூ. 1½-லாபம். நீங்கள் 7½-க்கு வாங்கி 9½-க்கு கொடுக்கிறீர்கள், உங்களுக்கு 1½-லாபம். இதிலென்ன அக்கிரமமிருக்கு, உங்களுக்குச் செலவும் குறைச்சல்.

செட்டியார்.—ஓகோ! அப்படியா, ஏராளமாய் பணம் வாங்கவில்லையோ டவுன் பாங்கில் இனாமாய் ஸர்க்காரில்? அப்படியல்லவா எண்ணிக் கொண்டிருந்தேன்.

இன்ஸ்பெக்டர்.—இல்லவே இல்லை, எல்லாம் டிபாஸிட்டுத்தான், டவுனில் டிபாஸிட்டுகள் வருகிறது. பணத்தட்டு அவர்களுக்குக் கிடையாது.

காரியதரிசி.—அப்படியானால் ரூ. 1,500-க்கு மனு அனுப்புகிறோம், inspector சீக்கிரம் அனுப்பினால் காரியம் ஆகும். (யாரோ ஒருவர் ஸெக்ரிடெரி காதில் இரகசியமாய் ஏதோ சொல்லிவிட்டுப் போய்விட்டார்) மறந்துவிட்டேன். பஞ்சாயத்து மெம்பர் பஞ்சாபகேசய்யர் ரூ. 200

கடன் கேட்கிறார். அவசியமாம், அதுதான் இப்போது அந்தப் பையன்வந்து சொல்லிப் போனது.

இராமஸ்வாமி பிள்ளை.—அவருக்கு எதற்கு பணம்? பஞ்சாயத்து மெம்பர்கள் கூடியவரையில் சங்கத்தில் பணம் வாங்காமலிருப்பது நல்லது. எப்பொழுதோ படித்தேன், சென்னை கான்பிரன்ஸில் ஒரு தீர்மானம். பஞ்சாயத்து மெம்பர்களுக்கு கடன், வேண்டுமானால் ஜெனரல் மீட்டிங்கில் வைத்துத்தான் கொடுக்கவேண்டு மென்று சொல்லப்பட்டது.

இன்ஸ்பெக்டர்.—ஆம் ஆம், ஒரு தீர்மானம் எழுதப்பட்டிருந்தது, பஞ்சாயத்து மெம்பர்கள் கடனே வாங்கக்கூடாதென்ற நிர்ப்பந்தம் ஏற்படுத்துவது அவ்வளவு நியாயமில்லையென்று நினைக்கிறேன். சில இடங்களில் 10-பேர் சேர்ந்து சங்கம் ஸ்தாபிக்க மனு செய்கிறது. ரிஜிஸ்டரானவுடன் டிஸ்டிரிக்ட் பாங்கியிலிருந்து ரூ. 2,000, 3,000 வாங்கி இவர்கள் பிரித்து எடுத்துக் கொள்ளுகிறது, இப்படிச் செய்தால் ஊரிலுள்ள பலருக்குச் சங்கத்திலிருந்து பணங்கிடைப்பது சாத்தியமில்லை. இதற்காகவே மேலே சொன்னமாதிரி ஒரு ரூல் ஏற்படுத்த வேண்டுமென்று பிரேரேபணை செய்யப்பட்டது.

செட்டியார்.—நான் தருகிறேன் வாங்கிக் கொள்ளட்டும், இச்சங்கத்தில் வாங்குவானேன்?

காரியதரிசி.—பஞ்சாபகேசய்யர் கோபித்துக் கொள்ளுவார். சங்கத்திற்கு நாம் பாடுபடுவது, நமக்கு சமயத்தில் பணம் கிடையாதென்று சொல்லுவதாவென்று. அன்றே நான் ஜாடையாய்ச் சொன்னபோது கூறினார். இந்தத்தடவை கொடுத்து விடுவோம்.

வேம்புவய்யர்.—சரி, சாங்கிஷன் செய்யலாம்.

அய்யாவய்யர்.—நேற்று சப்மாஜிஸ்ட்ரேட் தண்டித்தாரே அந்தப் பயலை—சரியான தண்டனை, இப்படி 4-பேரை மடக்கினால் தான் ஊரடங்கும்.

செட்டியார்.—சாக்ஷி ருசு, ருசுவென்று கேட்டால், எங்கேயிருந்து வரும். திருடுகிறவன் ஆளைவைத்துக் கொண்டா திருடுவான். என்னமோ அப்பீல் பண்ணினால் என்ன ஆகிறதோ? அதை யார் கண்டார்கள்.

காரியதரிசி.—செட்டியார், கொஞ்சம் மன்னிக்க வேண்டும், மனுக்களிருக்கின்றன, சின்னையா பிள்ளை ரூ. 50 கடன் கேட்கிறார், முருகய்யா பிள்ளை ஜாமீன் பேரில்.

வேம்புவய்யர்.—முன் அவர் வாங்கி யிருந்தாரே, சரியாய் வந்ததோ?

காரியதரிசி.—வட்டி எல்லாம் ஜாடாவாய் கொடுத்துவிட்டார், நாளையோடு டைம் முடிவாகிறது. இந்தக் கடனை வாங்கி முன் கடனுக்கு அப்படியே வரவுவைத்துக் கொள்ளும்படி சொன்னார்.

இராமஸ்வாமி பிள்ளை.—அது என்ன! சரியாயில்லையே? இப்படி வரவு வந்ததுபோல் கணக்கில் காட்டலாமா? அதென்னமோ எனக்கு சரியாய் தோன்றவில்லை.

செட்டியார்.—அதிலென்ன பாதகம், இன்றைக்கு பணங்கொடுத்துவிட்டு நாளையதினம் கடன் வாங்குகிறது மாதிரிதானே.

இன்ஸ்பெக்டர்.—இதற்கு (Book adjustment) என்று சொல்லுவது.. இப்படிச் சில சங்கங்களில் செய்கிறார்கள். அது பிசகு கூட்டுறவு சங்கங்களில் ஏற்படக்கூடிய குறைகளில் இது ஒன்று, இக்குறையில்லாமல் பார்த்துக் கொள்ளவேண்டும். டைம்படி செலுத்த முடியாவிட்டால் காரணத்தைக் கண்டெழுதி ஒரு பாகத்தை செலுத்திவிட்டு மறு டைம் பெற்றுக் கொள்ளலாம்.

வேம்புவய்யர்.—அவர் கேட்கும் விதம் கடன் கொடுக்க முடியாதென்று மனுவைத் தள்ளிவிடலாம். (இன்னும் வரும்.)

EDUCATION.

கல்வி.

THE TEACHER—A GARDENER.

By Mr. K. P. SESHADRI AIYANGAR,
Teacher, Muthialpet High School, Madras.

உபாத்யாயர்—ஒரு தோட்டக்காரன்.

(22-ம் பக்கத் தொடர்ச்சி.)

இவ்வுலகினில் மிகவும் அந்தமும் விந்தையுமான உருவங்களை உண்டாக்கவல்லவர்கள் மூவர் தான் என்று ஒருவாறு தெளியலாம். அம்மூவரில் கட்டடங்களை நிரூபணஞ் செய்யும் ஆற்றலுள்ளவன் முதலானவன். அவன், தான் கட்டி முடிக்கத்தொடங்கிய கட்டடம் பூர்த்தியாகும் வரை தனக்கு வேண்டிய செங்கல்களையும் கருங்கல்களையும், மரசாமான்களையும் சேகரித்து வைத்துக்கொண்டு, இவற்றினை வேண்டியவாறு சரிப்படுத்தித் தன் மனதில் கல்பித்து நிர்மாணஞ்செய்த கட்டடம் நிலத்தில் அழகியதோர் அருங் கட்டடமாக அமைந்து முடியும் வரை, ஒவ்வொன்றாகச் சேர்த்துச் சேர்த்துக் கட்டிமுடிக்கின்றான். அவன்தான் சிற்பி. கரடு முரடான பெரிய கற்பாறையை எடுத்துத் தன் மனதில் எண்ணிய உருவம் எண்ணியபடியே எதிரில் நிற்கும்வரை செதுக்கி அவ் வுருவத்தை வெளியில் யாவரும் கண்டு உவக்கச் செய்யும் கற்சிற்பியே இரண்டாவதாவான். சமமாயிராததும் கரடுமுரடானதுமான உலோக வகையிற் சேராத, மென்மை

யான தாவரவர்க்கங்களில் உழைத்து அபிவிருத்தியடையும் தோட்டக்காரனே மூன்றாவதாவான். அவன் தன் தோட்டத்தில் சிறுமீன் சினையினும் நுட்பமாகிய விதைகளை நடுகின்றான். அந்தச் சின்னஞ் சிறிய விதைக்குள் மனிதனது மனதினால் சிந்திக்க ஒண்ணாததும், அறிவிற்கு எட்டாததும், கைத்திறத்தினால் செய்து முடிக்கொணாததுமான ஒரு தனிப் பெரும் அகண்ட உருவம் அடைந்துள்ளது. அவன் அப்படிப்பட்ட விதையைப் போஷித்துக் கண்ணை இமைகாப்பதே போல் காக்கின்றான். மணங்கமழும் மண்ணை அதற்கு அளிக்கின்றான்; அப்போதைக் கப்போது தீம்புனலைப் பாய்ச்சுகின்றான். உடனே நிலத்திலிருந்து அது கிளம்பித் தன்னுடைய அழகுக்கேற்ப அதியற்புதமாய் விளங்கி, மனிதனது சாகசத்தினால் அவ்விதம் செய்யவே முடியாதென்பதை உலகிற்கு அறிவித்துத் தன் போஷகனுக்குப் பெரும் புகழை அளிக்கின்றது. கொஞ்சகாலங் கழித்த பின்னர் அச் சின்னஞ் சிறிய செடி முளைத்து இலை வெடித்து, கிளைத்து, கப்பும் கிளையுமாகி, துளிர்த்து, அரும்பு விட்டு, மலர்ந்து, காய்த்து, கனிந்து அததற்கேற்ற விதைகளைத் தாங்குகின்றது. முதலில் எதினின்று கிளம்பியதோ அதையே கடைசியில் அடைகின்றது. நன்மை என்பது எதுவோ அது மேன்மேலும் சிறந்து உலக்மெல்லாம் அதிகமாகிப் பரவும்.

பள்ளிக்கூடத்து உபாத்தியாயர், சிறு குழந்தைகளைத் தன் ஆதரணையின் கீழ் வைத்துக்கொள்ளும் பொழுது, மிகவும் நுட்பமான புஷ்பங்களுடன் கைப்பழக்கங் கொண்டவனாகின்றார். அழகும், மென்மையும், பொருந்தி நன்மணங்கமழும் செவ்விய ரோஜா மலரைப்பெற எண்ணும் நீங்கள், அவ்விரோஜா செடியினில் திகழும் அரும்பொன்றை அவசரமாகப் பறித்து நீவிர் நும்மனதிற்கிசைந்தவாறு இதழ்களை உமது பலத்தைக் கொண்டு மலர்த்தி புஷ்பவடிவத்தைப்பெற ஒருபோதும் விரும்பம் கொள்ளமாட்டீர்களன்றோ? அவ்விதம் செய்வதை விட்டு நீங்கள் அவ்வரும்பை இயற்கையாய் மலர் வடிவடையும்படி விட்டு விடுவீர்கள் அந்த அழகும் மணமும் ஒருங்கமைந்த ரோஜா மலரின் சுற்றுப்புறம் கண்ணுக்கினிமையாயிருக்கும் பக்ஷத்தில், நீங்கள் அதை அழகிற் சிறந்து விளங்கச் செய்வதைவிட, அது பன்னூன் மடங்கு அதிக சுந்தரத்துடன் விளங்கத் தடையேயில்லை. இத்துடன் உங்களது வேலை ஒழிந்தபாடில்லை. அம்மலரை வெகு கவலையுடன் பாதுகாக்கவேண்டும். அதுதன் செழுமையில் சற்றும் குறையாதிருக்க என்ன செய்யவேண்டுமோ அதை அப்போதைக் கப்போது செய்துவரவேண்டும். அப்புஷ்பம் நல்ல வடிவினை யடைவதற்கு வேண்டிய தாதுப்பொருள்களை எருவாக உதவிவரவேண்டும்.

பாதுகாக்குந் தன்மையினாலும், தேர்ச்சியடைவிக்குந் தன்மையினாலும், தேகமனோ சக்திகளுக்கு வேண்டிய ஆகாரத்தை அப்போதைக் கப்போது

அளித்துச் சிறுவர்களின் இருதயத்திலும் மூளையிலுமுள்ள தெய்வீக சக்தியை மலரும்படிச் செய்வதினாலும் தோட்டக்காரனது முறையே சிறுவர்களுக்குச் சரியானது, உண்மையானது. வெளித்தோற்றத்தைக் கண்டு குணாகுணத்தைத் தெரிந்துகொள்ளும் ஆற்றலுள்ள சிற்பியின் முறை குழந்தைகளுக்கு ஒரு சிறிதும் சரியல்ல. மற்றும் தான் மனதினால் சங்கற்பித்து அதைப்போன்ற உருவம் உலோக வகையில் வரும் வரை அவயவங்களைச் செதுக்கும் கற்சிற்பியின் முறையும் சரியன்று.

ஆகவே உபாத்தியாயரின் முறைமையும் தோட்டக்காரனது முறைமையும் ஒத்திருக்கின்றது. இருவரும் தங்கள் தங்கள் தொழில் முறையில் மிகவும் நுட்பமான பொருள்களில் தங்கள் வாணாள் முழுமையும் கழிக்கின்றனர். சிறு புஷ்பங்களும் சிறுவர்களின் இளம் இருதயமும் ஒன்றுக்கொன்று நுட்பமாயிருப்பதில் ஒத்திருக்கின்றது.

கீ. பி. சேஷாத்திரி அய்யங்கார்.

ஹரிஹரன்

ஓர் இனிய நாடகம்.

இரண்டாம் அங்கம்.

முதற்களம்.

இடம்:—ஓர் கானகம்.

காலம்:—நண்பகல்.

(பிரதாபனும் பாலநேசனும் காயம்பட்டுப் பிரவேசம்.)

பால:—பிரதாபரே! தைரியம் நம்மைக் காப்பாற்றாது போலிருக்கிறதே. நமது சேனைகளெல்லாம் ஓடிவிட்டன. பிரதானத் தலைவர்களும் அவர்களுடன் சேர்ந்து உயிர்தப்ப முயல்வதைப் பார்த்தீரோ? நாம் சேனைகளைச் சேர்க்க முயல்வது வீணே! ஜயம் நமக்கில்லை.

பிர:—நமது சேனை ராஜேந்திரனது தானைக்கும் கீழ்ப்பட்டதோ? இந்த யுத்தத்தின் காரணமும் கிரமம் தானே. அவ்விதமிருந்தும் நமது பக்கம் தோல்வியடைவது எப்படி? பகவானும் பக்ஷபாதகமாக இருக்கின்றார். எவ்வளவு போர் செய்தபோதிலும் தர்மமான கார்யமும் அதிர்ஷ்டமில்லையேல் கை கூடுவது அசாத்யமே. எதற்கும் அதிர்ஷ்டம் வேண்டும். இது சமயம் நாமெல்லோரும் அதிர்ஷ்ட ஈனர்கள்.

பால:—நான் வேந்தரை எதிரிகளினின்றும் காக்க மூன்றுதரம் பிரயத்தனப்பட்டேன். அம்முயற்சிகள் யாவும் வீணாயின. வியர்த்தமானதுமன்றி நானும் அடிப்பட்டு வந்தேன். அன்று நமது சபையின் கண்

வீற்றிருந்த புண்ணிய புருஷர் ஸுரேந்திரர் தான் நமது காஞ்சேயர் பின்சென்று எதிரிகளைச் சின்னபின்னமாக்கினர். காஞ்சேயரைக் குத்த வந்த வீரனைத்தடுத்து அவனையும் எமனுலகத்திற்கு அனுப்பினர். நாம் இருந்தும் என்ன பயன்? ஓர் அன்னியன் இறைவனுக்குச் சகாயம் புரிய நாம் கொஞ்சமும் வெட்கமின்றிப் புறங்காட்டி ஓடி வந்தோமே. இதுவும் ஓர் யுத்தவீரனுக்கு அழகோ?

பிர:—நேசரே! நான் மமதை கொண்டு செருக்கினால் அந்த மகானை நிந்தித்தேன். அவர் எனக்குச் சகாயம் புரியாதிருந்தாரானால் அந்தோ! என் எண்ணமெல்லாம் ஒருவிதமாக ஒழிந்திருக்கும். ராஜேந்திரனது ஈட்டியினால் நான் தாக்கப்பட்டு குதிரையின் மேலிருந்து விழுந்து விட்ட சமயம் அந்த ஸுரேந்திரப் புண்ணியவான் என்னைக் குதிரையின் மீது உட்கார வைத்து என் செவியில் "பிரதாபரே! தைர்யமாய் சண்டை செய்யும். ஸரோஜனியின் அருளைப் பெறுவதற்கு வேறு மார்க்கம் கிடையாது. சண்டை செய்யும் என்றுரைத்தார். ஹா! என்ன குணம். என்ன காதல்.

ப:—நன்மையே செய்தார்.

:—நேசரே! என்ன நன்மையை அவர் செய்தாலும் நான் அவருக்கும் இழிந்தவனாகவன்றோ ஆகி விட்டேன்.

ப:—சந்தேகமில்லாமல்! பிரதாப! நம்மையாரோ துரத்தி வருகிறார்கள் போலிருக்கிறது.

:—எதோ! எதோ! (ஸுரேந்திரர் காஞ்சேயனும் ப்ரவேசம்)

ப:—நமது வேந்தர் நீடூழி வாழ்க.

ந்:—உங்களது வந்தனங்களை இந்தத்தீர புருஷனுக்கு அளியுங்கள். இவர் செய்த கார்யங்கள் யாவும் மனிதனால் செய்ய முடியாதவைகள். ஹே! புண்ணிய புருஷா! என் குலத்தைக் காக்கவந்த தேவதையே?

ரே:—அரசே! இல்லை. நான் தேவதையல்ல! ஓர் அசக்தனான பாபி. நான் உமக்கு ஏதோ கொஞ்சம் உதவி புரிந்தபோதிலும், உன்னதப் பதவி அடைய மார்க்கம் ஒன்றும் எனக்கு இல்லை. இப்பொழுது உமக்குக் கெட்ட காலமாயிருப்பினும், இரவை எப்படி பகல் தொடருகிறதோ அதுபோல் சீக்கிரம் உமது பதவியைப் பெறுவீர். ஆனால் இன்று முதல் எனக்கு எப்பொழுதும் சக்தியற்றவனாகவிருக்கும் காலமும் கிட்டியது.

ந்:—என்ன ஸுரேந்திரரே! என்ன விசேஷம் நீர் வருத்தமடைவதற்கு.

ஸுரே:-வேந்தே! ஒரு விஷயத்தில் உமது மன்னிப்பைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

காஞ்:—நானோ உம்மை மன்னிப்பது. எனது உயிரைக் காப்பாற்றிய வரை மன்னிப்பது நானோ. சொல்லும் அப்புறம்.

ஸுரே:—மன்னவா! நான் உமது புத்ரியைக் காதலித்தேன். எப்படி தெரியுமோ? ஒரு தரித்திரன் கஷ்டமுறும் சமயத்தில் சக்கரவர்த்தியாக நினைப்பதைப்போல் நான் காதலித்தேன். வெகு நாள் மனதில் சஞ்சலம் அடைந்தேன். அந்நங்கையினிடமிருந்து ஒரு பதிலையும் அடைந்தேனில்லை. நான் அன்னியனாயும், பிறவி பேதமுடையவனாயும், ஜாதி பேதமுடையவனாயுமிருந்த போதிலும் இளவரசி எனக்குக் கொஞ்சம் மனஸ்ஸாந்தியைக் கொடுத்தாள்.

காஞ்:—எந்தவிதத்திலோ!

பிர:—எப்படி! எப்படி!

ஸுரே:—ஸரோஜனியின் நிமித்தம் இந்தச்சண்டையில் ஊக்கங்கொண்டு என்னால் ஆனமட்டும் போர் புரிந்தேன்.

காஞ்:—ஆமாம்! புகழத்தக்க மாதிரியாகவே நீர் போர் புரிந்தீர்.

பிர:—ஸுரேந்திர! இளவரசியை நான் காதலித்தபோதிலும் உமது வீரத்தை என்னால் புகழாமலிருக்கக் கூடவில்லை.

ஸுரே:—பிரதாபரே! மிகவும் என்னைப் புகழ்கின்றீரே. அப்புகழ்ச்சிக்கு நான் அருகனல்லன். என் எண்ணமும், காதலும், யௌவனமும், எவ்வளவோ கார்யத்தைச் செய்யும் என்று கருதினேன். இன்றைய விஷயம் அவைகளெல்லாம் வீணென்று தெற்றெனக் காட்டியது. நான் என்னென்ன செய்தேனோ அவைகளுக்கெல்லாம் அந்நன்மணிதான் காரணம். அத்தருணியின் பகவத் பக்தியே அவள் தந்தையைக் காப்பாற்றியது. அந்நங்கை உன் விஷயத்தில் காட்டிய நன்றிக்காக, அப்பெண்மணியையே மனமொழி காயத்தால் நினைக்கும் நான், உம்மைச் சண்டையில் காப்பாற்றினேன். நான் இந்தச் சண்டையில் வெற்றி பெறுவேன் என்னை ஸரோஜனி வந்தனமளித்து, நல்வரவு கூறி, ஸந்தோஷப்படுத்துவாள் என்று எண்ணி இன்று போர் புரிந்தேன். அந்தோ! அவ்வெண்ணமெல்லாம் வீணாயினவே! சக்தியற்றவனாய் தோர்கடிக்கப்பட்டேன். ஸரோஜனியின் பயத்திற்கும், அபாயத்திற்கும் காரணனாயிருந்த ராஜேந்திரனைச்சிறைபிடித்துச் செல்லாமல் அம்மங்கைக் கரசியைக் காண்பதில்லை யென்று ஒரு ப்ரதிக்ஞை செய்துவிட்டேன். ராஜேந்திரனை வெற்றி பெறுவது முடியாத கார்யமாகி விட்டதே—(தாரை கேட்க) அதோ! சத்ரு பின்னே தொடர்கின்றான் போலும். நீங்களாவது பிழைத்திருங்கள். என்னால்

ஆன வரையில் சண்டையிட்டேன் என்றும், உபயோகமில்லாதவன் மீது இவ்வளவு பக்ஷம் காட்டினேமே என்று ஸரோஜினி மனம் சஞ்சலமடையாவண்ணமிருக்க நான் வேண்டியதாகவும் சொல்லும். அந்த அங்கனைக்கு உதவி புரிய நீராவது பிழைத்திரும். இந்தக் கட்கத்தை நீர் கொண்டு உபயோகியும். எனக்கு ஒருவித ஆயுதமும் வேண்டாம். மனித சஞ்சாரத்தை அறவே ஒழிக்கின்றேன். நான் எங்கேனும் ஓர் கானகத்தை யடைந்து, காதலுக்காக என் ப்ராணனை த்யாகஞ் செய்கின்றேன்.

(விரைந்து செல்கிறான்).

காஞ்:—பின் சென்று அழைத்து வாருங்கள். நேசரே அழைத்து வாரும்.

பிர:—அழைக்கச் செல்வது வீணே! வேந்தே! என் கண்ணுக் கெட்டிய வரையில் அவரைக் காணேம். வேகமாக எங்கேயோ சென்றுவிட்டார்.

பாஞ்:—அந்தோ! அவருக்காக மிகவும் வருத்தப்படுகின்றேன்.

பால:—நானும் வெகுவாக துயரப்படுகின்றேன். மன்ன! நமது க்ஷேமத்தை நாம் மறந்து விடக்கூடாது. சீக்கிரம் தப்பித்துச்செல்ல வேண்டும் சத்டமிருக்களிருந்து.

பிர:—காஞ்சேயரே! சண்டையில் உமக்கு உதவி புரிந்த நான், இறக்கும் வரையில் உம் பின்னே வருகின்றேன். சகாயம் புரிகின்றேன்.

காஞ்:—நாம் இம்மாதிரி பிரிவது தர்மமன்று. ஹா! என்னருங் கண்மணீ! ஸரோஜனீ! (பொறுத்து) இன்னமும் உங்களுக்கு அரசனாக நானிருந்தாலும், அல்லது உயிர் நண்பனாயிருந்தாலும் நான் சொல்வதை நீங்கள் கேட்டு அதன்படி நடக்க வேண்டும். என்னைப்போல் நீங்கள் உடையை மாற்றிக்கொள்ள வேண்டும். இவ்வுடையைக் களைந்து விட்டேனால் ராஜரீகமும் சென்று விடுகின்றது. ஆகவே தெய்வச் செயலாக இங்கே ஓர் இடையனின் உடை இருக்கின்றது. இதை எடுத்துக் கொண்டு என் உடையை இங்கு வைத்து விடுகின்றேன். நீங்கள் என்னைக் காட்டரணில் காணலாம். மகபதிக்குச் சொல்லியவண்ணம் ஸரோஜினியுடன் அவர் நம்மை அங்கு சந்திப்பார். நாம் பிரிய வேண்டியது தான்.

பால:—எமது உடல் மாத்திரம் எங்களுடன் இருக்குமே தவிர மனம் முழுமையும் உம்மிடம் தான். [செல்கை]

காட்சி முடிகிறது.

(இன்னும் வரும்.)

கீ. பி. சேஷாத்திரி ஐயங்கார்.

THE CURSE OF ECHO.

By Mr. K. P. SESHADRI AIYANGAR.

எதிரொலியின் சாபம்.

கிரீஸ் தேசத்தில் ஹெலிகன் என்னும் பர்வத மொன்று இருக்கின்றது. அதன் இரமணீயமான பள்ளத்தாக்கில் பரிமளமிகுந்த புஷ்பச் செடிகள் விசேஷமாக வளர்ந்திருந்தன. அங்கே ஒரு அப்ஸரஸ் இருந்து வந்தாள். அவளது பெயர்தான் எதிரொலி. அவள் தன்சகோதரிகளுடன் கைகோத்துக்கொண்டு பசும்புற்றரை மீதும் மலையினின்று சலசலவென்று சப்தித்துக்கொண்டுவரும் அருவிகளின் பக்கத்திலும் உலாவி விநோத வார்த்தைகளாடிப் பரிஹசித்துக்கொண்டிருப்பது வழக்கம். அவர்களெல்லாரைக்காட்டிலும் எதிரொலி சுறுசுறுப்புள்ளவள்; நடையில் அன்னத்தை யொத்தவள். அவளது மந்தஹாஸமோ மதனனையும் வசீகரிக்கும் தன்மையது. வாயைத் திறந்து ஒருவார்த்தைசொல்ல ஆரம்பித்தாலோ, தேன்மாரிபொழிவதை யொக்கும்: அத்தகைய இனிமையான மொழிகளைப் பேசத்தக்க தன்மை வாய்ந்தவள். கதை சொல்வதில் அவளுக்கு வேறு இணைகிடையாது. அவ்வளவு சமத்காரம் வாய்ந்தவர்கள் கிடைப்பது அருமை. ஆகவே அவளது சகோதரிகள் அவளை ஏதாவது சில்விஷம்செய்ய வெண்ணினால், அவளைக்கூப்பிட்டு, 'எதிரொலியே! வார்த்தையில் வல்லவளே! நீ சென்று ஹீராவுடன் அவளது லதாகிருஹத்திலுட்கார்ந்து அவள் என்றும் கேட்டிராத ஓர் அபூர்வமான கதையை அவளுக்குச் சொல். அவளது கவனம் முழுவதும் கதை கேட்பதிலேயே ஆழ்ந்திருக்கட்டும். நம்மைக்கண்டுபிடியாமலிருக்க இதுதான் நல்லவழி. நீசொல்லும் கதை மிகவும் பெரியதாயிருக்கவேண்டும். அப்படி செய்தாயானால் உனக்குக் கூந்தலில் முடிந்துகொள்ள அத்யற்புதமான ஒரு மலர்ச்செண்டு கொடுப்போம்' என்று சொல்வார்கள்.

இதைக்கேட்டதும் எதிரொலி சந்தோஷமுடையவளாய்ச் சிரித்தாள். எதிரொலியின் சிரிப்பானது அப்பள்ளத்தாக்கு முழுவதும்கேட்கும்படியாயிருக்கும்.

"அவள் என் கதையைக் கேட்டு அஸ்வாரஸ்யம் அடைய வாரம்பித்தால் நீங்கள் என்ன செய்வீர்கள்?" என எதிரொலி கேட்டாள்.

"அப்படி அவள் உன் கதையினால் வெறுப்படையுங்காலம் வருமாயின், அப்பொழுது நாங்கள் பார்த்துக்கொள்ளுகிறோம். அதைப்பற்றி

* இது கிரீஸ் தேசத்தில் வழங்கிவரும் புராதனகதை. பெரிய மண்டபங்களிலும், மைதானங்களிலும், கணவாய்களிலும் உரக்கக்கூப்பிடின் எதிரொலி பின் தொடர்ந்து உண்டாவதைக் கேட்கலாம். அந்த எதிரொலியைப்பற்றிய ஒருகதை இங்குத் தமிழில் எழுதப்பட்டிருக்கின்றது.

நீ கவலைப்படவேண்டாம்" என்று அந்த அப்ஸரஸ் சகோதரிகள் பதில் சொன்னார்கள்.

எதிரொலி இம்மறுமொழியைக் கேட்டதும், மிக்க சந்தோஷத்துடன் ஹீராவின் பக்கத்திலுட்கார்ந்து கதை சொல்லலானாள். ஹீரா என்பவள் தேவர்களுக்கெல்லாம் அரசனான ஜீயஸ் என்பவரின் மனைவி. அவள் வெகு கடின சித்தமுடையவள்; அப்படியிருந்தபோதிலும் எதிரொலியை நகைமுகத்துடன் வரவேற்றாள். எதிரொலியைக் கண்டவர் யாவரும் சந்தோஷ சாகரத்தில் அமிழ்வர்.

"ஹே! அப்ஸரஸே! நீ இங்கு என்னிடம் வந்ததன் காரணம் என்ன? யாது விசேஷம்?" என்று ஹீரா அதிகார தோரணையாகக் கேட்டனள்.

பெருமை வாய்ந்த ஹீராவே! உன்னிடத்தில் வெகுநாளாகப் பேச வேண்டுமென்று எனக்கு ஆசை உண்டு. அப்படிப்பட்ட ஆசையானது நெடுங்காலமாக எனக்கு உதித்திருக்கின்றது. இதற்குமுன் என்றும் கேட்டிராத ஓர் அபூர்வ கதையை நான் உனக்குச்சொல்ல விரும்புகிறேன்" என்று எதிரொலி விநயமாய்த் தன் மனத்திலுள்ளதை உள்ளபடியே கூறினாள்.

"ஆம் ஆம்: நீ சொல்லும் கதைக்கு முடிவென்பதே யிராது. சூரியனது உதயத்தைப் போல அந்தமே ஏற்படாது. நீ எண்ணிறந்த கதைகளைச் சொல்லுவாய். ஒவ்வொன்றும் கிழவனது தாடியைப்போல் நீண்டிருக்கும்" என்றாள் ஹீரா.

"தாயே! இதற்குமுன் நீங்கள் அநேகங்கதைகளைக் கேட்டிருப்பீர்கள். அவைகளெல்லாம் நான் சொல்லப்போகும் கதைக்குக் கொஞ்சமும் இணையாகாது. இதற்கு அவை எவ்வளவோ தாழ்ந்தவை" என்றாள் எதிரொலி.

"சரி: நீ சொல்லும் கதை இனிமையாயும் கேட்பதற்கு ஸந்தோஷத்தைக் கொடுப்பதாயுமிருப்பின், ஆதிமுதல் அந்தம்வரை காதுகொடுத்துக் கேட்கிறேன்" என்றாள் கடினசித்தம் படைத்த ஹீரா.

ஹீராவின் பக்கத்தில் எதிரொலி வந்தமர்ந்து, அவளது வதனத்தை உற்று நோக்கியவாறே தன் கதையைச் சொல்லலாரம்பித்தாள். எதிரொலி வார்த்தையில் வரம்பெற்றவள். அவள் லோகத்தில் நடக்கும் விஷயங்களைக் கண்டும் கேட்டுமிருந்தாள். அவைகளை யெல்லாம் அவள் பிறர்க்குச் சொல்லும் சக்திவாய்ந்தவள்; அபூர்வமான விஷயங்களெல்லாம் சேர்ந்து நல்ல கதைகளாகத் தன்னிஷ்டப்பிரகாரம் உரைப்பாள். கதை சொல்வோர் யாவருமே கொஞ்சம் பொய்யையும் கலந்தே கூறுவார்கள். அவர்கள் அவ்விதம் கூறும்போது, தம்முடைய அநுபவத்தில் தெரிந்துகொண்ட உண்மையான விஷயங்களையும் அதனுடன் கலக்கிறார்கள். ஹீரா எதிரொலி சொன்ன கதையில் தன் முழுகவனத்தையும் செலுத்தினாள்; அந்தச் சமயத்தில் தன் அழுக்காற்றையும் மறந்துவிட்டனள். எதிரொலி

யின் வசீகர வார்த்தையினால் கதையில் நடக்கும் விஷயங்களை ஹீரா தானே நேரில் அநுபவிப்பதாகப் படும்படி தோன்றிற்று.

ஆனால், கடைசியில் ஹீரா, தன்னை அப்ஸரஸ்கள் பரிகாசம் செய்வதற்காக ஏற்படுத்திய சூழ்ச்சி இது என்று தீர்மானித்தாள். மற்றவர்கள் தன்னை ஏளனம் செய்ய எதிரொலியே முக்கிய காரணமென்றறிந்து, முகம் மிகவும் சிவக்க, உதடு துடிக்க, மின்னல்போல் திடீரென்று கோபந்தோன்றலுற்றாள்.

"இதுவரையில் வார்த்தையில் வரம் பெற்றிருந்த நீ, எனக்குப் பரிபவத்தை உண்டுபண்ணினதனால், அந்த வரம் இன்றோடு போகக்கடவது. இனி, நீ ஊமையாகவிருந்து, ஒருவர்பேசி முடிந்ததும் அவரது கடைசி வார்த்தைகளைத் திருப்பித்தான் சொல்லவேண்டும்" என்று ஹீரா சினத்தால் சபித்துவிட்டாள்.

'அந்தோ! அந்தோ!' என்று அப்ஸரஸ்கள் எல்லோரும் ஒன்றுசேர்ந்து பரிதபித்து முறையிட்டனர்.

"அந்தோ! அந்தோ!" என்று எதிரொலியும் அவர்களின்பின் சொன்னாள்; அதற்குமேல் ஒருவார்த்தையும் சொல்ல முடியவில்லை. ஹீராவிடம் மன்னிப்புக் கேட்கவேண்டுமென்று எவ்வளவோ பிரயாசப்பட்டும் வார்த்தைகள் வரவில்லை. எதிரொலிக்குப் பேசுந்திறமை அப்போதே போய்விட்டது. வேறொருவர் பேசுவதைத்தான் அவளுக்குப் பேசமுடியும். தானாகப் பேசவேண்டுமென்று முயற்சி செய்தாலும் அவளால் முடியாமற்போயிற்று.

II

அந்த இரமணீயமான பிரதேசத்தில் ஒரு இராஜகுமாரன் வேட்டையாடுவதன் நிமித்தம் வந்திருந்தான். அவன் பெயர் நார்ஸிஸஸ். அவன் வேட்டையாடிக்கொண்டிருக்கும் ஸமயத்தில் தன்னுடன் வந்த சிநேகிதர்களை விட்டுப்பிரிந்து மார்க்கந் தப்பிவிட்டான். அவன் மிக்க அழகு பொருந்தியவன்; யௌவனப் பிராயத்தினன்; கருகிவளைந்த புருவத்தினன்? காந்தையர் மனங்கவர் நோக்கத்தினன்; மலையும் மலைக்கும் வலிமிக புயத்தினன். அவன் காமனையும் வாட்டும் கட்டழகு படைத்தவனாவான். வசந்த காலத்தில் புஷ்பங்கள் வாசனையும் அழகும் மிகுந்திருப்பதுபோல, அந்த யௌவன பருவத்தில் அவன் வனப்பிலும் தேஜஸிலும் அதிகரித்து விளங்கியிருந்தான். எவர் அவனைக் கண்டபோதிலும் நேசியாமலிரார். அவன் இரும்பைப்போல் கடினமான இருதய முள்ளவனாயிருந்தபடியால், பலரும் அவனை மனப்பூர்வமாக நேசித்து அடைய வியலாது பெருமூச்சுவிட்டனர். அதைக்கண்டும் அவன் கொஞ்சமேனும் இரக்கம் கொண்டானில்லை. அவன் இப்பூவுலகத்தில் பிறந்தபோது டைரீஸஸ் என்னும் சோதிட நிபுணர் அவனது பிற்கால வாழ்க்கையின் கூற்றைப்பற்றி முன்னமேயே எடுத்

துரைத்திருந்தார். 'அவன் தன்னைத்தான் பார்க்காதவரையில்சுகமாகவும் சந்தோஷமாகவும் வாழ்வான் என்று அவனது ஆயுர்ப்பாவத்தைக் குறித்துச் சொல்லியிருந்தார்; சோதிடம் பலித்துவிட்டது.

நார்ஸீஸஸ் உலகத்திலுள்ள பொருள்களெல்லாவற்றினையும் அலக்ஷியஞ்செய்தான்; புருஷர்களையும் பொருட்படுத்தினவனல்லன். அவன் அங்கனாமணிகளையும் கருதினவனல்லன். அவன் அதிசுந்தராங்கனானபடியால், அவனது அழகில் ஈடுபட்டுயாவரும் அவன் விரும்பியதைக் கொடுத்து வந்தனர். அவனுக்கு அன்பென்பதாவது, காதல் என்பதாவது, துக்கமென்பதாவது லவலேசமும் தெரியாது. ஒரு வஸ்துவின்மேல் அன்பும் விருப்பமும் ஏற்படுமேல், அப்போதே துக்கமும் வருத்தமும் கூடவே ஏற்பட்டுவிடும்.

நார்ஸீஸஸ், கானகத்தில் மேடுகளிலும் பள்ளங்களிலும் வீணாயலைந்து திரிந்தான்; தன் நேயர்களைக் கண்டானில்லை. அவன் திரிவதை அப்ஸரஸ்கள் கண்ணுற்றனர். அவனது எழில்மிகுந்த ரூபத்திற்கு அவர்கள் வசப்பட்டு அவன் செல்லுமிடங்களிலெல்லாம் செல்லலானார்கள். நார்ஸீஸஸ் நசிக்கக்கூடிய நரனானபடியால், அவனெதிரே செல்ல அவர்கள் வெட்கப்பட்டார்கள். மரங்களின் மறைவிலும் பாறைகளின் பக்கங்களிலும் ஒளிந்து ஒளிந்து அவனது மதனரூபத்தைப் கண்டுவந்தனர். அந்த அப்ஸரஸ்களோடு எதிரொலியுமிருந்தாள்.

நார்ஸீஸஸ், தான் வெகுதூரம் வழிதப்பி வந்துவிட்டோம் என்று தெரிந்துகொண்டு, இனி நடக்கத் தோன்றாதவனாய், தனது சிநேகிதன் பெயரைக் கூப்பிட ஆரம்பித்தான்.

"பர்ஸீயஸ்! நீ எங்கிருக்கிறாய்!" என்று கூப்பிட்டான்.

"நீ எங்கிருக்கிறாய்?" என ஏதிரொலி பதில் ஒலித்தாள்.

நார்ஸீஸஸ் இந்தக் குரலைக்கேட்டதும் நின்று விட்டான்; குரல்வந்த இடத்தை உற்றுநோக்கினான். இதற்குள் எதிரொலியைத் தவிர மற்றைய தேவகன்னிகள் அவ்விடம் விட்டகன்றனர். நார்ஸீஸஸ் மீளவும் தன் நண்பனைக் கூப்பிடலானான்.

"நான் இங்கே யிருக்கிறேன்—காட்டில் நார்ஸீஸஸ்."

"காட்டில் நார்ஸீஸஸ்" என்றாள் எதிரொலி.

"இங்கே வா" எனக் கூவினான்.

"இங்கே வா" எனப் பதில் சொன்னாள்.

இந்த அதிசயமான குரலைக்கேட்டு, நார்ஸீஸஸ், அதிக ஆச்சரியமடைந்து, சுற்றுப்பக்கங்களி லெல்லாம் திரும்பிப்பார்த்தான்; ஒருவரையும் காணவில்லை.

"நீ சமீபத்திலிருக்கிறாயா?" எனக் கூப்பிட்டான்.

"சமீபத்திலிருக்கிறாயா?" என்றாள் எதிரொலி.

நார்ஸீஸஸ் ஒருவரையும் காணாததனால் மிகவும் வியப்படைந்து, குரல் வந்த திக்கையே நோக்கிச் சென்றான்.

எதிரொலி தன்பக்கம் அவன் வருவதை உணர்ந்து இன்னும் சற்றுத் தூரம் சென்றாள். அப்படிசெல்லவே, அவன் மறுபடியும் கூப்பிட்டபோது, அவளது குரல் இன்னும் வெகுதூரத்திலிருந்து வந்தது. அவள் எங்குச்சென்றபோதிலும் அவனும் அவளைப் பின்தொடர்ந்தான். அவள், தன்னைத் தப்பிப்போக வழிவிடமாட்டானெனத் தெரிந்துகொண்டாள். பிறகு இருவரும் எதிருக்கெதிரே பசும்புற்றரைமீது நின்றனர். அங்கு ஒரு பெரிய பொய்கையிருந்தது. அப்பொய்கையைக் கண்டதும் நார்ஸீஸஸ் சந்தோஷங்கொண்டு ஜலத்தினருகில் சென்று நின்றான். எதிரொலி அவன் பின்னால் ஒரு விருக்ஷத்தின்மீது சாய்ந்தவண்ணமாக நின்றிருந்தாள். நார்ஸீஸஸ் ஜலத்தின் பக்கம் திரும்பியிருந்ததனால், அவள் தன் கண்களினின்று நீர் தாரை தாரையாகப்பெருக்கினாள்; அவனைப் பூர்ணமாக நேசித்தாள்; அவனிடத்தில் பேசவேண்டுமென்று எண்ணினாள்; ஆனால், ஒரு வார்த்தையும் பேசமுடியவில்லை. திடீரென நார்ஸீஸஸ் எதிரொலியைத் திரும்பிப்பார்த்து,

"என்னைக் கூப்பிட்டவள் நீதானோ" என்று கேட்டான்.

"நீதானோ?" என்றாள் எதிரொலி.

"நான் முன்பே சொல்லியுள்ளேன்—நார்ஸீஸஸ்" என்றான்.

"நார்ஸீஸஸ்" எனப் பதிலுரைத்து அவனெதிரே தன்னிரண்டு கைகளையும் நீட்டினாள்.

"நீ யார்" என்றான் நார்ஸீஸ்ஸ்.

"நீ யார்" என்றாள் எதிரொலி.

மிகவும் கோபமாய் "நான் முன்பே சொல்ல வில்லையா?—நார்ஸீஸஸ்" என்றான்.

"நார்ஸீஸஸ்" என்று எதிரொலி மறுபடியும் சொல்லி, முன்போலவே விரித்த கை விரித்தபடியே நின்றாள்.

"ஏதோ சொல்: நீ யார்? என்னை ஏன் கூப்பிட்டாய்?" என்றான் நார்ஸீஸஸ்.

"என்னை ஏன் கூப்பிட்டாய்" என்று எதிரொலி பதில் சொன்னாள்.

இதைக்கேட்டதும் நார்ஸீஸஸ் மிகவும் சினங்கொண்டு, "நங்கையே! நீ யாராயிருந்தபோதிலும் சரி: நீ என்னை இக்கானகத்தில் வெகு தூரம் அலையவிட்டாய். இப்பொழுது என்னை நீ பரிகாசம் செய்யாதே" என்றான்.

"நீ என்னைப் பரிகாசம் செய்யாதே" என்று பதிலுரைத்தாள் எதிரொலி.

இவ்வார்த்தைகளை அவன் கேட்டதும் அதிக கோபமுடையவனாய், அவளை நிந்திக்க வாரம்பித்து விட்டான். அவன் வையும் ஒவ்வொரு வசையையும் திரும்பவும் அவனுக்கே பிரயோகித்துவிட்டாள் எதிரொலி. கடைசியில், அவன் திரிந்த அலுப்பினாலும் கோப முதிர்ச்சியாலும் ஒன்றுந் தோன்றாதவனாய், அருகேயுள்ள புற்றரையின்மீது படுத்துக்கொண்டான். அவன் பக்கத்தில் கொஞ்சநேரம் எதிரொலி நின்றிருந்தாள். பிறகு, அவ்விடத்தைவிட்டு ஒரு பாறையின் மறைவில் போய் நின்றிருக்கலானாள். கொஞ்சநேரம் கழிந்தபின், நார்ஸீஸஸுக்குக் கோபம் சற்றுச் சாந்தமடைந்தது. நீர்வேட்கை அதிகமாயிருந்தபடியால் அருகிலிருக்கும் ஜலத்தை அள்ளிக்குடிக்கக் குனிந்தான். ஜலத்திற்கு நேரே கைகளை நீட்டினபோது தன்னை நோக்கும் ஒரு முகத்தைக் கண்டான். அப்படிப்பட்ட அழகிய முகத்தை ஒருநாளும் அவன் கண்டதேயில்லை. அவன் காதல் என்பதை எள்ளளவும் உணராதவன். அம்முகத்தைப் பார்த்ததும் அவனுக்குக் காதல் மூண்டெரியத் தலைப்பட்டதும், பெருமூச்சுடன் அதனெதிரே தன்னிருகைகளையும் நீட்டினான். அந்த உருவமும் அவனெதிரே இருகைகளையும் நீட்டிற்று. எதிரொலி பாறையின் மறைவிலிருந்தபடியே பெருமூச்சுக்கு எதிர் பெருமூச்சுவிட்டாள். அந்த உருவம் தான் செய்ததை மீளவும் தனக்குச் செய்கிறதென்றும், அதுவும் பெருமூச்சு விடுகிறதென்றும், அது தன் காதலைத் தனக்குத் தெரிவிக்கிறதென்றும் நார்ஸீஸஸ் எண்ணிக்கொண்டு, "உன்னை நான் காதலிக்கின்றேன்" என்று மெதுவாகச் சொன்னான்.

இதற்குப் பதிலாக பாறையில் மறைந்திருந்த எதிரொலி "நான் காதலிக்கிறேன்" என்றாள்.

பொருத்தமான இவ்வார்த்தையைக் கேட்கவே பழம் நழுவிப் பாலில் விழுந்ததுபோல நார்ஸீஸஸ் உள்ளம்பூரித்து, அந்த உருவத்தைக் கையால் பிடிக்க யத்தனித்தான். அப்படி பிரயத்தனப்படும்போது நீர்நிலை தடுமாற்றமுற்றது; உருவம் கலைதலுற்றுவிட்டது. நார்ஸீஸஸ் குனிந்து அவ்வுருவத்தைப் பிடிக்கவெண்ணி ஜலத்தை எடுத்தான்; தான் மிகவும் ஆத்திரப்பட்டு விட்டதாக எண்ணிச்சற்றுநேரம் காத்திருந்தான். நீர்நிலை கலைபடாமல் சரியாக இருக்க, அவனது அந்தமான முகம் மீளவும் தெரிந்தது. மறுபடியும் அதைப்பிடிக்க அவன் குனிந்தான். அப்பொழுதும் அவ்வுருவம் கைக்கு அகப்படாமல் தப்பிக்கொண்டது. பலதடவைகளிலும் அவன் அதைப் பிடிக்கப் பிரயத்தனப்பட, அவ்வுருவம் கைக்கு அகப்படாமலேயே யிருந்தது. கடைசியில், நார்ஸீஸஸ் மிகவும் மனவருத்தத்துடன், அவ்வுருவத்தைப் பிடிக்க எண்ணுவதை விட்டுவிட்டான்; தன் கண்களினின்றும் நீர் தாரைதாரையாகப்பெருக ஜலக்கரையிலுட்கார்ந்தபடியே நீரில் உருவத்தைப் பார்த்தான்; ஜலத்தினுள்ளிருந்த பிரதி பிம்பமும் கண்ணீரை வடியவிட்டது. இதைக் கண்ட நார்ஸீஸின் மனம் சகிக்கவில்லை. எவ்விதத்திலாவது அவ்வுருவத்தை அடையவேண்டுமென்றும், இல்லாவிடில் இறக்கவாவது வேண்டுமென்றும் அவன் தீர்மானஞ்செய்துகொண்டான். ஆகவே, கடைசித்தடவையாக முன்னே சாய்ந்தான்; ஆழத்திலாவது சென்று அவ்வுருவத்தை அடையலாமென்றெண்ணித் தடாகத்தினுள் குதித்துவிட்டான். அப்பொய்கையிலுள்ள பாசிக்கும், பாறைகளுக்கும் மத்தியில் நார்ஸீஸஸ் இறந்துகிடந்தானேயொழிய, தன் காதல் நிலையைக் கண்டானில்லை. அவனுக்குத் தன் முகந்தான் நீரில் பிரதிபலித்ததென்று தெரியாமற் போய்விட்டது. இச்சம்பவம் முன்னே சோதிட நிபுணன் சொன்ன வார்த்தையை மெயாக்கி விட்டது. அவன் தன் முகத்தைத் தான் பாராதிருக்கும்வரை சுகமாகவே வாழ்ந்திருந்தான்"

எதிரொலி பாறையினின்று நடந்ததையெல்லாம் கவனித்துவந்தாள். நார்ஸீஸஸ் தடாகத்தில் குதிக்கும்போது அவள் வேகமாய் அவனைத் தடுக்க ஓடோடியும் வந்தாள். இதற்குள் அவன் தடாகத்தில் விழுந்து முழுகிப்போனான். அவன் நீரில் முழுகியதைக் கண்டதும் எதிரொலி பொய்கைக்கரையிலுள்ள புற்றரையின் மீது தன்னாவி போகுமளவும் அழுதேதீர்த்தாள் அவள் இறந்தாலும், அவளுடைய குரல்மாத்திரம் மிகுந்திருக்கும்படியான சாபம் உண்டு. ஆகவே, அவள் இன்றைக்கும் இருக்கிறாள்; உருவமற்ற குரலோடு பாறைகளிலும் குகைகளிலும் மண்டபங்களிலும் எப்பொழுதுமிருக்கிறாள். அவள் தன் காதலனைக்குறித்து புற்றரையின்மீது படுத்தபடியே கண்ணீர் பெருக்கினாளாதலால், அந்த இடத்தில் ஒரு பரிமள மிகுந்த புஷ்பம் ஒன்று முளைத்தது. அதை ஜனங்கள் "நார்ஸீஸஸ்" என்றழைக்கின்றனர். ஹெலிகன் பர்வதத்திலுள்ள தடாகத்தில் தன் முகத்திலுள்ள பிரதிபிம்பத்தைக்கண்டு சித்தப்பிரமைகொண்டு காதலித்து அதை அடைய இயலாது பொய்கையில் மூழ்கி உயிரைத்துறந்த அந்தப் பேதையான நார்ஸீஸை ஜனங்களின் மனதில் அப்பெயருள்ள புஷ்பம் ஞாபகப்படுத்துகின்றது.

கீ. பி. சேஷாத்ரி ஐயங்கார்.

NEWS AND NOTES.

ஸமாசாரக் குறிப்புகள்.

பால தேச பக்தன்.

கிரீன் ஐலண்டு பள்ளிக்கூடத்தில் படிக்கும் பன்னிரண்டு வயதுள்ள பாலன் W. W. பிரிட்ஜ்மன் என்னும் சிறுவன் "தேசத்திற்கு நாம் எவ்விதம் சகாயம் புரிவது" என்பதைப்பற்றி ஒரு வியாசம் படித்தான். அந்த வியாசம் மிகவும் மேம்பாடுற்றிருந்தபடியால் அவ்வியாசம் எழுதிய பாலனுக்கு பரிசளித்தார்கள். அவ்வியாசத்தினின்று மிகவும் சுவாரஸ்யமான பாகத்திலிருந்து சிலவற்றை இவ்விடம் பிரசுரிக்கத் துணிந்தோம்.

"நாம் கஷ்டப்பட்டு ஜீவனோபாயத்தைப் பெறும் மார்க்கத்தை யிழந்து விட்டோமனால், சுகத்தையும் சௌக்கியத்தையும் அதிகமாக விரும்பினால் தேசம் முன்னடையாது; நாம் அதிக செருக்கும், சுய நயப் புலிகளாகவும் தேகத்திலோ, மனதிலோ, பலஹீனர்களாயும், ஆகி விடுவோமானால் அப்பொழுது தேசம் நம்மை விட்டு வெளியே போய்விடும். அஸிரியர்கள், ரோமர்கள், ஸ்பெயின் தேசத்தவர்கள் நிலை தவறியபிறகு அதிகாரமெல்லாம் அவர்களைவிட்டு நீங்கியது. நாம் பிற்கால தேசத் தூண்களாக விளங்கும் நாம்-நமது தேசம் க்ஷீணித்துப் போகும்படியான நிலைமைக்குக் கொண்டு வரக்கூடாது. நாம் ஒவ்வொன்றிலும் வேலையிலும், விளையாட்டிலும், வீட்டு வாழ்க்கையிலும் சமர்த்தர்களாயிருக்க வேண்டும்.

நாம் ஏதாவது ஒன்று செய்ய வேண்டுமானால் அக்காரியம் நல்லதாயிருக்க வேண்டும். நன்றே செய்யவேண்டும். அதுவும் இன்றே செய்யவேண்டும். செய்வது யாவும் திருந்தச் செய்யவேண்டும். நாம் நமது தேசத்திற்குச் செய்யவேண்டிய முதல் முதல் கடமை ராஜபக்தி, ராஜ விச்வாசம், தேச சேவைக்காக நமது சக்தியையும், விருப்பத்தையும் முன்னமேயே குறிப்பிட்டுள்ளோம்...ஆனால் உலகத்தவர்க்கு நாம் தேச பக்தி நிறைந்துள்ளவர்கள் என்பதைக் காட்டி விடுவதுந் தவிர ஒவ்வொருவரும் அன்பும் தயாளமும் கொண்டுள்ளவராக விளங்கவேண்டும். நமது தேச ஊழியத்திற்காக ஏதேனும் பொருள் கேட்கப்பட்டால், பணமுடை ஏற்பட்டதானால் நாம் அதைக் கொடுப்பதற்கு மறுக்கக்கூடாது, முணு முணுக்கக் கூடாது. சர்வ சம்மதத்தோடு, நமது பணமும் தேச சேவைக்கு உதவும்படி நேரிட்டதே என்று சந்தோஷத்தோடு அந்த நிமிஷமே கொடுக்கவேண்டும்"

இப்படிப்பட்ட உயர்ந்த எண்ணம் சிறுவர்களின் மனதில் உதித்தால் அவர்கள் பெரியவர்களாகும்போது எத்தகைய காரியங்கள் தான் இனிது முடியாது?

வண்டியிலாவது!

ஜீவப்பிராணிகள் வருத்தமடைவதைப் பார்க்க சகியாமல் அவைகளை கொடுமையினின்று காப்பாற்றும் ஆர்வமுள்ள ஒரு பிரஞ்சு வைத்யர் ஒருநாள் தனது அறையின் கண்ணாடி கதவின் அருகே ஒரு குளவி ரீங்காரஞ்செய்து கொண்டே யிருந்தது. அதைக்கண்டு வைத்யர் தன் வேலையாளைக் கூப்பிட்டு அந்தக் குளவியை மெதுவாகக் கதவைத்திறந்து வெளியே விட்டு விடு என்றார்.

கதவைத் திறந்தால் அறை முழுவதும் ஈரமாகிவிடும் என்ற எண்ணங்கொண்டு ஐயா வெளியில் மழை பெய்துகொண்டிருக்கிறதே என்றான் வேலையாள்.

"ஆ! அப்படியா? ஆனால் தயவுசெய்து இந்தச் சிறிய ஜீவனை கூடத்தில் விட்டு வை. மழை நின்றபிறகாவது வெளியே விட்டுவிடு. இல்லாவிட்டால் மழை பெய்து கொண்டிருந்தால் வண்டியிலாவது ஏற்றி அனுப்பி விடு." பாவம்! என்றார் வைத்யர்,

‘கல்பதரு’ அநுபந்தம்.

லார்டு ஸின்ஹா
இந்தியா உதவி மந்திரியார்

With grateful acknowledgments to the *Swadesamitran.*

ஸ்ரீராமஜயம்.

கல்ப தரு.

KALPA THARU.

சித்திர சகிதமான ஒரு மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

புஸ்தகம் 2. Vol. II. | காளயுக்தி௵ தை௴ JANUARY 1919. | நெ. 11. No. 11.

SERVICE TO HUMANITY.

“என் கடன் பணி செய்து கிடப்பதே”

உலகில் இறைவனால் படைக்கப்பட்ட ஒவ்வொரு பிராணியும் ஒவ்வொரு காரியத்தைச் செய்யவே இருக்கின்றது. பயனற்றது என்று எதையும் நாம் தள்ளிவிடக் கூடாது. எல்லாப் பிராணிகளையும் விட மனிதனே உயர்ந்தவனாகக் கருதப்படுகிறான். ஆறறிவுடைய மனிதனே, இறைவன் இத்தகையவன்; அவனை இன்னவாறு வழிபடல் வேண்டும் என்பவைகளை அறிதற்குரியவனாகின்றான். பகுத்தறிவுள்ள மனிதன் என்ன செய்ய வேண்டுமென்பதை அப்பர்சுவாமிகள் ஒரு வாக்கியத்தில் விளக்கியுள்ளார்கள். இவ்வாக்கியம் அமைந்து கிடக்கும் அழகை உள்ளுந்தொறும் உள்ளுந்தொறும் எந்தக்கல் மனதும் உருகாமலிராது. “என் கடன் பணி செய்து கிடப்பதே” என்ற அவ்வாக்கியத்தை நன்குணர்ந்து இவ்வுலகில் ஒவ்வொருவனும் நடந்து வருவானேயாகில், இது காலை, இவ்வுலகம்-முக்கியமாய் இந்தியா-சிறந்த நிலையில் இருக்கும். மேனாட்டில் சென்ற நாலரை ஆண்டுகளாகப் பல்லுயிர்களைக் கொள்ளை கொண்ட பெரும்போர் தொடங்கியே இராது; ஆன்ம ஞானம் யாண்டும் மிளிர்ந்து நிற்கும். தேகாத்ம வாத புத்தி ஒரு சிறிதும் இருக்கக் கூடாதென்று எண்ணங்கொண்டே, நாவுக்கரசர் ‘என் கடன் பணி செய்து கிடப்பதே’ என்று பல்லாண்டுகளுக்கு முன்னரே அருளிச்செய்தார். மனிதன், இவ்வுலகில் பிறந்ததினால், செய்ய வேண்டியவை யாவை? அவன் எதற்

காக இறைவனால் சிருஷ்டிக்கப்பட்டான்? இந்தக்கேள்விகளை ஒவ்வொருவனும் கேட்டுக்கொள்ள வேண்டும். பிறர் பொருட்டே மனிதன் இவ்வுலகில் தோன்றுகின்றான் என்ற கொள்கையிலேயே நம் பெரியோர்கள் மூழ்கிக் கிடந்தார்கள். ஆகவே அவர்கள் உலகிற்குபகாரிகளாய், ஒருவருக்கும் தீங்கு செய்யாதவர்களாய், உண்மை நெறி பற்றி ஒழுகி வந்தார்கள். அதனால் அவர்கள் இறைவனுடைய அன்புக்குப் பாத்திரமானார்கள். அத்தகைய பெரியோர்கள் நம் பாரத தேசத்தில் இருந்தபடியாலேயே, அது பண்டைக்காலத்தில் பெருவளம் பூண்டு நின்றது; உலகத்திலுள்ள எல்லா நாடுகளுக்கும் அறிவையும் நாகரிகத்தையும் வழங்கிவந்தது. "என் கடன் பணி செய்து கிடப்பதே", "தனக்கென வாழாது பிறர்க்குரியராதல்" என்ற வாக்கியங்களின் அருமை பெருமைகளை இப்பொழுது நாம் மறந்துவிட்டபடியால், நம் இந்திய நாடு வளங்குன்றியிருக்கின்றது என்று சொல்லப்படுகிறது. இது நிற்க.

நம் சகோதரர்களாய் இவ்வுலகில் பிறந்த மக்களுக்கும் மற்றப் பிராணிகளுக்கும் நம்மால் கூடிய வரை நன்மையே செய்ய வேண்டுமென்று ஒவ்வொருவனும் எண்ணக்கடவன். உபகாரஞ் செய்வதில் பல வழிகள் உண்டு. செல்வமுள்ளான், அச்செல்வத்தால், பிறர்க்கு நன்மை செய்யலாம். அதாவது ஏழை மக்களின் வறுமையை நீக்க வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யலாம். அச்செல்வமில்லாதான், தேகபல முற்றிருப்பானேல், தன் தேக வலியைக்கொண்டு பிறர்க்கு நன்மை செய்யலாம். அதாவது, ஒருவன், ஒரு வண்டியினின்றும் கீழ் விழுந்து விட்டானென்று வைத்துக் கொள்வோம். தேக வலிவுள்ள ஒருவன், அவனை உடனே தூக்கி, அவனுக்கு வேண்டிய சௌகரியங்களைச் செய்ய வேண்டும். தேக பலமில்லாதான், தன் வாயினாலான உபகாரத்தையேனும் பிறர்க்குச் செய்ய வேண்டும். தான் செல்ல விரும்பும் ஊர் எந்தத்திக்கில் இருக்கிறதென்று அறியாத ஒரு வழிப்போக்கன், தன்னூர் யாண்டுளதென அவ்வூரை யறிந்தானொருவனைக் கேட்டானும், பின்னவன், குறிக்கப்பட்ட ஊர் இங்கிருக்கிறதென்று குறிப்பாய்க் காட்ட வேண்டுமேயன்றி, வேடிக்கையாகவேனும், குறும்பாகவேனும் கேட்ட ஊரைக்காட்டாது, வேற்றாரொன்றைக் காட்டல் முறையன்று. அது பாவச்செய்கையாகும். கேட்ட ஊர் ஈண்டுளது என்று காட்டினால் இவனுடைய கௌரவம் எந்தவிதத்தில் குறைந்து விடும்? புகை வண்டியில் பிரயாணம் செய்யவிருக்கும் ஒருவன், உன்னை, மணி எவ்வளவு என்று கேட்டால் நீ என்னவென்று பதில் கூற வேண்டும்? சிலரைப்போல், முள்ளொடிந்து மூன்று நிமிஷம் என்றேனும், சுரங்காய் மணி என்றேனும் பதிற் கூறுவையோ? அங்ஙனம் கூறின், கேட்டவனுடைய மனம் எந்தநிலையில் இருக்கும் என்பதை ஊகித்துப்பார்க்க வேண்டும். சகோதரனே! இத்தகைய சிறிய உபகாரங்களேனும் செய்யாவிடில், நீ மனிதப்பிறவி எடுத்ததற்குப் பயன் தானென்னை?

பணி என்பதற்குப் பலவாறு பொருள் கூறுப. பிறர் நன்மை யடையுமாறு ஊழியஞ் செய்தல் என்பது பணி என்பதற்கு ஒரு பொருளாம். இதையே சோஷல் சர்விஸ் என்று இங்கிலீஷில் கூறுகின்றனர். ஆனால் இக்காலத்து அறிஞர், சோஷல் சர்விஸ் என்பதற்கு மாறு பொருள் கொண்டு மயங்குகின்றனர். சோஷல் ரிபாரம், என்பதற்கு ஆசாரசீர்திருத்தம் என்று பொருள் கொண்டு, மதபேதமின்றி, ஜாதி வித்தியாசமின்றி, உண்ணலும், உறங்கலுமே பொது ஜன ஊழியம் என்று மயங்கித்திரிகின்றனர். இதைப் போன்ற பேதைமை வேறொன்றுளதோ? பொது ஜன ஊழியத்திற்கும், பேதமின்றி உண்ணுவதற்கும் என்ன சம்பந்தம் உள்ளதோ அறியக்கூடவில்லை. ஒருவர் எச்சிலை ஒருவர் உண்ணலினால், உண்டாகும் பயன் தானென்னை? பிறர்க்குப் பணி செய்வதென்பது, உண்ணுவதிலும் உறங்குவதிலுமேயோ தங்கி நிற்கின்றது? சென்னையிலும் பிற இடங்களிலுமுள்ள ஆசார சீர்திருத்த சங்கங்கள், மேற்கண்ட கொள்கைகளைக் கைப்பற்றியவாய் மயங்கிக்கெடுகின்றன. அந்தோ! ஜன ஊழியம் இருந்தவாறு சாலவு நன்று!

ஜன ஊழியம் என்பது பலவகைப்படும். ஏழை மக்களின் துன்ப நிவர்த்திக்கென்று உழைத்தல். இதைப்பற்றியே ஈண்டுச் சிறிது ஆராய்வாம். பொதுவாக ஏழை ஜனங்களுக்குக் கல்வி வாசனை அதிகமாய் இருப்பதில்லை. இதனால் அவர்கள் தங்கள் தேகதத்துவ நிலைகளை நன்கு அறியக் கூடாமற் போகின்றார்கள். சுகாதார விதிகளை அறியாதவர்களாய், துர்நாற்றம் வீசும்படியான ஆடைகளை அணிந்து கொள்வதுமன்றி, நோய்க்கு இடந்தரத்தக்க ஆகாரங்களைப் புசிக்கின்றார்கள். இதனால், இவ்வேழை மக்கள் எமனடியில் விரைவில் சேர்கின்றார்கள். ஆண்டாண்டு தோறும் நகரங்களில் வந்தணுகும், காலரா, ப்ளேக் முதலிய நோய்கள் ஏழை மக்களிடத்திலேயே முதலில் வந்தணுகின்றன. இதற்குக் காரணம் யாது? அவ்வேழை மக்களுக்குக் கல்வி அதிகமின்மையே. இதற்கு யாதொரு ஐயமுமில்லை. ஆகவே 'சோஷல் சர்விஸ்' அல்லது ஜன ஊழியம் செய்ய விரும்பும் ஒருவன் முதலில் செல்லவேண்டிய வழி என்னை? ஏழை மக்களுக்குக் கல்வி கற்றுக் கொடுப்பதே அவன் செய்ய வேண்டிய முதல் ஊழியமாகும். ஏழைகள், பகலில் தத்தம் உதர போஷணார்த்தம் கூலி வேலை செய்யச் செல்கிறார்கள். அவர்களுக்கு ஒய்வு கிடைப்பது இரவிலேயாகும். ஒய்வுள்ள அவ்விரவில், சிறிது கல்வி கற்குமாறு அவர்களை ஜன ஊழியம் செய்ய விரும்புவோர் தூண்டல் வேண்டும். அவர்களுக்கு "எண்ணுமெழுத்தும் கண்ணெனத்தகும்" என்ற வாக்கியத்தின் அருமை பெருமைகளை நன்கு எடுத்துரைக்கல் வேண்டும். "கூழானாலும் குளித்துக்குடி; கந்தையானாலும் கசக்கியுடு" என்று அவர்களுக்கு விளங்கக்கூறல் வேண்டும். நோய் வாராமுன்னம், அவைகளைத் தடுப்பதற்குற்ற வழிகள் யாவை என்பதையும், பிறரிடத்தில்

இங்ஙனம் நடந்து கொள்ள வேண்டுமென்பதையும், உலகில் மனிதராய்ப் பிறந்தார் செய்யக்கடவ கடமைகள் எவை யென்பதையும் அவர்களுக்கு நன்றாகச் சொல்லல் வேண்டும். நம் தேசத்தில், ஏழை மக்களில் எவ்வளவு பேர் நமனுக்கிரையாகின்றார்கள் என்பதை உற்று நோக்கின், எத்தகைய உள்ளத்தவனும், இவ்வேழைகள் பால் கருணை பாராட்டாமலிரான். பசிப் பிணியாலும், வறுமை நோயாலும், கல்வி மணமின்மையாலும் இவ்வேழைகள் படும்பாட்டை ஈசனே அறிவான். அவர்களின் நிலைமையைச் சிறிதேனும் உயர்த்த வேண்டுவது ஒவ்வொருவனுடைய கடமையுமாகும். இவ்வேழைமக்களின் துன்ப நிவர்த்திக்கென்று உழைப்பவனே உண்மையான ஜன ஊழியன்; சோஷல் சர்விஸ் என்பதற்கு உண்மையான பொருள் அறிந்து கொண்டு அதன்படி நடப்பவன். இவைகளை விடுத்து, பேய்களென உண்டு, மிருகங்களென உறங்குதல் சோஷல் சர்விஸ் அல்லது சோஷல் ரிபாரம் ஆகாது. ஏழை மக்களுக்கென்று இலவச இராப்பாடசாலைகள் ஆங்காங்கு ஏற்படுத்தப்படல் வேண்டும்; அவர்கள் வாழ்க்கை இனிது நடக்கும் பொருட்டு, உணவுப்பொருள்களை மலிவான விலையில் விற்க ஏற்பாடுகள் செய்யப்படல் வேண்டும். ஏழை மக்களின் முன்னேற்றமே தேச முன்னேற்றம் என்பதை ஒவ்வோர் இந்தியனும் உய்த்துணர்வானாக. தாழ்ந்த வகுப்பாரை உயர்த்தும் சங்கங்கள், நம் மாகாணத்தில் பல இருக்கின்றன. அவைகளிற் பெரும்பாலன, உயர்வகுப்பாரைத் தாழ்ந்த வகுப்பார் நிலையில் கொண்டு வர விரும்புகின்றனவேயன்றி, தாழ்ந்த வகுப்பாரை, உயர் வகுப்பார் நிலைக்குக்கொண்டு வர முயல்கின்றன இல்லை. இது பெரிதும் விசனிக்கத்தக்கது. இதனால் இப்பொழுதுள்ள தாழ்ந்த வகுப்பாரை உயர்த்தும் சங்கங்களெல்லாம் குறை கூறப்படுகின்றன என்று கொள்ளற்க. அச்சங்கங்களும் ஒருவாறு இருக்க வேண்டியதவசியமே. அவைகளைச் சிறிது மாற்றி அமைத்தால் மிகவும் நன்றாயிருக்கும் என்று அறிஞரிற் பலர் நினைக்கின்றனர். ஆகவே, ஜன ஊழியமோ, தேச ஊழியமோ செய்ய விரும்பும் ஒருவன், முதலில் மேற்சொன்ன துறையில் இறங்கி வேலை செய்க. ஆசார சீர்திருத்தம், ஜன ஊழியம் என்று சொல்லி, ஏக தேசமாக உண்ணுவதையும் உறங்குவதையும் ஒழித்து, ஏழை மக்களின் துன்ப நிவர்த்திக்கென்று, உடல்பொருள் ஆவி மூன்றையும் கொடுக்கச் சித்தமாயிருத்தல் வேண்டும்.

இனி, மற்றொரு விஷயம் ஆராய்வோம். "என் கடன் பணி செய்வதே" என்பதோடு நில்லாமல், "என் கடன் பணி செய்து கிடப்பதே" என்று ஏன் வாகீசர் கூறல் வேண்டும்? கிடப்பது என்று கூறியதால் தொனிக்கும் விசேஷார்த்தம் என்னை? இத்தகைய ஐயவினாக்கள் சிலர்க்கு எழுதல் இயற்கை. அவைகளைச் சிக்கறுத்து விளங்கவைக்க யான் பெரும் புலவோனல்லேன். ஆனால் என் உள்ளத்தில் ஒன்று உதிக்கின்றது. அதை வெளிப்படுத்துகின்றேன். அது தவறாக இருப்பினும் இருக்கலாம். ஒருவனுக்கு நாம் ஓர் உபகாரம் செய்தால், அதற்குப்பிரதி யுபகாரம் நாம் எதிர்பார்த்தல் முறையன்று. இஃது ஏறக்குறைய எல்லா நூல்களிலும் விளக்கமாய்க் கூறப்பட்டிருக்கிறது. தாம் செய்த ஒரு பணிக்குக் கைம்மாறு விரும்புதல் கூடாதென்று விளக்கும் வண்ணமே, "பணி செய்து கிடப்பதே" என்று நாவுக்கரையர் கூறியிருப்பதாக நான் பொருள் கொள்கிறேன். பணி செய்து விட்டுப் பேசாமற் கிடப்பதே, அதாவது பயனொன்றையும் எதிர்பாராமற் கிடத்தலே பெருமையென்பதே அப்பரின் கருத்து என நான் நினைக்கின்றேன். இன்னும் அறிஞர் பலவிதமாகவும் பொருள் கூறுவர். பயனொன்றையும் நாடாது, பிறர்க்குப் பணி செய்தலே மனிதனின் கடமையென்பதை விளக்குவான் "என் கடன் பணி செய்து கிடப்பதே" என்று வாகீசர் கூறினார் என்பதே என் துணிபு. கிடப்பதே என்பதில் ஏகாரத்துக்கு வேறு விசேஷங்களும் கூறலாம். மனிதனாய்ப் பிறந்தான் பிறர்க்குப் பணி செய்து கிடத்தலேயன்றி பிறிதொன்றையும் செய்ய வேண்டியதாவசியம் என்று பொருள்படும்படிக்குக் கிடப்பதே என்று சேர்க்கப்பட்டது என்றுங் கூறலாம். இவ்விசேஷார்த்தங்களையெல்லாம் புலவரிடத்தில் விட்டு விடலாம். அப்பர் கூறியது ஜன ஊழியம் செய்ய வேண்டியதென்பதேயாகும். இதைத் தவிர, "என் கடன் பணி செய்து கிடப்பதே" என்பதற்கு வேறு பொருள் கொள்ள முடியாது. ஆதலின், அவ்வாக்கியத்தின் சாராம்சத்தை ஒவ்வோர் இந்தியரும் நன்கு உணர்ந்து, அவ்வாக்கியத்தின்படி ஒழுகுதல் வேண்டும். மானிடப்பிறவியின் பயன் அதுவே.

வே. சாமிநாத சர்மா.

CHOLERA AND ITS CURE.

BY. MR. K. P. SESHADRI AIYANGAR,
Teacher, Muthialpet High School, Madras.

வாந்திபேதியும் அதன் சிகிச்சையும்.

வாந்திபேதியும் பிளேக்கைப்போல் பெருவாரி இனத்தைச் சேர்ந்ததே. இது ஓர் அபாயகரமான வியாதி. இவ்வியாதிக்குப் பல பெயர்கள் உண்டு. அவை, விஷபேதி, விஷசிகரோகம், நடப்பு வியாதி, கசப்பு வியாதி என்பவை. இப்பெருவாரி வியாதி உண்டாவதற்கு முக்கிய காரணம் அசுத்தமே. அசுத்தமும் அசுசியும் எங்கு நிறைந்திருக்கின்றனவோ அந்த இடந்தான் வாந்திபேதிக்கு உறைவிடம். மாந்தர்களின் ஆயுளைக்குறைக்கும் இக்கொடிய நோய் 1817-ம் வருஷம் முதல் இந்தியாவில் தன் அதிகாரத்தைச் செலுத்தி வருகின்றது. 1837-ம் வருஷம் முதல் இங்கிலாந்திலும் நடந்து வருவதாக அனேக வைத்திய சிகாமணிகள் அபிப்பிராயப்படுகின்றார்கள். ஆனால் ஐரோப்பாவில் இவ்வியாதியை விரைவில் பரவுவதற்கு இடங்

கொடுப்பதில்லை. சுகாதார அதிகாரிகள் தக்க ஏற்பாடுகளை அப்போதைக்கப்போதே செய்வதாலும், பிரஜைகள் சுகாதாரச் விதிகளை செவ்வனே யுணர்ந்து நடந்து கொள்வதனாலும் இவ்வியாதியை வரவொட்டாது தடுத்துக்கொள்கின்றனர்.

அதன் சின்னங்கள்.

இவ்வியாதிக்கு முக்கிய சின்னம் பேதி. பேதியும் வாந்தியும் ஒன்று சேர்ந்து அனேகமுறை உண்டாவதனால் இது கண்ட மனிதன் சில மணி நேரத்திற்குள் பலஹீனப்பட்டு உயிரை விடுகின்றான். இந்நோய் கண்ட 100 பேரில் 75 பேர் இறந்து விடுகின்றனர்.

விஷபேதிக்கிருமிகளும் தண்ணீரும்.

ஒருவன் குடிக்கும் தண்ணீர் மூலமாக விஷபேதிக் கிருமிகள் தேகத்திற்குள் சென்று இந்த ரோகத்தை உண்டாக்குகின்றன. அதெப்படியெனில் இந்தக்கிருமிகள் இவ்வியாதி கண்ட ஒருவனது குடலில் கோடிக் கணக்காய் இருக்கின்றன. குடலிலிருந்து அவன் கழிக்கும் மலத்தின் மூலமாயும், அவன் எடுக்கும் வாந்தியாலும் வெளியே வருகின்றன. இவை பூமியில் சேரும்போது, கிருமிகளும் பூமியில் சேர்ந்து பல்கிப் பல்கி விருத்தியாகின்றன. இவ்விதம் வெளி வந்த விஷக்கிருமிகள் மழை ஜலத்தினால் அடித்துப் போகப்பட்டுக் குளத்திலோ, கிணற்றிலோ கொண்டு சேர்க்கப்படுகின்றன. அக்குளத்து நீரையோ அல்லது கிணற்று நீரையோ குடிக்கும் மனிதன் இக்கொடிய நோய்க்கு இரையாகின்றான். விஷக் கிருமிகள் ஜலத்தை யடைந்ததும் அனேக ஆயிரக்கணக்காக விருத்தியாகும் இயல்பினையுடையன. ஒவ்வொருவரும் தான் குடிக்கும் தண்ணீரை வடிகட்டிக் கொதிக்கவைத்துப் பின்பே பருகவேண்டும். இவ்விதம் செய்வானேல் அவனை ஒருபோதும் இப்பெருவாரி அடையவே யடையாது. கொதிக்கவைத்துக்குடிக்கும் கஷ்டத்தை ஏற்றுக்கொள்ளாமற்போனாலும், தான் பருகும் நீர் சுத்தமான இடத்தினின்றும் வருகின்றதா என்பதைக் கவனிக்கவேண்டும். அசுத்தமும், துர்ஆசாரமும், அறிவீனமும் உள்ள சில தாழ்ந்த ஜாதியினர்கிளப்பிவிடும் இவ்விஷபேதியினால் அனேக ஆயிரக் கணக்காகப் பிரஜைகள் மடியவேண்டியதாகின்றனர்.

வாந்திபேதிக்குச் சிகிச்சை செய்வதெப்படி ?

இவ்வியாதிகண்ட க்ஷணமே வைத்தியனுடைய உதவியை நாடவேண்டும். வைத்தியர் வரும்வரை வியாதி கண்டவனுக்கு சூடுதணிவுறாமல்படிக்குப் பார்த்துக்கொள்ளல் அவசியம். Sulphuric hydrochloric அல்லது acetic acid, இவ்விரண்டு திராவகத்தில் ஏதேனும் ஒன்று கையிலிருப்பின் பத்து அல்லது பதினைந்து துளிகள் வீதம் கொடுக்கப்படவேண்டும். திராவகம் கையிருப்பில் இல்லாவிட்டால் எலிமிச்சை ரஸமாவது

அல்லது திராக்ஷை ரஸமாவது இருந்தால் உபயோகிக்கலாம். வியாதிஸ்தனுக்குப் பனிக்கட்டியை வாயிலடக்கிக்கொள்ளத் தடையின்றிக் கொடுக்கலாம். கைகால்களில் கொருக்கு வலி யுண்டானால் கற்பூரத்தைலம் கொண்டு நன்றாகத் தேய்க்கவேண்டும்.

வாந்திபேதி பரவவொட்டாமல் தடுக்கும் வழி.

விஷபேதியால் அவஸ்தையுறும் மனிதனது வாந்தியிலும், மலமூத்திராதியிலும்தான் அபாயங் குடிகொண்டிருக்கின்றது. இந்த அசுசிகளையெல்லாம் தீயிலிட்டு எரிக்கவாவதுவேண்டும், அல்லது பூமியில் பள்ளந் தோண்டிப் புதைக்கவாவதுவேண்டும். இம்மாதிரி செய்வதில் மிகவும் ஜாக்கிரதையாயிருக்கவேண்டும். கிணற்றின் அருகாவது அல்லது குளக்கரையிலாவது இக்காரியத்தைச் செய்யவே கூடாது. வியாதியஸ்தனுக்குச் சகாயம் செய்தபிறகு கைகளைச் சுத்தம் செய்துகொள்ளவேண்டும். அறையிலுள்ள துணிமணிகளையெல்லாம் 'பினைல்' என்னும் திராவகத்தால் சுத்தி செய்யவேண்டும்.

விஷபேதியைத் தடுக்க முன் ஜாக்கிரதைகள்.

விஷபேதி பரவிவரும் காலத்தில் பழதினுசுகளைச் சாப்பிடுவது அறிவின்மையாகும். நன்றாய்ப் பழுக்காத பழத்தைச் சாப்பிடுவதனால் பேதியுண்டாகும். பேதியால் அவஸ்தைப்படும் மனிதனுக்கு விஷபேதி காணுவது மிகவும் எளிது. பழுக்காத பழம் இன்னும் அதிக அபாயகரமானது. ஏனென்றால் மிகவும் அசுத்தமும் துர் ஆசாரமும் குடிகொண்ட தாழ்ந்த ஜாதியினர் கைகளால் தொட்ட பழங்கள்மீது அசுத்தம் படிந்திருக்கும். சாலையினோரத்தில் கூடைகளில் பழங்களை வைத்திருப்பதால், காற்று, தூசிகளை எழுப்பி அப்பழங்களின்மீது படிந்திருக்கச்செய்யும். பழங்களின் மீதுள்ள அசுத்தத்திற்கும் கெட்ட தூசுகளுக்கும் ஆசைகொண்டு கொடிய ஈக்கள், அவைகளின்மேல் கூட்டமாகக் குடிகொண்டிருக்கும். இத்தியாதி சந்தர்ப்பங்களினால் விஷக்கிருமிகளும் அங்கே இருக்கும் என்று சொல்லத் தடையே யிராது. இப்பெருவாரி கண்ட காலத்தில் அனுசரிக்கப்படவேண்டிய விதிகள் சில உண்டு. வயிற்றை சூடுபெற்றிருக்கச் செய்தல், மிதமாக நல்ல போஜனம் கொள்தல், எதையும் நன்றாக வேகவைத்து உண்ணல், வடிகட்டி நன்றாகக் கொதித்த ஜலத்தையும், பாலையும் பருகுதல் இவைகளே முக்கிய விதிகள். இவைகளை எவனொருவன் கவனித்து அதன் பிரகாரம் நடந்துகொள்கின்றானோ அவனுக்கு இவ்வியாதி வரவே வராதென்று திண்ணமாகச் சொல்லலாம்.

வாந்திபேதிக்குச் சிகிச்சை.

மனிதரைக் கொல்லுகிற இக்கொடிய ரோகத்திற்கு அநேக நாட்களாய், அநேகம் பேர் முயற்சிசெய்து தேடியும், இதுகால பரியந்தம் இதற்

குத் தக்க மருந்து ஒன்றும் கண்டு பிடிக்கவில்லை. இதற்குக் கொடுத்துப் பரீக்ஷிக்காத ஔஷதம் ஒன்றேனுமில்லை. ஒருவர்க்குச் சௌக்கியத்தைக் கொடுத்த மருந்து மற்றொருவருக்குச் சௌக்கியத்தைக் கொடுப்பதில்லை. ஆனால் மனோதைரியத்தை விடாமல் காலதாமதம் செய்யாது சிகிச்சை செய்யவேண்டியது. ஏனெனில் இந்த ரோகமானது 3-முதல் 18-மணி நேரத்திற்குள் மனிதனை மடித்துவிடுகிறபடியால் நோய்கண்டவுடன் சிகிச்சை செய்யவேண்டும். ரோகநிதான மறிந்து சிகிச்சை செய்தால் நோய் வசப்படும். இதனடியில் வரையப்பட்டிருக்கும் ஔஷதங்களெல்லாம் அநேக ஆயுர்வேத வைத்தியர்களாலும், ஐரோப்பிய டாக்டர்மார்களாலும் பல சமயங்களில் கொடுத்துக் கைகண்ட முறைகளாகும். அவைகளில் ஏதேனும் ஒன்றை இஷ்டப்படி உபயோகிக்கலாம்.

1. மிளகு, சூடன், ஜாதிக்காய், கருவேலன் பிசின், அபின், ரசகற்பூரம், நெல்லிமுள்ளி, வெந்தயம், பெருங்காயம் வகைக்கு தோலா 1. இவைகளை சடைக்கஞ்சா சாற்றாலரைத்துக் கடலைப்பிரமாணம், மாத்திரை செய்து, வேளை யொன்றுக்கு ஒரு மாத்திரை வீதம், தேனில் அநுபானம் செய்து கொடுக்க, பேதிநிற்கும்.

2. சுக்கு, குரோசாணியோமம், சித்திரமூலம், மிளகாய், சாதிக்காய், சாதிப்பத்திரி, கிராம்பு, வெட்டிவேர், வேப்பம் பிசின், ஆவாரம்பிசின், விளாம்பிசின் இவைவகைக்குக் கழஞ்சு 1, சுத்திசெய்த கஞ்சா பலம் 1, இவைகளை வெயிலில் உலர்த்திச் சூரணம் செய்து தேன் கூட்டி நன்றாய் அரைத்துச் சுண்டைக்காய் பிரமாணம் கொடுக்கவும்.

3. வங்க உப்பு, (Sugar of lead) சூடன், வகைக்கு 2-நெல்லெடை, ரஸபஸ்பம் (Calomel) நெல்லெடை, அபினி 1-நெல்லடை, சுக்கு திப்பிலி, மிளகு இவைகளின் சூரணம் கொஞ்சம் சேர்த்து இரண்டு மாத்திரைகள் செய்து பெரியவர்களுக்கு இரண்டு மாத்திரைகளும், 15-வயதுள்ளவர்களுக்கு ஒரு மாத்திரையும் 10-வயதுள்ளவர்களுக்கு அரை மாத்திரையுமாக 2-3-மணிக்கொருதரம் குணமுண்டாகிறவரை கொடுக்கவேண்டியது. இத்துடன் ஓமத்தீநீரும் (Omma water) கொடுக்கலாம்.

4. வாந்திபேதி ஆரம்பத்தில் ஓமத்தை அரைத்தாவது அல்லது ஓமத்தீநீரையாவது கொடுத்துக்கொண்டு வந்தால் குணமுண்டாகும். சுக்கு, மிளகு, போஸ்தக்காய், சிறுநாவல்பூ, கடுக்காய்பூ, அதிவிடயம், சடாமாஞ்சி, மரமஞ்சள் இவைகளைச் சேர்த்துக் கஷாயமிட்டுக் கொடுத்தால் பேதி கட்டும்.

5. குளோரோடயின்—Chlorodyne அல்லது காம்பரோடயின்—Camphorodyne என்ற மருந்துகளில் ஏதேனும் ஒன்றை வாந்திபேதி கண்டவுடன் பெரியவர்களுக்கு ஒரு அவுன்ஸ் தண்ணீரில் 40-முதல் 60-துளிவரையிலும், குழந்தைகளுக்கு ஒரு வயதுக்கு ஒரு துளி வீழுக்காடு வயதுக்குத் தக்கபடி கொடுக்கலாம்.

6. Acidam Sulphuricum Dilutum ஆஸிடம் ஸல்பியூரிகம் டைலியூடம்	Minims thirty. முப்பது மினம்ஸ்
Tincture of opium டிஞ்சர் ஆவ் ஒபியம்	One to one & a half drachm. 1 முதல் $1\frac{1}{2}$ டிராம்.
Tincture of Cinnamon டிஞ்சர் ஆவ் சின்னமன்	Three drachms. மூன்று டிராம்.
Syrup-ஸிரப் (ஷர்பத்)	Half an ounce-அரை அவுன்ஸ்.
Camphor water காம்பர் வாட்டர்	Six ounces. ஆறு அவுன்ஸ்கள்.

One ounce every time the Bowels are moved in early stages of Cholera-மேற்கண்ட மருந்துகளை ஒன்றாய்க்கூட்டி புட்டியில் வைத்துக் கொண்டு விஷபேதி ஆரம்பமானவுடனே வேளையொன்றுக்கு ஒரு அவுன்ஸ் வீதம் வயிறுபோகும் ஒவ்வொரு தடவையிலும் கொடுத்துக்கொண்டு வந்தால் சௌக்கியமுண்டாகும்.

7. Salol-ஸாலால்.	Grains five-ஐந்து நெல்லெடை.
Spirit of Chloroform ஸ்பிரிட் ஆவ் குளரோபாரம்	Minims twenty. இருபது மினம்ஸ்.
Mucilago acaciae-மியூஸிலேஜோ அக்கேஷியா.	
Aquam ad-நீர்	One ounce-ஒரு அவுன்ஸ்.

To be given every three or four hours-மேற்கண்ட மருந்துகளை அளவுப்பிரகாரம் கூட்டி பிரதி மூன்று அல்லது நான்கு மணிக்கொருமுறை கொடுக்க சௌக்கியமுண்டாகும்.

8. Tincture of opium டிஞ்சர் ஆவ் ஒபியம்	One drachm. ஒரு டிராம்.
Tincture of Capsicum டிஞ்சர் ஆவ் காப்ஸிகம்	One drachm. ஒரு டிராம்.
Spirit Camphor ஸ்பிரிட் காம்பர்	One drachm. ஒரு டிராம்.
Chloroform குளோரோபாரம்	Three drachms. மூன்று டிராம்.
Alcohol 60 % ஆல்கோஹால்	ad Five ounces. ஐந்து அவுன்ஸ்கள்.

Take Minims 20 to 40 in water, every two or three hours in Cholera-மேற்கண்ட மருந்துகளை அளவுப்பிரகாரம் கூட்டிவைத்துக் கொண்டு 20-முதல் 40-துளி வீதம் ரோகத்திற்குத்தக்கபடி சுத்த ஜலத்தில் கூட்டி 2-3-மணிக்கொருமுறை கொடுக்க எப்படிப்பட்ட வாந்திபேதியும் நிற்கும்.

N.B.—இந்த ஔஷத முறைகள் Dr. S. சந்திரசேகரர் எழுதிய வைத்திய புத்தகத்தினின்றும் எடுத்து ஆளப்பட்டன.

THE VALUE OF DEEP PLOUGHING.

BY AN AGRICULTURIST.

நிலத்தை ஆழமாக உழுவதன் பிரயோஜனம்.

நமது தேசத்தினர் விவசாய அபிவிருத்தி செய்யவேண்டுமென்ற நோக்கத்தில் கருத்துடையவராக விருந்தும் அதற்கு அடிப்படையாகவுள்ள சாதாரண விஷயங்களை அறவே மறந்துவிடுகின்றனர். கிருஷித் தொழிலில் செழுமையும் வளமையும் அமைந்து ஜெயமடைய அத்தியாவசியகமாகவுள்ள முறைகள் எவை என்று ஆராயுமிடத்து மூன்று என்று தெளியலாம். அவை, ஆழமாக உழுதல், வேண்டிய எரு வளித்தல், விதைகளைத் தெரிந்தெடுத்தல் என்பவை. இம்மூன்று முறைகளை இங்கிலாந்தின் விவசாயிகள் கடைப்பிடித்து ஒழுகி வந்ததனாலேயே, கிருஷித் தொழிலில் அதிக லாபம் அடைந்துள்ளார்கள். ஜர்மானியர் விவசாயத் தொழிலில் அதிக மேம்பாடும், சிறப்பும் பெற்றதற்குக் காரணபூதரா யிருந்தவர், பெருமைவாய்ந்த லீபிக் (Leibig) என்பவர். ஒருகாலத்தில் ஐரோப்பியர்கள் மேற்கூறிய முறைகளைக் கனவிலும் அறியாதிருந்தார்கள். அறிவும், பெருமையும் பொருந்திய லீபிக் என்னும் ஜர்மானியர் கண்டுபிடித்த முறைகளை ஆங்கிலேயர் ஆதாரமாகக்கொண்டு அவைகளை வழக்கத்தில் நடத்திவந்து செல்வமும், விவசாயத்தில் உயர்வும் அடைந்தனர். தாவர வர்க்கங்கள் செழித்து வளர முக்கிய ஆதாரமான உண்மை முறைகளை, அறிவும், ஆற்றலுமுள்ள லீபிக் உணர்ந்து அதை உலகத்தவர்க்கு வெளியிட்டு, அதனால் வரும் நன்மைகளையும் மேன்மைகளையும் விவரமாக உரைக்கும்போது, பரம்பரையாகக் கிருஷித் தொழிலையே பெரும் தொழிலாகக்கொண்ட ஜர்மானிய விவஸாயிகள் லீபிக் கூறியதை எதிர்த்து வாதம் செய்தார்கள். அவரது முறைகள் முரண்பாடானவை என்று ஆக்ஷேபித்தார்கள். நமது வாசகர்களும் அந்தச் சமயத்தில் சாஸ்திரத்திற்கும், அனுபவத்திற்கும் எத்தகைய தீவிரமான வாதம் நடந்திருக்கும் என்று ஒருவாறு ஊகித்தறியலாம். ஆனால் லீபிக்கின் அறிவு சமயத்திற்குப் பின்னடையாது சரிக்குச் சரியாக எதிர்த்து நின்றது. தம்முறைகள் சரியானவை என்று உலகத்தவர்களுக்கு நிரூபித்துக் காட்டப் பன்னிரண்டு வருஷம் உழைத்தார். அவ்வுழைப்பின் பயனாக "விவசாயத்தின் இயற்கைச் சட்டங்கள்" (Natural Laws of Husbandry) என்னும் பெரிய நூலை இயற்றி உலகத்தவர்க்கு அளித்தார். அதைக்கண்டு அவரது விரோதிகள் நாணித் தலைகுனிந்தனர்; பல்லை இளித்தனர்; அவரது தேர்ந்த அனுபவமான முறைகளை எதிர்த்து வாதம் புரிந்தோமே என்று மனதில் வருத்தமும் கொண்டனர். அவரது முறைகள் ஒவ்வொன்றையும், கோடைகாலத்துப் பயிர், மழையை எதிர்பார்ப்பதேபோல் ஜர்மானியில் சாஸ்திரத்தில்வல்ல ஒவ்வொருவரும், எதிர்பார்த்திருந்தார்.

நாற்பது வருஷங்களுக்குமுன் ஐரோப்பாவின் விவசாயப் பத்திரிகைகளில் ஆழமாக உழுவதின் அனுபவங்களைப்பற்றியும் அதனால் அடையும் லாபமான பலன்களைப்பற்றியும் வெளியிடப்பட்டிருந்தன. நிலத்தை ஆழமாக உழுவது என்பது விவசாயத்தின் முறைகளில் முக்கியமான முறை என்று நாம் சொல்லலாம். இங்கிலாந்தில் சில பிரதேசங்களில் மும்மடங்குக்கும் அதிகமான பலன்களைக் கொடுத்திருக்கின்றது.

பொதுவாக, ஆழமாக உழுவது என்பது நாளேற நாளேறத்தான் செய்யவேண்டும். அதாவது, ஆழமாகச் செய்வது என்பது சில காலத்தைப் பொறுத்தது. உலகத்தில், ஒரே காலத்தில் ஒரே தடவையில் அதிக ஆழமாகச் செய்யக்கூடிய நிலங்களும் இருக்கின்றன. ஆனால் அவை மிகவும் அருமை. நமது நிலங்களை ஒரே தடவையில் ஆழமாக உழுது பயிரிடவேண்டும் என்று எண்ணுவது சுத்த அறிவீனமாகும். அவ்விதம் செய்வதால் அடிமண் நிலமட்டத்திற்குக் கொண்டுவரப்படுகின்றது. நிலமட்டத்திலுள்ள மண் செழுமையாயிருக்கும். இவ்விதம் அடிமண் மேல் வருவதால் செழுமை குறைந்து பலனைக் குறைத்துவிடும். ஆனால் அந்நிலத்திற்குச் சில ரசாயன முறைகளை அனுசரித்துத் தக்கது செய்தால் நற்பயனைக் கொடுக்கும். ஆழமாக உழுவது என்பது சாதாரண கலப்பையினால் ஆகவேண்டுமானால் நாளேற நாளேறத்தான் அப்படிச்செய்ய முடியும். ஆனால் Subsoiler or Cultivator என்னும் நூதன கலப்பையினால் செய்வதால் ஒரே தடவையில் நமக்கு வேண்டிய அளவு ஆழமாக உழலாம். அப்படிச் செய்வதால் ஒரு சிறிதும் தீங்கு நேரிடாது. இந்த விஷயங்களை மனதில் பதியவைத்துக்கொள்ளவேண்டிய தவசியம்.

நிலத்தை அதிக ஆழமாக உழுவதினால் ஆங்கிலேயர்களும் பிறதேசத்தவர்களும் எப்படி உயர் பதவி யடைந்தார்கள் என்பதைப் பலமுறை சிந்தித்துப் பார்க்குங்கால் இந்தியாவில் மேலாக உழுது பயிரிடல் மிகவும் பிசகு என்பது வெள்ளிடை மலையெனத் தோன்றும். இங்கிலாந்தில் நிலத்தை ஆழமாக உழுவது என்பது தெரியாததன்முன் நிலங்கள் 5-அங்குலம்வரை உழப்பட்டு வந்தன. ஆனால் இப்பொழுதோ அதைவிட இரண்டுபங்கதிக ஆழமாக உழப்படுகின்றன. தற்காலம் இந்தியாவில் நிலங்கள் ஆழமாக உழப்படுவது சராசரி $3\frac{1}{2}$-அங்குலமேயாகும். இவ்வளவு மேலாக உழுப்படுவதற்குக் காரணமென்னென்று ஆராயுங்கால், தொன்று தொட்டுப் பாரம்பரியமாக அவ்வளவு ஆழம்தான் உழப்படவேண்டும் என்றும் அதற்கு மேலும் ஆழமாக உழுதால் தோஷம் வரும் என்றும் பிரஜைகள் குருட்டு வழக்கமொன்றை மேற்கொண்டுள்ளமையே என்றறியலாம். உலோக உணவைக் கிரகித்து அதனால் செழுமையடைய மூன்றரை அங்குல ஆழம் ஒரு சிறிதும் போதாது. இத்தகைய முறையைப்பற்றி ஒன்றுஞ் சொல்வதற்கில்லை. வேர்கள் ஆழமாகச் செல்வதால் அவை பல இடங்களிலும்

பரவி பூசாரத்தைக் கிரகித்துக் கொள்கின்றன. அதனால் மூன்று மடங்குக்கும் அதிகமான பலனைப்பெற மார்க்கமேற்படும்.

லீபிக் என்னும் ஜர்மானியர் அதிக ஆழமாக நிலத்தை உழுவதுதான் கிருஷித்தொழில் அபிவிருத்தி யடைவதற்கு முக்கியமானதோர் அடிப்படை என்று உறுதியாகக் கூறுகின்றார், "விவசாயி மண்ணையே நலம்பெறச் செய்யவேண்டும். அதன் மூலமாகவே தாவர வர்க்கங்களை வேண்டியவிதம் உடனே செய்துகொள்ளும் சக்தி பெற்றவனாகின்றான்" என்றும் கூறியிருக்கின்றார். அடிமண்ணில்தான் நாம் அதிகமான லாபத்தைக் காணலாம் என்று கிருஷி சாஸ்திரம் குறிக்கின்றது. ஏனெனில், மண்களில் மரவுணவு பூமியின் ஆழமான பாகத்தில் இருந்தே தீரும். அந்த மரவுணவு பயிருக்கு உபயோகப்படும்படிச் செய்வதும், காற்று நடமாடும்படி விடுவதும், நீர்பாய்ச்சுவதும், எருகொட்டுவதும், அவைகள் செடிக்கு வீண் போகாமல் உபயோகப்பட என்னென்ன செய்யவேண்டுமோ அவைகளைச் செய்வதுமே இன்றியமையாதவை.

ஆனால் மற்றொரு சங்கதி. அஃது என்னையெனின் இந்தியாவில் ஆழமாக உழுவதானால் வரும் பயனைப்பற்றியதே. இது நமது கவனத்தை இழுக்கின்றது. ஆழமாக உழப்படாத நிலத்தில் பயிர்கள் வறண்டகாலத்தில் நீரில்லாததினால் தீய்ந்துபோய்விடுகின்றன. ஆனால் ஆழமாக உழப்படும் நிலத்தில் வறண்ட காலத்திலும் பயிர்கள் செழித்து வளரும். இந்தியாவிலும் இம்முறை அனுஷ்டிக்கப்படவேண்டும் என்பது நமது முக்கிய நோக்கம். இது அனுஷ்டிக்கப்படுவதால் திறை கொள்வாரும் திறை வாங்குவாரும் ஒரு சிறிதும் மனக்கவற்சியடைய மார்க்கமிராது. 1869-ம் வருஷத்தில் மிஸ்டர் ரிவட் கார்னாக் (Rivett Carnac) ஆழமாக உழுவதனால் அடையும் பயனை அனுபவ பூர்வமாகச் செய்துபார்த்துப் பலன் அதிகமாயும், திருப்திகரமாகவும் இருக்கின்றதென்று கண்டறிந்தார். மறுபடியும் சென்னை துரைத்தன விவசாயப் பண்ணையில் மிஸ்டர் ராபர்ட்ஸன் (Mr. Robertson) நிலம் ஆழமாக உழப்படவேண்டுவதைப்பற்றி அனுபவத்தில் பரிசீலனை செய்து பார்த்து 1875-ம் வருஷம் ஒவ்வொரு பயிர் வகையும், மிகவும் செழித்து ஓங்கி வளர்ந்திருக்கின்றதுஎன்று அபிப்பிராயப்பட்டிருக்கின்றனர். பங்களூர் விவசாயப்பண்ணையில் 1877-ம் ஆண்டில் மிஸ்டர் ஹார்மன் என்ற ஒரு விவசாய அதிகாரி நிலம் ஆழமாக உழும் முறையைக் கொண்டு பயிரிட்டதில் பலன் அதிகமாகக் கண்டதாகக் குறிப்பிட்டுள்ளார். அந்த அதிகாரியே அதே விவசாயப் பண்ணையில் மேற்கண்ட முறையை அனுசரித்துப் பயிரிட்டதில் ஓர் ஏகர் நிலத்தில் 3,000 பவுண்டு அரிசி கிடைத்ததாகக் குறிக்கப்பட்டுள்ளது. அப்பயிர் புன்செய் நிலத்தில் சாகுபடி செய்யப்பட்டதென்றும், அதுவும் வறண்ட காலமாகிய கோடையில் பயிரிடப்பட்டது என்றும், அந்தச் சமயம் எங்கும் பஞ்சமும் மழையின்

மையுமாயிருந்ததென்றும் கூறியிருக்கின்றார். அத்தகைய அரும்பு காலத்திலும் பயிர் செழித்து வளர்ந்ததற்கு ஆழமாக உழுவதே, முக்கிய காரணமாக விருந்தது. நமது தேசத்தில் நெற்பயிருக்கு எப்பொழுதும் தண்ணீர் அவசியம். ஆகையினால் மேலாக நிலத்தை உழுவதைக் காட்டிலும் ஆழமாக உழுவதுதான் ஏற்றது. அதனால் பலனும் அதிகமாக அடைய இடமிருக்கிறது. ஆகவே இந்தியாவில் எங்கும், மூலைமுடுக்குகளிலும், நிலத்தை ஆழமாக உழுது பயிரிடுவதை அனுபவத்திற்குக் கொண்டுவர முற்படுவோமாக.

இந்தத் தேசத்திற்கும், இத்தேயத்துக் கால்நடைகளுக்கும் ஒத்தவாறு சிறந்த கலப்பைகள் செய்வதற்காக இங்கிலாந்து தேசத்தும், அமெரிக்கா தேசத்தும் இயந்திரமியற்றுவதில் தேர்ந்த தொழிற்சாலைகளுக்கு, விலையுயர்ந்த வெகுமதிகள் அளிக்கப்படல்வேண்டும். அதன்பிறகு துரைத்தனத்தார் இம்மாதிரி செய்யப்பட்ட கலப்பைகளையும், மண்கிளப்பிகளையும் ஆயிரக் கணக்காக ஜமீன்தாரர்களுக்கும், மிராசுதாரர்களுக்கும் உதவுவது பேருபகாரமாகும். செழுமையாகப் பயிரிடப்பட்ட நிலங்களுக்குப் பரிசு கொடுக்கப்படவும்வேண்டும். இம்மாதிரியான கலப்பைகள் கிடைப்பதற்கு ஓர் இடம் ஏற்படுத்துவதும் முக்கியம். இவைகளைக் கேட்பவர்களுக்கு இல்லையென்னாது கொடுத்துவரல்வேண்டும். இந்தக் கலப்பைகளினால், லாபமும் உபயோகமும் அதிகமாகக் காணப்பட்டால், குடிகளுக்கு இலவசமாகவும் வழங்கப்படவேண்டும். இம்முறைகளைப் பழக்கத்தில் கொண்டுவருவதனால் நல்ல செழுமையான பயிரும், அதிக லாபமும் உண்டாகும் என்று சொல்வதில் கொஞ்சமேனும் தடையிராது. நிலத்தை ஆழமாக உழுவதனால் அடையும் நன்மைகளையும், மேன்மைகளையும், பயிர் ஓங்கி வளருந் தன்மையையும்பற்றி சிந்தித்துப் பார்த்து லாபமடையும்படி நமது விவசாயிகளின் மனம் செல்லுமாறு எல்லாம்வல்ல இறைவன் அருள்புரிவானாக.

"ஒரு விவசாயி"

ASOKA'S INSCRIPTIONS.

BY HISTORICUS.

அசோகன் சாஸனங்கள்.

மௌரிய வம்சத்தில் தலை சிறந்து விளங்கிய அசோகனை அறியாதார் பலரிருக்கமாட்டார். இவன் கி. மு. 273-ம் வருஷமுதல் கி. மு. 232-ம் வருஷம்வரை குசுமபுரம் என்ற பாடலிபுத்ரத்தில் ஆண்டுவந்தான். இவன் கி. மு. 273-ம் வருஷத்தில் சிம்மாசனத்திற்குரியவனா யிருந்தபோதிலும் நான்கு வருஷங்கள் கழித்தே அதாவது கி. மு. 269-ம் வருஷத்திலேயே இராஜ்யாபிஷேகம் செய்துகொண்டான். இஃது இவனுடைய சாஸனங்களினாலேயே விளங்குகின்றது.

மௌரிய வமிசத்தை முதன்முதல் இந்தியாவில் ஸ்தாபித்தவன் சந்திரகுப்தன் என்பவன். அவன் கி. மு. 321-முதல் கி. மு. 297-வரையில் ஆண்டு மாண்டான். அவனுக்குப் பிறகுப் பிந்துசாரன் என்பவன் பட்டத்துக்கு வந்து கி. மு. 297-முதல் கி. மு. 273-வரை ஆண்டுவந்தான். பிந்துசாரனுடைய குமாரன் அசோகன் என்பவன்.

அசோகன் என்ற பெயரையுடைய பலர் இந்திய நூல்களில் காணப்படுகின்றனர். இக்ஷ்வாகு வமிசத்துத் தசரத மஹாராஜனுடைய மந்திரிகளில் ஒருவன் அசோகன் என்றழைக்கப்படுகிறான். மஹாபாரதத்தில் வரும், அசுவபதி அரசனுக்குச் சகோதரனும், தனு என்ற மன்னனுடைய குமாரனுமான ஒருவன் அசோகன் என்று கூறப்படுகிறான். இன்னும் யசோதர காவியத்தின் கதா நாயகனாகிய யசோதரனின் தகப்பன் அசோகன் என்றழைக்கப்படுகிறான். இந்த அசோகன், "இன்றைக்கு 2192-வருஷங்களுக்குமுன்" (அதாவது கி. மு. 284-வருஷங்களுக்குமுன்) உஜ்ஜயினி மாநகரத்தில் ஆட்சி புரிந்தான் என்று கூறப்படுகிறது. இவன் ஜைன மதத்தை அவலம்பித்துக்கொண்டிருந்தான் என்று யசோதர காவியம் கூறுகின்றது. சந்திரகுப்தன் பேரனாகிய அசோகமௌரியன், பாடலிபுர அரசனாய் வருவதற்குமுன் இளவரசனாயிருக்குங் காலையில் உஜ்ஜயினியில் சிறிது காலம் சிற்றரசனாய் இருந்தான் என்று சரித்திர மூலங்கள் கூறுகின்றன. ஆகையால் யசோதர காவியத்தில் கூறப்பட்டுள்ள அசோகன், உஜ்ஜயினியில் ஒன்பதுவருஷ காலம் இளவரசனாய் இருந்து ஆண்ட அசோகமௌரியனாகவே இருக்கலாமோ என்று ஊகித்தற்கு இடமிருக்கின்றது. இதைப்பற்றி விரிவாய்ச் சமயம் வந்துழி எழுதலாம். இனி அசோகனுடைய சாஸனங்களைப்பற்றி சிறிது எழுதுவோம். அசோகனுடைய சாஸனங்கள் சாதாரணமானவைகளல்ல. அசோகனே நேரில்வந்து பேசுவதுபோல் அச்சாஸனங்களில் எழுதப்பட்டிருக்கின்றன. ஜனங்களிடத்தில் அவன் எவ்வளவு அன்பு பூண்டொழுகிவந்தான் என்பதையும், "குடிதழீஇக்கோலோச்சு மாநில மன்னன்" என்ற பொய்யாமொழிக் கிலக்கியமாக அவன் இருந்த விதத்தையும், அவன் சாஸனங்கள் விளக்கமாய்க் கூறுகின்றன. அச்சாஸனங்களில், அசோகன், தான் ஓர் அரசன் என்பதையும் மறந்தவனாய், தன்னுடைய பிரஜைகள் நல்வழியடையவேண்டுமென்ற ஒரு பெருங் கொள்கையுடையவனாய், பௌத்த மதத்தின் முக்கிய சாராம்சங்களை மிகவும் நுட்பமாகக் கூறுகிறான். முற்காலத்தில் பெரியோர்கள் எவ்வளவு மரியாதையாக நடத்தப்பட்டு வந்தார்கள், என்பதும், ஜீவ ஹிம்சையை ஜனங்கள், அரசனுடைய ஆக்கினைக்குட்பட்டு எங்ஙனம் வெறுத்துவந்தார்களென்பதும், ஜனங்களுடைய பொதுவான காரியங்கள் அரசனால் எவ்வளவு ஆவலுடன் கவனிக்கப்பட்டு வந்தனவென்பதும் மனிதர்களுக்கும் மிருகங்களுக்கும் நாட்டின் பலபாகங்களிலும் சிகித்ஸா சாலைகள் ஏற்படுத்

தப்பட்டு எவ்வளவு திறமையுடன் நிருவகிக்கப்பட்டு வந்தனவென்பதும் இன்னும் பிறவிஷயங்களும் அசோகனுடைய சாஸனங்களால் விசதமாய் விளங்குகின்றன. அத்தகைய சாஸனங்களைத் தமிழர் அறியுமாறு அவைகளை அங்ஙனமே தென்மொழியில் மொழிபெயர்த்து வெளியிடலாம் என்ற உத்தேசங்கொண்டு 'கல்பதருவின்' ஆதரவை நாடினேன். இச்சஞ்சிகை முதல் ஒவ்வொரு சஞ்சிகையிலும், அசோகனுடைய சாஸனங்களை ஒவ்வொன்றாக மொழிபெயர்த்துக்கொண்டு வருகிறேன்.

அசோகன், முற்காலத்தில் சாஸனங்கள் எழுதும்போது ஒரே இடத்தில் எழுதிவைத்தானில்லை. நாட்டின் பலபாகங்களிலும், தன்னுடைய சிலாசாஸனங்களில் அடங்கிய கொள்கைகள் எங்கெங்கு பரவவேண்டுமென்று விருப்பமிருக்கிறதோ அவ்விடங்களிலும் தன் சாஸனங்களை எழுதிவைத்தான். பெரிய பாறைகளிலும், ஸ்தம்பங்களிலும், துறவிகள் வசிக்கும்படியான குகைகளின் புறங்களிலும், அவன், தன் சாஸனங்களை எழுதிவைத்தான். இந்தச் சாஸனங்களைச் சரித்திரக்காரர் பலவகையாகப் பிரித்திருக்கின்றனர். பதினான்கு விதமான சாஸனங்கள் பாறைகளில் பல இடங்களில் காணப்படுகின்றமையால், அவைகளைப் பதினான்கு பாறைச் சாஸனங்களென்றும், ஏழுவிதமான சாஸனங்கள் பல ஸ்தம்பங்களில் காணப்படுகின்றமையால் அவைகளை ஸ்தம்ப சாஸனங்கள் என்றும் சிறியசிறிய சாஸனங்களாக ஸ்தம்பங்களில் காணப்படுகின்றமைக்குச் சிறிய ஸ்தம்பசாஸனங்களென்றும் சிறியசிறிய சாஸனங்களாகப் பாறைகளில் காணப்படுகின்றமைக்குச் சிறிய பாறைச் சாஸனங்களென்றும், ஆஜீவிகர்களுக்கென்றும் பிராமணர்களுக்கென்றும் குகைகள் விடப்பட்டதாகக்கூறும் குகைச்சாஸனங்களையும் பிறவற்றையும், பொதுச் சாஸனங்களென்றும் ஐந்துவகையாகச் சரித்திரக்காரர் பிரித்திருக்கின்றனர். முதலில் நாம் பதினான்கு பாறைச் சாஸனங்களை எடுத்துக்கொள்வோம். அவைகளுள் முதலாம் பாறைச் சாஸனம், உயிரின் உயர்வைப்பற்றிக் கூறுவது; அதாவது ஜீவ ஹிம்சை செய்யக்கூடாதென்று ஜனங்களுக்குப் போதிப்பது. அச்சாஸனம் வருமாறு :—

தேவப்ரியரான ப்ரியதர்சி மஹாராஜருடைய கட்டளையின்பேரில் இந்தத் தர்ம சாஸனம் எழுதப்பட்டது.

(தலை நகரமாகிய) இங்கே பாடலிபுரத்தில் விழாக்கள் கொண்டாடப்படும்பொழுது எந்தப் பிராணியும் சொல்லப்படக்கூடாது; அல்லது சமாஜங்களும் நடைபெறக்கூடாது. சில இடங்களில் நடைபெறும் சமாஜங்கள், தேவப்ரியரான ப்ரியதர்சி மஹாராஜருடைய பார்வைக்குச் சிரேஷ்டமாக இருக்கின்றனவேனும், (இங்கே) பாடலிபுரத்தில் நடைபெறும் சமாஜங்களில் அதிக தோஷம் இருக்கிறதாக தேவப்ரியரான ப்ரியதர்சி மஹாராஜர் எண்ணுகின்றார்.

முன்னம், தேவப்ரியரான ப்ரியதர்சி மஹாராஜருடைய அரண்மனைப் பாகசாலையில், தினந்தோறும் அநேக (நூறு) ஆயிரம் உயிருள்ள பிராணிகள் கறியாகச் செய்வதற்குக் கொல்லப்பட்டுவந்தன, ஆனால் இந்தத் தர்மசாஸனம் எழுதப்படும்போது தினந்தோறும் கறிசெய்வதற்கென்று இரண்டு மயில்களும், ஒருமானும்—ஆக மூன்று பிராணிகளே கொல்லப்பட்டு வருகின்றன. இந்த மானும் அடிக்கடி கொல்லப்படுகின்றதில்லை. இனி இந்த மூன்று பிராணிகளும் கொல்லப்படக்கூடாது."

இதனால் அசோகன், நாளாவட்டத்தில் ஜீவஹிம்சையை எப்படி அடியோடு ஒழித்துவிட்டான் என்பது நன்கு விளங்கும். இச்சாஸனத்தில் சமாஜம் என்ற ஒருபதம் வருகின்றது. அதுயாதென நேயர்கள் வினவுதல் கூடும். சமாஜம் எனின், ஜனங்கள் ஓய்வு நாட்களில் கொண்டாடும் விழா என்று பொருள்படலாம். இந்த விழா வருஷத்துக்கொருமுறை பாடலிபுரத்தில் நடப்பதுபோலும். சமாஜம் என்பதை மிஸ்டர். ரெஸ்டேவிட்ஸ் பின்வருமாறு விளக்குகிறார் :—" ஒரு சமாஜத்தில் ஆறுவிதமான தீங்குகள் இருக்கின்றனவென்று சிகாலோவாதம் என்றநூல் கூறுகின்றது. நாட்டியம், பாட்டு, காயனம், செய்யுட்களை ஒப்புவித்தல், ஜாலவித்தை, தேகசம்பந்தமான விளையாட்டுகள் முதலியவைகளே அத்தீங்குகளாகும். ஒரு சமாஜத்தில் சோறும் போடப்படும் என்று விநயபிதகத்திலுள்ள ஒரு செய்யுள் கூறுகின்றது. இந்தச் சமாஜத்திற்கு, அரசாங்கத்தின் உயர்ந்த உத்தியோகஸ்தர்கள் வரவழைக்கப்பட்டுத் தனியான இடம் கொடுக்கப்படுவார்கள். சாதாரணமாக இந்தச் சமாஜம் ஒருமலையினுச்சியிலேயே நடைபெறுவது வழக்கம்."

இந்தச் சமாஜங்கள் நடைபெறும்போது, மாமிசமும், சாராயமும், தாராளமாக உபயோகிக்கப்பட்டுவந்தன என்று ஸ்ரீமான் டி. ஆர். பந்தர்கார் கூறுகின்றார். இச்சமாஜங்களில், மாமிசமும் சாராயமும் உபயோகிக்கப்பட்டு வந்ததனாலேயே இவைகள் நடைபெறக் கூடாவென்று அசோகன் கட்டளையிட்டான்போலும். இப்பொழுது நடைபெறும் தசராப்பண்டிகை, அசோகன் காலத்திய சமாஜம் ஒத்திருக்குமோ என்று ஒரு சந்தேகம் உண்டாகின்றது.

இச்சாஸனத்தினால், அசோகன், தன் வாழ்நாட்களின் பிற்பகுதியில் ஜீவ ஹிம்சையை வெறுத்திருந்தான் என்பது தெற்றெனப் புலப்படும். ஜைனமதத்தைப் பின்பற்றியவனும், உஜ்ஜயினியில் ஆண்டவனும் யசோதர காவியத்தில் கூறப்பட்டவனுமான அசோகனும், இந்தச் சாஸன அதிகாரியான அசோக மௌரியனும் ஒன்றே என்று கொள்வதற்கு, ஜீவஹிம்சையை அடியோடு நீக்கவேண்டுமென்ற கொள்கையையுடைய ஜைன மதத்தை ஆதியில் உஜ்ஜயினியில் பின்பற்றிய அசோகன், தன் வாழ்நாட்

களின் பிற்பகுதியில், எல்லா மதங்களிலும் சமரச எண்ணங்கொண்டு, ஜைன மதத்தை, ஜீவஹிம்சை செய்யும் விஷயத்தில் பின்பற்றினான் என்பதும் ஓர் ஆதாரமாகும். அடுத்த இதழில் இரண்டாம்பாறைச் சாஸனத்தின் விவரம் வெளிவருதல்கூடும்.

" சரித்திரக்காரன் "

THE TEACHER—A MORAL INSTRUCTOR.

By Mr. K. P. SESHADRI AIYANGAR,
Teacher, Muthialpet High School, Madras.

உபாத்தியாயர்—ஒரு மதபோதகர்.

(109-ம் பக்கத் தொடர்ச்சி.)

சிறு பிள்ளைகளின் மனமாகிய புஷ்பம் மலர்வதற்கு அத்தியாவசியகமானவை நெஞ்சு திடுக்கிடும்படியான கதைகள்தான். வீரர்களின் அதியற்புதச் செய்கைகளைப் பற்றியும், பக்தி வினயத்தைப்பற்றியும், விரித்துப் பாலர்களுக்கு உரைப்பதனால், அவர்கள் அக்கதையில் கண்ட விஷயங்களைக் கண்ணும் கருத்துமாகச் செவிமடுத்து, அதன்படித் தாமும் நடக்க யத்தனப்படுவார்கள். சிறுவர்களின் மனது கண்ணாடிக்குச் சமானம். நற்போதனைகளை அப்படியே பதித்துக்கொள்ளும் ; துர்ப்போதனைகளையும் அவ்விதமே ஏற்றுக்கொள்ளும் மியல்பினையு முடையது. அப்படிப்பட்ட வீரதீர பராக்கிரமரின் சரிதங்களை இளஞ்சிறார்களுக்குப் போதிப்பதனால், அவர்களே, அக்கதைகளின் மூலமாக இக்காரியம் நன்மையானது, இச்செயல் புன்மையானது, இவன் உபகாரி, இவன் அபகாரி என்றுணர்ந்து ஒருவிதமான முடிவைப் பெறும் ஆற்றல் பெற்றவராகின்றனர். நன்மையைப் பூஷிக்கவும், தீமையைத் தூஷிக்கவும், நல்லவர்களைப் புகழ்ந்து அவர்களது முறைகளைத் தாங்கள் பின்பற்றி ஒழுகவும், தீயவர்களை இகழ்ந்து அவர்களுடன் இணங்கி யிருப்பதும் பெரும்பாவம் என்றுன்னி, வெறுக்கவும் திறமை வாய்ந்தவராவார். இத்திறமை வாய்ந்த அறிவே மனிதனது முதிர்ந்த பேரறிவாகும். இதைப்பற்றி ஆங்கிலத்தில் மிக மேதாவியான எமர்ஸன் என்பவர் "முதிர்ச்சியும், நிறைவும் ஒருங்கமைந்த மனிதனின் அறிவு" என்று பன்முறை கூறியிருக்கின்றார். இவ்வறிவே ஒரு மனிதனை யாவரும் புகழும்படியான நிலைமையிலிருத்துவது ; இவ்வறிவுதான் அரிய பெரிய காரியங்களைச் செய்வது. இத்தகைய அறிவிற்கு எட்டாத தத்துவமேயில்லை என்று சொல்லினுந் தகும்.

அர்த்தமென்பதே தெரியாத பழமொழிகளாலும், வெறுங் கட்டுக் கதைகளாலும் ஒன்றும் பிரயோஜனமில்லை. அவைகளை வேண்டா வெறுப்பினால், சொல்லித் தொலைக்கவேண்டுமே என்று தீராப் பொறுப்பாக

வாய்ப்பாடமாகச் செய்து இளைஞர் ஒப்புவிப்பார்களே தவிர கவனத்தில் வைத்துக்கொள்ளார்கள். இத்தகைய வாய்ப்பாடங்கள், பல தடவைகளில் அவர்களை மிக வஞ்சகமும், தந்திரமும், அசூயையும், அழுக்காறும், கொள்ளும்படிச் செய்துவிடுகின்றன. மதபோதனை என்பதை அப்போதைக்கப்போது அளித்துவரின் இன்னோரன்ன துர்க்குணங்கள் உண்டாகா. தர்மம் அழியாது, அதர்மம் அழுவுறும் என்றும், நன்மை என்றும் நிலைநிற்கும், சத்தியம் ஜயிக்கும், அசத்தியம் அபஜயமுறும் என்றும், கடவுள் என்பவர் ஒருவர் சச்சிதானந்தமாய் நித்தியமாய் இருக்கின்றார் என்றும் அவருடைய சக்திக்குள் அகில வுலகமெல்லாம் அடங்கியிருக்கின்றனவென்றும்' கடவுளை நம்பினோர் கைவிடப்படார் என்றும், அவனன்றி யோரணுவு மசையாதென்னும் உறுதி மொழியையும், அவரது சக்திக்கு ஒப்பு உயர்வு மில்லையென்றும் மனதில்கொண்டு நாம் சன்மார்க்கத்தில் நடந்து, நல்லெண்ணத்துடன் ஒருவர்க்கும் பொல்லாங்கு நினைக்காமலும், தீமைபுரியாமலு மிருப்போமேயானால், நமக்கு நேரும் இடுக்கண்களை அவர் அரைக்கணத்தில் போக்கவல்லார் என்னும் உண்மைத் தத்துவத்தை மதபோதனையால் சிறுவர்களுக்குப் போதிக்கவேண்டும். இவ்விடத்தில்தான் மதபோதனை வேண்டியதின் அவசியம் தோன்றுகிறது. மனிதனது இயற்கை இன்னதென்றும், கர்மாவின் போக்கு இதுவென்பதும், ஒவ்வொருவனுக்கும் விதி என்பது உண்டென்றும், மனிதனது மனத்திற்கும், வாக்குக்கும், காயத்திற்கும் எட்டாத மிக்க நன்மையும் ஆற்றலும் பெற்ற தேவ கணங்கள் பலவுளவென்றும் சொல்லவேண்டியது அவசியம். தனிப் பெரும்பொருள் ஒன்று உண்டென்றும், அது பேரறிவும், பேருற்றலும், அழியாமையும் ஒருங்கே அமையப்பெற்றதென்றும், முதலும் இறுதியும் அற்றதென்றும் அடிக்கடி சிறுவர்கள் எண்ணுவார்களானால் அவர்களது மனம் தானாகவே சன்மார்க்கத்தில் திரும்பிவிடும். அவர்களது கர்வம் என்னும் கெட்ட குணம் மாறிவிடும் ; பயம் என்பது மறைந்து நன்றியறியுங்குணம் மேற்படும். பேராசை என்னும் பேய் அக்கணமே அகன்றுவிடும். அதற்குப் பதிலாக வாழ்வில் தானும் ஒரு பங்காளி என்ற எண்ணம் ஏற்றம் பெறும் ; பொறாமையும், அகங்காரமும் பரிதியைக்கண்ட பனிபோல் மறைந்துவிடும்; அதற்கு மாறாக எப்பொருளின்மீதும் ஒருவித அன்பும், அநுதாபமும் அதிகமாகிவிடும் ; ஆபத்துக்காலத்தில் மனம் தளர்ச்சியடையும் தன்மை அறவே ஒழிந்து அதற்குப் பதிலாக ஆத்மதீரம் பெற்றவராகத் தடையென்பது கிடையாது.

பக்தி மேலீட்டினால் போதிக்கும் உபாத்தியாயர், சொல்வதைப்போல் ஒழுக்கத்திலும் இருந்துவிட்டாரானால் ; தான் மொழிவதைப் போலவே தான் உதகரித்துக் காட்டுவாரானால், தன் ஆதரணையிலுள்ள சிறுவர்களின் குணசீலத்தில் எவ்வளவோ அருமையான காரியங்களைச் செய்யலாம். ஏனென்றால் சிறுவர்கள் எப்பொழுதும் வெகு சீக்கிரத்தில் மேலானதாக எதைக் காண்கிறார்களோ அதை அப்படியே கவனத்தில் வைத்துக்கொள்

ளும் சுபாவத்தினர். தியானம் என்பது திடமனதுடையவருக்கு இயல்பானது. உலகப்புரட்டு இன்னதென்றும் மனிதர்களின் சகவாசம் இத்தகையதென்றுணரா சிறுவர்கள் பகவத் தியானத்தின் தூய்மையை சிலாகிக்கப் பின்னடையார்கள். (இன்னும் வரும்)

FAITHFUL SERVANT.

A NEW INTERESTING TAMIL NOVEL

BY MR. SIVAMUTHUKUMARASAMY MUDALIAR,
Tamil Pandit, Muthialpet High School, Madras.

நன்றியுள்ள வேலையாள்.

முதல் அத்தியாயம்.

ஒருநாள் மாலைப்பொழுது. அன்று இளந்தென்றல் "சில்" என்று வீசிக்கொண்டிருந்தது. மாங்குயில்கள் சோலைகளில் உல்லாசமாய்ப் பாடிக்கொண்டிருந்தன. இந்திரபுரத்திலுள்ள ஒரு சிறிய பட்டணத்தில் ஓர் அறையில் இரண்டு மேன்மக்கள் தனிமையாய் உட்கார்ந்திருந்தனர். அவர்களிருந்த அறை மிக்க அழகாய் விளங்கிற்று. அவ்விடத்தில், வேலையாள் ஒருவனும் இல்லை. அம்மேன்மக்கள் ஏதோ சில விஷயங்களைக் குறித்து மிகக் கவலையுடன் தர்க்கித்துக்கொண்டிருந்தனர்.

நாம் மேற்கூறிய மேன்மக்களில் ஒருவர் அப்பட்டத்திற்கு உரியரல்லர் என்பது ஆழ்ந்து சிந்திக்குமிடத்துத் தானே விளங்கப்பெறும். அவர் தடித்த குட்டையான தேகமும், வெறுக்கத்தக்க முகச்சாயலும் டம்பத்தன்மையும் பெற்றிருந்தனர்.

மற்றையவர் சுந்தரம்பிள்ளை என்பவர். அவர் உண்மை மேன்மகனவர். அவர் வீட்டின் ஒழுங்குகளும், தோற்றமும் அவர் மேன்மகன் என்பதை இனிது விளக்கின. நாம் முன்னர் உரைத்தவாறே அவ்விருவருந் தங்கள் சம்பாஷணையின்கண் மிக்க கவலையுள்ளோரா யிருந்தனர்.

" நான் அக்காரியத்தை இவ்வாறுதான் செய்தல்முடியும் " என்றார் சுந்தரம்பிள்ளை.

" ஐயா! நான் அதற்குச் சிறிதும் உடன்படேன். அது என்னால் சாத்தியப்படாது" என்றார் மற்றொருவர்.

" ஏன் முருகேசா ! இது உண்மைதானே ? குணசீலன் சாதாரண மனிதனல்லவே ? உண்மையில் எவரும் அவனைப் பெருந்தொகைக்கு வாங்குவார்கள். அவன் ஓரிடத்திலேயே நிலைத்திருப்பவன்; பெருந்தன்மையுள்ளவன்; மிகுந்த சாமர்த்தியமுள்ளவன்; எனது வயல்களனைத்தையும் அவன் ஒருவனே பார்த்துவருந் திறமையுடையவன். ஆதலால் இவன் என் மிகுதி கடன் முழுமைக்குந் தகுதியுள்ளவனே. உன் எண்ணம் என்ன? முருகேசா"

அதற்கு அந்த வர்த்தகன் நகைத்துக்கொண்டே "நல்லது, நான் நண்பர்கள் மனதைத் திருப்திசெய்ய நியாய வழியில் எதுவுஞ் செய்யத் தயாராயிருக்கின்றேன். ஆனால் இது அவ்விதமாகத் தோன்றவில்லை. 'இவன் ஒருவன்' என்றால் ஒத்துக்கொள்வது கடினமான காரியம். மிக்கக் கடினமான காரியம்" என்றார்.

"சரி அவ்வாறாயின் அதனை எவ்வாறு முடிவு செய்யப்போகின்றாய்?" என்று சுந்தரம்பிள்ளை மிக்க அவசரத்துடன் வினவினார்.

"நல்லது குணசீலனோடு அனுப்புதற்கு ஒரு சிறுவனாவது சிறுமியாவது இல்லையோ" என்றான் அந்த வியாபாரி.

"ஓ!—அது முடியாது. உண்மையில் எனக்கு ஒருவரையும் விற்க மனமில்லை. அவ்விதமாகச்செய்ய எனக்கு விருப்பமே இல்லை," என்றார் சுந்தரம்பிள்ளை.

இவ்விருவரும் இவ்விதம் சம்பாஷித்துக்கொண்டிருக்கையில் இவர்களிருந்த அறையின் கதவு திறக்கப்பட்டது. உடனே நான்கு அல்லது ஐந்து வயதுள்ள சிறுவன் ஒருவன் அவ்வறைக்குள் வந்தான். அவன் முகம் அழகு வாய்ந்து, வசீகரத்துடன் விளங்கிற்று. அவன் தோற்றமே காண்போரைக் களிகூறும்வண்ணம் செய்தது. ஆழ்ந்து வட்டவடிவாயுள்ள அவன் முகத்தைச் சுற்றிலும் சுருண்டு, பளபளவென்றிருந்த மயிர்ச்சுருள்கள் திரிக்கப்படாத பட்டுப்போல் நேர்மை வாய்ந்திருந்தன. அவனது கறுத்தும் பரந்த விழிகள் பிரகாசத்துடன் மிருதுவாயுமிருந்தன. இத்தகைய அழகுவாய்ந்த சிறுவன் அந்த அறைக்குள் விசித்திரமாகத் தோன்றினான். இவனது அழகிய முகமானது, இவன் வேடிக்கை செய்யும் இயல்பினையுடையவனென்று காட்டியபோதிலும், மிக்க நாணமும் ஒருங்கே பெற்றவனென்பதை விளக்கியது. இதனால் இவன் எஜமானர் இவனை எப்பொழுதும் அதிக பக்ஷமாகப் பாராட்டி வந்தாரென்பதும் புலப்பட்டது.

"வா! சம்பந்தா!" என்று அன்புடனழைத்து, உலர்ந்த திராக்ஷைப் பழக்கொத்து ஒன்றை எடுத்து அவன் பக்கமாய்க் கீழே எறிந்து, "இதைப் பொறுக்கிக்கொள்" என்றார் சுந்தரம்பிள்ளை.

திராக்ஷைப் பழங்களைக் கண்டதும் அச்சிறுவன் தன்னாலியன்ற வேகத்துடன் ஓடிவந்தான். அதைக்கண்டு அவன் எஜமானர் நகையாடினார்.

"சம்பந்தா இங்கேவா!" என்றார் சுந்தரம்பிள்ளை.

அச்சிறுவன் அருகில் வந்ததும் எஜமானர் சுருட்டைமயிருள்ள அவன் தலையைத் தடவிக்கொடுத்து, முகவாய்க்கட்டையில் ஒரு முத்தம் கொடுத்தார்.

"சம்பந்தா! நீ உன் ஆடல்பாடல்களை இவருக்குக் காட்டுவாயா?"

உடனே அச்சிறுவன் குறத்தியர்கள் பாடும் பாடல்களில் ஒன்றைத் தன் களங்கமற்ற இனிய குரலில் பாடினான். பாடுகையில் அதற்குரிய விநோதமான அபிநயமுஞ் செய்தான்.

இதைக்கண்ட முருகேசன் "சபாஷ்! சபாஷ்!!" என்று சொல்லி ஒரு கிச்சிலிப்பழத்தை எடுத்து அதன் கால் பாகத்தை அவனிடம் எறிந்தான்.

"சம்பந்தா! கிழவனாகிய வீரனுக்கு வாயுரோகம் வந்தபோது நடந்ததைப்போல் காட்டுவாயா" என்றார் எஜமானர்.

உடனே அச்சிறுவன் தன் முதுகை வளைத்துக்கொண்டு தன் எஜமானருடைய தடியைக் கையில் பிடித்துக்கொண்டு அவனைப்போலவே அவ்வறை முழுவதும் நொண்டி நொண்டி நடந்தான்.

இருவரும் இதைக்கண்டு "கொல்"லென்று நகைத்தார்கள். அச்சமயத்தில் அறையின் கதவு மெதுவாகத் திறக்கப்பட்டது. உடனே மாநிறம் வாய்ந்த சுமார் இருபது வயதுள்ள ஒரு பெண் அவ்வறைக்குள் வந்தாள்.

வந்தவள் அக்குழந்தையின்தாய் என்பது அவளை எவரும் ஒரு முறை பார்த்த மாத்திரத்தே அறிவர். அம்மாது அவ்விடத்தே நின்று சந்தேகப்பட்டவளாய்த் தன் எஜமானரைப் பார்த்துக்கொண்டிருக்கையில் அவர் "என்ன? லீலாவதி!" என்று வினவினார்.

"அன்புள்ள ஐயா! நான் ஞானசம்பந்தனைத் தேடி வந்தேன்" என்றனள். உடனே அச்சிறுவன் தன் தாயை அணைத்துக்கொண்டு தான் பரிசாகப்பெற்றுத் தன் மேலாடையில் வைத்துள்ள பழங்களை அவளுக்குக் காட்டினான்.

"நல்லது, அவ்வாறாயின் அவனை எடுத்துக்கொண்டு செல்லலாம்" என்றார். அவள் இதைக் கேட்டதும் அவ்வாறே செய்தாள். சுந்தரம்பிள்ளை தாய்க்கும் பிள்ளைக்கும் மேன்மக்கட்குரிய தோற்றங்களனைத்துமிருப்பினும் அவர்கள் அடிமைகளாகவே யிருந்தனர். அந்த வர்த்தகன் தனக்கு அச்சிறுவனை விற்றுவிடவேண்டுமென்று சுந்தரம்பிள்ளையினிடம் மிகவும் வாதாடினான். அவர் அதற்கு வெகுநேரம்வரையில் உடன்படவில்லை; ஆனால் அவ்வர்த்தகன் ஒரு வழியிலும் ஒத்துவராமையால் அவர் அதற்கு இசைய நேர்ந்தது.

இவ்விருவருடைய சம்பாஷணையால் லீலாவதி முக்கியமான ஒரு விஷயத்தை அறியலாயினாள். அதாவது 'ஒரு வியாபாரி யாரோ ஒருவரைத் தனக்கு விற்கவேண்டுமென அவளுடைய எஜமானரை வருத்துகின்றார் என்பது. அவள் அவ்வறையைவிட்டு வெளியே வந்ததும் அவர்கள் சம்பாஷணையை மிக ஆவலாய்க் கதவினருகே நின்று கேட்டிருந்தனள். ஆனால் அவள் எஜமானி அப்பொழுதுதான் அவளைக் கூப்பிட்டமையால் அவள் விரைவில் செல்லவேண்டியதாயிருந்தது.

"ஐயோ ! அம்மணீ ! என்செய்வேன் ! ஒரு வியாபாரி எஜமானருடன் ஏதோ பேசிக்கொண்டிருக்கின்றார். அது எனக்கு அச்சத்தைத் தருகின்றது அம்மணீ!" என்றுகூறிக் கதறியழுதனள்.

"நல்லது. பேதைப்பெண்ணே ! இருக்கலாம் அதற்கென்ன ?"

"ஹா! அம்மணி! என் குழந்தை ஞானசம்பந்தனை எஜமானர் விற்று விடுவாரே 'என்ன செய்வது" என்று சொல்லி அருகிலிருந்த ஒரு நாற்காலியின்மீது வீழ்ந்து விம்மிவிம்மி அழுதாள்.

"அவனை விற்பதா ? ஒரு காலத்துமில்லை. மடப்பெண்ணே ? உன் குழந்தை ஞானசம்பந்தனை யார் வாங்குவார் ? உலகத்திலுள்ளவர்களெல்லாம் உன்னைப்போலவே அவனிடத்தில் பிரியமுள்ளவர்களா ?"

"நல்லது. அம்மா ! எப்படியாகிலும் தாங்கள் இதற்கு ஒருகாலும் சம்மதிக்கமாட்டீர்களே ?"

"ஓ ! லீலா ! நான் அப்படிச் செய்யேன் என்பதை நிச்சயமாய் நம்பு. நீ ஏன் இவ்வளவுநேரம் பேசுகிறாய் ? என் குழந்தைகளில் ஒன்றை விற்க வேண்டுமானாலும் நான் சம்மதிப்பேன். ஆனால் லீலாவதி ! நீ உண்மையில் அச்சிறுவனால் மிகப்பெருமை கொண்டிருக்கின்றாய். அவன் காரணமாய் ஒருவரும் நம்வீட்டில் அடிவைக்கமுடியாது. ஆனால் நீயோ அவனை ஒருவர் வாங்க வந்திருக்கிறார் என்று எண்ணுகிறாய் பேதையே"

லீலாவதி தன் எஜமானியின் உறுதி மொழிகளை நம்பித் தன்பயமே இவ்வாறு செய்ததென எண்ணி நகையாடிக்கொண்டே தன் குழந்தையுடன் சுறுசுறுப்பாய்த் தன் வேலையைப் பார்க்கச் சென்றாள்.

சிவமுத்துக்குமாரசாமி.

ஹரிஹரன்.

இரண்டாம் அங்கம்.

இரண்டாம் களம்

இடம்:—மாளவநாட்டில் மற்றோர் கானகம்.

காலம்:—பிற்பகல்.

(ராஜேந்திரன், ஆதித்தன், பிங்களன், வீரர்கள் பிரவேசம்.)

வீரர்:—ஜய ! ஜய விஜயீபவ : வேந்தர் வெகு காலம் வாழ்க.

ராஜே:—வீரர்காள் ! வெற்றி நமது பக்கமே. உங்களது தீரத்தாலும், எமது வெஞ்சினத்தினாலும் ஜய மாலை நாமே பெற்றோம் இன்று. உங்கள் மனம் ஸந்தோஷமடைவதற்காக நீங்கள் எதிரிகளை என்னுத்தரவில்லாமல் காணும்போதெல்லாம் கொல்லுங்கள்; கொள்ளையிடுங்கள்; மனம்போல் திரியுங்கள். யாவருக்கும் ஸ்வதந்தர்யம் கொடுத்து விட்

டோம் உங்களது தீரத்திற்கு வியந்து. இரவாயிருந்தபோதிலும் எதிரிகளைக்கொல்ல பின் வாங்காதேயுங்கள். பகைவர்கள் காட்டிலுள்ள புதர்களிலும், குகைகளிலும் பதுங்குவார்கள். ஆகையால் இக்கானகத்திலுள்ள மரங்களையும் புதர்களையும் அக்கினி பகவானுக்குச் சூரையாக விட்டு விடுங்கள். அப்போது மறைந்திருக்கும் பகைவர்கள் வெளி வந்து தீயினின்றும் தப்பித்துக்கொள்ள ஓடுவார்கள். அது தருணம் நன்றிசேர் வீரர்காள்! உங்களது கூர்முனை மழுங்காத கத்திகளை அவர்களது சரீரத்தில் பாய்ச்சுங்கள். ஜய சிம்ஹங்காள் ! உங்களில் எவனொருவன் அந்த மாளவநாட்டு காஞ்சேயனது தலையை என்னிடம் கொண்டு வருகின்றானோ அல்லது அவனை என்னிடம் சிறை பிடித்து எவன் வருகின்றானோ, அவன் எதை விரும்பினாலும் அதைத் தரச் சித்தமாயிருக்கின்றேன்.

ஆதி:—வேந்தே ! உமது விருப்பம் இப்பொழுதே நிறைவேறி விட்டது.

பிங்:—மன்னாதி மன்னா ? முடித்தாய்விட்டது தடையின்றி.

வீரர்:—கொளுத்தி விட்டோம் ! ஒரு நொடியில்.

ம. வீரர்:—இதோ காஞ்சேயன் தலையை வெட்டி வருகின்றேன். அரை நொடியில் (போகிறான்).

ராஜே:—வெற்றி வீரர்காள் : சீக்கிரத்தில் முடியுங்கள் ! ஆதித்தரே ! பிங்களரே ! வாரும் நாம் செல்வோம்.

(செல்கை).

மு. வீரன்:—நான் முதலில் சென்று புதர்களிலும், குகைகளிலும் பகைவர்கள் ஒளித்திருக்கிறார்களாவென்று பார்த்து வருகிறேன். அப்புறம் தீ மூட்டிடுவோம்.

இ. வீரன்:—வேண்டாம். நமக்கேன் கஷ்டம். கொளுத்தி விட்டோமானால் எதிரிகள் ஒளிந்திருப்பவர்களெல்லாம் சாம்பலாய் போகிறார்கள். ஏன் ச்ரமம் நமக்கு.

மு. வீரன்:—சீ ! நாம் ஏன் நிரபராதிகளை உயிருடன் எரிக்க வேண்டும்.

இ. வீரன்:—சரி ! நீ எரிக்கவேண்டாம். நான் செய்கிறேன். அந்த வேலையை. (செல்கிறான்).

மு : வீரன்:—அந்தோ ! இக்கானகத்தில் எவ்வளவோ பக்ஷிகள், எவ்வளவோ மஹரிஷிகள், நிரபராதிகளான எதிரிகள் எத்தனையோ அவர்களெல்லாம் இன்றோடு சாம்பலாக வேண்டியதாயிற்றே ! இதுவும் சர்வேசனுக்கு ஒரு விளையாட்டோ ? அதோ ! மரங்களெல்லாம் அக்கினி ஜ்வாலையால் சூழப்பட்டு எரிகின்றதே !

காட்சி முடிகிறது.

இரண்டாம் அங்கம்.

மூன்றாங் களம்.

இடம்:—மாளவநாட்டில் ஒரு மலைச்சாரல.

காலம்:—காலை.

(மகபதியும், ஸரோஜனியும் மாய வேடம் பூண்டு பிரவேசம்).

ஸரோ:—(வருத்தத்துடன்) நாம் உயிர் தப்ப ஒருவித வழியுமில்லையா?

மக:—ஸரோஜனி! ஒரு மார்க்கமுமில்லை. என்ன செய்வது? நம் கதியும் அதோ கதி தான்.

ஸரோ:—அன்புள்ள மந்திரியாரே! இம்மாதிரி ஏழ்மையான வேஷம் தரித்துக்கொண்டால் ஒருவரும் என்னை அறிந்துகொள்ளமாட்டார்கள் என்று தைர்யமாக எண்ணியிருந்தேனே! என் எண்ணத்திற்கு விரோதமாய் என்னைக்கண்டு பிடித்து விட்டார்களே!

மக:—இளவரசி! மதித்தற்கரிய ஒரு மாணிக்கம் குப்பையிற் கிடந்தபோதிலும் அதற்குள்ள காந்தி குறையுமோ? பத்தரை மாற்றுத் தங்கத்தில் சித்ர வேலை செய்து பதியவைத்தால் எவ்வளவு காந்தி அம்மணிக்குண்டாகுமோ, அதற்கும் நூறு மடங்கதிகமாக அந்த மாணிக்கம் குப்பையிலும் ப்ரகாசிக்கும் மன்றோ? அதோ! பகைவர்கள் நம்மைத் தொடருகின்றார்கள். இரண்டு வீரர்கள் ஆயுதபாணிகளாய் அச்வத்தின் மீது அமர்ந்து முன்னே வர, அவர்கள் பின்னர் ஒரு சேனையும் வருகின்றதே. அவர்கள் வரும் வேகம் சொல்ல முடியாததாய் இருக்கிறது. ஓர் இளமானை அநேக வேங்கைகள் எவ்விதம் துரத்தி வருமோ அவ்விதம் ஒரே பாய்ச்சலாய் அவர்கள் வருகின்றார்களே! இந்த மலை தான் அவர்களுக்கும் நமக்கும் மத்தியில் இருக்கின்றது. ஸௌந்தரமே ஒரு பெண்ணுக்குச் சத்ரு என்பார்கள். அது உன்னிடம் மெய்யாகி விட்டது. உன்னழகைக்கேட்டு அந்தப்பாவி படையெடுத்து நமக்கும் நமது நாட்டிற்கும் கேட்டை உண்டுபண்ணுகின்றான். அவனுக்கு ஆதிமத்யாந்தரகிதன் சரியாகப் படியளப்பான். அடாது செய்பவன் படாது படுவான். சூரியனும் கீழ்த்திசையில் செங்கிரணங்களைப் பாய்ச்சினான். இனி ஒளிந்துகொள்ள எண்ணுவது முடியாத கார்யம். இங்கு ஒரு மரத்தையும் காண்கிலேன். வெட்ட வெளியாக இருக்கின்றது. இனி என் செய்வது?

ஸரோ:—செய்வது என்ன? இது என் பாவம். என் விதி இப்படி இருந்தால் எவரை நோவது? நான் அவஸ்தைப்படுவதுமின்றி, என் தேசத்தையும், என் வயோதிகத் தகப்பனாரையும் கஷ்டத்துக்குள்ளாக்குவானேன்? பிரம்மன் என் தலையில் அவதியுறும்படி எழுதிவிட்-

டான். நீர் ஏன் உமது பந்துமித்திரர்களைவிட்டு இங்கு என்னுடன் வந்தீர்.

மக:—அது ராஜாக்ஞை! அதற்கு யாவரும் கட்டுப்படவேண்டும். அதைப் பற்றி பேச இப்பொழுது சவகாசமில்லை. என்றும் நடந்தறியாத தங்கள், தாமரையொத்த கழலிணைகள் இரவு முழுதும் காடு மலைகளைக் கடந்ததால் வெகுவாக நோவடைந்திருக்கும். இருந்தாலும் இன்னும் கொஞ்சம் கஷ்டப்பட்டு ஒரு மைல் சென்றோமானால் அங்கு ஒரு குகை இருக்கிறது. அந்தக் குகையில் நாமிருவரும் சிலநேரம் தங்கியபிறகு காட்டரணுக்குச் செல்லவேண்டும்.

ஸரோ:—மந்திரியாரே! வழிதப்பித்தான் நாம் வந்திருக்கவேண்டும். இல்லாவிட்டால் நாம் இவ்வளவு தூரம் வந்தும் காட்டரணைக் கண்டோமில்லையே. ஒருவனுக்குத் துன்பம் வந்தால் தொடர்ந்துவரும் என்கிறார்களே. அதுபோல் நமக்கும் துன்பம் ஒன்றுக்குமேல் ஒன்றாய் சம்பவித்துக்கொண்டே இருக்கின்றது. எப்பொழுதுதான் நமக்கு நல்லகாலம் வருமோ? ஹே! பத்மாஸனீ! சகல ஜீவசம்ரக்ஷணீ! சாவித்திரீ! காயத்திரீ! நீயாவது அந்தப் பாதகப் பகைவர்களின் கண்களை குருடாக்கிவிடமாட்டாயா!

க:—இளவரசி! நம்மாலாவது ஒன்றும் இல்லை. எல்லாம் ஈசன் செயல். ரவிகுலதிலகா! ஹே! ராமா! நீர்தான் இவ்வேழைகளைக் காக்கவேண்டும் வாரும் செல்வோம். [செல்கை.]

(ஆதித்தியனும், பிங்களனும் பிரவேசம்.)

ஆதி:—பிங்களா, அவர்கள் வெகுதூரம் சென்றிருப்பார்களென்று நினைக்கின்றாய்.

பிங்:—ஆதித்தரே! சென்றிருக்கமாட்டார்கள். இங்குதான் எங்கேனும் ஒளிந்திருப்பார்கள். அவர்களென்ன நம்மைவிட வேகமாக நடக்கக் கூடியவர்களா?

ஆதி:—அதிருக்கட்டும், பிங்களா! அப்பொன்னங்கையின் மேனி பத்தரை மாற்றுத் தங்கமோ? அவளது அழகே அழகு. இந்த மலையின்மீது ஏறிவரும்போது அவளது நடை, அன்ன நடையையும் பழிக்கச் செய்தது. என்ன ஸௌந்தரம்! என்ன ப்ரகாசம்!

பிங்:—ஆமாம்! ஆமாம்! சந்திரனைப்போலவே ப்ரகாசித்தாள்.

ஆதி:—அந்தப் பெண்மணியின் தர்சனத்தால் எங்கும் ஜோதிமயமாக இருந்தது. அவள் மறைந்ததும் எங்கும் மேகங்கள் கவிந்து இருள்மூடிவிட்டது. எப்படியும் தேஜோவிக்கிரகத்தை நாம் தேடிப் பிடிக்கவேண்டும். இவ்விதம் பேசிக்கொண்டிருப்பதில் ப்ரயோஜனம் என்ன நான் அவ்வழியே சென்று தேடுகிறேன்.

பிங்:—தலைவ! நான் இவ்வழியே சென்று கண்டுபிடிக்கிறேன், அந்த சுந்தர அங்கனையை.

[ஆதித்தன் ஓர்வழியும், பிங்களன் ஓர்வழியும் செல்கின்றனர்.]

காட்சி முடிகிறது.

கீ. பி. சேஷாத்திரி ஐயங்கார்.

* LORD SINHA.

UNDER-SECRETARY OF STATE FOR INDIA.
A BIOGRAPHICAL SKETCH.

By. Mr. K. P. SESHADRI AIYANGAR,
Teacher, Muthialpet High School, Madras.

லார்டு ஸிம்ஹா.

இந்தியா உதவி மந்திரியார்.

அவரது ஜீவிய சரிதை.

உயர்குடியிற் பிறந்து, கல்வி கேள்விகளில் சிறந்து, செல்வத்தி லுயர்ந்து, நற்குணமும் நல்லொழுக்கமும் ஒருங்கமையப்பெற்றுள்ள, உத்தம பாக்கியசாலி கிடைப்பது அருமையினும் அருமை. ஒருவனுக்குக் கல்வி மாத்திரம் ஏற்றம் பெற்றிருக்கும், மற்றொருவனுக்குச் செல்வம் மலிந்திருக்கும்; பிறிதொருவனுக்கு நற்குணமும், நல்லொழுக்கமும் நலம் பெற்றிருக்கும். இன்னொருவன் வேறொன்றுமேயில்லாது உயர்குடி பிறப்புமாத்திரம் பெற்றவனாயிருப்பான். ஆகவே இவையெல்லாம் ஒருவனுக்கு ஒருங்கே அமையும் பாக்கியம் பெறுவது அசாத்தியம். அது தெய்வகதியினாலும், அதிர்ஷ்டவயத்தாலுமே கிடைக்கத்தக்கது. இத்தகைய கல்விநலனும், பொருள்நலமும், குணசீலமும்பெறும் பாக்கியசாலிக்குப் பேரறிவும், பேராற்றலும், உயர்வெண்ணமும், தீதில்செய்கையும் பொருந்தி யிருக்கத் தடை ஏதேனும் உண்டோ ?

இப்படிப்பட்ட பாக்கியத்தைப்பெற்ற ஸர் ஸத்யேந்த்ர ப்ரசன்ன ஸிம்ஹா என்னும் மேதாவி இந்தியாவுக்கே திலகமென விளங்குகின்றார். இந்தியர்களுக்கு இதுவரை கிடைக்கப்பெறாத ஓர் அரும்பதவி இவருக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்றது. இந்தியாவின் விஷயங்களைக் கவனிக்கும் இந்தியா மந்திரி நியமனத்தை இவர் பெற்றிருக்கின்றார். இத்தகைய உயர் பதவியைப்பெற்ற ஸிம்ஹாவின் பெற்றோர் இன்னவர் என்பதையும், இவரது பிறப்பு வளர்ப்பு இன்னதென்பதையும் ஒவ்வொரு இந்தியரும் தெரிந்து கொள்ளவேண்டுவது முக்கியகடமையாகும்

ஸிம்ஹாவின் பிறப்பு.

வங்காள மாகாணத்தில் பீர்டம் ஜில்லாவைச் சேர்ந்த ராய்பூர் என்ற கிராமத்து ஜமீன்தாரரான பாபு ஸிதிகாந்த சிம்ஹர் என்றவர் வெகு செல்வாக்குடன் வாழ்ந்து வந்தார். அவர் காயஸ்தர் ஜாதியைச் சார்ந்தவர். அவரது முன்னோர்கள் எல்லோரும் பரம்பரையாக ஜமீன்தாரர்கள். ஸிதிகாந்தருக்கு அஷ்டைச்வரியமும் குடிகொண்டிருந்தது. மக்கட்பேற்றைப் பெறும் பாக்கியத்தையும் கடவுளினது பேரருளினால் அடைந்திருந்தனர். தசரத சக்ரவர்த்திக்கு நான்கு திருக்குமாரர்கள் அவதரித்ததுபோல, ஸிதிகாந்தருக்கும் நான்கு புத்திரர்கள் ஜனித்தார்கள். அவர்களில் மூத்தவன் ராம பிரஸன்ன ஸிம்ஹா என்னும் பெயரினர். அவர் நியாய சாஸ்திரத்தில் தேர்ந்து விளங்கினார். வெகுகாலமாக துரைத்தன நியாயவாதிப் பதவி வகித்திருந்தார். அவருக்கு இளையவர் நாராயண ப்ரஸன்ன ஸிம்ஹா என்பவர்: அவர் வைத்திய சாஸ்திரத்தில் அதிக பாண்டித்தியம் பெற்றிருந்தார். ஸிதிகாந்தரது நான்காவது புத்திரனாக நம் ஸர் ஸத்யேந்த்ர ப்ரசன்ன ஸிம்ஹா பிறந்தார். ஸிதிகாந்த ஸிம்ஹருக்கு நான்கு குமாரர்கள் பிறந்தாராலும், அவர்களில் ஒரு மகனை இறக்கும் தௌர்ப்பாக்கியத்தைப் பெற்றவரானார்.

ஸத்யேந்த்ரஸிம்ஹா 1863-ம் வருஷம் மார்ச்சு மாதம் 24-ம் தேதியன்று நல்ல சுப லக்கினத்தில் இப்புவியில் ஜனிக்கலானார். ஆனால் அவர் தனது தந்தையை இரண்டாவது ஆண்டு நிறைவதற்குள்ளாக இழக்கும் துர்ப்பாக்கியத்தைப் பெற்றார். ஆகவே அவர் தன் தாயின் ஆதரவினாலும், தன் தமையனது போஷணையினாலும் தினை தினை வளர்பிறைச் சந்திரனைப் போல் விருத்தியடைந்துவந்தார். ஐந்துபிராயம் பூர்த்தியானதும் அக்ஷராப்பியாசம் செய்துவைக்கப்பட்டார். ராமபிரசன்ன ஸிம்ஹாவுக்கு ஸத்யேந்திரர் மீது அதிகப் பிரீதியுண்டு. நன்றாகப் படிக்கவேண்டும், நற்பதவியை யடையவேண்டும் என்று அவர் பெருநோக்கங் கொண்டிருந்தார். இவ்வித நல்லெண்ணங்கொண்டு ராய்பூரிலுள்ள ஜில்லா பள்ளிக்கூடத்தில் கல்வி கற்கும்படி ஸத்யேந்திர பிரஸன்ன ஸிம்ஹாவை விட்டார். அப்பள்ளிக்கூடத்தில் ஒவ்வொரு வகுப்பிலும் முதன்மையாகத் தேறினார். அவரது புத்தி சாமர்த்தியத்தைக் கண்டு அவரைப் போற்றாதார் ஒருவருமேயில்லை. இவ்விதம் யாவரும் புகழும்படியாகப் படித்துப் பிரவேச பரீக்ஷையிலும் முதன்மையாகத் தேர்ந்தார். இதன்பயனாக ஒரு பரிசும் பெற்றார்.

கலாசாலை வாழ்க்கை.

ராய்பூர் ஜில்லா பாடசாலையிலிருந்துத் தேறியபிறகு, பட்டணத்திலுள்ள கலாசாலைகளில் சேர்ந்து மேல்வகுப்புகள் வாசிக்கத் தொடங்கினார். கல்கத்தாவிலுள்ள சர்வ கலாசாலையில் சேர்ந்து எப். ஏ. பரீக்ஷையில் எல்லோருக்கும் மேலாக முதன்மையாக விளங்கலானார். இதன் பயனாக மற்றொரு விலைமிக்க வெகுமதியும் இவருக்கு வருவதாயிற்று. பி. ஏ. வகுப்பில் சேர்ந்து படிப்பதற்கு ஸிம்ஹா இஷ்டப்படவில்லை. அதற்குப்பதிலாக இங்கிலாந்து சென்று சட்டப் பரீக்ஷைகளில் தேறி பாரிஸ்டராக ஆகவேண்டும் என்று இரவும் பகலும் எண்ணிவந்தார். எண்ணியபடியே செய்யத் தைரியமும் பெற்றிருந்தார். இங்கிலாந்துக்குச் சென்று "லின்கான்ஸ் இன்', என்ற விடுதியில் தங்கி சட்டப் பரீக்ஷைக்குப் படிக்கலானார்.

இங்கிலாந்தில் அவரது கல்வி நிலைமை.

"லின்கான்ஸ் இன்" என்ற விடுதியில் அவர் ஐந்து வருஷகாலம் தங்கியிருந்தார். அவ்வைந்து வருஷங்களுக்குள் எவ்வளவோ பரிசுகளும், வெகுமதிகளும்—சுமார் 600 பவுன் மதிப்புள்ளவைகளைப் பெற்றார். உண்மையிலேயே, அவரிருந்தபோது சட்டசபையார் கொடுக்கும் ஒவ்வொரு பரிசையும்விடாமல் அவரே பெறும் ஆற்றல் வகித்திருந்தார். அவரது அறிவையும் ஆற்றலையும் வியந்து சட்டசபையார், அவர் படிக்கவேண்டிய காலத்தையும் குறைத்தார்கள். பாரிஸ்டர் பதவியும் கிடைத்துவிட்டது.

பாரிஸ்டர் வாழ்க்கை.

1886-ம் வருஷம் ஜூலைமாதம் 7-ம் தேதியன்று ஸிம்ஹா பாரிஸ்டராகப் பதிவுசெய்து கொள்ளப்பட்டார். அவருக்கு அப்போது வயது இருபத்து மூன்றுதான். தன்ஜன்ம பூமியாகிய இந்தியாவுக்குத் திரும்பி வந்தார். அதேவருஷம் நவம்பர் மாதத்தில் கல்கத்தா ஐகோர்ட்டில் பாரிஸ்டராகப் பதிவுசெய்து கொள்ளப்பட்டார்.

கல்வி கற்குங்காலத்தில் எவ்வளவு பேருங்கீர்த்தியும் பெற்றிருந்தாரோ அதற்குமேல் அதிகமானபேரும், சீரும், செல்வாக்கும் பாரிஸ்டராக விருந்தகாலத்தும், இவர் பெற்றிருந்தார். நான்கு வருஷத்திற்குள்ளாக ஸிம்ஹா முதன்மையான பாரிஸ்டராகிவிட்டார். எல்லா வியாச்சியங்களும் இவரிடம்வரும். இப்படி வியாச்சியங்கள் நிறைவதனால் செல்வப்பேற்றை அதிகமாக அடைந்தனர். 1904-ம் வருஷம் இவருக்குக் கல்கத்தா ஐகோர்ட்டில் நியாயாதிபதிப் பதவி கொடுக்கப்பட்டது. அப்பதவியை வகிக்க ஸத்யேந்திரஸிம்ஹா மறுத்துவிட்டார். நியாயதிபதியின் பதவிக்கு ஆசைப்படுவதால் ஏராளமான பணத்தை இழக்க வேண்டிவரும் என்பதே அம்மறுப்புக்காரணம்.

அட்வொகேட் ஜனரல்.

ஐகோர்டு ஜட்ஜூபதவியில் பணம் ஏராளமாகக் கிடைக்காததால் மறுத்துவிட்டதாகத் துரைத்தனத்தார் தெரிந்துகொண்டு கல்கத்தா ஐகோர்ட்டு அட்வொகேட் ஜனரல்பதவி காலியாயிருந்த அப்பதவியை ஸிம்ஹாவுக்கு அளித்தார்கள். அதை ஸிம்ஹா ஏற்றுக்கொண்டார். 1908-ம் வருஷம் அப்பதவி அவருக்குக் காயமாக அளிக்கப்பட்டது. இவ்வுயர் பதவியைப்பெற்ற முதல் இந்தியர் நம் ஸிம்ஹாதான்.

காங்கிரஸ் அக்கிராசனர்.

ஸத்யேந்திரஸிம்ஹா எப்பொழுதும் காங்கிரஸ் விஷயத்தில் சம்பந்தப்பட்டிருப்பவர். 1890-ம் வருஷத்தும் 1906-ம் வருஷத்தும் காங்கிரஸ் மகாநாட்டிற்கு விஜயம் செய்திருந்தார்.

இங்கிலாந்தில் யுத்த கான்பரென்ஸ் மெம்பர்.

1917-ம் வருஷத்தில் யுத்த கான்பரென்ஸிக்கு இந்தியாவின் பிரதிநிதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இவருடன் மேன்மைதங்கிய பிகானீர் மஹாராஜாவும், ஸர்ஜேம்ஸ் மெஸ்டன் என்பவரும் பிரதிநிதிகளாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

இங்கிலாந்திலிருந்து மீண்டு இந்தியாவுக்கு வந்ததும், வங்காள கவர்ன்மெண்டு நிருவாக அங்கத்தினர் பதவி அவருக்கே கொடுக்கப்பட்டது.

இந்தியாவிற்கு வந்து சில நாளைக்குள்ளாக மறுபடியும் சமாதானக் கான்பரென்ஸில் இந்தியாவின் பிரதிநிதியாக ஸர்ஸத்யேந்திர ஸிம்ஹா அழைக்கப்பட்டார். சென்ற நவம்பர் மாதத்தில் மீளவும் இங்கிலாந்து சென்றார்.

இத்தியாதி ஜயங்களும், ஊழியங்களும், கௌரவங்களும் நன்குவிளக்க முறும்படி ஸர்ஸத்யேந்திர ப்ரஸன்ன ஸிம்ஹாவுக்கு இந்தியா உதவி மந்திரிப்பதவியை லாயிட்ஜியார்ஜு அளித்திருக்கின்றார். இத்தகைய பதவி இதுவரை இந்தியர்களுக்கு அளிக்கப்படவேயில்லை. அப்பதவியைப்பெற ஸிம்ஹா தகுந்தவர். இதோடு நில்லாமல் அவர் "ஹவுஸ் ஆப்லார்டுஸ்" என்னும் சபையில் கவர்ன்மெண்டு விஷயங்களைப்பேசத் தகுந்தவராயிருப்பதற்கு அவருக்கு இப்போது "லார்டு பட்டம் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே அவர் இப்போது "லார்டுசிம்ஹா" என்று அழைக்கப்படுகின்றார்.

எந்த விஷயத்திலும் முதன்மைப்பெறும் லார்டு ஸிம்ஹாவுக்கு மேன்மேலும் மங்களங்கள் உண்டாகட்டும். நீண்ட ஆயுளும், ஆயுராரோக்கியமும் விசேஷமாக உண்டாகக் கடவதாக. அவரதுபேரும் கீர்த்தியும் என்றும் நிலவுக. அவர் செய்யவிருக்கும் ஒவ்வொரு விஷயத்திலும் இதுவரை ஜயம் ஏற்பட்டு வந்ததைப்போல இனியும் ஜயமடைந்து வரும்படி இன்னருளைப் பல்கரும் பிரார்த்திப்போமாக.

கீ. பி. சேஷாத்ரி அய்யங்கார்.

இனிய தமிழ் நவீனங்கள்.

இராஜாமணி	0	8	0.	நளினாக்ஷி	0	5	0.
ஸரோஜா	0	5	0.	பாலாமணி	2	0	0.
கன்னிமுத்தம்	3	2	0.	ஆனந்தசிங்	1	12	0.

ஸ்ரீரங்கா அண்டு கோ., 4, வெங்கடய்யன் தெரு, சென்னை.

NEWS AND NOTES.
ஸமாசாரக் குறிப்புகள்.

லார்டு ஸின்ஹா நியமனம்.
டெயிலி டெலகிராப் பத்திரிகை பாராட்டுகின்றது.

லண்டன். ஜனவரி௴ 14௳

லண்டனில் நடைபெறும் டெயிலி டெலிகிராப் பத்திரிகை கூறுகின்றது:—தேசநிர்வாகத்தில் பிரதானமான பதவியை வகிப்பதற்கு வேண்டிய சகல குணங்களும் லார்டு ஸின்ஹா விடமிருக்கின்றன. அவர் அரும்பெரும் காரியங்களைச் செய்திருப்பதல்லாமல், அவருடைய சட்ட ஞானத்தையும், வித்வத்தையும் பாராட்டிப் பேசுகிறவர்கள் அனேகரிருக்கின்றனர். இந்திய உதவி மந்திரிப் பதவியை அவருக்கு அளித்திருப்பதும், லார்டு பட்டம் அவருக்குக் கொடுக்கப்பட்டிருப்பதும், ராஜீய விஷயங்களில் அபூர்வமான தீவிர நோக்கம் தோன்றியிருப்பதற்கு நிதர்சனமாகின்றது. இன்னொருக்கு லார்டுபட்டம் கொடுத்திருப்பதானது இந்தியாவின் விஷயத்தில் இங்கிலாந்து பாராட்டும் கண்யத்திற்கும் தாராள சிந்தைக்கும் அறிகுறியாகும். ஒரு இந்தியனை நாம் இந்தியாவின் மந்திரியாக நியமனஞ் செய்திருப்பதிலிருந்து இந்தியாவை அபிவிருத்திக்குக் கொண்டுவர நாம் ஆசையுள்ளவர்களா யிருக்கின்றோம் என்பது வெளிப்படுகின்றது.

"லார்டு ஸின்ஹா"

"லார்டு ஆப் கலகத்தா" ஸர் எஸ். பி. ஸின்ஹாவுக்கு லார்டுபட்டம் கொடுக்கப்பட்டிருப்பதால், எந்த நாட்டுக்கு அவரை "லார்டு" ஆக நியமிப்பது என்ற பிரச்னை ஏற்பட்டிருக்கின்றது. "லார்டு ஸின்ஹா ஆப் கல்கத்தா" என்று அவருக்கு பட்டங் கொடுத்துவிடலாமென்ற யோசனையைப் பலர் அங்கீகரிக்கின்றனர். "டைம்ஸ்".

விந்தையான மறுமொழி.

ஒரு பேர்பெற்ற பாரிஸ்டர், வியாபார முத்திரையைப் பற்றிய வியாச்சியத்தை நடத்த எடுத்துக்கொண்டான். அவ்வியாச்சியம் ஜெயம் பெறுவது அசாத்தியம் என்று கக்ஷிக்காரன் எண்ணிக் கொண்டிருந்தபோதிலும் பாரிஸ்டரை எவ்விதமாவது ஜயித்துத்தர முயற்சி செய்யும்படி வேண்டிக்கொண்டான். பிறகு தன்னூர் செல்லத்தயாரா யிருந்தான். ஊருக்குப் போகப் புறப்படும்போது தனது தந்தி விலாசத்தை அவசரத்தி லெழுதி பாரிஸ்டரிடத்தில் கொடுத்து மேல் நடவடிக்கையை அந்த விலாசத்திற்கு அறிவிக்கும்படித் திட்டஞ்செய்தான். அவனெழுதிக் கொடுத்த தந்தி விலாசம் "நியாயம்" என்பது. பாரிஸ்டர் வாதம் செய்து வியாச்சியத்தை ஜெயித்துவிட்டான். அந்தத் தீர்ப்பைத் தெரிவிக்கச் சந்தோஷப்பட்டான். கக்ஷிக்காரன் கொடுத்துப்போன விலாசத்திற்கு தந்தி அனுப்பினான் "நியாயம் கேஸை ஜயித்துவிட்டது" என்று அவசரத்தந்தி மூலமாய் அனுப்பினான். கக்ஷிக்காரன் அந்தத் தந்திக்குப் பதில் அதிக அவசரமாக 'அப்படியானால் உடனே அப்பீல் செய்ய வேண்டியதற்கு வேண்டியவற்றை விரைவில் செய்வீராக' என்று மற்றொரு தந்தி அனுப்பினான். என்னே அறிவீனம்! தன் தந்தி விலாசம் நியாயம் என்பதை மறந்துவிட்டு இம்மாதிரியான மறுமொழி கொடுத்தது விந்தையல்லவா?

முப்பத்தைந்து மக்களைப்பெற்ற மனிதன்.

வட அமெரிக்காவின், கனடாவிலுள்ள கோள்ட்ச்பரோ என்னும் பட்டணத்தில் வசித்துவரும் ஜான்வார்டு என்னும் நீக்ரோ ஜாதியைச் சேர்ந்தவனுக்கு பதினெட்டு பிள்ளைகளுண்டு. அவர்களில் 13 பேர்கள்

யுனைடெட்ஸ்டேட்ஸ் 9-10-வது குதிரைப் படைகளில் சேர்ந்திருக்கின்றனர். இதன்றியும் அவனுக்கு 17 பெண்களுண்டு. அவர்கள் யாவரும் யுத்தவேலையில் முனைந்திருக்கின்றனர். ஆகவே ஜான்வார்டு 35 மக்களைப் பெறும்படி என்ன புண்ணியம் செய்தானோ?

சர்க்கரை கொடுக்கும் 190 மரங்கள்.

கரும்பிலிருந்தும், பீட்வேரிலிருந்தும் மாத்திரம் சர்க்கரை எடுக்கப்படுகிறதென்று எண்ணவேண்டாம். 190 வெவ்வேறான செடிகளிலிலும் விருக்ஷங்களிலிலும் சர்க்கரை இருக்கிறதென்று தெரிந்துகொள்ள எவ்வளவு ஆச்சரியகரமா யிருக்கின்றது.

ஒரு மையில் தூரம் வரை வெளிச்சம் கொடுக்கும் மரம்.

ஸ்பெயின் தேசத்தில் நீவாடா என்ற பட்டணத்தில் ஒரு மந்தரசக்தி பெற்ற மரம் ஒன்று இருக்கின்றது. அது ஒரு மையில் தூரம் வரை பிரகாசமான ஒளியைத்தருகின்றது. அமாவாசை யிருட்டிலும் நல்ல ஒளியைத்தருகின்றது. ஒரு மனிதன் அதன் அருகில் நின்றுகொண்டு மிகச் சிறிய அச்செழுத்தையும் அதன் வெளிச்சத்தினால் படிக்கக்கூடும். இத்தகையமரமும் ஒன்று உலகில் இருப்பது புதுமையினும் புதுமை!

இப்படிப்பட்ட சோதிமரமும், சோதிக் கொடியும் பூர்வகாலத்திலிருந்ததாக பெரிய புராணத்துள் சேக்கிழார் சுவாமிகளால் சொல்லப்பட்டிருக்கிறது.

எலிமிச்சை ரஸ ஸ்நானம்.

மேற்கு இந்தியத் தீவுகளில் தினந்தோறும் ஜனங்கள் எலிமிச்சை ரஸ ஸ்நானம் செய்வது சர்வசாதாரணமாக நடந்துவருகின்றது. மூன்று அல்லது 4 எலிமிச்சம் பழங்களை பாதியாக அறுத்து ஜலத்தில் அரைமணி நேரம் வரை ஊறவைக்கின்றனர். அவ்விதம் ஊறவைப்பதால் அதிலுள்ள ரஸமெல்லாம் தண்ணீரில் கரைந்து விடுகின்றது. அந்த எலிமிச்சை ரஸம் ஸ்நானம் செய்வதால் சருமத்திற்கு ஒரு விதமான நூதன உணர்ச்சி கொடுக்கப்படுகிறது. தேகத்திற்கு அழகையும் மேனியையும் கொடுக்கிறது. இந்த முறை நமது பூர்வமான சமஸ்கிருத வைத்ய கிரந்தங்களில் சொல்லப்பட்டிருக்கின்றது.

ஒரு மணி நேரத்தில் 40 மைல் பறக்கும் ஈக்கள்.

இயற்கையின் சரித்திரத்தைக் கற்கும் மாணவர்கள் ஒரு தேனீ, தேன்குடிக்காதிருக்கும் வரை ஒரு மணிக்கு 40 மைல் வீதம் பறந்து செல்லும் என்றும், தேனைக் குடித்தபிறகுத் தன் கூண்டை நாடிவரும் போது ஒரு மணிக்கு 12 மைல் வீதம் பறந்து செல்லும் என்றும் கண்டு பிடித்திருக்கின்றனர்.

ஜான் இளவரசரின் மரணம்.

நமது மாக்ஷிமைதங்கிய ஐந்தாம் ஜார்ஜு சக்கரவர்த்தியின் கடைசி குமாரரான ஜான் இளவரசர் வெகுகாலமாக காயலாவாய் இருந்து இம்மாதம் இறந்துவிட்டார். அவருக்கு பிறந்த நாள் முதல் காக்கைவலி என்ற நோய் இருந்துவந்தது. அவர் தூங்கிக்கொண்டிருக்கும் போதே உயிர் துறந்தார். இந்தத் துக்கச் செய்தியைக் கேட்டு நாம் மிகவும் வருந்துகின்றோம்.

மதிப்புரை.

பங்களூரிலுள்ள ராஜேட் ஸ்பார்மஸி கம்பெனியார் தயாரித்துள்ள பெய்னோலீன் என்ற மருந்து நல்ல குணமுடையதாயிருக்கின்றது. தலைவலிக்கு நல்ல ஔஷதம். அதுபோட்ட நிமிடமே நல்ல குணத்தைக் கொடுக்கிறது. வேண்டுவோர்கள் மேற் சொல்லிய கம்பெனியிலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

இந்திய மித்ரன்

இது 'ஜனபிமானி', 'வெல்த் அப் இந்தியா' என்னும் மாதாந்தரப் பத்திரிகைகளின் பத்ராதிபராகிய ஜி. ஏ. வைத்யராமன் பி. ஏ. அவர்களால் நடத்தப்படும் ஒரு வாராந்தரப் பத்ரிகை. இதில் சிறந்த வ்யாஸங்கள், ஜீவ்ய சரித்ரங்கள், சிறு நாவல்கள், கதைகள் முதலியவைகளும், அந்தந்த வாரத்து வர்த்தமானங்களும் வெளிவரும். தவிர, ஒவ்வொரு வாரமும் நல்ல காகிதத்தில் அச்சடிக்கப்பட்டு கண்ணாடிபோட்டு வைத்துக்கொள்ளத் தகுந்த இரண்டுபக்கம் சித்ரப்படங்களும் கொடுக்கப்படும். இன்னும் எங்கள் சந்தாதாரர்களுக்கு எங்களுடைய ஸொந்த புஸ்தகங்களின் விலையில் ரூபாய்க்கு இரண்டு அணா வீதமும் இதர புஸ்தகங்களின் விலையில் ஒரு அணா வீதமும் கழித்துக் கொடுக்கப்படும்.

தபால சார்ஜ் உளபட சந்தா,	உள்நாடு.	அந்யநாடு.
வர்ஷம் 1-க்கு	5· 0 0	7 8 0
6-மாதத்திக்கு	2 8 0	3 12 0
3-மாதத்திற்கு	1 4 0	2 0 0

பாதிவிலைக்கு வாங்க இதுதான் ஸமயம்.

ஐரோப்பிய யுத்தம்.

இந்தப் புஸ்தகத்தின் நோக்கம், யுத்தத்தில் அன்றன்றைக்கு நேரிடும் ஸம்பவங்களையாவது அல்லது யுத்தம் முடிந்ததும் உண்டாகும் நன்மை தீமைகளையாவது எடுத்துக் காட்டுவதல்ல. இதில் முற்காலத்தில் போலல்லாமல் தற்காலம் தழுவி வரும் நூதன யுத்த முறைகள் விரிவாக எழுதப்பட்டிருக்கின்றன. இந்த யுத்த முறைகள் எப்படிப்பட்டவை என்பதும், அவைகளால் தான் சண்டை நீடித்து நடந்ததென்பதும் தெளிவாக எழுதப்பட்டிருக்கின்றன. விஷயங்களை நன்கு விளக்க 100 உயர்ந்த படங்களும், தேசபடங்களும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. புஸ்தகம் 400 பக்கங்கள் கொண்டது. ஒரு பருத்த விஷய அகராதியும் சேர்க்கப்பட்டிருக்கிறது.

இதன் விலை ரூபா 1-8-0. நமது பத்ரிகைகளுக்கு புதிதாய்ச் சேரும் சந்தாதாரர்களுக்கு மாத்ரம் 12 அணா.

ஜி. ஏ. வைத்யராமன் அண்டு கம்பெனி,
(க) கொண்டி செட்டித் தெரு ஜார்ஜ் டவுன் மதராஸ்.

உ ஸ்ரீராமஜயம்.

கல்ப தரு.

KALPA THARU.

சித்திர சகிதமான ஒரு மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

புஸ்தகம் 2. Vol. II.

காளயுக்தி௵ மாசி௴. FEBRUARY 1919.

நெ. 12. No.:12.

மாட்சிமை தங்கிய ஐந்தாம் ஜார்ஜ் சக்கரவர்த்தியாரும் மேரி மகாராணியாரும்.

THE BEGGAR PROBLEM.

பிச்சைக்காரர்களின் நிலைமை.

நாகரிகம் முதிர முதிர, வறுமை நோய் அதிகமாகிக்கொண்டு வருவதை நாம் காண்கிறோம். முக்கியமாக இந்தியாவில், சென்ற பத்தொன்பதாம் நூற்றாண்டின் இடையிலிருந்து பசிப்பிணியும் வறுமை நோயும் பெருகிக்கொண்டு வருகின்றன. இவைகளுக்குக் காரணம் யாவை? இந்தியாவின் பொருளாதார நிலைமையை நாம் சிறிது கவனித்துப் பார்த்தால், இவைகளுக்குக் காரணம் நன்கு புலப்படும்.

பண்டைக்காலத்தில், இந்தியா பல்லாற்றானும் செழுமையுற்றிருந்தது. அதனால், ஏழை மக்கள் அதிக துன்பத்தை அநுபவியாமலிருந்தனர். இப்பொழுது, இயற்கையின் வளர்ச்சி குன்றி விட்டது; இயற்கைத் தோற்றத்தில் இன்பம் நிறைந்திருக்கிறதென்பதை பலர் அறியாமலிருக்கின்றனர். செயற்கைத் தோற்றங்களே, இப்பொழுது, மனித சமூகத்தினுடைய உள்ளத்தைக் கவர்ந்து நிற்கின்றன. தரித்திரம் நாள்தோறும் பெருகிக்கொண்டு வருவதற்கு இதுவும் ஒரு காரணமெனக் கூறலாம்.

பண்டைக் காலத்தில், இந்தியா, பெருமையுற்றிருந்தது என்று நினைத்து, நாம் இப்பொழுது மகிழ்ந்து கொண்டு வாளாவிருத்தல் பேதைமையாகும். இது காலை, இந்தியா எந்த நிலைமையிலிருக்கிறது? அது முன்னேறுவதற்குரிய வழிகள் யாவை? என்பவைகளைப்பற்றியே நாம் யோசிக்கவேண்டும். பண்டைப் பெருமையை நினைத்து மகிழ்வுற்றிருத்தலினால், இப்பொழுதுண்டாகும் பயன் தானென்ன?

ஸர் வில்லியம் ஹண்டர் என்ற ஒரு சரித்திரக்காரர் இந்தியாவில் 420 லக்ஷம் பேர், உண்ண உணவின்றி, உடுக்க உடையின்றித் தவிக்கின்றனர் என்று கூறியுள்ளார். ஒரு வேளை உணவுடன் திருப்தியடைவோர் பல்லாயிரம் பேர் உளர். இவ்வேழை மக்களின் துன்ப நிலையைக் கவனிப்பார் ஒருவருமில்லை யென்று கூறின் இழுக்காகாது. உதாரணமாகச் சென்னையை நாம் எடுத்துக்கொள்வோம். டிராம் வண்டியேறும் போதும், ஹோட்டல்களின் வாயில்களிலும், பொதுவான சில இடங்களிலும் நாம் பிச்சைக்காரரைக் காண்கிறோம். இவர் தொகை, நாளுக்கு நாள் பெருகிக்கொண்டு வருகிறது. இப்பிச்சைக்காரரைப்பற்றிக் கவனிப்பார், சென்னை ஜனத்தலைவருள் எத்தனை பேர்? சென்னையின் சில பாகங்களில் நாம் சென்று பார்க்கின், அநேகர், நடு வீதியில் உண்டும், உறங்கியும் தம் காலத்தைக் கழிக்கின்றனர் என்பது தெரிய வரும். அவர்களுக்குச் சூரியனும் சந்திரனுமே ஆதரவாய் நிற்கின்றனர். மின்னலும் இடியும், காற்றும் மழையும், அவர்களை ஒன்றும் செய்யா. அவர்களுடைய நிலைமையை ஒருவன் சிறிது நேரம் உற்று நோக்கி ஆராய்ந்து பார்ப்பானாகில், அவன் உலக

வாழ்க்கையில் ஒருபற்று தலைக்கொள்ளமாட்டான் என்று நான் நினைக்கின்றேன். என்னே! அவர் நிலைமை! காட்டில் வசிக்கும் மிருகங்களுக்கேனும், குகை யென்ற வாழ்க்கையிடம் ஒன்றிருக்கிறது. காற்றுக்கும் மழைக்கும் ஒதுங்கிக்கொள்ள அடர்ந்த மரங்களேனும் அவைகளுக்கு இருக்கின்றன. இவ்வேழை மக்களின் நிலைமை, வனத்தில் வசிக்கும் விலங்குகளின் நிலைமையை விடக் கேவலமாயிருக்கின்றது. இவர்களின் நிலைமையை என்னென்று வருணிப்பது? இவர்களின் வாச ஸ்தானம் சுத்தமான இடங்களாகவேனும் இருக்கின்றனவோ? சாக்கடைப்புறத்திலும், அழுக்கு ஜலங்கள் ஒன்று கூடுமிடத்திலும், குப்பை மேடுகளுக்கருகிலும், போக்கு வரவு அதிகமாயுள்ள தெருக்களிலும் இவ்வேழை மக்கள் வசிக்கின்றார்கள். ப்ளேக்கும், காலராவும், இன்புளூயென்சாவும் இவர்களை ஏன் அணுகாமலிருக்கும்? இங்ஙனம் ஆகாயவாணி, பூமிதேவி சாட்சியாக வசிக்கும் ஏழை மக்களிற் பல்லோர் இரக்கும் தொழிலையே மேற்கொண்டிருக்கின்றனர். யாதொரு விதமான தொழிலையும் செய்ய முடியாமையால் சிலர் பிச்சையெடுக்கின்றனர். பலர், பிச்சையெடுப்பதையே ஒரு தொழிலெனக் கொண்டு, தம் வாழ்நாளை வீணே கழிக்கின்றனர். பின்னவர் தொகை, நாளுக்கு நாள் பெருகிக் கொண்டு வருவதை நாம் அநுபவத்தில் பார்க்கிறோம். இது பெரிதும் விசனிக்கத்தக்கது. இந்தியாவில், கூடிய விரைவில் "பிச்சைக்காரர் என்ற ஒரு ஜாதி தனியாக ஏற்படுமோ என்ற ஒரு சந்தேகம் பலருடைய உள்ளத்தில் நிகழ்ந்து கொண்டிருக்கிறது. பிச்சையெடுப்பதே, தம் பரம்பரையான தொழிலெனச் சிலர் பாத்தியம் கொண்டாடுகின்றனர். சமீபத்தில், வங்காளத்தில், பிச்சைக்காரர்கள் ஒன்று சேர்ந்து, தங்கள் நிலைமைக்கும், அந்தஸ்துக்கும் யாதொருவிதமான பங்கமும் வரக்கூடாதென, அம்மாகாண அதிகாரிக்கு மனுச்செய்துகொண்டது, பத்திரிகா நேயர்களுக்கு நன்கு ஞாபகமிருக்கும். இஃதென்ன விபரீதமோ தெரியவில்லை.

இனி நாம் செய்ய வேண்டுவதென்ன? கூடிய வரையில் பிச்சைக்காரரின் தொகையைக் குறைக்க முயல வேண்டும். அஃதெங்ஙனம் முடியும் என்று சிலர் வினவுதல் கூடும். இப்பொழுது, பிச்சை யெடுப்பவர்களை ஒன்று சேர்த்து அவர்களைச் சுத்தமான ஓர் இடத்தில் குடியேறச் செய்ய வேண்டும். அவர்களுடைய வறுமை நோயையும் பசிப்பிணியையும் போக்க வேண்டும். தொழில் செய்யச் சக்தியுள்ளவர்களை, அவரவர்க்கேற்ற தொழிலைச் செய்யும்படி அனுப்ப வேண்டும். கூன், குருடு, செவிடு, முதலிய அங்கஹீனர்களை ஒருபுறமும், நோயாளிகளை ஒருபுறமும் இருத்தி அவரவர்க்கேற்றவாறு தக்க வசதிகள் செய்து கொடுக்க வேண்டும். தேகவலிவுள்ளவர்களும், அங்கப் பழுதில்லாதவர்களும் பிச்சை யெடுத்தல் கூடாது என்று அரசாங்கத்தார் ஒரு சட்டம் விதிக்கினும் பொருந்தும். இத்தகைய ஏற்பாடுகள் செய்யப்படின், தேச முன்னேற்றத்தை நாம்

உறுதியாய் நம்பலாம். ஏழைமக்களின் மூலமாகவே, நோய்கள் நாடெங்கும் பரவுகின்றன. முதலில், அவ்வேழை மக்களிடத்திலேயே அந்நோய்கள் வாராவண்ணம் தடுத்துவிட்டால் எவ்வளவு நலமாயிருக்கும்? இவைகள் யாவும் கஷ்டமாகவே தோன்றும். ஆனால், பெரிய ஒரு காரியத்தை நோக்கிச் சிறிய காரியங்களில் உண்டாகும் துன்பங்களைக் கவனித்தல் கூடாது. இந்தியாவிலுள்ள தனிகர்கள் எங்கே? பொதுஜன ஊழியர்கள் யாதுசெய்கிறார்கள்? அவர்கள் முன்வருக! ஏழைமக்களின் துன்பத்தை நிவர்த்தி செய்க! பிச்சைக்காரர்களின் தொகையைக் குறைக்க முயல்க!

"மௌத்கல்யன்."

TOBACCO—ITS USES AND AFTER EFFECTS.

புகையிலை—அதன் உபயோகமும் பலனும்.

புகையிலை என்பது உஷ்ண ப்ரதேசங்களில் காணப்படும் ஒரு வகையான செடி. அஃது அமெரிக்காவில் முதன்முதலில் விசேஷமாகப் பயிரிடப்பட்டு வந்தது. அது பின்னர் அங்கிருந்து கொண்டுபோகப்பட்டு, இப்பொழுது பிரான்ஸ், இந்தியா, ஜாவா, சுமட்ரா முதலிய பிரதேசங்களில் ஏராளமாகப் பயிரிடப்பட்டு வருகின்றது. அஃது ஒருவித காரமான நெடியைக்கொடுக்குந் தன்மையையுடையது. அந்தச்செடி மிகவும் பருத்திருக்கும். குட்டையான தண்டும், வெகு நீளமான இலையும் கொண்டு நிற்கும். நன்றாகச் செழித்து வளர்ந்த புகையிலை ஒன்றின் உயரம் 4-அல்லது 5-அடி இருக்கும். இலைகள் அகன்றுமிருக்கும். இந்தச்செடி நன்கு செழித்து வளர்வதற்கு ரசாயன எருதான் முக்கியமாக வேண்டுவது.

புகையிலையைப்பற்றிய ஓர் உண்மைக் கதை.

இங்கிலாந்தில் வெகு சிறப்புடன் ஆட்சிசெய்துவந்த எலிஜெபெத் மகாராணியார் காலத்தில் ஸர். வால்டர் ராலி என்ற பிரபு ஒருவர் வாழ்ந்து வந்தார். அவர் அமெரிக்கா தேசத்தில் அநேக வருஷங்கள் தங்கியிருந்த பிறகு தம் ஜன்மதேசம் வந்திருந்தார். அவர் அமெரிக்காவில் இருந்த காலத்தில் புகையிலையைச் சுருட்டாக மடித்து அதினின்றும் புகையைக் குடிக்கும் வழக்கத்தை அப்பியாசம் செய்துவந்தார். அவ்வழக்கத்தை இங்கிலாந்திலும் கைக்கொண்டார். வழக்கமே இயற்கையாய்விடும், அல்லவா? ஒருநாள் தம் அறையில் அமர்ந்து சுருட்டு பிடித்துக்கொண்டிருந்தார். அந்தச் சமயத்தில் அவரது வேலைக்காரர்கள், வாயினின்றும் புகை கிளம்புவதைப் பார்த்துத் தங்கள் எஜமானனது வாய் நெருப்புப் பிடித்துக் கொண்டதென்று எண்ணி, தண்ணீரைக்கொண்டு அவித்தார்கள். அது வரையில் அவர்களுக்குச் சுருட்டுப்பிடிப்பது என்பது தெரியாதிருந்தது. பிறகு ராலி தன்வாயில் நெருப்புப் பிடிக்கவில்லையென்றும், புகையிலை

பிடிப்பதனால் அநேக சௌகர்யங்கள் இருப்பதாகவும் சொன்னார். அவர் சொன்னநாள் முதல் அநேக ஆயிரக்கணக்காகச் சுருட்டுகள் செலவழியலாயின. நற்பழக்கம் பிடிபட அநேக நாள் பிடிக்கும் ஆனால் கெட்ட வழக்கம் வெகு சீக்கிரத்தில் பிடிபட்டுவிடும் என்பது யாவரும் அறிந்த விஷயமே.

அதன் உபயோகம்.

ஜனங்கள் புகையிலையைப் பலவிதமாக உபயோகிக்கின்றார்கள். அதைச் சுருட்டாகவும், வதக்கி நன்றாகத் தூள்செய்து மூக்குத்தூளாகவும், மென்று தின்ன வாய்ப்புகையிலையாகவும் பலவாறாக உபயோகிக்கின்றார்கள்.

வைத்தியர்களில் அநேகர் புகையிலையை உபயோகிப்பதனால் மனத்தளர்ச்சி யுண்டாகும் என்றும் அஃது இருதயத்தின் இயக்கத்தையும், ரத்தத்தின் ஓட்டத்தையும் தடைசெய்கின்றது என்றும் அபிப்பிராயப்படுகின்றனர். புகையிலையின் ரசம் மிகவும் நெடியுள்ளது. அந்த நெடி பூச்சிகளையெல்லாம் நசிக்கச்செய்யும் குணத்தையுடையது.

"நிகோடைன்"

புகையிலையில் "நிகோடைன்" என்னும் விஷம் இருக்கின்றது. அமெரிக்காவிலுள்ள வர்ஜீனியா பிரதேசத்தில் பயிராகும் புகையிலையில் இந்நஞ்சு அதிகமாக விருக்கின்றது. நூற்றில் ஆறுவீதம் அடங்கியிருக்கின்றது. அந்தப் புகையிலை அதிகக் காரமும் நெடியுமுள்ளது என்ற பெயர்பெற்றிருக்கிறது. மற்ற இடத்தில் பயிராகும் புகையிலையில் நூற்றில் இரண்டுவீதம் நிகோடைன் இருக்கின்றது. 1569-ம் வருஷம் பிரான்சில் முதன்முதலில் புகையிலையைக்கொண்டு வந்தவர், "ஜீன் நிகாட்" என்பவர். ஆகவே புகையிலையினின்று உண்டாகும் நஞ்சிற்கு அன்னாரின் பெயரையே அளித்திருக்கின்றனர். 1565-ம் வருஷத்தில் ஸர் ஜான்ஹாகின்ஸ் என்னும் ஆங்கிலேயர் புகையிலையை இங்கிலாந்திற்கு முதன்முதலாக எடுத்துச் சென்றார். நிகோடைன் என்னும் நஞ்சு மிகவும் கொடியது. அந்தக் கொடிய விஷத்தின் ஒரு துளி, மூன்றரை நிமிஷத்திற்குள்ளாக ஒரு முயலைக் கொல்லப் போதுமானது. ஒருமனிதன் அதை உட்கொண்டதனால் நான்கு ஐந்து நிமிஷத்திற்குள்ளாக இறந்தான் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது.

சில ஆண்டுகளுக்கு முன் டாக்டர். F. M. ரோசிட்டம் என்னும் பிரபலமான வைத்தியர் கீழ்வரும்விதம் எழுதியிருக்கின்றார் :—

"நான் ஜெர்மனியில் புகையிலையைப் பயிரிடும் குடியானவனது வீட்டின் அருகே இருந்துவந்தேன். அக்குடியானவன் மாரிக்காலத்தில் புகையிலைப் பயிரையெல்லாம் அறுத்து ஒன்று சேர்த்து இலைகளையெல்லாம் தண்ணீரில் அழுகும்படி விட்டிருந்தான். புகையிலை மக்கினபிறகு மிகுதியான தண்ணீரைவெளியேவிட்டு, அந்தத்தண்ணீரில், தான் விற்க எண்ணங்கொண்

டிருக்கும் முப்பது பன்றிகளை ஓட்டினன். அந்தப் பன்றிகள் எல்லாம் புகையிலைத் தண்ணீரைக் குடித்துவிட்டன. அதன் பயனாக முப்பது பன்றிகளில் இருபத்தேழு பன்றிகள் இறந்துவிட்டன. மற்ற மீதியான மூன்று பன்றிகள் உயிருடனிருந்தன."

புகையிலையைச் சுருட்டாக உபயோகிப்பது மிகவும் கொடிய வழக்கம். ஹுக்காவில் புகையிலையை உபயோகிப்பது அவ்வளவு கொடியதல்ல. சுருட்டுகளோ மிகவும் கொடியவை. தேகத்திற்கு அபாயத்தை விளைவிக்கக்கூடியவை. புகையிலையை மென்றுதின்பதும் கெட்ட வழக்கம்தான். ஆனால் அவ்வளவு அபாயத்தைக் கொடுக்கக்கூடியதல்ல. புகையிலையை உபயோகிப்பதில் மூக்குத்தூளாக உட்கொள்ளல் கொஞ்சமேனும் அபாயகரமானதல்ல. ஆனால் அந்தப் பழக்கம் மிகவும் அசங்கியமும், அசுத்தமுமானது.

பலசாலி புகையிலையை எந்த விதமாகவும் உபயோகிக்கக்கூடாது. மிகவும் நேர்த்தியான தொழில் செய்யும் தொழிலாளிகள் இதை உபயோகிக்கவேகூடாது. ஒருவன் திடசரீரமும், திடமனமும் கொண்டவனாயிருக்கவேண்டுமென்று எண்ணுவானாயின் இக்கொடிய விஷத்தை அறவே ஒழிக்கவேண்டும். இதை உபயோகிப்பதனால் பலவியாதிகள் உண்டாகும்.

புகையிலையின் பொல்லாக்குணம்.

இளம்பிராயமுள்ள பாலியர்கள் புகையிலையை உபயோகிப்பார்களாயின் தேகத்திலுள்ள நல்ல இரத்தம்கெட்டு, நீராகி அதிலிருந்து நெஞ்சுலர்வு, நெஞ்சுவலி, தலைநோய், பீனிசம், காசம், நீரிழிவு முதலிய பல ரோகங்களும் உண்டாவது நிச்சயம். மேலும் புகையிலை சம்பந்தமான வஸ்துக்களைச் சதா காலமும் உபயோகிப்பதனால் கட்டுப்பட்ட தேகம் நீற்று, வன்மை குறைகிறதும் தவிர, பித்த அதிகரிப்பை யுண்டாக்கிக் கபாலச்சூடு, தலைவலி, நீரிழிவு, முதலிய பல ரோகங்களையும் உண்டாக்க ஏதுவாகின்றது. இவ்வாறுண்டாகும் கெடுதியால் சிலருக்குச் சந்தான விருத்திக் குறைந்தும், சிலருக்குச் சந்ததியில்லாமலும் போகிறது. ஒருவேளை சந்தானமுண்டானபோதிலும் அக்குழந்தை மேற்கூறிய பலரோகங்களுக்குள்ளாகி, யௌவனந் தொடங்கி முதுமைப்பருவம்வரை தீராத உபத்திரவத்துக்கு ஆளாக நேரிடுமென்பது, புகையிலையின் குணத்தை ஆராய்ச்சி செய்து பார்த்த நிபுணர்களின் அபிப்பிராயம். புகையிலையை உபயோகிப்பதனால், 40-வயதுக்கு மேற்பட்டவர்களை நேத்திர ரோகங்களும் விடுவதில்லை.

இப்பொல்லாப் புகையிலையில் (நிகொடைன்) என்ற விஷ மிருப்பதாக ஆங்கில சாஸ்திரி அபிப்பிராயப்படுகிறதை மேலே காட்டியுள்ளோம். அன்றியும் உதாரணமாக ஒரு கோழியை நாம் பிடித்துக் கொஞ்சம் புகையிலைத்தூளை அதன் மூக்கில் போடுவோமானல் அது உடனே கிறுகிறுத்துச் சுழன்று வீழ்ந்து துடிதுடித்துச் சாகும். இத்தன்மையான விஷம் நாய்க்

கும் உயிர்ச்சேதத்தை விளைவிக்கிறது. நிற்க, தன் யௌவன காலந் தொடங்கி முதுமைவரை; புகையிலை சம்பந்தமான வஸ்துக்களை உபயோகியாத ஒருவன் ஒருவேளை உபயோகிப்பானாகில் அவனுக்கு ஒருவித தலைச்சுற்றலும் வாந்தியு முண்டாகிறதென்பது நேயர்களறிந்த விஷயமே.

மேற்கண்ட பொல்லாக்குணம் புகையிலையிலிருப்பதை அறிந்து ஜப்பான் முதலிய தேசங்களில் அரசாங்கத்தார், 20-வயதுக்குக் கீழ்ப்பட்டவர்கள் எவரும் சுருட்டு, பீடி முதலிய புகையிலை சம்பந்தமான வஸ்துக்களை உபயோகிக்கக்கூடாதென்றும், மீறி நடப்பவர்களானல் சட்டப்படி தண்டனைக் குள்ளாவார்களென்றும் பகிரங்கப்படுத்தினர்கள். அந்தப்படி அது முதலிலிருந்து வருவதாகவும் தெரியவருகிறது. இவ்விதமே ஜர்மெனியிலும் இருக்கிறதாகத் தெரிகிறது.

மேற்கூறிய விஷயத்தை ஆயுர்வேத சாஸ்திர மூலமாயும் ஐரோப்பிய டாக்டர்களின் பொது அபிப்பிராயத்தினலும் நன்குணர்ந்து, எனது நண்பர் ஒருவர் கூறியபடி உலகநன்மையின் பொருட்டு, சுருக்கமாய் வரைந்துள்ளேன்.

இவ்விதம் புகையிலை சம்பந்தமான வஸ்துக்களை உபயோகிப்பதனல் சரீரத்துக்கு மிக்க கெடுதி உண்டாகின்றதென்பது பிரத்தியக்ஷமானபடியால் இதைப்படிக்கும் ஒவ்வொரு நண்பரும், அதாவது உபயோகிப்பவர்கள் அவற்றை அறவே ஒழித்து, தேகத்தைக் காப்பாற்றுதலே உத்தமம். ஏனெனில் எவருக்கும் இவ்வுலகில் பிராணனுக்கு மேலானவஸ்து ஒன்றுமில்லை. அப்பிராணனைக் காப்பாற்ற இதை ஒழித்தலே நலம். நிற்க, ஒவ்வொரு நகரத்திலும் பாலர்கள் புகைச்சுருட்டு முதலிய வஸ்துக்களை உபயோகியாமலிருக்கும்படி முனிசிபாலிடியாரும் போலீசாரும் ஒத்துழைத்து அடக்க வழி தேடுவார்களானல், ஒருவாறு வியாதியும், மரணவிகிதமும் குறையும்

மந்திரம் வரதாசாரி

RUBBER—ITS CONTRIBUTION TO THE COST OF WAR.
ரப்பர்—யுத்தத்தில் அதன் பிரயோஜனம்.

"அபரிடீன் ஜர்னல்" என்னும் ஆங்கிலப் பத்திரிகையில், பின்வரும் விதம் மிஸ்டர் எல். டேவிட்ஸன் எழுதுகிறார் :—

"தற்போது நடந்து ஓய்ந்த யுத்தத்தில் ரப்பர் எவ்வளவு முக்கியமாக உபயோகப்பட்டு வந்தது என்பதைச் சிலரே அறிந்திருப்பார்கள். சில சமயங்களில் இந்த ரப்பரின் உபயோகத்தினல் நேசவல்லரசுகள் எதிரிகளைக் காட்டிலும் மேலான நிலைமையைப் பெறும் சக்தியைப் பெற்றிருந்தன. உதாரணமாக, ஜர்மானியர்கள்—அதாவது எதிரிகள்—ரப்பர் டைர்

களும், குழாய்களும், இன்னும் மற்ற ரப்பர் சாமான்களும், யுத்தத்திற்கு இன்றியமையாதவைகளாயிருக்க அவைகள் அகப்படாது மிகக் கஷ்டத்திற்குள்ளாயிருந்தார்கள். வீடுகளில் அன்றாடம் பழக்கத்திற்கு வேண்டிய ரப்பர் சாமான்கள் கிடைக்கப்பெறாமல் தவித்துக்கொண்டிருந்தனர். வண்டிகளுக்கும், மோடார்கார்களுக்கும் முக்கியமாக வேண்டிய டைர்கள் கிடைக்காது பெரிதும் அவஸ்தைப்பட்டார்கள். இலங்கை, மலேயா முதலிய இடங்களில் பயிரிடப்பட்ட ரப்பரைக்கொண்டு பிரிட்டிஷ் கவர்ன்மெண்டார் சென்ற மூன்று வருஷ காலமாக சுமார் 80,000,000 பவுன்கள் பெறுமான ரப்பரை அமெரிக்காவுக்கு அனுப்பியிருக்கின்றனர். அதற்குப் பதிலாக அமெரிக்காவிலிருந்து அமூனிஷன்களும், உணவுப் பொருள்களும் பெற்றனர். ஆகவே நமது கடனைத் தொலைப்பதற்கு இம்மாதிரியாக ரப்பரை அனுப்புவது சிறந்த வழிதான்.

கிழக்கில் ரப்பரின் அபிவிருத்தி.

பிரிட்டிஷ் ராஜ்யத்தில் 1876-ம்௵ வரையில் ரப்பர் என்பதே பயிரிடப்படவில்லை. ஆனால் இப்பொழுதோ சுமார் 1½ கோடி ஏகர் நிலங்களில் பயிரிடப்பட்டிருக்கின்றன. 1876-ம் வருஷம் மிஸ்டர் விக்ஹாம் என்பவர் தென் அமெரிக்காவிலுள்ள பாரா என்ற இடத்திலிருந்து ரப்பர் விதைகளை வரவழைத்து, இலங்கை, சுமத்திரா, ஜாவா முதலிய இடங்களில் 2-கோடி ஏகர்களில் பயிரிட்டார்.

இந்தச் சமயத்தில் இலங்கையில் விசேஷமாகப் பயிரிடப் பட்டுவந்தது காபி என்பது. அந்தக் காபிச் செடிகளெல்லாம் ஏதோ ஒருவித பூச்சியினால் தொந்தரவு படுத்தப்பட்டு க்ஷீணிக்கத் தொடங்கின. அவ்வருஷத்தில் சுமார் 2,76,000 ஏகர் நிலத்தில் காபி பயிரிடப்பட்டு வந்தது. ஆனால் 1886-ம் வருஷத்தில் 98,000 ஏகர் நிலத்தில் மாத்திரம் காபி பயிரிடப்பட்டு வந்தது. இவ்விதம் குறைந்துவந்து 1900-ம் வருஷம் காபி என்ற பூண்டே இல்லாமற் போய்விட்டது. ஆகவே விவசாயிகள் காபியின் க்ஷீணத்தைக் கண்டு வேறு எதேனும் ஒன்றை அதற்குப் பதில் பயிரிடத் தீர்மானித்தார்கள். காபிக்குப் பதில்தேயிலையே நல்லது என்று அபிப்பிராயப்பட்டுத் அதை விருத்தி செய்தார்கள். தேயிலை இந்தியாவில் அதிகச் செழிப்பாக வளர்ந்து வந்தது. அது வெகு நயமாய் பயிரிடக்கூடியது. இது நடப்பட்ட மூன்று நான்கு வருஷத்துக் குள்ளாக பயனைத் தரவல்லது. இந்தியாவிலிருந்து வேற்றிடங்களுக்கு விதைகள் ஏற்றுமதி செய்யப்பட்டு வந்தது. கீழ்வரும் விஷயங்களிலிருந்து விவசாயிகள் தேயிலையைப் பயிரிட்டதனால் நல்ல செழுமையான நிலைமையிலிருந்தார்கள் என்று விளங்கும்.

1876-ம் வருஷத்தில் 750 ஏகர் நிலங்களில் தேயிலை பயிரிடப்பட்டு வந்தது. 1886-ம் வருஷத்தில் 1,50,000 ஏகரில் தேயிலை பயிரிடப்பட்டு

வந்தது. 1900-ம் வருஷத்தில் 3,84,000 ஏகரில் தேயிலை பயிரிடப்பட்டு வந்தது. ஆகவே வருஷம் அதிகரிக்க அதிகரிக்க தேயிலைச் சாகுபடியும் விருத்தியாகிக் கொண்டே வந்தது.

சின்கோனா.

இதே காலத்தில் தான் சின்கோனா என்பதும், காபி க்ஷீணித்த நிலத்தில் பயிரிடப்பட்டு வந்தது. தேயிலையைக் காட்டிலும் பயன் தருவதற்கு அதிக நாள் கொண்டபோதிலும் முதலில் அதன் பலன் ஒரு ஏகருக்கு அதிகமாகக் காட்டி வந்தது. இந்த விருக்ஷங்களைப் பூச்சிகள் அரிப்பதனால் வளமை குன்றத் தலைப்பட்டது. இந்த மரத்தின் பட்டையிலிருந்து "கொயினா" என்னும் மருந்து எடுக்கப்படுகிறது. இந்தக் கொயினா அதிகமாகச் சாகுபடி செய்யப்படுவதனாலும், அதன் விற்பனை குறைக்கப்படுவதன் நிமித்தம் அது லாபகரமாக வில்லாது போயிற்று. 1883-ம் வருஷத்தில் 64,000 ஏகர்கள் இலங்கையில் பயிரிடப்பட்டு வந்தன. 1880-ல் 10,00,000 பவுண்டு சின்கோனா ஏற்றுமதி செய்யப்பட்டது. 1 அவுன்ஸ் விலை 12 ஷில்லிங்காக விற்கப்பட்டது. 1886-ல் 14,000,000 பவுண்ட் சின்கோனா பட்டை ஏற்றுமதி செய்யப்பட்டது. ஒரு அவுன்ஸ் 2 ஷில்லிங் 8 பென்சுக்கு விற்கப்பட்டது. 1894-ல் கொயினா விலை குறைந்துவிட்டது. 1 அவுன்ஸ் விலை 1 ஷில்லிங் 3 பென்ஸ் வீதம் குறைந்துவிட்டது. இது இலாபகரமாகத் தோன்றாததால் இத்தொழிலை விட்டுவிடும்படி யாகிவிட்டது. கொயினா பயிரிடப்பட்ட வயல்களெல்லாம் தேயிலை பயிரிடப்படும் நிலமாகமாறின.

பலன் தரும் மரங்கள்.

இலங்கையிலுள்ள ரோசஹா கம்பெனியின் சொந்தமான நிலங்களில் பாராவிலிருந்து கொண்டுவரப்பட்ட செடிகளைப் பயிரிட்டார்கள். அதில் ஏழுமரங்கள் மாத்திரமே பிழைத்தன. இன்றைக்கு அவ்விருக்ஷங்களெல்லாம் நன்றாகச் செழித்து ஓங்கி வளர்ந்திருக்கின்றன. அந்தக் கம்பெனிக்குச் சொந்தக்காரரான மிஸ்டர் வில்கின்ஸன் என்பவர் கீழ்வரும் விதம் எழுதியிருக்கின்றார்:—

"அந்த ஏழு ரப்பர் மரங்களில் ஒன்று 1911-ம் வருஷத்தில் பட்டுப் போய்விட்டது. அவைகளைப் பூச்சிகள் கெடுத்து விடுகின்றனவென்றும், அவைகளில் இப்பொழுது பால் எடுப்பதில்லையென்றும், தெரியவருகிறது. இந்த 7 விருக்ஷங்களிலிருந்து எடுக்கப்பட்ட 10,000,000 விதைகள் 50,000 ஏகர் நிலங்களை நடப் போதுமான விதைகளேயாம். அவைகள் விற்கப்பட்டன.

வைத்துப் பயிரிட்ட சில நாளைக்குள்ளாகக் கவனித்துப் பார்த்ததில் ஒரு விருக்ஷம் 7 வருஷம் முதல் 10 வருஷங்களுக்குள் பலன்தரும் என்று மதிப்பிடப்பட்டிருக்கின்றது.

நான் தேயிலைப் பண்ணையொன்று விற்றுவிட்டேன். அதில் 12,000 ரப்பர் செடிகள் பயிரிடப்பட்டிருந்தன. சில வருஷங்கள் கழிந்த பின்னர் நான்போய் பார்த்தபோது அவையெல்லாம் ஆடுகளால் மேயப்பட்டும் விறகாக உபயோகிக்கப்பட்டும் பாழாக்கப்பட்டும் இருந்தன. இவ்விதம் பாழாக்காது கவலையாய் விருக்ஷங்களைப் பார்த்துக் கவனித்து வந்திருந்தால் சில வருஷங்களுக்குள் சுமார் 30,000 பவுன் கிடைத்திருக்கும்.

1904-ம் வருஷத்தில் சுமார் 25,000 ஏகர்கள் பயிரிடப்பட்டன பிறகு பயிர் அதிகரிக்க ஆரம்பித்தன. 1910 ம் வருஷத்தில் 200,000 ஏகர்களும், இன்றைக்கு 25,000 ஏகர் நிலங்களும் ரப்பர் பயிரிடப்பட்டு வருகின்றது.

கிழக்குப் பிரதேசத்தில் பர்மா, நியூகினி இன்னும் சில பிரதேசங்களில் இப்பொழுது 2,000,000 ஏகர் நிலங்களில் ரப்பர் பயிரிடப்பட்டு வருகின்றது.

கீழ்வரும் விஷயங்களிலிருந்து ரப்பர் எவ்விதத்தில் யுத்தத்தின் செலவுக்கு ஈடாக நின்று வந்தது என்பது தெரியவரும்.

சென்ற 3 வருஷங்களாக 95,000 டன்களும், 12,000 டன்களும் 175,000 டன்களும் முறையே அனுப்பப்பட்டு வந்தன. இவைகளில் வருஷத்தில் 100,000 டன் ரப்பர் விவசாயிகளின் ரப்பர்தான். அந்தச் சமயத்தில் 1 பவுண்டு ரப்பரின் விலை சராசரி 2ஷி 8 பென்ஸ் என்று எடுத்துக்கொள்ளப்பட்டது. கிழக்குக் குடியேற்ற நாடுகளிலிருந்து அமெரிக்காவிற்கு 27,500,000 பவுன்கள் வரைக்கும் வருஷவாரியில் அனுப்பப்பட்டு வந்தது.

அந்தக் குடியேற்ற நாடுகளிலிருந்து தேசத்தின் யுத்தச் செலவிற்குச் செய்த பேருதவியால் ரப்பர் பயிரிடும் விவசாயி மிகவும் சந்தோஷப்படுகின்றார். 1878 முதல் 1898 வரையில் "விழலுக்கிறைத்த" விவசாயி இத்தகைய பெரிய பலன் கிடைத்ததற்குச் சந்தோஷப்படாதிருப்பாரோ?

ரப்பரில் இருவகைகளுண்டு; இயற்கை ரப்பரென்றும் செயற்கை ரப்பரென்றுமாம். இயற்கை ரப்பராவது மரங்களிலிருந்து ஒழுகும் அல்லது வடியும் பாலிலிருந்து செய்யப்படுவது; செயற்கை ரப்பராவது ரசாயன வஸ்துக்களைச் சேர்த்துச் செய்வது. இயற்கை ரப்பர் நீடூழிநிற்கும். செயற்கை ரப்பரோ சடுதியில் அழிந்துவிடும் உதாரணமாக இயற்கைக் குணத்திற்கும் செயற்கைக் குணத்திற்கும் வித்தியாசமிருப்பதைக் காண்க. ஆகவே இயற்கையாயிருக்கும் ஒவ்வொன்றையும் விருத்தி செய்வதே இறுதியிற் பலன் தருமென்க. உலகக்கணக்கை யெடுத்துப் பார்ப்போமானால் ரப்பர் மரம் பயிராகிவரும் நிலவிஸ்தீரணம் 20,00,000 ஏகர் நிலங்களாம். அந்த விஸ்தீரணத்தில் 16,00,000 ஏகர் பிரிடிஷ் ஏகாதிபத்தியத்திற் குள்ளடங்கியதாகும். இவ்வளவு பாரியான விஸ்தீரணமுள்ள ஸ்தலத்தில் பயிராகும் ரப்பரைக் கருத்துடன் கவனித்து வருமிடத்து, அந்தப்பயிர் விசேஷ பிராபல்யமாகி நாட்டில் அவசரமான வேளையில் ரப்பர்பஞ்சம் நேர்ந்ததென்றும் சொல்ல விடமிராது. இப்போது நிறுத்தப்பட்டிருக்கும் ஐரோப்பிய நெடும் போரில் என்னென்ன விதமாக ரப்பர் உபயோகமாயிற்றென்பதை நாம் கூறவேண்டுவது அனாவசியம். மோடார் வண்டிகளுக்கும் சைகில்களுக்கும் ஆகாய விமானங்களுக்கும் ரப்பர் பயிராகும் இடங்களிலிருந்துவரும் ரப்பரின் வருஷவாரி மதிப்பு 15,00,00,000 பவுனும். ஆனதுபற்றி ரப்பர் பயிரை எவ்விதத்தும் அசட்டை செய்யலாகாது. யுத்தகாரியங்களில் எவ்வளவுதூரம் ரப்பர் உபயோகமாயிருக்கிற தென்பதை நேயர் கவனிப்பார்களாக.

CONDITION OF THE SUGAR INDUSTRY.

சர்க்கரைத் தொழிலின் நிலைமை.

ஐரோப்பிய நெடும் போருக்கு முந்தி கரும்புச் சர்க்கரை யுண்டாவது ஒருபுற மிருக்க, கிழங்குச் சர்க்கரை, பூச்சர்க்கரை, எலும்புச் சர்க்கரை யென்னும் பலவகைப்பட்ட சர்க்கரைகள் ஜாவாதீவிலிருந்தும், ஜர்மனி தேசத்திலிருந்தும், மோரீசு தீவிலிருந்தும் இந்தியாவுக்கு வந்துகொண்டிருந்தன; மற்றும் ரிபைன்ட் ஷுகர் (சுத்திகரிக்கப்பட்ட சர்க்கரை) வில்லைகளாக அமெரிக்காவிலிருந்தும், இங்கிலாண்டிலிருந்தும், இங்கு வந்தன; எனவே சர்க்கரைக்கு இந்நாட்டிலிருந்த கிராக்கி கொஞ்சநஞ்சமல்ல. தேசத்திற்போதுமான பூஸாரமும், சாகுபடிக்கேற்ற சௌகர்யமும் இருந்துங்கூட முனைந்து வேலைசெய்வார் எவரையுங் காணோமே யென்று நாம் வருந்தவேண்டி யிருக்கிறது. நம்முடைய ஜனங்கள் வெள்ளைச் சர்க்கரையை எவ்வளவுக் கெவ்வளவு அதிகமாக உபயோகப்படுத்தி வருகிறார்களோ அவ்வளவுக்கவ்வளவு, தேசத்தில் செய்யப்படும் பழுப்புச் சர்க்கரை குறைந்துவிடுகிறது. இந்தியாவில் செலவாகும் சர்க்கரை மொத்தத்தில் பத்து வருஷத்திற்கு முன் 100-க்கு 59 பங்கு இதர தேசங்களிலிருந்து வாங்கப்பட்டு வந்தது. நமது நாட்டில் செய்யப்படும் சர்க்கரையில் 409,000 டன் குறைந்துவிட்டது. ஆனாலும் கரும்புச் சாகுபடியில் இந்தியாமற்ற தேசங்களுக்குக் குறைந்ததல்ல வென்பது யாவருக்கும் தெரிந்த விஷயம். ஜே. டப்ளியூ. லெதர் சொல்வதாவது:—"நல்ல ஜாதிக்கரும்பு வேண்டுமென்றால், அதற்கு இந்தியாவை விட்டு வெளிதேசங்களுக்குப் போகவேண்டு மென்ற அவசியமே இல்லை. மிகவும் சிறந்த ஜாதிக் கரும்புகள் இந்தியாவில் கிடைக்கும். சிலஇடங்களில் கரும்புச் சாகுபடி செய்யும் விதமும் மிகவும் சிறந்ததாகவேயிருக்கிறது. சர்க்கரை செய்யும் தொழில் க்ஷீணதிசையை யடைந்ததற்கு வாஸ்தவமான காரணங்கள் என்னவென்றால், ஒரே பிரதேசத்தில் ஏராளமான விஸ்தீரணத்தில் கரும்பு சாகுபடி செய்யச் சாத்யமில்லை. சாகு

படி செய்யப்பட்ட ஸ்தலங்கள் சிறிதாக உள்ளதாலும், ஒரேயிடத்தில் இல்லாத காரணத்தாலும், சர்க்கரை செய்யும் தொழில் விருத்தியடைவதற்கிடமில்லாமலிருக்கிறது. மேலும், ஜனங்கள் பெரும்பாலும் கரும்பிலிருந்து செய்யப்பட்ட வெல்லத்தை உபயோகித்து வருகிறார்கள். வெல்லமும் புராதனமான மாதிரியில் ஆலைகளில் செய்யப்படுகின்றன. இப்படிச் செய்வதில் அதிக சேதம் ஏற்படுகிறது."

தற்சமயம் ஏராளமான சர்க்கரை ஜவாவிலிருந்தும் ஜப்பானிலிருந்தும் இந்தியாவில் இறக்குமதி செய்யப்படுகிறது. கவனித்துப் பார்த்தால் இந்தியாவில் தேவையான சர்க்கரையை இந்தியாவிலேயே ஏன் செய்துகொள்ளலாகாது? பம்பாய் ராஜதானியில் மாத்திரம் 50,000-ஏக்கராக்களில் கரும்பு சாகுபடி செய்யப்படுகிறது. ஆனால் அந்த ராஜதானியில் சர்க்கரை செய்யும் சாலை ஒன்றுகூட ஸ்தாபிக்கப்படவில்லை. பூனா ஜில்லாவைச் சேர்ந்த மாஞ்சிரியில் கவர்ன்மெண்டு பண்ணைக்குச் சமீபத்தில் ஒரு சிறு சர்க்கரைச் சாலையிருக்கிறது. அவ்விடத்தில் நாள் ஒன்றுக்கு 2-டன் சர்க்கரைக்கு மேல் செய்யச் சாத்தியமில்லை. இச்சிறு சர்க்கரைச் சாலையில் ஏராளமான லாபங் கிடைக்கிறது. சண்டைக்கு முன்கூட நல்ல லாபம் கிடைத்தது. இச்சாலையில் கருப்பஞ் சாற்றிலிருந்து நேராகவே சர்க்கரை செய்யப்படுவதை எவரும் பார்த்தற்கு இயலும்.

சர்க்கரை செய்வதில் சரியான விதத்தைப் பிரயோகிக்காமலிருப்பதாலும், சரியான சாதனங்களுடன் சர்க்கரைச் சாலைகள் கட்டப்படாததினாலும், சரிவர அவைகளை மேற்பார்வை செய்யாததினாலும் அனேக சர்க்கரைச் சாலைகள் க்ஷீண திசையையடைந்துவிட்டன. சாதாரணமாக சர்க்கரைச் சாலைகளில், விவசாயிகளால் செய்யப்பட்ட வெல்லத்திலிருந்து வெளுத்த சர்க்கரையைச் செய்வது வழக்கமாகவிருக்கிறது. இவ்விதம் வெல்லத்திலிருந்து வெளுத்த சர்க்கரையைச் செய்வதில் அனேக அசௌகர்யங்கள் ஏற்படுகின்றன. சர்க்கரைச் சாலை லாபகரமாயிருக்கவேண்டுமானால், அத்துடன் சாராயம் வடிக்கும் ஆலையையும் சேர்த்துக்கொள்வது அவசியம்.

வெல்லத்தைக்கொண்டு வெளுத்த சர்க்கரை செய்வதில் அநேக அசௌகரியங்களிருப்பதை இதனடியிற் காண்க:—

1. கரும்புகளை விவசாயிகளே நசுக்கி அவைகளிலிருந்து சாறு எடுப்பதில் மிகவும் சேதம் ஏற்படுகிறது. புராதனமான ஆலைகளை உபயோகிக்கிற காரணத்தால் முழுச் சாற்றையும் எடுக்கச் சாத்தியப்படுவதில்லை. அப்படி சாறுடனிருக்கும் சக்கைகளைக் கருப்பஞ்சாற்றைப் பொங்கவிடுவதற்கு விறகாக உபயோகப்படுத்துகிறார்கள். 2. இப்படி நேராக நெருப்பில் கருப்பஞ்சாற்றைப் பொங்கிவிடுவதால் "சுக்ரோஸ்" என்று சொல்லப்படும் ஸ்படிகம்போலிருக்கும் சர்க்கரை கிடைப்பதற்குப் பதிலாக வெல்லப்பாகு

கிடைக்கிறது. இந்த வெல்லப்பாகு அவ்வளவு விலைபோகாது. இவை சாராயம் செய்வதற்கும் புகையிலை செய்வதற்கும்தான் ஏராளமாக பிரயோஜனப்படுகின்றன. 3. சாதாரணமாக வெல்லத்திற்கு நல்லவிலை கிடைக்கிறதல்லவா? அவ்வளவு கொடுத்து வெளுப்புச் சர்க்கரை செய்வதற்காக வெல்லம் வாங்குவது கூடாது. 4. வெளுப்புச் சர்க்கரை செய்வதை நிறுத்தாமல் நடத்த வேண்டுமானால், அநேக மாதங்களுக்குத் தேவையான வெல்லத்தைச் சேகரித்துக்கொள்ளுவது அனுவசியமாகும் அப்படிச் செய்வதனால் வெல்லம் சீக்கிரத்தில் கெட்டுப்போய்விடும். 5. கரும்புச் சக்கையெல்லாம் வெல்லம் காய்ச்சுவதற்குப் பிரயோஜனப்பட்டுவிட்டபடியால், வெளுப்புச் சர்க்கரை செய்வதற்கு விறகாவது, நிலக்கரியாவது அவசியமாகும். தற்சமயம் நிலக்கரியின் விலை மிகவும் அதிகரித்துவிட்டது. சர்க்கரைச்சாலை, கரும்பு சாகுபடி செய்யும் பிரதேசங்களுக்கு மத்தியமாக வில்லாத காரணத்தால் வெல்லத்தைச் சர்க்கரைச் சாலைக்குக் கொண்டுபோகும் செலவையும் வகிக்கும்படியாய் நேரிடுகிறது. 6. வெல்லத்தைச் சுத்திபண்ணி வெளுத்த சர்க்கரையாகச் செய்யும்பொருட்டு அதை எலும்புப்பொடியுடன் கலக்கும்படி நேரிடுகின்றது. இது இந்தியர்களின் மதக்கொள்கைகளுக்கு விரோதமானது? ஆகையினால் ஜாவா, மோரீஸ் முதலிய இடங்களில் செய்வதுபோல் நேராகக் கருப்புச்சாற்றிலிருந்து வெளுப்புப் சர்க்கரையைச் செய்வதுதான் லாபகரமானது.

அதற்குக் கீழ்க்கண்ட அம்சங்களைக் கவனிப்பது நலம்:—

முதலாவது, ஆவியினால் ஓட்டப்பட்ட யந்திரங்களினால் கரும்பிலிருக்கும் எல்லாச் சாற்றையும் எடுத்துவிடவேண்டும்.

இரண்டாவது, ஆலையிலிருந்து கருப்பஞ்சாறு வெளியில் வருவதற்கு முன்னமேயே அதில் சுண்ணாம்பு கலக்கப்பட்டு வெல்லப்பாகாக வொட்டாமல், பாதுகாக்கவேண்டும். பிறகு அதை வடிக்கட்டிப் பொங்கவிட்டு அதிலுண்டாகும் ஆவியிலிருந்து சாஸ்திரீயமாக முதல்தரமான வெளுத்த சர்க்கரையைச் செய்யவேண்டும். இப்படிச் செய்வதில் உண்டாகும் வெல்லப்பாகை மறுபடியும் பொங்கவிட்டு இரண்டாந்தரம் மூன்றாந்தரமான சர்க்கரைகளையும் செய்கிறார்கள்.

மூன்றாவது, கருப்பஞ் சர்க்கரையைத் தேவையான நீராவியை உண்டாக்குவதற்குப் பிரயோஜனப் படுத்துகிறார்கள். வேறுவிதமான விறகு தேவையில்லாமலிருக்கும்படி தகுந்த அடுப்புகளைக் கட்டவேண்டும்; சர்க்கரைச்சாலை கரும்பு சாகுபடிசெய்யும் ஸ்தானத்திற்கு மத்தியமாக விருக்கவேண்டும்.

நான்காவது, நேராகக் கருப்பஞ்சாற்றிலிருந்து வெளுப்புச் சர்க்கரை செய்வதற்கு எலும்புப்பொடி அவசியமில்லை.

பம்பாய் ஆகாரவிலைக் கமிட்டியாரால் ஒரு டன் சர்க்கரையின் விலை ரூபாய் 440-என்று நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது.

சென்ற வருஷத்திற்கு முன் வருஷத்திய இந்தியா கவர்ன்மெண்டாரின் பட்ஜட்டில் சர்க்கரை இறக்குமதிக்கு 100-க்கு 10-விகிதம் வரி போடப்பட்டிருக்கிறது. இப்பொழுது வெளி தேசங்களிலிருந்து கிழங்கிலிருந்து செய்யப்பட்ட சர்க்கரையினால் போட்டியில்லை. இந்தச் சமயத்தில்தான் நம்முடைய சர்க்கரை வியாபாரத்தை நாம் நிலைநிறுத்திக்கொள்ளப் பிரயத்தனப்படவேண்டும். இப்படிச் செய்வதற்குக் கவர்ன்மெண்டார் பின்கண்டபடி உதவி செய்வது பொருத்தமுடையதாகும்.

குறைந்தது முதலில் ஆரம்பிக்கப்படும் சில கம்பெனிகளுக்காவது கவர்ன்மெண்டார் திரவிய சகாயம் செய்யவேண்டும். தேவையான நிலத்தை நாமகர்த்தமான குத்தகைக்குச் சர்க்கரைக் கம்பெனிக்காரர்களுக்குக் கவர்ன்மெண்டார் கொடுக்கவேண்டும். விவசாய இலாகாவிலுள்ள உத்தியோகஸ்தர்களைக்கொண்டு நூதனமாய் ஸ்தாபிக்கப்படும் சர்க்கரைக் கம்பெனிகளை மேல் விசாரணை செய்யும்படி உத்தரவிடவேண்டும். ஏரி கால்வாய் ஜலத்தைத் தீர்வையில்லாமல் கொடுக்கவேண்டும்.

ஒரு டன் வெளுப்புச் சர்க்கரை செய்வதற்கு ஆகும் செலவைக் காண்க :—

10-டன் கரும்பிலிருந்து ஒரு டன் சர்க்கரை செய்யலாம். ஒரு டன் கரும்பின்விலை ரூபா 10. ஒரு டன் வெளுத்த சர்க்கரை செய்வதற்குச் செலவு ரூபா 40 கடன்வாங்கி முதலாக வைக்கப்பட்டிருக்கும் தொகைக்கு வட்டி டன் ஒன்றுக்கு ரூபாய் 50.

		ரூபா.
1-டன் வெளுப்புச் சர்க்கரை செய்வதற்கு 9-65-டன் கரும்பின் கிரயம்	...	100
சர்க்கரையாகச் செய்வதற்குச் செலவு	...	40
வட்டி கமிஷன் முதலியவை டன் 1-க்கு	...	50
ஆக மொத்தம்	...	190
1-டன் வெளுப்புச் சர்க்கரையின் விலை	...	400
ஆகையால் டன் 1-க்கு லாபம்	...	210

சண்டைக்கு முன் இந்திய சமுத்திரத்தில் 795-சதுர மைல் விஸ்தீரணமுள்ளதாயிருக்கும் மோரீஸ் தீவிலிருந்து பம்பாயிக்கு ஏராளமான சர்க்கரை அனுப்பப்பட்டு வந்தது. அந்தத் தீவில் சுமார் 80-சர்க்கரைச்சாலைகளிருக்கின்றனவாம்; அவைகளில் அனேகமாய் இந்தியக் கூலிகள்தான்

வேலை செய்கிறார்கள், வருஷம் 1-க்கு 2,00,000-டன் வெளுப்புச் சர்க்கரை செய்து வருகிறார்கள். ஒரு தீவில் அவ்வளவு வேலை நடைபெறுகையில், பிரதமமாயுள்ள இந்தியாவின்கண் எத்தனை சர்க்கரைச் சாலைகள் ஏற்படவேண்டுமென்பதைச் சிறிது ஆலோசித்துப் பாருங்கள்.

"இந்து நேசன்"

THE BENEFITS OF CO-OPERATIVE SOCIETIES.

BY

L. M. G.

ஐக்கியச் சங்கங்களும் அவைகளின் நன்மைகளும்.

"கடன் பட்டார் நெஞ்சம்போல் கலங்கினான் இலங்கை வேந்தன்" என்று கவிச் சக்கரவர்த்தி கம்பர் கூறியுள்ளதால் கடன்வாங்கும் வழக்கம் புராதன காலந்தொட்டே இந்தியாவில் இருப்பதாக ஒருவாறு நிர்ணயிக்கலாம். இராமாயணம் நடந்த காலத்தில் கடன்வாங்கும் வழக்கம் இருந்ததா இல்லையாவென்பதை ரூபிக்கப் போதுமான சாட்சியங்கள் கிடைக்கவில்லையாயினும் கம்பருடைய காலத்திலேனும் கடன் வாங்கும் வழக்கம் இந்தியாவில் இருந்ததென்று ரூபிக்க மேலே காட்டியுள்ள அத்தாட்சியொன்றே போதுமானதாகும்.

புராதன ஜாதியார்கள் பலரிடத்திலும் கடன் வாங்கும் வழக்கம் இருந்ததென்பதைக் காட்ட அத்தாட்சிகள் பல விருக்கின்றன. கடன் வாங்கும் வழக்கம் தீமையென்பதை நிர்ணயஞ்செய்து அதைக் கண்டிக்க பற்பல ஏற்பாடுகள் செய்யப்பட்டு வந்ததாகப் புராதன கிரந்தங்களினாலும், வேதங்களினாலும் தெரியவருகின்றது. கடன் வாங்கும் வழக்கத்தைக் கண்டிப்பது அசாத்தியமென்று கண்ட பின்னர், வட்டி வாங்கக்கூடாதென்று கண்டித்தால் கடன் கொடுக்கும் வழக்கம் நின்றுவிடுமென்றும் அதனால் கடன் வாங்கும் வழக்கம் அறவே ஒழிந்துவிடுமென்றும் எண்ணங்கொண்டு, வட்டி வாங்கக்கூடாதென்றும் வாங்குதல் பெரும்பாபம் என்றும் சட்டம் ஏற்படுத்தினார்கள். மோசேயு இஸ்ரவேலரிடத்தில் வட்டி வாங்கக்கூடாதென்பதாக சட்டம் உண்டாக்கினார்கள். வட்டிக்குக் கடன் கொடுத்தவன், வட்டிக்குக் கடன் வாங்கியவன், அம்மாதிரி பத்திரங்களை எழுதினவன் சாட்சிக் கையெழுத்து செய்தவன், கடன் வாங்கிக்கொடுக்க ஏற்பாடு செய்தவன் இவர்களெல்லோரும் பாபிகள் என்றும் இத்தகைய செயல்களுக்குடன்பட்டவர்கள் நரகத்திற்குள்ளாவார்களென்றும் மகம்மதிய வேதமும் சாஸ்திரங்களும் முறையிடுகின்றன. கடன் வாங்கும் வழக்கம் முதல் முதலில் எக்காலத்தில், எத்தேசத்தில் எந்த ஜாதியாரிடத்தில் பிறந்ததென்பதற்குத்

தகுந்த ஆதாரங்கள் கிடைக்கவில்லை. மனிதனுக்கு நாகரிகம் என்னும் காற்று வீசவே கடன் வாங்கும் வழக்கம் அதிகரித்ததென்று ஒருவாறு நிர்ணயிக்கலாம். ஆகையால் நாகரிகத்திற்கும், கடன் வாங்கும் வழக்கத்திற்கும் நெருங்கிய சம்பந்தமுள்ளதென்று நிச்சயமாவதுந் தவிர நாகரிகத்தை அதிகமாகக் கையாளவேண்டுமென்ற எண்ணம் அதிகரிக்க அதிகரிக்க கடன் வாங்கும் வழக்கம் அதிகப்படுகிறதென்று ரூபிக்க அத்தாட்சிகள் வேண்டுவதில்லை. அனுபவத்தில் அநேகமாய் எல்லோரும் அறிந்திருக்கக்கூடும்.

இக்காலத்தில் கடன் வாங்காமல் ஜீவனஞ் செய்யக்கூடியவர்கள் மிகவும் சொற்பத்திலும் சொற்பம் என்பது எல்லோரும் அறிந்துகொள்ளவே சௌகர்யமாய் கடன் வாங்கவும், அக்கடனை இலகுவாய் அடைக்கவும் வேண்டிய மார்க்கங்களைக் கண்டுபிடிக்கப் பிரயத்தனஞ் செய்ததின் பயனாக கொலம்பஸ் அமெரிக்காவைக் கண்டுபிடித்ததற்கொப்ப கூட்டுறவு முறை கண்டுபிடிக்கப்பட்டது:

இக்கூட்டுறவுமுறை ஐரோப்பாவில் வளர்ச்சியடைந்து அதன்பயன் ஐரோப்பாவில் சுமார் ஐம்பது வருஷம் புலப்பட்டபின், இந்தியாவில் கூட்டுறவுமுறை ஸ்தாபிக்கப்பட்டது.

முதல் முதலில் 1904-ம் வருஷத்தில்தான் இந்தியாவில் கூட்டுறவுச் சட்டம் அமுலில் வந்தது. இச்சட்டத்தில் சில குறைபாடுகள் இருந்தமையால் சில சீர்த்திருத்தங்களுடனும், மாறுதல்களுடனும் 1912-ம் வருஷத்தில் இந்தியா இரண்டாவது சட்டமாகிய கூட்டுறவுச் சட்டம் இந்திய அரசாங்கத்தாரால் அங்கீகாரஞ் செய்யப்பட்டது.

1916—1917 வருஷத்திய ரிப்போர்ட்டுகளின் பிரகாரம் இந்தியாவில் மைசூர், பரோடா, உள்பட 20,725 சங்கங்கள் இருந்திருக்கின்றன இச்சங்கங்களின் அங்கத்தினர்கள் மொத்தம் 7,84,252 இச்சங்கங்கள் லேவாதேவி செய்து வந்தமுதல் தொகை (Capital) ரூ 5,96,15,644 இச்சங்கங்கள் அடைந்த இலாபம் ரூ 17,75,815. 1917-ம் வருஷம் ஜூன் மாதம் 30-ந் தேதியன்றைக்கு இச்சங்கங்கள் எல்லாவற்றினுடையவும் க்ஷேமநிதி ரூ 68,44,858.

"வெயிலில் நடந்தாலன்றோ தெரியும் நிழலின் அருமை" என்பது நம் நாட்டுப் பழமொழி. ஆனதுபற்றி இந்த ஐக்கியச் சங்கங்களால் என்ன நன்மைகள் என்பதை அறிந்துகொள்ளுவதற்கு நமக்குக் கடன் கிடைக்கும் வேறு மார்க்கங்களையும் அவைகளின் கஷ்ட நிஷ்டூரங்களையும் கவனிப்போமானால் எளிதில் விளங்கும்.

(1) பந்து மித்திரர்களிடம் கடன் வாங்குவதில் கஷ்டங்கள் இல்லையென்று சிலர் அபிப்பிராயப்படினும் பந்து மித்திரர்களின் உறவை இழக்க வேண்டுமென்றாலும், அவர் விரோதங்கொள்ள வேண்டுமென்றாலும் கடன் வாங்கினால், அல்லது கடன் கொடுத்தால் போதுமானதென்பது உள்ளங்கை நெல்லிக்கனிபோல் யாவரும் அறிந்த விஷயம்.

(2) நாட்டுக்கோட்டை செட்டிகள் நபர் ஜாமீன்பேரிலும், நில அடமானத்தின் பேரிலும் கடன் கொடுக்கிறார்கள். இவர்கள் வாங்கும் வட்டியோ 24-முதல் 45-வரைக்கும் கடன் வாங்குபவருடைய அவசியத்திற்கும் நிர்ப்பந்தத்திற்கும் தகுந்தாற்போல் ஏற்படுகின்றது. நில அடமானத்தின் மேல் கடன் கொடுப்பதைக் காட்டிலும், நபர் ஜாமீன்மேல்தான் அதிகக் கடன் கொடுக்கிறார்கள். நூறு ரூபாய் கடன் வாங்கி பத்து மாதத் தவணைகளில் கொடுக்க ஒப்புக்கொள்ளுவதாக வைத்துக்கொள்ளுவோம். 100-க்கு மாதம் இரண்டு ரூபாய் வட்டி வீதம் கணக்கிட்டு பத்து மாதத்திற்கு ரூபா இருபதும், எழுத்துக்கூலி, ஸ்டாம்பு முதலியவைகளுக்கு ரூ. ஒன்றும் போக பாக்கி ரூபாய் 79 இவன் கைக்கு வரும். இதில் கடன் வாங்கிக் கொடுக்கச்சிபார்சு செய்தவர்களுக்கும், ஜாமீன் கையெழுத்துப் போட்டவர்களுக்கும் சுமார் பத்து அல்லது பதினைந்து ரூபாய் செலவாகிவிடும். நூறு ரூபாய்க்குப் பாண்டு எழுதிக்கொடுத்தால் சில சமயங்களில் 50 ரூபாய்தான் கைக்குச் சேரும் பாக்கியமுமுண்டு. கடன் வாங்கியபின் மாதம் பத்து ரூபாய் கொடுக்கவேண்டும். தவறினால் மாதம் ஒன்றுக்கு ரூபாய் ஒன்றுக்கு மூன்று பைசா அல்லது ஆறுபைசா அபராதவட்டியுடன் செலுத்தவேண்டும். மாதா மாதம் திருப்பிக்கொடுக்கும் அசல் தொகைக்கு எதிர்வட்டியென்பது கனவிலும் கிடையாது. வட்டிக்காக முதலிலேயே எடுத்துக் கொண்ட ரூபாய் 20-க்கு ஏதேனும் வட்டி செட்டிமார்கள் கொடுப்பார்களோ வென்றால் அவ்விஷயம் இன்னதென்பதே அவர்களுக்குத் தெரியாது. (இன்னும் வரும்.)

HAMMIR SINGH.

RANA OF MEWAR.

By Mr. K. P. SESHADRI AIYANGAR,
Teacher, Muthialpet High School, Madras.

ஹம்மீர் சிங்.

லக்ஷ்மண சிங்.

பதின்மூன்றும் நூற்றாண்டினிறுதியில் ஆப்கானியர்கள் இந்தியாவில் செழித்திருந்தார்கள். அவர்கள் ரஜபுதனத்திலுள்ள அநேக ராஜ்யங்களைக் கைப்பற்றிக்கொண்டனர். அது ஸமயம் சித்தூரும் அவர்களது ஆளுகையின் கீழ் அடங்கியது. சித்தூர் ரஜபுதனத்திற்கே நடுநாயகமாய் விளங்கியிருந்தது; வீரத்திலும், பிரதாபத்திலும் சிறந்த ஹிந்து மன்னர்

களால் நன்கு பரிபாலிக்கப்பட்டு வந்தது. அந்தச் சமயம் டில்லியில் பாதுஷாவாகவிருந்த அல்லாவுத்தீன் கில்ஜி சித்தூரை முற்றுகை போட்டுக் கொள்ளையடித்து, கொஞ்சமும் ஈவு இரக்கமில்லாமல் ஜனங்களைப் படுகொலை செய்து கவர்ந்துகொண்டான். சூரியனது புத்திரர்களான ரஜபுத்திரர்களிடமிருந்து அயலானிடம் சித்தூர் சென்றது, அதுதான் முதல் தடவை. அது தருணம் சித்தூரை யாண்டு வந்தவன் ரத்ன சிங் என்பவன். அவன் தன் புராதன ராஜ்யத்தை வேற்றரசனிடமிருந்து காக்க யுத்தம் புரிந்து வீர சுவர்க்கத்தை யடைந்தான். இறக்கும் சமயத்தில் தன் மைந்தர்களைப் பார்த்து, "அருங் கண்மணிகளே! நான் சொல்வதைக் கவனித்து நடவுங்கள். நமது ராஜ்யம் நம்மவர் கையில் மீளவும் வரும்வரை விடாது சண்டை புரியுங்கள்; முகம்மதியர்களை ராஜ்யத்தினின்றும் துரத்துங்கள். யுத்தத்தில் நம்மவர் இறப்பினும் சரியே! ரஜபுத்திரர்களான உங்களுடைய கடமை எதுவெனில், ராஜ்யத்தை மீண்டும் ஜயிக்கவேண்டும், நன்றாகப் பரிபாலிக்கவேண்டும். அப்பொழுதுதான் எனது உயிர் சாந்தத்தைப் பெறும். அதுவரை பெறாது. உங்களது தந்தையாகிய நான் இறக்குந் தருணத்திற் சொல்லியதை நீவிர் வேத வாக்காகக்கொண்டு எனது ஆவியைச் சாந்தியடையச் செய்யுங்கள்" என்றுரைத்துக் கண்மூடினான்.

அவனுக்குப் பிறகு அவனது புத்திரனான லக்ஷ்மண சிங் சிங்காதனமேறினான். அவன், தன் சகோதரனது மைந்தனான ஹரிசிங்குடன் சேர்ந்து அல்லாவுத்தீன் கில்ஜியை எதிர்த்துச் சண்டையில் இருவரும் உயிர் துறந்தனர். லக்ஷ்மணசிங்கின் இளைய புத்திரனான அஜைசிங்கும் தன் பிதாமகனது ஆக்ஞையை அனுசரித்து விரோதிகளுடன் யுத்தம் புரிந்தான்; அந்த யுத்தத்தில் தான் காயமுண்டான். வீரர்கள் அவன் காயமடைந்து விழுந்ததுகண்டு ஓடோடியும் வந்து அவனை செயில்வாரா மலைக்குத் தூக்கிக்கொண்டு போயினர். அங்கே ஜேய்தி என்னும் வைத்ய சிகாமணி ஒருவன் இருந்தான். அவன் அஜைசிங்கின் ரண காயத்தை முற்றும் ஆற்றினான். அந்தச் சமயம் முதல் ஜெய்தியின் சந்ததியார்கள் சித்தூர் மஹாராணாக்களால் மிகவும் மரியாதையாக உபசரிக்கப்பட்டு வந்தார்கள். மீவாருக்கு அஜை சிங் ராணாவானான். ஆனால், பெயருக்குமாத்திரந்தான். மீவார் என்பது விஸ்தாரமான ராஜ்யம். ஆனால், அஜைசிங்கின் ராஜ்யம் கெயில்வாரா மலையோரத்தில் இருக்கும் பிரதேசந்தான். மற்றைப் பாகமெல்லாம் பாதுஷாவினுடைய ஆதீனத்திலிருந்தது. தன் சேனைகளை அனுப்பி சுல்தானது பிரதேசங்களைக் கொள்ளை யடிக்கச் செய்தான். இவ்விதம் அஜைசிங் ஆப்கானியர்கள்மீது துவேஷம் பாராட்டி வந்தான்.

அல்லாவுத்தீன் கில்ஜி சித்தூரைப் பிடிக்கும்போதே, அதைத் தன் மூத்த குமாரனான கிஜிர்கான் (Kizir Khan) என்பவனுக்குக் கொடுத்துவிட்டான். அவனே பிறகு டில்லிக்கும் பாதுஷாவானான், அல்லாவுத்

தீன் கொஞ்சகாலங் கழித்து, சித்தூரைத் தன்னால் ஆளமுடியாதெனத் தெளிந்தான். பிறகு அதற்கு ஒரு ரஜபுத்திரனைத்தான் அமர்த்தியாள வேண்டுமென்று எண்ணித் தன் மூத்த குமாரனை கிஜிர்கானை டில்லிக்கு வந்துவிடும்படி ஏற்பாடு செய்தான். சோனிக்ருஹ மால் தேவராய் என்னும் ரஜபுத்திரனை நியமித்து அவ்விராஜயத்தை ஆளும்படித் திட்டம் செய்தான்.

ஹம்மீர் சிங்கின் திறமை.

அஜைசிங்கிற்கு இரண்டு புத்திரர்கள் உண்டு. மூத்தவன் ஸஜ்ஜன்சிங்; இளையவன் கிஷன்சிங். அஜைசிங்கின் மனதில் ஒரு விஷயம் எப்போதும் அவனை வாட்டிக்கொண்டே வந்தது. அவ்விஷயம் தன் ராஜ்யத்தைப் பற்றியதே. இழந்த ராஜ்யத்தை எப்படி மீண்டும் அடைவது என்னும் எண்ணமே அவன் மனதில் ஆழ்ந்திருந்தது. அவ்விதம் ஆழ்ந்து சிந்தித்துக்கொண்டிருக்குங் காலையில், காத்வார் முஞ்சபாளீச என்னும் ரஜபுத்திரன் அஜைசிங்கின் பிரதேசத்திற் புகுந்து கொள்ளை யடிக்கலானான். அந்தச் சமயம் ராணா மிகவும் நோயினால் அவஸ்தைப்பட்டுக்கொண்டிருந்தான். அவன் தன் இரு குமாரர்களை அழைப்பித்து முஞ்சனை, தண்டிக்கச் சொன்னான். ஆனால் அவர்கள் அவனைத் தண்டிக்கத்தக்க ஆற்றலையுடையரல்லராயினர். முஞ்சன் தன் காரியமான கொள்ளை யடித்தலை யாதொரு தடையுமின்றிச் சரிவரச் செய்யலானான். அது, ராணாவின் வியாதிக்கு நெருப்பில் நெய் வார்த்ததுபோல இன்னும் அதிகமான சக்தியைக் கொடுத்தது.

படுக்கையாகப் படுத்துவிட்டான் ராணா. தன் குமாரர்கள் க்ஷத்ரிய வம்சத்திற் பிறந்து பிரயோஜன மில்லாதிருப்பதைக் கண்டு பின்னும் வருத்தப்படலானான். மனத்துயரம் வியாதியை விருத்தியாக்கிக்கொண்டே வந்தது. அவன் நாளுக்குநாள் பலஹீனமடைந்தான். இவ்வித மிருக்குங்கால் ஒரு வீரன் மஹாராணாவை நெருங்கி, "ராணாஜி! உமது தமையனாரான ஹரிசிங்கின் புத்திரன் ஒருவனிருக்கிறான். அவன் தன் தந்தையைப் போல் பேரும் புகழும் எடுக்கக்கூடிய நிலைமையிலிருக்கிறான். சிங்கம் தன் சன்றுக்கு, யானையை மத்தகத்தில் பிளக்கக் கற்றுத் தரவேண்டுமோ? அவன்தான் இந்தச் சமயத்தில் தங்களது வியாதிக்குச் சஞ்சீவி. அவனைக் கொண்டுவந்தீர்களானால் உமது வியாதி விளக்கைக்கண்ட இருள்போல் மறைந்துவிடும். அவன் இப்பொழுது அன்லா என்ற கிராமத்தில் இருக்கிறான். அவனது பெயர் ஹம்மீர்சிங்; குலவிளக்காக விளங்குவான் என்பதிற் கொஞ்சமும் சந்தேகமில்லை. இழந்த ராஜ்யத்தை மீளவும் அடையக்கூடிய சாமர்த்தியம் வாய்ந்தவன் அவனே" என்று மிகவும் புகழ்ந்துரைத்தான். இதைக் கேட்கும்போதே அஜைசிங்கின் வியாதி ஒருவிதமாய்க் குணமடையும்போலிருந்தது. மிகவும் சந்தோஷ சித்தனாய் உடனே ஆட்களைப் போக்கித் தன் தமையன் தனயனைப் பல்லக்கிலேற்றிக்கொண்டுவர அவன் ஆஜ்ஞாபித்தான்.

முஞ்சனது மரணம்.

ராணாவின் எதிரில் பதின்மூன்று வயதுள்ள பாலகன் ஒருவன் வந்து நின்றான். ராணா அவன் நிற்கும் பான்மையையும், தேகக்கட்டின் வனப்பையும், மார்பு அகன்றிருத்தலையும், கண்கள் பிரகாசிப்பதையும் கண்டு மிகவும் சந்தோஷங் கொண்டான். மீவாரைச் சூழ்ந்துள்ள விரோதிகளை ஹதம் செய்யத்தக்கவன் இவனே யென உணர்ந்தான். இவனது தீரத்திற்கும் வீரத்திற்கும் இப்பொழுது ஒரு சமயம் வாய்த்திருக்கிறது முஞ்சனைத் தண்டித்து வரும்படி ராணா. ஹம்மீருக்குக் கட்டளை யிட்டான். ஹம்மீர் மிகவும் களிகூர்ந்து சில படைவீரர்களுடன் முஞ்சனை எதிர்க்கச் சென்றான். காத்வாரிலுள்ள சேமாரிச் என்னும் கிராமத்தில் முஞ்சன் தன் சுற்றத்தாரோடு பேசிக்கொண்டிருக்கிறானென்பதையறிந்து, நம்வீரன் நேராக அந்தவிடத்திற்குச் சென்றான் சில நாட்களுக்குள் கெயில்வாராக் கணவாய் மூலமாய் ஹம்மீர் குதிரைமீது ஆரோகணித்துப் பின்னே படைவீரர்கள் வரக் காணப்பட்டான். அவனது சேணத்தில் முஞ்சனது தலை கட்டித் தொங்கவிடப்பட்டிருந்தது. எவ்விதம் அவன் முஞ்சனது தலையைக் கொய்தானோ நமக்கே விளங்கவில்லை.

ஹம்மீர் மஹா ராணாவாதல்.

மிகவும் வணக்கமாக, வெற்றிபெற்ற முஞ்சன் தலையைத் தன் சிறிய தகப்பன் காலிணையின் கீழ்வைத்து, "எந்தையே! இது உமது விரோதியின் தலைதானா என்பதைச் சற்று பார்த்துச் சொல்லவும்" என்று வினயமாகக் கேட்டான். அஜைசிங்கின் ஆனந்தத்திற்கு எல்லையுமுண்டோ? சந்தோஷ வெள்ளம் இருகரையும் பெருகியோடியது அவனது இருதயத்தில். சிம்மாசனத்தினின்றும் இழிந்துத் தன் இரு கைகளையும் விரித்து, அப்படியே ஹம்மீரை வாரியெடுத்துப் பன்முறை முத்தமிட்டனன். அப்பொழுதும் அவனது ஆசை அடங்கினபாடில்லை. லக்ஷ்மணசிங் இறந்து போவதற்குமுன் ஹரிசிங்கின் புத்திரன்தான், அஜைசிங்கின் பின் பட்டம் பெறவேண்டுமென்று உத்தரவிட்டிருப்பதற்கிணங்க அஜைசிங், ஹம்மீர்தான் ராஜ்யத்தை மீட்கும் சக்தி வாய்ந்தவன், தீரன், பராக்கிரமவான் எனத் தெளிந்து, தனது வீரகட்கத்தைப் பரிசாகக் கொடுத்துச் சிம்மாசனத்தில் உட்காரவைத்து, முஞ்சனது தலையினின்றும் சொட்டிக்கொண்டிருந்த இரத்தத்தைத் தொட்டு, அவனது நெற்றியினடுவில் திலகமிட்டான். 'சித்தூரைத் துலுக்கர்களிடமிருந்து தர்மமாக அபகரிக்கும் ஆற்றலை யுடையவன் இவன்தான்; இவனேதான் சித்தூர் என்னும் புராதன ராஜ்யத்திற்குத் திலகமாய் விளங்கக்கூடியவன்' என்று சொல்லிக்கொண்டே நெற்றியிற் பொட்டிட்டான்.

அஜைசிங்கின் புத்திரர்கள்.

அஜைசிங்கின் இருபுத்திரர்கள் தம் தந்தையின் செயலைக் கண்டு மிகவும் கோபமுண்டவர்களாகி, அவ்விராஜ்யத்தைவிட்டு வெளிக் கிளம்பி

விட்டார்கள். அவர்கள் கெயில்வாராவைவிட்டுத் தக்ஷிணத்திற்குச் சென்றார்கள். அவர்களது சந்ததியார்கள் ஸடாரா, கோலாப்பூர், தஞ்சாவூர், நாகப்பூர் முதலிய ராஜ்யங்களை ஸ்தாபித்தார்கள்.

மஹாராஷ்டிர ராஜ்யத்தை ஸ்தாபித்த தைரிய சிங்கம் எனப் பேர்பெற்ற சிவாஜி என்னும் பராக்கிரமசாலி இந்த ஸஜ்ஜன் சிங்கின் பரம்பரையைச் சேர்ந்தவன்.*

ஹம்மீர் சிங்கின் பிறப்பு.

மீவாரில் ஹம்மீர் செய்த ஆச்சரிய தீரச் செய்கைகளைப்பற்றி விவரித்தோம். இனி அவனது பிறப்பு வளர்ப்பைப்பற்றிக் கொஞ்சம் ஆராய்வோம். அவன் தன் தந்தையான ஹரிசிங்கிடமிருந்து தைர்யத்தையும், பராக்கிரமத்தையும் பெற்றான்; தாயிடமிருந்து சாமர்த்தியத்தையும், சுதந்தரப் பிரியத்தையுங்கொண்டு அவதரித்தான்.

ஹரிசிங் ஒரு சமயத்தில் தன் மித்திரர்களுடன் வேட்டைக்குச் சென்றான். அந்த வேட்டையில் ஒரு காட்டுப் பன்றியைத் துரத்திக்கொண்டே போனான். அது திடீரென்று பக்கத்திலுள்ள சோளக் கொல்லையில் பதுங்கிக்கொண்டது. அது கண்டு ஹரிசிங் அதைவிட மனமில்லாமல் தானும் அந்தப் புலத்தில் குதிக்க விருந்தான். அப்பொழுது ஓரிளங்கன்னிகை எதிரில் வந்து, "ராஜனே, ஏழையின் பயிரைப் பாழ்செய்யவேண்டாம். கொஞ்ச நாழிகை பொறுத்தால் நான் அப்பன்றியை வெளியிலோட்டிவிடுகின்றேன்' என்று மெல்லிய குரலில் இனிமையாகச் சொன்னாள். அவன் அதற்குச் சரியென்றுடன்பட்டான். அவ்விளம்பெண் தன் வயோதிகத் தகப்பனாருக்குப் பதிலாக அப்புலத்திற்குக் காவலிருந்தாள். அருகிலிருந்த 10-அல்லது 12-அடி உயரமுள்ள சோளத்தட்டொன்றைப்பிடுங்கி அதைக் கூராக்கி, குருவியோட்டுவதற்காக ஏற்படுத்தியிருக்கும் பரண்மேலேறி அப்பன்றியைக் குத்தி வெளிப்படுத்தினாள். தானும் அந்தச் சமயமே வெளிச்சென்றாள். அந்தப் பிரதேசத்தில் சாதாரணமாக ஸ்த்ரீகள் சாமார்த்தியமும் தீரமும் பொருந்தி யிருந்தார்களேனும், இத்தருணியின் சாகசம் அவர்களனைவர்க்கும் அதியற்புதத்தை விளைவித்தது. அருகேயிருந்த ஓர் ஓடையில் அவர்கள் வேட்டையாடின மிருகத்தைப் பதப்படுத்தி உண்ண ஆரம்பித்தார்கள். எல்லாரும் போஜனமுண்ணும்போது, ஒவ்வொருவன் ஒவ்வொரு மாதிரி அப்பொன்னங்கையின் கைத்திறத்தைப்பற்றியும் தீரமொழிகளைப்பற்றியும் புகழ்ந்துகொண்டாடினான். திடீரென்று ஒரு களிமண் உருண்டை வெகு வேகமாகப் பாய்ந்துவந்து ஹரிசிங்கின் குதிரையின் காலில் தாக்கியது. அது எந்தப் பக்கத்திலிருந்து வந்ததென்று உற்றுப் பார்க்கையில், அதே

* அஜைசிங், ஸஜ்ஜன்சிங், டுலிப்சிங், ஷியோஜி, பூராஜீ, தேவராஜ், உசார்சேன், மாஹராஜி, கெய்லூஜி, ஜான்மோஜி, சட்டூஜி, சாம்பாஜி, சிவாஜி என்பது வம்சபரம்பரை.

கன்னிகையிடமிருந்துதான் என்று தெரியவந்தது. அந்தச் சுந்தரவனிதை பரண்மீதிலிருந்தபடியே பார்த்திருந்தாளாகையால், தான் செய்தது தப்பென்றுன்னி, அங்கிருந்தும் கீழிறங்கிக் குதிரை யிருக்குமிடத்தை யணுகி, ஹரிசிங்கைத் தன்னை க்ஷமிக்கும்படி வேண்டினாள்; அவனும் மன்னித்தான். அவளும் திரும்பித்தன் காரியத்தில் கண்ணாயிருந்தாள். ஆகாயத்தில் பறக்கும் குருவிகள் சோளத்தைத் தின்னாமல் காவல் காப்பது தான் அவள் வேலை. அவர்கள் அரண்மனைக்குச்செல்ல மீளுங்கால், திரும்பவும் அந்நங்கையர்க்கரசியைக் கண்டார்கள். அப்பொழுது அவள் தனது தலையில் பாற்குடத்தை வைத்துக்கொண்டிருந்தாள். தன் இருபக்கத்திலும் இரண்டு வெண்ணிறப்பசுக்களை ஓட்டிக்கொண்டு சென்றுகொண்டிருந்தாள். அப்பொழுது ஹரிசிங் விநோதார்த்தமாய் அவளைத் தாக்கிப் பாற்குடத்தைக் கீழே தள்ளவேண்டுமென்றெண்ணினான். அவனது ஸ்நேகிதன் இதைச் செய்ய முன்வந்தான். அவன் வேகமாகத் தன்னை அணுகுவதைக் கண்டுகொண்ட சமர்த்தை, அவனைக் குதிரையின்மீதிருந்துக் கீழே தள்ளிவிட்டாள். அவன் அவமானங்கொண்டான். நின்றிருந்தவர்களெல்லாரும் அவனைப் பரிகசிக்கத் தொடங்கினர். அங்கு நில்லாது அக்காரிகை விரைந்து செல்லலானாள்.

அப்பாவையைக் கண்டதுமுதல், ஹரிசிங்கிற்கு மனம் நிம்மதியாயில்லை. அவளது மதுரமான வார்த்தையும், காம்பீர்யப் பார்வையும், சாகஸமும், சாமர்த்தியமும் அவனை அவள் பக்கம் இழுத்துச் சென்றன. சுற்றுப்பக்கத்தில் அவளைப்பற்றி விசாரிக்க, அவள் ஓர் எளிய சந்தனை வகுப்பைச் சேர்ந்த ரஜபுத்திரியென்று தெரிந்தது. அவன் இரவு முழுவதும் தூக்கமின்றி ஏக்கத்தோடு காலங்கழித்தான். மறுநாள் உதயத்திற்கு முன்னமேயே எழுந்திருந்து துரகாரூடனாய் விடியற்காலைக்குள்ளாக அந்தப்பிரதேசத்துக்கு வந்து, அவளது தகப்பனைக் கூட்டிவர ஆளனுப்பினான். அவளது தந்தை கொஞ்சமேனும் பயமின்றித் தாராளமாக வந்து ஹரிசிங்கன் பக்கத்தில் உட்கார்ந்துகொண்டான். ஹரிசிங்கின் தோழர்களெல்லாம் ஆச்சரியங்கொண்டார்கள். அவர்களது ஆச்சரியம், ஹரிசிங் அவனது புத்திரியைத் தனக்கு விவாகம் செய்து கொடுக்கவேண்டுமென்று கேட்கும்போது அக்கிழவன் மறுதளித்ததனால் பின்னும் அதிகரித்தது. அந்த வயோதிகன் தன் மனைவியிடம் இந்தச் சமாசாரத்தைச் சொல்ல, இவள் தன்பெண்ணை ரஜபுத்திரனுக்குக் கொடுக்கப் பூர்ணமாக மனங்கொண்டிருப்பதாகச் சொன்னாள். அம்முதியோன் விரைந்து ஹரிசிங்கிடம் சென்று, பெண்ணைக்கொடுக்கத் தனக்கு ஸம்மதந்தான் என்று சொன்னான். பிறகு இருவருக்கும் விவாகம் நடந்தேறியது. இந்த ஹரிசிங்குக்கும் சந்தனாராஜ புத்திரிக்குந்தான் ஹம்மீர்சிங் பிறந்தான். இவ்விரு சிங்கங்களுக்குப் பிறந்தது கோளரியாக விராதுமற்றெதாகும்?

மஹாராணா லக்ஷ்மணசிங்கும், ஹரிசிங்கும் சமர் பூமியில் இறந்து வீர ஸ்வர்க்கமடைந்தபிறகு, சந்தனா ராணி தன் காலத்தை எங்கேனும் கிராமத்தில் கழிக்க எண்ணினாள். அவ்விதமிருந்தால் தன்குழந்தை பிழைக்கலாம் என்றும் நினைத்தாள். இல்லாவிட்டால் பகைவர்கள் இவன் ராஜ புத்திரன் என்று கொன்றுவிடுவார்கள் என்ற பயம் அவளிடம் குடிகொண்டிருந்தது. அவனுக்கு 13-ம் வயதும் வந்தது. சிறிய தகப்பனிடமிருந்து ஆட்களும் அவனை அழைக்கவந்தார்கள். பிறகு அவனது அற்புதச் செய்கைகள் அநேகம். அவைகளை நம் வாசகர்கள் முன்னமேயே அறிந்திருக்கிறார்கள்.

என்றைத்தினம் முடி சூட்டப்பெற்றானோ, அன்றைத்தினம் அவன் தனது காரியம் இவ்வளவு என்று உணர்ந்தான். தன் வீரத்தைக்காட்ட வேண்டும்; இழந்த ராஜ்யத்தைக் கைப்பற்றவேண்டும் என்று பிரதிக்ஞை செய்துகொண்டான். பளீசாவின் ராஜதானியான பாச்சாலியோவைப் பிடித்தான்.

அஜைசிங், மீவாரின் அதிர்ஷ்டம் ஹம்மீர் சிங்கினிடந்தானிருக்கிறது என்று நிச்சயித்துக்கொண்டான். தனக்கு இனி அதைப்பற்றிக் கவலை வேண்டுவதின்று; இனிச் சந்தோஷமெய்தவேண்டும் என்று எண்ணினான். அஜைசிங் அவ்விதம் எண்ணி சில நாட்களுக்குள் இம்மண்ணுலகை நீத்து விண்ணுலக மடைந்தான். ஹம்மீர்சிங் அன்றைத்தினம் உறையினின்று வெளியிலெடுத்த கத்தியை, வேற்றரசர்களைக் கொல்வதிலேயே உபயோகித்தான்.

ஹம்மீரிடம் எதிரிகளை எதிர்க்கத்தக்க ஆயுதங்களும், வீரர்களும் இல்லாததனால், அவர்களுக்கு எவ்விதத்திலாவது கெடுதியை உண்டாக்க வேண்டுமென்று எண்ணினான். தோப்புகளையும், பயிர் நிலங்களையும், பாதைகளையும் பாழாக்கினான். பச்சைப்பசேலெனவிருந்த விளை நிலங்களெல்லாம் பார்ப்பதற்கு அருவருப்பைத்தரத்தக்கச் சேறாகவும், மேடுபள்ளமாகவு மாக்கப்பட்டன. எங்கணும் வெட்டவெளியாயிருந்தது. பாலைவனம் என்றே சொல்லவேண்டும். அங்கிருக்கும் ஜனங்களுக்கு ஆகாரப் பொருள்கள் அகப்படுவது துர்லபமாயிற்று. மலைகளிலுள்ள கணவாய்களும் அடைத்துவிடப்பட்டன. மீவார் ராஜ்யம் முழுவதும் மால்தேவனுக்கு ஜாகீராக அளிக்கப்பட்டிருந்தது. அதன் ராஜதானியும், அதிலிருக்கும் முஸல்மன் சேனையும் தவிர மற்றதெல்லாம் பாலைவனமாக்கப்பட்டது. ஹம்மீர் செய்யும் அடாத செய்கைகளுக்கு மிகவும் அஞ்சி, அவன் உயிருடனிருக்கும் பரியந்தம் அவ்விராஜ்யத்தைத் தான் நேரில் ஆளப்பயந்து, ஒரு ஆளை நியமித்துவிட்டு, தன் பிதுரார்ஜிதமான ஜாலர் என்னும் இடத்துக்குச் சென்றான்; மால்தேவன் தன் மந்திரியை அந்தப் பிரதேசத்துக்குப் பிரதிநிதியாக்கினான். ஹம்மீர் என்றால் அவ்வளவு பயம் அவனுக்கு.

ஹம்மீர்சிங் சித்தூரைப் பன்முறை எதிர்த்தான். எவ்வளவு தீரமும், வீரமும் பொருந்திய செய்கைகள் செய்தபோதிலும், அந்தப்புராதன ராஜ்யத்தைக் கைப்பற்ற அசக்தனானான். அவனுக்குத் தன்னிடமிருந்த தளவாடங்கள் யாவும் கொஞ்சம் கொஞ்சமாகக் குறைந்துவிட்டன. அவனுடன் வந்த வீரர்கள் தங்களைக் காப்பாற்றிக்கொள்ள வகையறியாது, அவனை விட்டுச் சென்றனர். தன்னிடம் பூர்ண நம்பிக்கையும், நன்றியும், சாமர்த்தியமும் பொருந்திய சில வீரர்களுடன் ஹம்மீர்சிங், தற்சமயம் சித்தூரைக் கைப்பற்றுவதினின்றும் விலகி, துவாரகைக்கு யாத்திரையாகச் சென்றான். அங்கே, சாரணர்கள் பிரதேசமாகிய சாத் என்னும் கிராமத்தைக் கண்டு, அதில் அன்றைத்தினம் தங்கினான். அந்தக்கிராமத்தில் பாருதி என்ற சாரண ஸ்த்ரீ இருந்தாள். அவளைத் தேவியின் அவதாரமென்றே அவ்வூரிலுள்ளவர்கள் எண்ணி, அவளிடம் பக்தியாக இருந்து வந்தார்கள். அத்தேவதாம்சம் பொருந்திய ஸ்த்ரீ, ஒவ்வொருவனுடைய பிற்கால நிலைமையைப்பற்றியும் முன்னமேயே எடுத்துச் சொல்லும் சக்தி பெற்றவள். இச்சமாசாரங்களைக் கேள்விப்படவே, ஹம்மீர்சிங்கும் அவ்வம்மையைத்தேடிச்சென்றான். மஹாராணா மிக்கக் கவலையுடனும், மனவருத்தத்துடனுமிருப்பதைப்பார்த்து "ஹே! வீராதிவீர! தற்சமயம் கெயில்வாராவிற்குத் திரும்பிச்செல். சித்தூரைக் கட்டாயம் அடைவாய்; கீர்த்தி பெறுவாய்; குலதிலகமாய் விளங்குவாய்; பித்ருவாக்கிய பரிபாலனஞ் செய்தவனாவாய்; உனக்குப் பெண்கொடுக்கவருவாரை மறுதளிக்காதே; அப்பெண்ணைக்கொள்ள மறுக்காதே. வலியவரும் சீதேவியைக் காலால் உதைத்துத் தள்ளாதே; ஹே! ரஜபுத்ர, அப்பெண்ணின் மூலமாய்த்தான் நீ உன் புராதன ராஜ்யத்தைப்பெறப்போகின்றாய். அச்சீதேவியால்தான் பூதேவி உனக்குக் கிடைக்கப்போகின்றாள். ஹே! வீரசிங்கமே! நான் சொல்லியவிதம் நீ நட; பிறகு அநுபவத்தில் காணுவாய்" என்றுரைத்தாள் தேவி.

"என்னம்மையே! எளிதில் அடைவாய் என்று திருவாக்களித்துவிட்டீரே! என்னிடமோ ஆயுதங்களில்லை; சேனைகளில்லை; குதிரைகளுமில்லை; அதற்கு வேண்டிய திரவியமும் கிடையாதே; இப்படியிருக்க, என் புராதன ராஜ்யத்தை எப்படி அடைவேன்?" என்றான் ஹம்மீர்.

"இளஞ்சிங்கமே! குதிரைகளைப்பற்றிக் கொஞ்சமும் உனக்குச் சிந்தனை வேண்டுவதில்லை. எனது குமாரன் பாரு யிருக்கிறான். அவன் கெயில்வாராவிற்கு ஒரு பெரிய குதிரைக்கூட்டத்துடன் வருவான். அவனிடமிருந்து உனக்கு வேண்டிய குதிரைகளைப் பெற்று யுத்தம்புரி. அவற்றின் விலையைப்பற்றியும், பணத்தைப் பற்றியும், கிஞ்சித்தும் எண்ணமிடாதே. உனக்குப் பணம் எப்பொழுது அதிகமாகக் கிடைக்குமோ, அப்பொழுது கொடுப்பாயாக" என்றாள்.

தேவியின் அம்சம்பெற்ற அவ்வம்மை சொல்லும் ஒவ்வொரு வார்த்தையும் ஹம்மீரது மனத்தில் பசுமரத்தாணிபோல் பதிந்துவிடவே, அதேபிரகாரம் நடக்கவாரம்பித்தான்; கெயில்வாராவிற்குப்போகத் திரும்பினான். பாருதி தன் மகனிடம் 500 குதிரைகளைக் கெயில்வாராவிற்கு ஓட்டிச்செல்லும்படிக் கட்டளையிட்டாள். அவளது மகன் ஒரு பெரிய குதிரை வர்த்தகன். அவன் தன்னிடமில்லாத குதிரைகளுக்குவாங்கி, 500 ஆனதும், கெயில்வாராவிற்கு ஓட்டிச் சென்றான். ஹம்மீர் கெயில்வாராவிற்கு வந்து சேர்ந்த நாள்முதல், குதிரைக்காக எதிர் பார்த்திருந்தான்; பாருதியின் வார்த்தையில் பூர்ண நம்பிக்கையைக் கொண்டிருந்தான். குதிரைகளும் வந்து சேர்ந்தன. மிகுந்த சந்தோஷசித்தனாய்ப் பாருதியின் மகனை வந்தனோபசாரங்களினால் வரவேற்றான்; அவனுக்குத் தன்னிடத்தில் பெரிய உத்தியோகத்தை அளித்தான்; இதுவுமல்லாமல், அந்திரி முதலிய சில கிராமங்களை ஜாகீராகக் கொடுத்தான். இன்னமும், அவர்களது வம்சத்தினர் அந்த ஜாகீரைப் பெற்று அநுபவித்து வருகின்றனர்.

ஹம்மீரின் விவாகம்.

மால் தேவனுக்கு ஒரு புத்திரி உண்டு. அவளை யாருக்கு விவாகஞ் செய்து கொடுப்பது என்று அவன் யோசித்துக்கொண்டிருந்தான். அவனது மந்திரி தன் அபிப்பிராயத்தை வெளியிட்டான்; "பிரபோ! டில்லி சுல்தான் தங்களுக்கு மீவார் முழுவதும் ஜாகீராகவிட்டிருக்கிறான். இருந்தபோதிலும், அதிலிருந்து ஒரு கரண்டி தானியமும், ஹம்மீர்சிங் இருக்கும் பரியந்தம் கைக்குவராது. இது திண்ணம். ஆகவே, தாங்கள் தங்களது திவ்வியபுத்திரியை அவனுக்கு மனைவியாக்கிவிட்டால் நிரம்பவும் நல்லது. ஸ்த்ரீ தனமாகச் சில உபயோகமற்றப் பிரதேசங்களைக் கொடுத்துவிடலாம். மற்ற செழுமையும் வேளாண்மையுமுள்ள பிரதேசத்தை நாம் லாபகரமாக ஆண்டு நன்மையடையலாம்" என்று மந்திரி மால்தேவனுக்குப் புத்திமதி சொன்னான். அதற்கு அவன், "இதுவொரு நல்லயோசனைதான்" என்று முழு மனதுடன் சம்மதித்துக்கொண்டான்.

தன் மந்திரியான மேடாஜுஹாத் என்பவனையும், சம்ஸ்தான புரோகிதனான ஜயபாலனையும் இன்னும் ஒரு சேனையையும் சேர்த்துப் பலவரிசைகளுடன் கெயில்வாராவிற்கு மால்தேவன் அனுப்பினான். ஆரவல்லி மலையோரத்தை யணுகியதும், அங்கிருந்து செய்தி சொல்லியனுப்பினர். அச்செய்தி என்னவெனில், மால்தேவன் மிகுந்த மரியாதையுடன் விண்ணப்பம் செய்து கொள்வது யாதெனில், "உமது தகப்பனும், பிதாமகனும், முகம்மதியர்களால் சமரபூமியில் வீழ்த்தப்பட்டார்களேயன்றி, மால்தேவனால் அல்ல. உமது ராஜ்யமும் மால்தேவனது ஆளுகைக் குட்பட்டது. ஆனாலும், அவனது புத்திரியை விவாகம் செய்து கொள்வதல்லாமலும், ஸ்திரீதனமாகச் சில பிரகேசங்களையும் பெற்றுக்கொள்ள வேண்

டும்" என்று விண்ணப்பித்துக் கொண்டார்கள். ஹம்மீரது பிரதானிகள் இஃது ஒரு தந்திரம் என்று எண்ணினார்கள். சித்தூரைக் கைப்பற்றுவதில் எவ்வளவு பெரிய அபாயங்கள் வருவதாக நேருகின்றனவோ, அவைகளையெல்லாம் நிவர்த்தித்து வந்தான். ராஜபுத்திரன் எந்தச் சமயத்திலும், எச்சந்தர்ப்பத்திலும் அபாயத்தை எதிர்க்கவேண்டி வருமோ என்று கவலைப்படக்கூடாது. ஒரு சமயம் தன் நாடு நகரத்தை விட்டும், பந்து மித்திரரை விட்டும், படுகாயமும் படவேண்டி நேரும்; அதற்கும் தயாராயிருக்க வேண்டும். மறுநிமிஷம் யுத்தத்தில் வெற்றி மாலைதரித்து யானைமீது பவனி வந்து சிங்காதனத்தில் அமர்ந்தும் குடம் தரிக்கவேண்டி வரினும் வரும்; அதற்கும் சித்தமாயிருக்க வேண்டுமென்பதை எண்ணித் திடப்படுத்திக் கொண்டான் ஹம்மீர். பாருதியின் சோதிடம் கவனத்திற்கு வந்தது. அதை உணர்ந்து அவ்வதுவை நிராகரிக்காமல் ஒத்துக்கொண்டான். புரோகிதனும் மேடாவும் மிகவும் மரியாதையுடன் ஹம்மீரை காந்தர்வ விவாகத்துக்கு வரும்படி வேண்டினார்கள். ஹம்மீரும் தன் பரிவாரத்துடன் தூரகாரூடனாய்ச் சித்தூரை ஜயித்து விட்டதாக எண்ணிச்சந்தோஷமாக ஜாவாருக்குப் புறப்பட்டான். அங்கு விவாக மகோற்சவம் செவ்வனே நடந்தேறியது. மாக்ர, ஷேர்னல்லா, கிர்வா, காத்வார், பாரத், ஷியால்பட், மெர்வாரா, காத் என்ற எட்டு பரகாணாக்களை ஸ்திரீதனமாகக் கொடுத்தான். ஹம்மீர்சிங் தன் பத்தினியான ஸாங்கிரியுடன் தன் ராஜ்யத்திற்குத் தம்பதி சமேதமாக வந்து, அரண்மனையில் நுழைந்து, பூவும் மணமும் போலவும், நகமும் சதையும் போலவும், மனமொருமித்துச் சந்தோஷமாக வாழ்ந்து வரலானார்கள்.

ஸாங்கிரி மஹாராணி புத்தியுள்ளவள்; க்ஷத்ரிய ஸ்திரீகளுக்கிருக்க வேண்டிய ரோஷமுங் கொண்டவள்; தன் வாழ்க்கைக்கு வேண்டிய விதங்களை நன்கு அறிந்தவள்; தன் பிற்கால வாழ்க்கைக்கு உரிய நாதன் தன் பிராணபந்துவே என்பதை நன்கு தெரிந்தவள். ஒரு பெண்ணுக்கு மணமாகாத வரையில் தந்தை ரக்ஷகன் என்றும், விவாகமான பின் கணவனே ரக்ஷகன் என்றும், பிறகு புத்திரன் ரக்ஷகஸ்தானமென்றும் சாஸ்திரங்களிற் கூறப்பட்டிருக்கின்றது. அதன் பிரகாரம் இப்பொழுது ஸாங்கிரி தனக்கு ஹம்மீர் தான் ரக்ஷகஸ்தானம் என்பதை உணர்ந்தாள்; இனி, தன் நாதனுடன் சுகத்திலும் துக்கத்திலும் ஒன்றாயிருந்து நடக்க வேண்டுமென்பதை அறிந்தாள்; கணவனது மனம் கோணாதபடி நடந்துகொள்ள வேண்டியது கற்புடைய நங்கையர் பொறுப்பாதலால், ஹம்மீர் இஷ்டப்படி நடக்க வேண்டியவளாய் விட்டாள். இருவரும் சந்தோஷமாயிருக்கும் சமயத்தில், ஸாங்கிரி தன் நாதனுடன் பின்வரும் விதம் சம்பாஷிக்கலானாள்:—

ஸாங்:—நாதா! தங்களது விருப்பம் எவ்விதமோ அவ்விதமே தான் என் விருப்பமும். தமக்கு எது வெறுப்போ அதுவே எனக்கும் வெறுப்பு.

ஹம்மீர்:—அது தான் நன்மங்கையர் லக்ஷணம். அவ்வித நற்குணம் உன்னிடம் அமைந்திருப்பது என் பாக்கியமே.

ஸாங்:—தாம் மீண்டும் சித்தூரையடைந்து, ஆள வேண்டுமென்று அவாவுறும், பக்ஷத்தில், என்னால் ஆகவேண்டியவற்றிற்குத் தெரிவிப்பின் செய்யச் சித்தமாயிருக்கிறேன்.

ஹம்:—என்ன! ஸாங்கிரி, வாஸ்தவத்திலா சொல்லுகிறாய்?

ஸாங்:—இதில் பொய்யுண்டோ? இல்லை, வாஸ்தவமாகத் தான். விளையாட்டல்ல.

ஹம்:—தன் தந்தைக்கு எதிராகப் புத்திரி நடந்துகொள்வதோ? இவ்விதம் எங்கேனும் நடக்குமோ?

ஸாங்:—நடக்காமலென்ன! நாதனது மனதைத் திருப்தி செய்வதல்லவோ நங்கையர் நெறி!

ஹம்:—கண்ணே! எனக்கு எவ்விதம் சகாயம் செய்யப்போகிறாய்? சொல், பார்ப்போம்.

ஸாங்:—பிராணேசா! என் தந்தையிடம் மேடா மோஜிராம் என்னும் மந்திரியிருக்கிறார். அவர் நிரம்பவும் சாமர்த்தியசாலி; யோக்யர்; ஸத்தியம் பிறழாதவர். அவரைக் கேட்டால் எல்லாவற்றையும் விவரமாகச் சொல்வார். என்ன! உங்களது மூதாதையரின் ராஜ்யத்தை என் தந்தை வன் ஆள வேண்டும், சொத்துக்காரர் நீங்களிருக்க.

என்று சொல்வதைக்கேட்டு மிகவும் உள்ளம் பூரித்தவனாகித் தன் பிரிய பத்தினியைப் புகழ்ந்தான். மறுநாள் உதயம் மால்தேவனிடம் சென்று, "பெரியோய், தாங்கள் எனக்கு ஸ்த்ரீதனமாக அதிகமான பிரதேசங்களைக் கொடுத்திருக்கிறீர்கள். அப்பிரதேசங்களைச் சரியாக ஆண்டு வர யோக்யதையுள்ளவன் என்னிடமில்லை. ஆகையினால் தாங்கள் தங்களிடமிருக்கும் மேதா மோஜிராம் என்னும் நன்மந்திரியை எனது ஸேவையிலிருக்கும்படி அனுமதி தரவேண்டும்" என்று வணக்கமாகக் கேட்டான். அதற்கு மால்தேவன் 'சரி இதுவும் நமக்கு நல்ல காலமே. நம்முடைய ஆள் ஒருவன் அந்தப் பிரதேசத்தில் இருக்க வேண்டுவது அவசியந்தான். விரோதமுண்டாகாமலிருக்கும். பலவிதத்திலும் நன்மையே' என்று ஆனந்தங்கொண்டு, ஹம்மீர்சிங்கின் விநயத்தைப்பற்றிப் புகழ்ந்துகொண்டான். தன் பிரதான மந்திரியான மேதா மோஜிராமை அழைத்துவரச் செய்து அவனது வலது கரத்தைப்பிடித்து ஹம்மீரின் வலது கையில் வைத்து, "இது வரையில் என்சொல்லை மீறாது நடந்து வந்தவிதமே இனி இவரிடம் நடக்கவேண்டும். நீ எனக்கு ஊழியனல்ல. நான் உனக்கு யஜமானனல்ல. இவருக்கு நீ ஊழியன்; இவரே உன் யஜமானன். அவரது சுகத்தை நாடி உழைக்க வேண்டும்" என்று சொன்னான். மேதா மோஜிராம் மிகுந்த

சந்தோஷமுடையவனாய் 'அவ்விதமே சித்தப்படி நடக்கக் காத்துக்கொண்டிருக்கிறேன்' என்று பதிலுரைத்து ராணாவுடன் சென்றான். வழியில் மோஜிராம் ராணாவைப் பார்த்து, "ராணாஜீ! இந்தச்சமயம் மால்தேவனிடமிருந்து என்னை வேண்டியதன் காரணமென்னை. அதைத் தெரிவிக்கும்படி பிரார்த்திக்கிறேன். எனது முழுநம்பிக்கையைத் தங்கள் மீதே வைத்திருக்கிறேன். என்னிடமிருந்து எவற்றை அறிந்துகொள்ள வேண்டுமென்று எண்ணுகின்றீரோ, அவற்றையெல்லாம் வெகு சீக்கிரத்தில் அறிந்து கொள்வீர்கள்" என்று சொல்லும்போதே, ராணா தன் பிரதிக்ஞையையும், சித்தூரைத் தான் மீண்டும் பெற்று ராஜ்யபாரம் வகிக்க வேண்டுமென்பதையும், அதற்கு என்ன செய்ய வேண்டுமோ அதை யோசித்துச் செய்ய வேண்டுமென்பதையும் மேதா மோஜீராமுக்கு வெளியிட்டான். இதைக்கேட்டது தான் தாமதம். அப்பொழுது நடுநிசியாயிருந்த போதிலும், சித்தூர்க் கோட்டையை நோக்கி நடக்கலானார்கள்.

இவர்கள் பின்னால் சிறிய சேனையுமொன்று வந்து கொண்டிருந்தது. சித்தூர் கோட்டையை யணுகினார்கள். கோட்டை வாயில் கதவு தாளிடப்பட்டிருந்தது. வாயில் காப்போரைக் கூப்பிட்டு மேதா மோஜிராம், "கதவைத் திறவுங்கள், நான் மேதாமோஜிராம் வந்துள்ளேன். சீக்கிரமாகத் திறவுங்கள்" என்றான். அவனது குரலால் அவனை நிச்சயித்துத் தெளிந்து கோட்டைக் கதவைத் திறந்தார்கள். அங்கே அடிக்கடி மோஜிராம் செல்வதுண்டு. அதிலுள்ள துலுக்கச் சேனைகளுக்குச் சம்பளம் கொடுக்கும் உத்யோகம் இவனிடமிருந்தது. ஆகவே, தடை சொல்லாமல் அந்நள்ளிருளில் கதவைத்திறந்து உள்நுழையவிட்டார்கள். ராணாவும் தன் சேனையுடன் கோட்டையினுள் புகுந்தான். துலுக்கவீரர்கள் தங்கள் கை கால்கள் கட்டப்பட்டுக் கோட்டை மதிற் சுவர்மீதிருந்தபடியே வெளியில் தள்ளப்பட்டார்கள். மால்தேவனின் கொடியைக் கிழித்தெறிந்து, தன் சூரியக்கொடியை ஆகாயத்திற் பறக்கும்படி ஹம்மீர்சிங் நாட்டினான்.

தன் மோஜீராமுடன் பேசிக்கொண்டிருந்த ஹம்மீர்சிங் இரவாகியும் வரவில்லையேயென்று எதிர் பார்த்துக்கொண்டிருந்தான். ஒருநாளும் கழிந்தது. ஹம்மீர்சிங் சித்தூர்ப் பக்கம் போயிருக்கிறான் எனக் கேள்விப்பட அவனுக்குச் சந்தேகமுண்டாயிற்று. தன் குமாரர்களான ஜேய்சா, கிருதிபால், பான்பிர், ராந்திர், கேய்வான் என்னும் ஐவரையும் அழைத்துக்கொண்டு பெரிய சேனையுடன் சித்தூரை நோக்கிப் புறப்படலானான்.

சூரியப் பிரகாசத்தில் சூரியக்கொடி ஆகாயத்திற் பறந்துகொண்டிருந்தது. மலையிலும், காடுகளிலும் துலுக்கர்களது ஆட்சியில் இருக்கவொண்ணாதென்று கருதி வசித்து வந்த ரஜபுத்திரர்கள் சித்தூர் மீளவும் க்ஷத்ரியன் கையில் வந்துவிட்டதெனவறிந்து, புற்றிலிருந்து ஈசல் கிளம்புவதே போல் கூட்டங் கூட்டமாகச் சித்தூரை நாடி வந்தார்கள். கோட்டையைச்

சுற்றிலும் ரஜபுத்திரர்கள் தங்கி யிருந்தார்கள். பிரஜைகள் யாவரும் சந்தோஷ சாகரத்தில் ஆழ்ந்தார்கள். வீராவேசங்கொண்டு மால்தேவனை விட்டோமா என்றார்கள். 'ஹம்மீர் மஹாராணா வாழ்க! வெகு காலம் வாழ்க!' என்று ஆரவாரித்தார்கள். அன்றைத்தினம் சித்தூர் சமுத்திரம் போல் பெருங் கோஷமாயிருந்தது.

மால்தேவன் தன் ஐந்து குமாரர்களுடன் சித்தூரை எதிர்த்து வருவதை ஹம்மீர் அறிந்துகொண்டு, யுத்தத்திற்குத் தயாராயிருந்தான். துப்பாக்கிப் பிரயோகம் ஏராளமாய் நடந்தது. மால்தேவன் தோல்வியடைந்து ஜாலாருக்குச் சென்றான்? சேனை, ஆயுதம் முதலியவைகளைப் பலப்படுத்திக்கொண்டு இரண்டாம் தடவை படை யெடுத்தான்; அப்பொழுதும் அபஜயமே யடைந்தான். மால்தேவன் தன்னால் ஹம்மீர்சிங்குடன் சண்டை புரிய முடியாது என்று தெரிந்துகொண்டான். அந்தச் சமயம் டில்லியில் பாதுஷாவாயிருந்த முகம்மது துக்லக் என்பவனிடம் சென்று முறையிட்டான். சுல்தான் அவனுக்குச் சகாயம் செய்து ராஜ்யத்தை மீட்டுக் கொடுப்பதாக வாக்குறுதி செய்தான்.

முகம்மது துக்லக் ஒரு பெரிய சேனையுடன் கிழக்கு முகமாய் மீவாருக்கு வரலானான். எந்தப் பக்கம் பந்தோபஸ்து செய்யப்படாமலிருந்ததோ அந்தப் பக்கமாய்ப் புகுந்துவந்தான். அந்த சுல்தான் மிகவும் சமர்த்தன்; அறிவாளி. அவனைச் சிலர், பித்தனென்றும், அறிவிலி யென்றும் சொல்லுவர். அது வாஸ்தவமன்று, அவனைப் படித்த மேதாவி யென்றே சொல்லவேண்டும்.

அவன் படித்தவனாயிருந்தபோதிலும், அவன் செய்த செய்கைகள் வியப்பைத் தரத்தக்கனவா யிருந்தன. முகம்மது, தனது பிரதான பட்டணம், தன் இராஜ்யத்துக்கு மத்தியில் இருக்கவேண்டும்; அப்படி யிருந்தால் தான் எல்லாம் சரிவரச் செய்யமுடியுமெனவறிந்து, தேவகிரியைத் தலை நகராக்கினான். தேவகிரி தேக சௌக்கியத்திற்கு ஏற்றதன்று என்று அறிந்து, மறுபடியும் டில்லிக்கு மாற்றிவிட்டான். ஒரு காலத்தில் பணத்திற்குப் பெருமுடை ஏற்படவே, தோல் நாணயங்களை இவன் ஏற்படுத்தினான். நாம் தினமும் தோல் நாணயங்களுக்குப் பதிலாகக் காகித நாணயங்களை தான் பழக்கம் செய்து வருகிறோம். தோல் நாணயங்களை ஏற்படுத்தியதனால் முகம்மது துக்லக் மூடனாகிவிடுவானோ? துணி கட்டாத ஊரில் ஒருவன் துணி யுடுத்திக்கொண்டிருந்தால் ஏளனம் செய்ய மாட்டார்களா? அது போல், அந்தக் காலத்தில் இல்லாத நூதன வழக்கத்தை அனுசரித்ததனால் அவனது அபாரபுத்தியை மெச்சுவோரற்றுப்போயினர். இந்தக் காலத்தில் அவன் செய்து வந்ததெல்லாம் சர்வ சாதாரணமாக நடப்பதைக் காணும் நாம் அவனது செய்கைக்கு மெச்சுகின்றோம்.

ஹம்மீர்சிங் டில்லி பாதுஷா தன்னை எதிர்க்க வருவதாக முன்னமே யறிந்து யுத்தத்திற்கு ஆயத்தமா யிருந்தான். மும்முரமான யுத்தம் நடந்தது. அந்த யுத்தத்தில் ஹம்மீர் முகம்மது துக்லக்கை சிறைப்பிடித்தான். இதைத் தெரிந்துகொண்ட துலுக்கர்கள் சின்னாபின்னமாகச் சிதறியோடினர். துக்லக் அரசன் சிறையில் ஆறுமாத காலம் இருந்தான். தன்னைச் சிறையினின்றும் மீட்க ஹம்மீருக்கு ஆஜ்மீர், நாசேரா, ரான்தம்போ முதலிய ராஜ்யங்களையும், 50-லக்ஷம் ரூபாயையும், 100-யானைகளையும் முகம்மது

கொடுத்தான். அவற்றினைப்பெற்று ஹம்மீர் டில்லி பாதுஷாவைச் சிறையினின்றும் வெளிப்படுத்தினான்.

மால்தேவனின் புத்திரனான பான்பீர், ராணாவிடம் சேவகத்திலிருக்கச் சம்மதித்தான். அதற்காக அவனுக்குச் சில பிரதேசங்களை ஜாகீராக ஹம்மீர் அளித்தான். ஹம்மீர் ஜாகீரை அளிக்கும்போது, "பான்பீர், நன்றியுள்ளவனாயிரு. நீ ஒரு காலத்தில் ஆப்கானியனிடம் ஊழியம் செய்தவன். இப்பொழுதோ உன் இனத்தைச் சேர்ந்தவனான எனக்கு ஊழியனாக இருக்க விரும்புகிறாய். ஆகையால் சத்தியத்துடன் உழைத்துச் சுகமே வாழ்" என்றுரைத்தான். அவ்விதமே பான்பீரும், ஜாகீரைப் பெற்று, மிக்க நன்றியுடன் சேவகம் செய்து வந்தான். துலுக்காது பிரதேசமான பான்ஸ்ராரை பான்பீர் எதிர்த்து, அதை ஜயித்து, ஹம்மீர் ராஜ்யத்துடன் சேர்த்தான். ரஜபுதனத்திலுள்ள ஹிந்துவரசர்கள் ஹம்மீருக்கு வேண்டும்போது சகாயம் புரியவும் கப்பங் கட்டவும் உடன்பட்டார்கள். ஹம்மீர் சிங் ரஜபுதனத்திற்கே சக்ரவர்த்தியாக விளங்கினான்.

தேவாம்சம் பொருந்திய பாருதியை ராணா மறக்கவேயில்லை. சித்தூரைப் பலப்படுத்தினவுடன், அவ்வம்மையை மிக்க மரியாதையுடனும் பக்தியுடனும் அழைத்து வந்து, அரண்மனையிலிருக்க வேண்டினான். அவளும் அவனது வேண்டுகோளுக்கிரங்கி அங்கேயிருக்கச் சம்மதித்திருந்தாள். அவ்வம்மை பரகதியடைந்த பிறகு அவளது ஞாபகார்த்தமாக ஒரு கோயிலைக் கட்டினான். அந்தக் கோயில் இன்றைக்கும் இருந்து வருகிறது. அதன் பெயர், அன்ன பூர்ணி ஆலயம்.

மால்தேவன் சீக்கிரத்தில் இறந்து போனான். ஸாங்கிரி தன் நாதனிருக்கும் சித்தூரை அடைந்தாள். அவள் வரும்போது அவள் தாய் அவளுக்கு மூன்று வஸ்துக்களைக் கொடுத்தனுப்பினாள். மண்டையோடு, மாலை, கட்கம் இம்மூன்றும் மந்தர சக்தியுள்ளவை என்று ஜனங்களால் நம்பப்பட்டிருந்தன. அவள் கொடுத்தனுப்பிய கட்கத்தை இன்றைக்கும் உதயபூரில் நவராத்திரி காலங்களில் ஜனங்கள் பூசித்து வருகிறார்கள்.

ஹம்மீரின் கீர்த்தி வெகுதூரம் பரவிற்று. அரசர்கள் யாவரும் அவனிடம் நட்புக்கொள்ள வாரம்பித்தார்கள். ஹம்மீரது சித்தூர், வெகு சீக்கிரத்தில் விஸ்தீர்ணத்திலும் பலத்திலும் எல்லாவற்றிலும் மிகோன்னத ஸ்திதியை யடைந்தது. ஹம்மீர் தன் மூதாதையின் விருப்பத்தை நிறைவேற்றினான். வீராதி வீரனான ரத்னசிங்கின் ஆவியும் சாந்தத்தை யடைந்தது. பழைய ராஜ்யத்தை மீண்டும் பெற்று, ரஜபுத்திரன் எடுத்த காரியத்தைத் தொடுத்து முடிப்பான் என்பதை உலகத்தாருக்குச் செய்கையால் ஹம்மீர் நிதர்சனமாக்கினான். அவன் தீர்க்காயுளும் திடசரீரமுமாகவிருந்து கடைசியில் வீரசுவர்க்கத்தை எய்தினான். அவனது சாமர்த்தியத்தையும், வீரச்செய்கைகளையும் பற்றி இன்றைக்கும் ஜனங்கள் கொண்டாடுகின்றனர். பலப்படுத்தப்பட்ட ராஜ்யத்தையும், விஸ்தீர்ணமான பிரதேசத்தையும் தன் மகன் கேய்த் சிங் என்பவனுக்கு அளித்தான். கெய்த்சிங் கி. பி. 1364-ம் வருஷத்தில் ராணாவாக முடிசூட்டப் பெற்றான்.

முற்றும்.

கி. பி. சேஷாத்ரி அய்யங்கார்.

THE KALPATHARU ADVERTISER.

ஸாவரன் படை மருந்து.

எப்பேர்ப்பட்ட தீராத மேக ரணங்களையும் மேகப்படைகளையும், வண்ணான் சிரங்கு சொறி சிரங்கு இப்படிப்பட்ட தீராத கொடிய வியாதிகளை 24 மணி நேரத்தில் கண்டிப்பாய் குணப்படுத்தும், குணம் இல்லையென்றால் பணம் வாபஸ் செய்யப்படும்.

புட்டி அணா 12. 3 புட்டிக்கு சார்ஜ் இனாம்.

அழகின் ரகஸ்யம்.

ஸாவரன் அழகு கூந்தல் தைலம்.

இந்த வாஸனை கூந்தல் தைலம் சுத்திகரிக்கப்பட்ட கலப்பில்லாத தேங்காய் எண்ணெயிலிருந்து தயார் செய்யப்பட்டது. இந்தத் தைலத்தில் குளிர்ச்சியைத் தரும் மூலிகைகளும், சேர்க்கப்பட்டிருக்கின்றது. இந்தக் கூந்தல் தைலம் மிக உபயோகமானது. தலையில் சுண்டு முதலியவைகளைப் போக்கும், மூளைக்குக் குளிர்ச்சியைத் தரும், மயிர் வளரச் செய்யும், மனோரம்மியமான மணத்தைத் தரும். எந்த விதமான கேசத்தையும் இயற்கை நிறத்தைப் பெறச் செய்யும், மூளையை அதிகமாக அன்றாடம் உபயோகிக்கும், மாணவர்களுக்கும், ஜட்ஜுகளுக்கும், நியாயாதிபதிகளுக்கும், ஸ்த்ரீகளுக்கும் மிகவும் இன்றியமையாதது.

புட்டி 1-க்கு ரூ ஒன்று. வி. பி. சார்ஜ் வேறு.

மூன்று புட்டிகளை ஒரே தடவையில் வாங்குவோர்க்கு ரூ. 2—10—0 தான்.

ஸாவரன் அண்டு கம்பெனி,
தபால் பெட்டி 127, மதராஸ்.

ஜனோபகாரி பிரசுரங்கள்.

161435

ஔவை ... 0 6 0 ஔவையாரின் திவ்விய சரித்திரம்	அன்பின் வெற்றி ... 0 3 0 இது ஓர் இனிய தமிழ் நாவல்.
குகப்பெருமாள் ... 0 3 0 குகன் என்னும் வேடர் தலைவனது இனிய சரித்திரம்.	எதிரோலியின் சாபம் ... 0 2 0 எதிரொலியின் சரித்திரத்தை விளக்கிக் காட்டும் ஓர் இனிய கதை.
சீதை வனம் புகுந்த சரிதை 0 3 0 உத்தரகாண்டத்தில் உள்ள 'சீதை வனம்புகு படலம்' என்னும் பாகத்தில் அடங்கிய சரித்திரத்தை எளிய வசன நடையில் வெளியிடும் நூல்.	காரைக்காலம்மை சரிதை ... 0 1 0 வேறு பிரசுரங்கள் வடிவேலன் அந்தாதி அல்லது கந்தபுராணக் கருப் பொருள். 0 4 0

இன்னும் எங்களிடம் ஏராளமான தமிழ்ப் புஸ்தகங்கள் இருக்கின்றன. கியாட்லாக் வேண்டுவோர் தங்கள் விலாஸத்தைத் தெரிவித்தால், உடனே ஒன்று இனாமாய் அனுப்பப்படும்.

வி. என். சாமராவ் அண்டு கம்பெனி,
135, தேவராஜ முதலி தெருவு, மதராஸ்.

இந்திய மித்ரன்

இது 'ஜனோபிமானி', 'வெல்த் அப் இந்தியா' என்னும் மாதாந்தரப் பத்திரிகைகளின் பத்ராதிபராகிய ஜி. ஏ. வைத்ய ராமன் பி. ஏ. அவர்களால் நடத்தப்படும் ஒரு வாராந்தரப் பத்ரிகை. இதில் சிறந்த வ்யாஸங்கள், ஜீவ்ய சரித்ரங்கள், சிறு நாவல்கள், கதைகள் முதலியவைகளும், அந்தந்த வாரத்து வர்த்த மானங்களும் வெளிவரும். தவிர, ஒவ்வொரு வாரமும் நல்ல காகிதத்தில் அச்சடிக்கப்பட்டு கண்ணாடி போட்டு வைத்துக்கொள்ளத் தகுந்த இரண்டுபக்கம் சித்ரப்படங்களும் கொடுக்கப்படும். இன்னும் எங்கள் சந்தாதாரர்களுக்கு எங்களுடைய ஸொந்த புஸ்தகங்களின் விலையில் ரூபாய்க்கு இரண்டு அணா வீதமும் இதர புஸ்தகங்களின் விலையில் ஒரு அணா வீதமும் கழித்துக் கொடுக்கப்படும்.

தபால சார்ஜ் உள்பட சந்தா,	உள்நாடு.			அந்யநாடு.		
வர்ஷம் 1-க்கு	5	0	0	7	8	0
6-மாதத்திற்கு	2	8	0	3	12	0
3-மாதத்திற்கு	1	4	0	2	0	0

பாதிவிலைக்கு வாங்க இதுதான் ஸமயம்.

ஐரோப்பிய யுத்தம்.

இந்தப் புஸ்தகத்தின் நோக்கம், யுத்தத்தில் அன்றன்றைக்கு நேரிடும் ஸம்பவங்களையாவது அல்லது யுத்தம் முடிந்ததும் உண்டாகும் நன்மை தீமைகளையாவது எடுத்துக் காட்டுவதல்ல. இதில் முற்காலத்தில் போலல்லாமல் தற்காலம் தழுவி வரும் நூதன யுத்த முறைகள் விரிவாக எழுதப்பட்டிருக்கின்றன. இந்த யுத்த முறைகள் எப்படிப்பட்டவை என்பதும், அவைகளால் தான் சண்டை நீடித்து நடந்ததென்பதும். தெளிவாக எழுதப்பட்டிருக்கின்றன விஷயங்களை நன்கு விளக்க 100 உயர்ந்த படங்களும், தேசபடங்களும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. புஸ்தகம் 400 பக்கங்கள் கொண்டது. ஒரு பருத்த விஷய அகராதியும் சேர்க்கப்பட்டிருக்கிறது.

இதன் விலை ரூபா 1-௮-0. நமது பத்ரிகைகளுக்கு புதிதாய்ச் சேரும் சந்தாதாரர்களுக்கு மாத்ரம் 12 அணா

ஜி. ஏ. வைத்யராமன் அண்டு கம்பெனி,
(௧) கொண்டி செட்டித் தெரு ஜார்ஜ் டவுன் மதராஸ்.